# அபாய வனம்



இந்திரா
சௌந்தர்ராஜன்

http://www.pustaka.co.in

# அபாய வனம்

# Abaya Vanam

Author:

## இந்திரா சௌந்தர்ராஜன்

## Indira Soundarajan

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26
அத்தியாயம் 27
அத்தியாயம் 28
அத்தியாயம் 29
அத்தியாயம் 30
அத்தியாயம் 31
அத்தியாயம் 32
அத்தியாயம் 33
அத்தியாயம் 34
அத்தியாயம் 35
அத்தியாயம் 36
அத்தியாயம் 37
அத்தியாயம் 38

# 1

பூவுலகில் மிக விசேஷமானவைகளில் ஆறுகளுக்கும், தெய்வீகத் தலங்களுக்கும் சமமாக கருதப்படுபவை அரிய வனங்களே!

இவ்வனங்களிலும் பரத கண்டத்தின் தென்முற்றில் விஸ்தாரம் கண்டிருக்கும் பொதிகை வனம், மிகவே விசேஷமானதாகும். பொதிகை மருங்கில் சதுரகிரி என்றோர் தென் கைலாய வனமும் விசேஷமானதாம்.

இவ்வனத்தில் சித்த புருஷர்களே விருட்சங்களாகவும் வளர்ந்து விண்ணளாவிக் கொண்டு நிற்பது மிக ஆச்சரியமான ஒரு விஷயமாகும்.

முக்திக்கு சதுரகிரியும், சித்த வித்தைக்கு பொதிகையும் என்பது சித்த உலகப் பிரமாணங்களாகும்.

அது சரி.... எது சித்த வித்தை?

கூடை நிறைய வைரங்களைக் கொண்டு வந்து, ஆவேசமாக வானில் வீசி எறிந்தது போல மின்னிக் கொண்டிருந்தன நட்சத்திரங்கள்!

நிலவும் ஒரு மூலையில் மேகங்களுக்கு நடுவில் அடமான நகை போல மூடி மறைக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் வானம் தனக்குண்டானபடி எந்த மாற்றங்களும் இல்லாமல்தான் தெரிந்தது. ஆனால், அந்த நட்சத்திரங்களையோ... இல்லை நிலாவையோ பார்த்து ரசிக்கத்தான் பெரிதாக யாரும் தயாராக இல்லை. சித்திரை மாதம் வேறு. வானில் மழை மேகங்களுக்கு இடமே இன்றி காற்றிலும் கோடையின் வெம்மை.

நகரவாசிகளுக்கு இந்த மாதிரி கோடைகாலத்தில் மொட்டை மாடிதான் சொர்க்கம். அதிலும் 'பவர் கட்'டில் நாடே இருள் லோகமாக இருக்கும் ஒரு விநோதமான கால கட்டம்.

பரணியும் தலையணை - பாயுடன் மறக்காமல் ஒரு

கொசுவர்த்திச் சுருள் மற்றும் தீப்பெட்டியுடன் மொட்டை மாடிக்கு வந்தான். வரும்போதே மாடிக்கொடியில் காயப்போட்டிருந்த துணிக்கூட்டம் அவனைத் தடுக்கப் பார்த்தது. குனிந்து அதைக் கடந்து, வழக்கமாய் படுக்கும் இடத்தில் பாயை விரித்தான். பின் தலையணையை போட்டவன், கொசுவர்த்தியையும் பற்ற வைத்தான்.

மின்சாரம் இருந்தது. தெருவிளக்கின் வெளிச்சத்தில் கொடியில் காயும் துணிகளில் ஒரு பூப்போட்ட சேலை அவன் கண்ணில்பட்டு, அதன் காரணமாக அதற்கு சொந்தக்காரியான சரண்யாவின் ஞாபகம் வந்தது.

மொட்டை மாடியில் வேறு யாரும் இல்லை.

எனவே, தயக்கம் இல்லாமல் அந்த சேலை அருகே சென்றவன், அதை அப்படியே ஒரு பெண்ணாகவே கருதி கட்டிப்பிடித்து கன்னத்தோடெல்லாம் உரசத் தொடங்கினான்.

கோடை வெயிலுக்கு அந்தச் சேலையிடம் லேசான குளிர்ச்சி இருந்து மிக இதமாகத் தெரிந்தது, அவனுக்கு. அப்போது ஒரு குரல்.

“அப்படிப் போட்றா அருவாளன்னானாம். சபாஷ்... சேலையோடு இந்தப் பாடா?” என்று காதில் கேட்கவும், வேகமாக விலகினான்.

“ம்.... நடக்கட்டும். நடக்கட்டும். நிஜத்துலதான் நடக்கப் போறதில்லை. சேலை கிட்டயாச்சும் நடக்கட்டுமே” என்று திரும்பவும் ஒரு ‘கமென்ட்’!

அது வேறு யாருமல்ல... பரணியின் நண்பன் குருவுடைய குரல்தான்.

அது ஒரு ‘அபார்ட்மெண்ட்’ கட்டடம்.

ஆறு பேர் ஆறு 'பிளாட்’டுகளில் குடியிருக்கிறார்கள். அதில் மூன்றாவதில் இருப்பவன் பரணி. ஐந்தாவதில் இருப்பவன் குரு.

குருவின் கிண்டல் இழையோடியப் பேச்சு கொஞ்சம் சுகமாகவும், கொஞ்சம் பகையாகவும் இருந்தது, பரணிக்கு.

குருவும் பரணிக்கு பக்கத்தில்தான் படுக்கையை விரித்தான்.

“என்னடா... சரண்யா நினைப்புல ரொம்பவே மூழ்கிட்டியோ?” என்று பக்கமாய் அமர்ந்தபடி ஆரம்பித்தான்.

“அட... நீ ஒருத்தன்டா! வெக்கைக்கு சேலை 'ஜில்’லுன்னு இருந்துச்சு. நீ உடனே சரண்யாவையே நான் கட்டிக்கிட்டு நின்ன மாதிரி பேச ஆரம்பிச்சிட்டியாக்கும்?”

“அப்படியா.... ஆமா, சேலைதான் ஜில்லுன்னு இருந்துச்சா? பக்கத்திலேயே நம்ம பரந்தாமன் சார் வேட்டி கூடதான் காஞ்சுகிட்டிருக்கு அது ஜில்லுன்னு இல்லையா?”

“இப்ப நீ விடமாட்டே?”

“நான் அவளை விட்டு ரொம்ப நாளாச்சு பரணி. அதோ தெரியுது பாரு நிலா. அதுவும், அவளும் ஒண்ணு. செல் போன்ல நாட் ரீச்சபுள்’னு வர்ற மாதிரி, என் வாழ்க்கையில அவள் ‘நாட் ரீச்சபுள்!”

அப்பா, போலீஸ் அதிகாரி. அண்ணன் நிச்சயம் ஐ.ஏ.எஸ். முடிச்சு, கலெக்டர் ஆகப் போறவன். அவளும் காலேஜ்ல எல்லாத்துலயும் முதல் ‘மார்க்’. நிச்சயம் அமெரிக்கா, ஆஸ்திரேலியான்னு போய் படிக்கப் போறவ. ஒரு தபால் எம்.ஏ. நீ. நானும் ஒரு சாதாரண பி.எஸ்ஸி பட்டதாரி. அதனால மரியாதையா ஒதுங்கிட்டேன். ஆனா, உன்னாலதான் ஒதுங்க முடியலேன்னு நினைக்கிறேன்.”

- கொசுவர்த்தி புகை... மூக்கில் ஏற, குரு பேசிய பேச்சு, பரணியை சற்று பெருமூச்சு விடச் செய்தது.

“என்னடா... ‘நெகடிவா’ பேசுறனேன்னு பாக்கறியா?”

“இல்ல குரு. உள்ளதைத்தானே நீ சொல்றே”

“புரிஞ்சுகிட்டா சரி. நம்ம வாழ்க்கை ஒண்ணும் 2 மணி நேர

சினிமா இல்ல பரணி. அதுலதான் இன்னும் திருந்தாம ‘லவ்’ விகிட்டே இருக்காங்க. அப்படி ‘லவ்’ வறவங்களுக்கு உதவி செய்யவும் ஒரு கூட்டம். மாறவே மாட்டேங்கறாங்கடா.”

“அது வேற ஒண்ணுமில்ல குரு. நிஜத்துலதான் அதெல்லாம் நடக்கப் போறதில்ல. அதனால கற்பனையிலயாவது காட்டுவோம்னு அவங்க படமா எடுக்கறாங்க. நாமளும் ஜொள்ளு விட்டுகிட்டு பாக்கத்தானே செய்யறோம்?”

“வாஸ்தவம்தான். ஆமா! உன் அக்கா, ஊர்ல இருந்து வந்திருக்கா போல இருக்கே?”

“ஓ... நீ பாத்தியா?”

“ஆமா. கடைக்கு நான் ‘பாக்கெட்' பால் வாங்கப் போனப்போ வந்திருந்தாங்க, ‘என்னக்கா... நல்லா இருக்கீங்களா?’ன்னு கேட்டேன். லேசா சிரிச்சாங்க. வாய் திறந்து பேசலை. ஏதோ ‘பிராப்ளம்’னு மட்டும் புரிஞ்சிச்சு. ஏன்டா. உங்க அக்கா புருஷன் திரும்ப ஆரம்பிச்சிட்டானா?”

“ஆமான்டா. அவனோடு இம்சை அவன மட்டும் நேர்ல பாத்தேன்... ஒரே அடியில மண்டைய பொளந்துடுவேன்.”

“என்ன பரணி... எதுக்கு இவ்வளவு கோபம்?”

“விட்றா வேற விஷயம் பேசு. என் வீட்டு விஷயத்தையே பேசாதே. எரிச்சலா இருக்கு”

- பரணி சின்ன அளவில் குமுறி முடிக்க, “அண்ணா...” என்றொரு குரல்.

“டேய்... உன் தங்கச்சியாட்டம் இருக்குது.

“என்ன பிரபா?”

“செல்போனை எடுத்துகிட்டுபடுக்கப் போக மாட்டியா? இதுவரை மட்டும் மூணு "மிஸ்டு கால்”

- என்றபடியே பிரபா என்கிற பரணியின் தங்கையும் அவனை நெருங்கி வந்து செல்போனை நீட்டினாள்.

அவனும் வாங்கி திரையை ஒளிரச் செய்து பார்த் தான். அதில் "மானேஜர்' என்னும் எழுத்துகள்

"பரதேசி... தூங்க விடமாட்டானே! சரி, நீ போ"- அவள் குருவை ஒரு பார்வை பார்த்துவிட்டு விலகத் தொடங்க, செல்போனையே வெறித்தான் பரணி.

"யாருடா போன்ல?"

"வேற யாரு... என் 'ஏரியா மானேஜர்' தான்."

"என்னடா... ராத்திரி பத்து மணிக்கெல்லாமா கூப்பிடுவான்?"

"அவ்வளவு கடமை உணர்ச்சிடா. நான் இன்னிக்கு சாயங்காலம், அவனைப் பார்த்து 'ரிப்போர்ட்" கொடுக்காம வந்துட்டேன். அது அவனுக்கு தாங்கலை"

"நீ கொடுத்துட்டு வர்றதுக்கென்ன?"

"ஒரே தலைவலி, டவுன்ல இன்னிக்குன்னு பார்த்து சரியான 'டிராபிக்', என் வண்டி, நடுவுல 'மக்கர்' பண்ணி ரொம்ப தூரம் தள்ளிகிட்டே "மெக்கானிக் ஷெட்'டுக்கு வரும்படியா ஆகிடுச்சு"

"உன் 'டு வீலரை' முதல்ல மாத்துடா. எனக்கு தெரிஞ்சு இருபது வருஷமா ஒரு வண்டியே ஒடி சாதனை படைச்சு கிட்டிருக்குன்னா அது உன்கிட்டதான். ஆமா... நீ அதை எடைக்குதானே வாங்கினே?"

"என்ன... கிண்டலா?"

"ஏன்டா சூடாவே இருக்கணுமா நம்ம பேச்சு. கொஞ்சம் ஜாலியாதான் பேசுவோமே?"

"என்ன ஜாலியோ! என் வாழ்க்கையில அதுக்கெல்லாம் இடமே கிடையாதுடா குரு."

"என் வாழ்க்கையில மட்டும் என்ன... நான் துண்டு போட்டு சீட்டா பிடிச்சு வெச்சிருக்கேன். நாமெல்லாமே நடுத்தட்டு மக்கள்தானேடா?"

“ஏன்டா... இந்த நடுத்தர வர்க்கம் மட்டும் இப்படியே இருக்கு?”

“என்னைக் கேட்டா... ஒண்ணு பண்ணுவோமா?”

“என்ன?”

“ஒரு ‘சிட்பண்ட்’ ஆரம்பிப்போம். ஆயிரம் கட்டுனா ரெண்டாயிரம், ரெண்டாயிரம் கட்டுனா நாலாயிரம்னு அள்ளிவிடுவோம். கோடிக்கணக்குல சேர்ந்துடும். அப்படியே அள்ளிகிட்டு சிங்கப்பூர், பாங்காக்குன்னு போய் ‘செட்டில்’ ஆகிவிடலாம்.”

“என்னடா. இன்னிக்கு வேலைக்கு மட்டம் போட்டுட்டு காலை ‘ஷோ’ எதாவது போனியா?”

“இல்ல...”

“அப்புறம் ஏன்டா உன் புத்தி இப்படி போகுது?”

“பரணி... நூறு, இருநூறு வாங்கினாதான்டா ஏமாத்தறது கஷ்டம். கோடிக்கணக்குன்னா ரொம்ப சுலபம். நீ பத்திரிகை படிக்கிறதில்லையா?”

“உளறாமப் படுடா.”

“டேய்... சத்தியமா உளறலடா. நாள் தவறாம இப்படிப் பட்ட "மேட்டர்’ தான்டா கண்ணுலபடுது. நீயும் பாருடா. உனக்கும் நான் சொல்றது புரியும்.”

“பேசாம படுடா”

- எரிச்சல் பீறிட்டது, பரணியிடம். அப்போது இருமல் சத்தம் கேட்டது.

“டேய்... இந்த ஆறாவது ‘பிளாட்’டுக்காரன் வர்ற மாதிரி தெரியுது”

“தினம் பத்தரை மணியானா இந்த ஆள், மாடிக்கு வந்துடுறான்.”

- குரு, தழைந்த குரலில் சொல்லும்போது, ஒரு எழுபது வயதுக்காரரின் உருவம் தெரிந்தது. நெஞ்சைத் தேய்த்தபடி வந்த அவரும், இருவர் படுத்திருப்பதை சட்டையே செய்யாமல் ஒரு ஓரமாக போய் நின்றுகொண்டு அண்ணாந்து வானத்தைப் பார்த்தார்.

குரு, தழைவான குரலில் அவரை கவனித்தபடியே பரணியிடம், “டேய் இந்த ஆள், இந்த நேரத்துல ஆகாயத்துல என்னத்தடா பாக்கறான்?” என்று கேட்டான்.

பரணியும் அவரையே பார்த்தான். அவர் மொத்த வானத்தையும் ஒரு பார்வை பார்த்து முடித்தார். பின் ஒரு குறிப்பிட்ட இடத்தில், மான்கொம்புபோல் தெரிந்த நட்சத்திரக் கூட்டத்தை பார்த்தவரிடம் ஒரு புது உற்சாகம். அவர் செல்போன் கொண்டு வந்திருந்தார். அதில் அங்கே நின்றபடியே யாருடனோ பேசத் தொடங்கினார்.

“ஹலோ... நான் சிவப்பிரகாசம் பேசறேன். வானத்தைப் பார்த்தீங்களா?”

“...............”

“சந்தோஷம். குருநாதர் சொன்னபடிய மிருக சீரிஷ நட்சத்திரம் கண்ணுல பட்டுடிச்சு. அவங்கள விழுந்து கும்பிட்டுட்டு, சரியா மூணு மணிக்கு மலை ஏறச் சொல்லுங்க.”

“........”

“நான் வருகிற அமாவாசை அன்னிக்கு வர்றேன். இனி எல்லாம் நல்லவிதமா நடக்கும். நமச்சிவாயம்...” - என்று சொல்லி முடித்தார். பின்... வந்த மாதிரியே இறங்கி நடக்கத் தொடங்கினார்.

அவர் விலகவும் குருவிடம் கேள்வி.

“டேய்... இந்த ஆள் பேசினதைக் கவனிச்சியா?”

“உன் கூடத்தானே இருக்கேன். இது என்ன கேள்வி?”

“இல்லடா! நாம இருக்கறத கவனிக்கலைன்னு நினைக்கிறேன். ஆமா... யாரை காலையில மூணு மணிக்கு மலை ஏறச் சொல்றாரு இவரு?”

“எனக்கு என்னடா தெரியும்?”

“கோபப்படாதே! இவர் ஒரு சித்த சன்னியாசின்னு கேள்விப்பட்டேன். அது மட்டுமில்ல... இவருக்கு வர்மக் கலை எல்லாமும் தெரியுமாம். கேள்விப்பட்டேன்.”

“போகட்டும். தாகமா இருக்கு கொஞ்சம் குடிக்க தண்ணி கொண்டு வர்றியா?”

“சொல்லலியேன்னு பார்த்தேன். இரு... வர்றேன்”- குரு எழுந்து சென்றான். மாடிப் படிகளில் இறங்கி அந்த ஆறாவது ‘பிளாட்’டை கடந்து போனபோது, ஊதுவத்தி வாசம் கும் மென்று மூக்கை நிரடியது. ‘பிளாட்’ கதவும் திறந்திருக்க... அப்படியே உள்ளே பார்வையை விட்டான் குரு. குபீரென்று வியர்க்கத் தொடங்கியது.

உள்ளே அந்த வயதானவர், ஹாலின் நடுவில் பத்மாசன கோலத்தில் கண்களை மூடி - தியானத்தில். அந்தரத்தில் எந்த பிடிமானமும் இன்றி மிதந்தபடி அமர்ந்திருந்தார்!

***

# 2

சித்த வித்தைகள் ஏராளம். நீர் மேல் நடப்பதில் தொடங்கி, அந்தரத்தில் மிதப்பது வரை அதில் பல உண்டு. அதேபோல் கூடு பாய்வது, சமாதி ஆவது, செத்துக் கிடப்பது என்பதும் அதனுள் அடக்கம். ஆனால், தெளிந்த சித்தனுக்கு இதெல்லாமே அற்பம். உண்மையில், சித்த வித்தையில் மேலானது. ஆசையை விடுதல், பாசத்தைக் கொல்லுதல், மதிப்பு - மரியாதையை குப்பை போல கருதுதல், இவ்வுலகையே துச்சமாக எண்ணி திரிதல் போன்றவைதான்.

உலகைதுச்சமாய் கருதிவிட்ட சித்தனுக்கு மிக ஏற்ற இடமும் வனம்தான்!

**- வன வியாசம்**

குருவால்... பார்த்த கண்களை மூட முடியவில்லை! அந்த சிவப்பிரகாசமோ, ‘எனக்கென்ன?’ என்று கண்களை மூடிக்கொண்டு அந்தரத்தில் மிதந்துகொண்டிருந்தார்.

குருவுக்கு, இக்காட்சியை பரணியும் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. விறுவிறுவென்று திரும்பி, மொட்டை மாடிக்கு வந்தான்.

“பரணி.... பரணி”

“என்னடா... எங்கடா தண்ணி?

“அதெல்லாம் பொறவு. நான் இப்ப ஒரு அதிசயத்தைப் பார்த்தேன்டா, நீயும் வா. வந்து பாரு”

“என்னடா சொல்றே! எந்த அதிசயத்தடா இந்த ராத்திரியில பார்த்தே?”

“பேசறதை நிறுத்து. எழுந்திரு... வா என் பின்னால”

“என்ன... யாராச்சும் கதவைத் திறந்து வெச்சுகிட்டே - மாடிகானேன்னு உல்லாசமா க்காங்களா?”

“ஐய்யோ... அந்த வர்மக் கிழவன் இல்ல... சிவப்பிரகாசம். இப்ப வந்து வானத்தைப் பார்த்துட்டு போனானே?”

“அந்த ஆளுக்கு என்ன?”

“அந்தரத்துல மிதந்துக்கிட்டிருக்கான்டா!”

“மிதக்கிறானா... அந்த ஆளா?”

“நீ கேள்வி கேக்கறத விட்டுட்டு, முதல்ல வர்றியா?”

- பரணியும் எழுந்து இடுப்பு லுங்கியை அவிழ்த்து திரும்பக் கட்டிக்கொண்டவனாய் குருவைப் பின்தொடர்ந்தான். அந்த ஆறாவது “பிளாட்’ வாயில் கதவும் திறந்தே இருந்தது. பூனை போல குரு முதலில் நுழைய, பின்னாலேயே பரணியும் நுழைந்தான். ஹாலில் அந்த சிவப் பிரகாசம் அமர்ந்திருந்த நிலையில், ஏதோ புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தார். குருவுக்கு சப்பென்றாகி விட்டது. அவரை மேலும் கீழுமாய் பார்த்தான்.

“என்னப்பா... எங்க வந்தீங்க?”

“இல்ல... நீங்க...”

“நானா... எனக்கென்ன?”

“நீங்க... நீங்க... அதோ மேல அந்த இடத்துல அந்தரத்துல கொஞ்சம் முந்தி உட்கார்ந்திருந்தீங்க. நானும் பார்த்தேன்.ஆனா, இப்ப கீழே உட்கார்ந்து புத்தகம் படிச்சுக் கிட்டு இருக்கீங்களே?”

“நான் மேல அந்தரத்துல உட்கார்ந்திருந்தேனா. என்னப்பா சொல்றே! கனவு கினவு கண்டியா?”

“அட.... நான் இப்ப தண்ணி எடுக்க வந்தப்ப பார்த்தேங்கறேன்.”

“அது எப்படிப்பா! போ... போய் படுத்து தூங்கற வழியப் பாரு” என்றார் அவர்

குருவின் முகத்தில் பலத்த ஏமாற்றம். பரணியிடமோ

கோபம்.

“சரியான பைத்தியம்டா நீ! இதுல அதிசயத்த பாக்க வான்னு என்னை வேற இழுத்துக்கிட்டு வந்துட்டேஸாரிங்க பெரியவரே"- அவன் அந்த சிவப்பிரகாசத்திடம் மன்னிப்பு கேட்டபடியே திரும்பி மொட்டை மாடிக்கு வந்தான்.பின்னாலேயே யோசித்தபடியே குருவும்....

“உன்கிட்ட போய் தண்ணி கேட்டேன் பாரு. நானே போய் குடிச்சிட்டு ஒரு பாட்டில்ல எடுத்துக்கிட்டு வர்றேன்” என்று பரணி திரும்பி நடந்தான்.

குரு வரையில் ஆழ்ந்த சிந்தனை!

‘சத்தியமா கனவு இல்ல. அந்த பெரியவர்கிட்ட மர்மமா ஏதோ இருக்கு’ என்கிற எண்ணம் மட்டும் இறுதியாக மிச்சமாகியது.

பொழுது விடிந்துவிட்டது. மாடிக் கைப்பிடி சுவர் மேல் காக்கை ஒன்று வந்து அமர்ந்து கொண்டு கரைய ஆரம்பித்தது. பரணிதான் முதலில் கண் விழித்தான். குரு, போர்வைக்குள் சுருண்டிருந்தான். அவனது பிட்டத்தைக் கவனித்து காலால் ஒரு எத்து எத்தி, “எழுந்திரிடா நாயி. மணி ஏழைத் தாண்டிருச்சாட்டம் தெரியுது” என்றான்.

“நீ போ. நான் பின்னால வர்றேன்” என்ற குருவின் பதிலை காதில் வாங்கியபடியே போர்வை - தலையணையை அள்ளிக்கொண்டு படிகளின் வழியாக இறங்கத் தொடங்கினான்.

அவனது ‘அபார்ட்மெண்டு’க்கு எதிரில் உள்ள டீக் கடையில் – ‘ஹலோ எப்.எம்.’ மில் ‘செவத்தப் பையா.... செவத்தப்பையா’ என்று பாடல் ஒலித்துக்கொண்டு இருந்தது. ரேடியோ கேட்டபடியே தனது ‘பிளாட்’டுக்குள் நுழைந்தான்.

அவன் அம்மா சகுந்தலா, காலை சிற்றுண்டிக்காக சட்டினிக்கு தேங்காயை துருவிக் கொண்டிருந்தாள். அக்கா சாந்தா குளித்துவிட்டு தலையை காய வைத்தபடி இருக்க,

தங்கை பிரபா படுக்கையைவிட்டே எழுந்திருக்கவில்லை.

பரணி முதல் காரியமாக சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழரையைத் தொட்டிருந்தது. இப்போது அவன் வசம் இருப்பது ஒரு மணி நேரம்தான். இதில் சவரம், குளியல், உடைகளுக்கான இஸ்திரி போடுதல், பின் டிபன் சாப்பிட்டுவிட்டு. 'மெடிக்கல் ரெப்ரசென்டேடிவ்'களுக்கே உண்டான தோல் பையை தொட்டு தூக்கிக் கொண்டு, தலைக்கான 'ஹெல்மெட்' என்னும் இரும்புச் சட்டியையும் சேர்த்தே எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஏதோ போர்க்களத்துக்கு போவதுபோல ஒரு பாவனை. அது கொஞ்சம் உண்மையும்கூட! ஒவ்வொரு மருத்துவமனைக்கும் போய்'விசிட்டிங் கார்டை' கொடுத்துவிட்டு, பின் தேவுடு காக்க வேண்டும்.

அப்போது சுற்றிலும் ஒரே நோயாளிகளாக இருப்பார்கள். இருமல், இழுப்பு, காய்ச்சல் என்று ஆளுக்கொரு நோய். அவர்களுக்கு நடுவில் எலும்பும் தோலுமான ஆஸ்பத்திரி பெண் உதவியாளர்களின் புண்ணியத்தில்தான் டாக்டரை சந்திக்க வேண்டும்.

கழுத்தில் 'டை'யை கட்டிக்கொண்டு பார்வைக்கு சுந்தரபுருஷனாய், ஆனால் தேவுடு காப்பானாய் வாழும் இந்த 'ரெப்ரசென்டேடிவ்' பிழைப்பு இருக்கிறதே! நினைக்கும் போதே எரிச்சல் அவன் தொப்புளில் பீறிட்டது. வாயில் பற்பசை நுரை பொங்க ஆரம்பித்தது. முதல் நாள் ஒரு 'டிஸ்பென்சரி'யில் படு அழகாய் திரிஷாவுக்கு தங்கை மாதிரி ஒருத்தி இருந்தாள்.

பரணி பேசும்போது அவன் வாய் நாற்றமோ என்னமோ. முகத்தைச் சற்று சுணக்கிக் கொண்டாள். அது ஞாபகம் வரவும் பிரஷ்ஷை வாயில் கடாமுடாவென்று விட்டு ஆட்டினான். ஒரு வழியாக பல்துலக்கிவிட்டு வரவும், அக்கா சாந்தாவே காப்பியோடு வந்து நின்றாள். பின் அவன் குளித்துவிட்டு வரவும், இஸ்திரியும் போட்டபடி இருந்தாள்.

"அய்ய... அக்கா. நீ எதுக்கு சிரமப்பட்டுக்கிட்டு? நான் பாத்துக்கறேன்.... விடு" என்றான்.

“நீ போய் டிபனை சாப்பிட்டுவிட்டு வாடா, நான் போட்டு வைக்கிறேன்” என்று அவன் வசம் இஸ்திரிப் பெட்டியைத் தராமல் அவளே தேய்த்தாள்.

பின் அவனும் அள்ளி விழுங்கிவிட்டு வந்தான். ஆடை தயாராக இருந்தது. அணிந்து கொண்டான். ‘டை'யையும் எடுத்து கட்டினான்.

கண்ணாடி முன் நின்று அப்படியும் இப்படியும் பார்த்துக் கொள்ளவும், “அக்கா... நம்ம வீட்டுக்கு சிம்பு வந்திருக்காரா என்ன?” என்று கேட்டபடியே படுக்கையில் இருந்து எழுந்து வந்தாள் தங்கை பிரபா.

“சிம்புவுக்கு இங்க என்னடி வேலை? தூக்கத்துல கனவு கினவு கண்டியா?”

“அட... நீ வேற” என்று பரணியை அசட்டுச் சிரிப்போடு பார்த்தாள்.

“யக்கா! இவ என்ன சொல்றா... உனக்கு புரியலையா?” என்றான் பரணி.

“அப்படியா விஷயம்! என் தம்பியைப் பார்த்தா உனக்கு கிண்டலா இருக்காடி?”

“எனக்கு எங்க அண்ணன பார்த்தா பெருமையா இருக்கு நீ ஏன் கிண்டல்னு எடுத்துக்கறே?”

“அப்ப நான் சினிமாவுல சேரலாம்கறே?”

"ஆமாண்ணே! போய் எப்படியாவது ‘ஹீரோ’ ஆகிடு. அப்புறம் நம்மள யாரும் கைலயே புடிக்க முடியாது.”

- பிரபாவுக்கும், அவனுக்கும் இடையேயான கலகலப்பான பேச்சுக்கு தன் கடுமையான பார்வையால் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள் சகுந்தலா.

“ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம். உள்ள ஒட்றது ஈறும், பேனுமாம். இங்க நம்ம லட்சணம் அப்படி இருக்குது. இதுல சினிமாவுல வேற சேர்ந்து சந்தி சிரிக்கணுமாக்கும்?

போடி... போய் ஆகற வேலையப் பாரு” என்று கத்தினாள். அப்போது எதார்த்தமாய் வாசல் பக்கம் ஒர் உருவம். அவரைப் பார்க்கவும் சிரித்தாள்.

“அடடே... அண்ணனா, வாங்கண்ணே. யாரோன்னு நினைச்சேன்” என்றாள்.

“என்ன சகுந்தலா... நல்லா இருக்கியா?”

“இருக்கேண்ணே. நீங்க எங்க இந்தப் பக்கம்?”

“விஷயமாத்தான் வந்தேன்.”

“முதல்ல உக்காருங்க. அப்புறம் பேசுங்க. அடியே சாந்தா, அண்ணனுக்கு காப்பி போட்டுக் கொண்டா”

“இப்பதாம்மா குடிச்சிட்டு வர்றேன். உடனே குடிச்சா பித்தம்தான் அதிகரிக்கும். ஏற்கெனவே அப்பப்ப தலைச் சுத்தல். நீ ஒரு தம்ளர் தண்ணிய கொண்டா. போதும். ஆமா. நீ பெரியவ இல்ல?”

“ஆமாண்ணே... பெரியவ சாந்தா. இது சின்னது... பேர் பிரபா. இவன் என் ஒரே மகன் பரணி மருந்து கம்பெனியில மானேஜரா வேலை பாக்கறான்.”

- சகுந்தலா அவனுக்கு கற்பனையில் கொடுத்த ‘பிரமோஷன்’, பரணியை உள்ளுக்குள் சிரிக்கவிட்டது.

“நல்லதும்மா. நான் வந்த விஷயத்தை சொல்லிடுறேன் சகுந்தலா என் மவ கனகத்தை உனக்கு தெரியும் தானே?”

“என்னண்ணே இது கேள்வி! கனகத்தை தெரியாமலா?”

“இல்ல... அவளும், அவ புருஷனும் ஒரு நேர்த்திக் கடனா காசி பக்கமெல்லாம் போயிருக்காங்க”

“அதுக்கென்னண்ணே?”

“அப்படி போன இடத்துல கங்கை ஆத்தோரமா உன் புருஷன பாத்திருக்கா கனகம்.”

- அவர் சொல்லவும், சகுந்தலாவிடம் ஒரு குபிர் படபடப்பு.

"அண்ணே”

“ஆமாத்தா. நான்கூட கேட்டேன். ‘நல்லா பாத்தியா?’ன் னும் கேட்டேன். சாதிக்கிறா. அது உன் புருஷன்தான்னு! அவரும் கனகத்தை பார்க்கவும், பேயப் பாத்த மாதிரி அந்த இடத்தைவிட்டே ஓடிட்டாராம். இன்னிக்கு காலையில மதுரை வந்தவ, முதல்ல எனக்குத்தான் போன் பண்ணா. சரி, நானும் உன் காதுல போடுவோம்னுதான் வந்தேன்” என்றார்.

சகுந்தலா முகம் வியர்க்கத் தொடங்கி இருந்தது. ஆறு வருடங்களுக்கு முன் சகுந்த லாவோடு சண்டை போட்டுக்கொண்டு, எங்கே போனார் என்றே தெரியாமல் போய்விட்ட மனிதர்.

இப்போது காசியில் இருப்பதாக தகவல்!

அதுவரை பொறுமையாக அவர்கள் பேச்சைக் கேட்டபடி இருந்த பரணி, "ஏங்க... இதைச் சொல்ல காலங்காத்தால வந்துட்டீங்களா? எங்க வரையில அவர் செத்துப் போயிட்டவர். அவர் காசியில இருந்தா என்ன... இல்லை எங்க இருந்தா என்ன? இனி இந்த வீட்டுக்குள்ளே அவரைப் பத்தி பேசிக்கிட்டு வராதீங்க” என்றான்.

அவன் பேச்சில் கோபம் தெரிந்தது.

“அப்பு... உன் கோவம் எனக்கு புரியுதுப்பா. இந்த குடும்பத்தை உன் தலையில சுமக்கற சுமை தாங்காம நீ பேசறே... அதுக்காக கண்ணுல பாத்ததை சொல்லாம இருக்க முடியாது! ஒருத்தருக்கொருத்தர் பழகறது அப்புறம் எதுக்கு?” - அவர் நிதானமாகவே பதில் சொன்னார்.

“டேய்... நீ கொஞ்சம் வாய மூடிக்கிட்டு சும்மா இருடா. அண்ணே... நல்லதுண்ணே. இனி நான் என்ன செய்யணுமோ செய்யறேன். இப்பவே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டர்கிட்ட தகவல் தர்றேன். அவர் உசுரோட நல்லா நடமாடிக்கிட்டு இருக்காருங்கிற தகவலை நீங்க

சொன்னதே எனக்கு ரொம்ப பெருசுண்ணே.

ஒவ்வொரு நாளும் நான் பூவும், பொட்டும் வெச்சுக்கும்போது மனசு கிடந்து அடிச்சிக்கும். ‘இதுக்கு அர்த்தம் இருக்குதா...? இல்ல, நான் பாவம் பண்றேனா?’ன்னு ஒரே பதற்றமா இருக்கும். இப்ப நீங்க சொன்னது, என் மனசுல பாரம் கொஞ்சம் இறங்கின மாதிரி இருக்கு”

- சகுந்தலாவிடம் ஒரு சந்தோஷம் தெரிந்தது.

“சரிம்மா... அப்ப நான் வர்றேன். ஆமா, இங்க உங்க குடியிருப்புல ஒரு வர்மானி இருக்காராமே... உனக்குத் தெரியுமா?”

“வர்மானியா... அப்படின்னா?”

“அட... என்னம்மா நீ? இந்த வர்மக்கலைன்னு ஒண்ணு இருக்கு தெரியும்தானே?”

“ஓ... வர்மக்கலை தெரிஞ்சவரா? ஆமாண்ணே! ஆறாவது ‘பிளாட்’ல புதுசா ஒருத்தங்க குடி வந்திருக்காங்க. அதுல ஒரு பெரியவரும் இருக்காரு. முகத்தைப் பார்த்தே ஜோசியம் சொல்லவும் அவருக்கு தெரியும்னு கேள்விப்பட்டேன். நான்கூட போகணும்னு இருந்தேன். ஏண்ணே... எதுக்கு கேக்கறீங்க?”

“இப்ப நீ சொன்னே பாரு. முகத்தைப் பார்த்தே ஜோசியம் சொல்றார்னு. அதான் பார்க்கலாம்னு”

“அப்ப போய் பார்த்துட்டு வந்து எப்படி ஜோசியம் சொல்றார்னு சொல்லுங்க. எனக்கும் இப்ப கெட்ட நேரம் கொட்டமடிச்சிக்கிட்டு இருக்கு. நானும் போய்ப் பார்க்கறேன்.”

- சகுந்தலா சொல்ல, அவரும் புறப்பட்டார். பரணி மட்டும் அப்பா நினைப்பில் கோபத்தில் இருந்தான்.

“டேய்... நீ புறப்படலையா வேலைக்கு?” - சாந்தா கேட்டாள்.

“இதோ பாரு போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் நீபோய்

நிக்காதே. அது ஒண்ணும் கோவில் குளம் இல்ல, நினைச்சா போயிட்டு வர்றதுக்கு. நானே போய் உன் அருமைப்புருஷன், காசியில் ஊரைச் சுத்திக்கிட்டு இருக்கான்னு சொல்லிட்டுப் போறேன்" - என்று தோல் பையோடு புறப்பட்டான்.

வெளியே வந்தவன்... படிகளில் இறங்கி முதல் தளத்தை அடைந்தபோது, பார்வை அவனது கட்டுப்பாட்டையும் மீறி சரண்யா என்று அவன் நேசிக்கிற பெண் அந்த 'பிளாட்'டில் கண்ணில் படுகிறாளா என்று ஒரு பார்வை பார்த்தது.

அவளும் பிளாட்டிலிருந்து அவனைப் பார்த்தாள். கடிதார் அணிந்து, துப்பட்டாவை கழுத்தில் சுற்றிக் கொண்டு கையில் ஒரு புத்தகத்தோடு அவள் பார்த்த பார்வையில் ஆயிரம் மின்னல்கள். அவனும் பரவச உணர்வுகளோடு கடந்து கீழே போய்... சரிந்த நிலையில் நின்றிருந்த தன் 'பைக்'குக்கு உயிர் கொடுக்க முனைந்தான்.

கச்சிதமாக குருவும் வந்து நின்றான். லுங்கி - சட்டை என்கிற தோற்றமே அவன் இன்னும் குளித்துத் தயாராகவில்லை என்பதுபோல இருந்தது.

"என்னடா... நீ இன்னும் குளிச்சிட்டு 'ரெடி' யாகலியா?" என்று பரணி கேட்க, பதிலுக்கு ஊமை பாஷையில் - முகஜாடைகளோடு, 'என்னால பேச முடியலை' என்றான் சைகையில்!

"பேச முடியலியா... இப்பக்கூட நான் எழுந்திரிச்சப்போ. 'நீ போ... நான் வர்றேன்'னு சொன்னே" - அந்தக் கேள்விக்கும் பதிலுக்கு அதே சைகை.

அப்போது ஆட்டோ ஒன்று வந்து நிற்க... அதில் இருந்து இறங்கியவராக அந்த சிவப்பிரகாசம் படிகளில் ஏறத் தொடங்கினார். அவரது பார்வையோ குருவை துளைப்பதுபோல் இருந்தது.

***

# 3

சித்தர்கள் தங்கள் தவத்திற்காகவும், தாங்கள் அலைந்து திரியவும் வனத்தைத் தேர்வு செய்ததன் பின்னாலே பல அரிய உண்மைகள் ஒளிந்துள்ளன. இந்த உலகில் எல்லையில்லாது விரிந்து கிடப்பது ஆகாயம் எனப்படும் வானமாகும். இந்த வானத்தில் தான் பூமியே சுழன்றபடி உள்ளது. மற்ற கோள்களும் உலா வருகின்றன. இதுபோக ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள்!

வானம்தான் மிகவும் பெரியது. இதில் இல்லாததே எதுவுமில்லை. வானம் இருந்தாலே... பூமி இருக்கம் முடியும். காற்று வீச முடியும். மழை பெய்யவும் முடியும், உயிர்களும் பூமியின் மேல் கை வீசி நடக்க முடியும். இப்படி எல்லாமுமான வானம்தான் பஞ்ச பூதங்களில் முதல் பூதம். இந்த எல்லாமுமான வானம் தன் சக்தி - ஆற்றல் அவ்வளவோடும் கால் மடக்கி அமர்ந்தால் அதுவே வனம்.

அந்த சொல்லிலேயும் வானத்துக்கும், வனத்துக்கும் கால்தான் வேற்றுமை! இப்படிப்பட்ட வனத்தில் இல்லாததே இல்லை. குறிப்பாக மனிதர்களின் ஆசை மிகுந்த மன அலைகள், அவர்களின் துயரம் மிகுந்த எண்ண அலைகள் இந்த வனவெளியில் சுத்தமாக இல்லை. எனவே, இங்கே மனதை அடக்கி தவம் புரிவது மிகவும் சுலபம்.

இப்படிப்பட்ட வனங்களில் பொதிகை மலைப் பகுதியில் ஒரு விசேஷ வனம் உண்டு. பேராசையற்றவர்களுக்கு இந்த மலைப்பகுதி விசேஷமானது. ஆனால், ஆசை உடையவர்களுக்கோ இந்த வனம் ஓர் அபாய வனம்!

- **வன வியாசம்**

முறைத்துப் பார்த்தபடி அந்த சிவப்பிரகாசம் செல்ல... பரணியும் கவனித்தான். அது ஒருவர் சகஜமாய் பார்ப்பது போலவே இல்லை! அவர் அந்த அடுக்கு மாடி வீட்டின் ‘லிஃப்டை பயன்படுத்தாமல், படிகள் வழியாக நடந்து ஏறத் தொடங்கினார். பரணிக்கும் அது ஆச்சரியமாக இருந்தது. அந்த ஆச்சரியம் கலையாமல், குருவின் பக்கம்

திரும்பினான். குருவிடம் திரும்பவும் ‘சைகை’ பாஷை!

‘என்னடா சொல்ல வர்றே?’

- பதிலுக்கு குருவிடம் சைகை.

“நீ என்ன சொல்ல வர்றன்னே புரியல! போய் நல்ல டாக்டரைப் பாரு. குரல்வளை நரம்புலதான் ஏதாவது பிரச்சினையா இருக்கணும்.”

- பதிலுக்கு குரு சைகையால் மாடிப் படிகளை காண்பித்தான்.

“அங்க என்னடா?” - அதற்கு மேலும் குருவாலும் அவனுக்கு விளக்கம் தர முடியவில்லை “சரி, நீ புறப்படு’ என்று சற்று கோபமாக சைகை காட்டினான்.

“நீ போய் நல்ல டாக்டரைப் பாரு, தப்பித் தவறி இந்த வெங்கடேஸ்வரன் கிட்ட மட்டும் போயிடாதே. அந்த ஆள் நிச்சயம் எம்.பி.பி.எஸ். ஐ படிச்சு வாங்கலை. பணம் கொடுத்துதான் வாங்கி இருக்கணும். சின்ன தலை வலிக்குக்கூட "ஹைவிடோஸ்’ மாத்திரை தர்ற ஆள்”- என்று ஒரு கருத்தோடு ‘பைக்’கை கிளப்பினான். அதுவும் உதற லெடுத்துவிட்டு ஓட ஆரம்பித்தது.

மாடியின் ஆறாவது ‘பிளாட்’டுக்குள் அந்த சிவப்பிரகாசம் நுழைந்தபோது, முகப்பில் நாற்காலியில் பரணி வீட்டுக்கு வந்திருந்த அந்த மனிதர் காத்துக் கொண்டிருந்தார். சிவப்பிரகாசம் வரவும் எழுந்து நின்று கும்பிட்டார்.

“நீங்க யார்?”

“உங்களதான் பார்க்க வந்திருக்கேன். என் பேர் வீரமணி. காலையில பத்து மணிக்குள்ள வந்தா... முகத்தைப் பார்த்தே ஜோசியம் சொல்வீங்கன்னு கேள்விப்பட்டேன்.”

“சரிதான்... அதுக்குள்ள ஊர் பூரா பரவிடுச்சா?”

“பரவினா உங்களுக்குத்தானேங்க வருமானம்...?”

அந்த பதிலைக் கேட்டு சிவப்பிரகாசம் சற்று கோபமாக பார்த்தார்.

“என்னங்க.... நான் தப்பா ஏதாவது சொல்லிட்டேனா?”

“நான் வருமானத்துக்காக ஜோசியம் சொல்ற ஆள் இல்ல. அடுத்து, ஜோசியக்காரன்னு என்னை யாரும் சொல்றதை விரும்பலை”

- அவர் பேசிக்கொண்டே அணிந்திருந்த ஜிப்பாவை கழற்றிவிட. அதை அந்த வீட்டில் இருந்த ஓர் இளம்பெண் வந்து பணிவாக வாங்கிக் கொண்டாள். சட்டையை கழற்றி விட்ட நிலையில் அவரது மார்புப் பகுதியை பார்க்க ஆச்சரியமாக இருந்தது. வயிறு மிகவே சுருங்கி ஒரு கையால் பிடித்துவிட முடியும் போல தெரிந்தது. புஜமும், அதைத் தொடர்ந்த இரு கைகளும் கண்ணிக் கண்ணியாக மல்யுத்தக்காரர்களின் கைகளைப் போல கிண்ணென்று இருந்தது.

“என்ன அப்படிப் பாக்கறே?”

“அய்யாவுக்கு எழுபது வயசு இருக்குங்களா?”

“வர்ற வைகாசி வந்தா தொண்ணூத்தி ஏழு!”

“நம்ப முடியலீங்க... உங்களுக்கு எழுபதுதான் என் கனக்கு.

“இப்படி தப்பு தப்பா கணிக்கிறதுதானே உங்க வழக்கம்.”

அவர் பதிலில் ஓர் இளக்காரம் தெரிந்தது. அப்படியே கட்டி இருந்த வேட்டியை அவர் எதிரிலேயே அவிழ்த்து, சற்று மேலேற்றி கட்டிக் கொண்டார். அப்போது உள் ளாடையாக சித்த லங்கோடு தெரிந்தது. இறுக்கமாக - காயத்துக்கு கட்டுப் போட்டது போல இழுத்துக்கட்டி இருந்தால் அதை ‘சித்த லங்கோடு’ என்பார்கள். அதை கட்டத் தெரிவதே ஒரு கலை.

சித்தர்கள் சம்மந்தம் இல்லாமல் அதை சரியாக கட்ட முடியாது. மிகவும் இறுக்கமாக கட்டினால், ரத்த ஓட்டத்தில் பாதிப்பு ஏற்படும். இதைப் பற்றி வீரமணி ஓரளவு கேள்விப்பட்டு இருக்கிறார். இப்போது நேரில் பார்க்கவும்,

அந்த ஒரு நொடிப்பொழுதில் தெரிந்த காட்சியே வீரமணிக்கு தன் எதிரில் நின்றுகொண்டு பேசுபவர் ஒரு வர்மானி மட்டுமல்ல என்பதை உணர்த்திவிட்டது. உடனே ஒரு மரியாதையும், பயமும் ஏற்படத் தொடங்கியது. அவரும் அதை உணர்ந்தது போல பேசத் தொடங்கினார்.

“என்ன... என் லங்கோடு உன்னை ரொம்ப யோசிக்க வைக்குதா?”

“அ... ஆமாங்கய்யா. சித்தர் சாமிங்கதான் இப்படி கட்டுவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்.”

அதற்கு அவர் பதில் சொல்லாமல் சிரித்தார்.

“அய்யா, நான் எதுக்கு வந்திருக்கேன்னா...?”

- தான் வந்த விஷயத்தை ஆரம்பிக்கப் பார்த்தார்.

“கோவிலுக்கு வர்றவன், சாமி கும்பிடத்தான் வருவான். சினிமா கொட்டாய்க்கு படம் பார்க்க வருவான். என்கிட்ட வர்றவன் மட்டும். விதி இருந்தாதான் வருவான்னு எனக்குத்தான் தெரியுமே....!”

- சிவப்பிரகாசத்தின் பதிலுக்குள் ஒரு புதிய கோணம்.

“நான் ஜோசியம் பார்க்கலாம்னு வந்திருக்கேன்யா. நீங்க விதி இருந்தான்னு என்னவோ சொல்றீங்க”

“விதி இருந்தாதான் என்னைப் பார்க்கலாம். உன் கிட்ட அது இருக்கு போகட்டும்... விடு. நீ இனி பேசாதே. நானே சொல்ல வேண்டியத சொல்லிடுறேன். உன் மகளும், மாப்பிள்ளையும் காசி-ராமேஸ்வரம்னு போய் வந்தது வீண் போகப்போறதில்லை! அவங்க ‘பிள்ளைக்கலி" தீர்ந்து போச்சு.

அடுத்த வருஷம் இதே நேரம் உன் மகளால நீ தாத்தா ஆகியிருப்பே. உன் மருமகனுக்கு இன்னொரு கல்யாணமோ, உன் மகள் மலடியாகறதோ கிடையாது. உனக்கு சக்கரை நோய் இருக்கு மாத்திரை - மருந்தை உன் விருப்பத்துக்கு தின்னுக்கோ. நீ மதுரைக்காரன்கிறதால

உனக்கு ஒண்ணு சொல்றேன். உன் வீட்ல இருந்து செருப்பு போடாத காலோட திருப்பரங்குன்ற மலைக்குப் போய் கிரிவலம் வந்து சாமி கும்பிடு.

அப்படி நடந்து போகும்போது, மூணு தடவைக்கு மேல உக்காந்து ஒய்வு எடுக்காதே. ஒரு தடவைக்கு மேல தண்ணி குடிக்காதே. உனக்கு இப்ப அறுபத்தி மூணு வயசாகுது. எம்பத்தேழு வருஷம், நீ இந்த பூமியில கிடந்து திரியனும்ங்கிறது விதி. ஆகையால இப்போதைக்கு அணு உலைக்குள்ளேயே குதிச்சாலும் உனக்கு எதுவும் ஆகாது. நீ கேக்க வந்த விஷயமும் இதெல்லாம்தானே?”

- அவர் சொல்லி முடிக்க, வீரமணி வெலவெலத்துப் போய்விட்டார்.

“என்ன பாக்கறே?”

“இல்லய்யா! உங்கள பத்தி கேள்விப்பட்டது சத்தியம். அசத்திட்டீங்க. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. எப்படிய்யா இதெல்லாம்?”

“அசத்தறதாவது… புசத்தறதாவது? எல்லாம் சித்தப் படிப்பப்பா. காலேஜில பி.ஏ.,எம்.ஏன்னு சொல்லித் தர்றாங்க. காட்டுக்குள்ள மனுஷனை படிக்க சொல்லத் தர்றாங்க. கத்துக்கிட்டா நீயும் சொல்லலாம். நான் இப்ப சொன்னதுக்கு ‘முகக்குறி’ன்னு பேர். நீ மனசுல நினைக்கிறத…. கண்ணு காட்டும். நெத்தியில இருக்கிற வரிங்க… ஆயுசைச் சொல்லிடும். அம்புட்டுதான்.”

“சந்தோஷம்யா. உங்கள நான் இப்ப சாமி மாதிரி தான் பார்க்கிறேன். எனக்குள்ள இப்ப ஒரு நம்பிக்கையும், சந்தோஷமும் வந்திருக்கு உங்க கால்ல விழுறேன். என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க”

- என்றபடியே காலில் விழுந்தார் வீரமணி.

“எழுந்திரி… எழுந்திரி. அதான் நீநல்லா இருக்க என்ன சொல்லணுமோ அதைச் சொல்லிட்டேனே!”

வீரமணியும் எழுந்து நின்றார்.

“சரி, புறப்படு. அதான் வந்த ஜோலி முடிஞ்சிருச்சி”

“அய்யாவுக்கு காணிக்கை…”

“காணிக்கையா. எனக்கா?”- கேட்டுவிட்டு பெரிதாகச் சிரித்தார்.

“அய்யா… நான் தப்பா எதுவும் கேட்டுட்டேனா?”

“பொறவு. இந்த ரூவா நோட்டை எல்லாம் நான் தொட்டு பல காலம் ஆச்சு. எனக்கு எதுக்கு அதெல்லாம்? நீ ஒண்ணு பண்ணு.”

“சொல்லுங்கய்யா”

“எனக்கு ரெண்டு வாலிபப் பசங்க தேவைப்படுறாங்க. கூட்டிக்கிட்டு வருவியா?”

- அவர் அப்படி கேட்கவும், வீரமணியிடம் வியப்பு.

“அய்யா… நீங்க என்ன சொல்றீங்க?”

“இரண்டு வாலிபப் பசங்க எனக்கு தேவைப்படுறாங்க. கூட்டிக்கிட்டு வருவியான்னேன்.”

“தப்பா எடுத்துக்காதீங்கய்யா. எதுக்குன்னு சொன்னீங்கன்னா.”

“காரணம் சொன்னாத்தான் கூட்டிக்கிட்டு வருவியா?”

“அப்படி இல்லைய்யா. படிச்ச பசங்களா - படிக்காத பசங்களா…? அவங்க இங்க வந்து என்ன செய்யணும்?ன்னு தெரிஞ்சாதானே அதுக்கு தகுந்த மாதிரி கூட்டிக்கிட்டு வர முடியும்?”

“யாரா இருந்தாலும் பரவாயில்லை. நான் சொன்ன படி நடந்துக்கணும்.”

“எப்படிங்கய்யா… உங்க கூடவே எப்பவும் இருக்கணுமா? இல்ல, நீங்க சொல்ற வேலையை செய்துட்டு போயிடலாமா?”

“கூடவே இருந்தா நல்லாத்தான் இருக்கும்.”

"அப்ப சம்பளத்துக்குன்னு எடுத்துக்கலாமா?”

"தாராளமா....”

“தப்பா நெனைக்காதீங்கய்யா. எவ்வளவுன்னு....?”

“என்கூட ஒருத்தன் இருந்து - பேச்சைக் கேட்டு நடந்தா சம்பளம் என்னய்யா சம்பளம்? அவன் தங்கமாவே அள்ளிக்கலாம்.”

“தங்கமாவா...? என்னய்யா சொல்றீங்க! எனக்கு புரியல”

“தங்கம் தெரியாதா உனக்கு?”

“அது தெரியும்ப்யா. ஆனா அதை நீங்க...”

“எப்படித் தருவேன்னு பாக்கறியா? ஒரு நிமிஷம்... அம்மாடி கல்யாணி...”

- அவர் உள் பக்கம் திரும்பி அழைக்க... முன்பு வந்த அந்த இளம்பெண் திரும்ப வந்தாள். பாவாடை - தாவணி என்று இருபது ஆண்டுகளுக்கு முந்தைய பெண்ணாகவும் தெரிந்தாள்.

“அந்த மான் தோல் பையை எடுத்துக்கிட்டு வா தாயி”- எனவும், அவள் அதை கேட்டு வெறித்தாள்.

“போ தாயி... போய் கொண்டுக்கிட்டு வா”

“வேண்டாம் தாத்தா! சொன்னா கேளுங்க. நான் இந்த வீட்டுக்குத்தான் குடிவருவேன்னு பிடிவாதம் பிடிச்சபோதே நினைச்சேன்.”

“கல்யாணி... தாத்தா முன்னால இப்படியெல்லாம் பேசக்கூடாது. இப்ப நீ எடுத்துக்கிட்டு வர்றியா. இல்ல நான்..."

- அவர் எழுந்திருக்க முயல, அவளே வேண்டா வெறுப்பாக திரும்பி நடந்தாள்.

திரும்பி வந்தபோது ஒரு பள்ளிக்கூட பிள்ளைகளின் புத்தகப்பை போல மான் தோல் கொண்டு தைக்கப்பட்ட ஒரு பை உள்ளே ஏட்டுக் கட்டுகள், தர்ப்பைப்புல் கட்டு, ஜாதிக்காய், மாசிக்காய்... அப்புறம் சிறியதான ஒரு திருவோடு, குட்டி ஸ்படிக லிங்கம், சின்னதாய் ஒரு திரிசூலம், வேல் என்று தெய்வீக பொருட்களாகவே இருந்தன. ஒவ்வொன்றாய் எடுத்து வெளியே வைத்துவிட்டு, உள்ளே கையைவிட்டு துழாவி... பின் வெளியே எடுக்கவும், எலுமிச்சம் பழ அளவில் ஒரு தங்க உருண்டை.

“இந்தா... இது சொக்கத் தங்கம். எப்படியும் நூறு, நூத்தம்பது கிராம் இருக்கும். இதான் ‘அட்வான்ஸ்’. அதாவது முன் பணம் மாதிரி. அந்த பசங்க எனக்கு பிடிச்சபடி பணிவாகவும், நல்ல விதமாகவும் நடந்துக்கிட்டாங்கன்னா அப்பப்ப இந்த மாதிரி தருவேன்.”

- அந்த தங்க உருண்டையைத் தூக்கி தன் வசம் கொடுக்க, வீரமணிக்கு பிரமிப்பு.

“அப்புறம் ஒரு முக்கியமான விஷயம். என்கிட்ட பேசற விஷயங்கள, நீ வெளியே போய் யார்கிட்டேயும் என் உத்தரவு இல்லாம பகிர்ந்துக்கக் கூடாது. மீறி பகிர்ந்துக்கிட்டா, நான் இங்க இருந்துக்கிட்டே உன் வாயைக் கட்டிடுவேன்.”

- அவர் அப்படி கூறவும், வீரமணிக்கு சற்று திகைப்பாகவும் இருந்தது.

உள்ளங்கையில் அந்த தங்க உருண்டை!

***

# 4

இந்த வனப்பகுதியில் எவ்வளவோ அதிசயங்கள் உள்ளன. அதில் ஒரு அதிசயத்தை 'கோரக்கர் மலை வாகடம்' மூலம் அறியலாம். இந்த வனப் பகுதியில் காலாங்கிநாதர் என்னும் சித்த முனிவர் தோண்டிய தைலக்கிணறு ஒன்று உள்ளது. இந்த கிணற்றுத் தைலம் அசாதாரணமானது. இந்த தைலமானது ரசவாதம், யவ்வன காந்தி, குஷ்டம் போன்றவற்றுக்கு பயன்படும் மிகச் சிறந்த மூலப்பொருள். இதை ஒரு கற்கதவு கொண்டு மூடிவிட்டார் காலாங்கி நாதர்.

இந்த கிணற்றில் இறங்கி தைலம் எடுக்க வேண்டுமானால், அஷ்டமா சித்தி தெரிந்திருக்க வேண்டும். அந்த சித்திகளில் ஒன்றாக 'கூடு பாய்தல்' எனும் பிரகாமிய வித்தையில் தேறி எதாவது ஒரு கிளி அல்லது குருவியின் உடலுக்குள் புகுந்து, பின் பாறை இடுக்கின் வழியே உள்புகலாம். உள்ளிருக்கும் இருளுக்குள் கண்கள் தெரிந்திட ஆந்தையாக மாறிச் சென்றால் தைலத்தை காணலாம்!

**- வன வியாசம்**

உள்ளங்கையில் மின்னிய தங்க உருண்டை, வீரமணியின் கண்களில் பெரும் ஆசையாய் வழியத் தொடங்கியது.

"என்ன பார்க்கறே... சொக்கத் தங்கம்தான்! போய் எங்க வேணா உரசிப் பார்த்துக்கோ"

"ஐயோ... நான் சந்தேகப்பட்டெல்லாம் பாக்கல. இப்படி உருண்டையா இருக்கேன்னுதான் பாத்தேன்."

சரி... பசங்கள எப்ப கூட்டிக்கிட்டு வர்றே?"

"ஒரு வாரம் வரை அவகாசம் கொடுங்க.... உங்களை குருவா நினைச்சு நல்ல சிஷ்யனுங்களா நடந்துக்கிறவங்களா பார்த்து கூட்டிக்கிட்டு வர்றேன்."

"நல்லது.... நீ புறப்படு"

- சிவப்பிரகாசம் உத்தரவு கொடுத்தார். வீரமணியும் ஒரு புது உற்சாகத்தோடு புறப்பட்டார். அவர் விலகவும், அவருடைய பேத்தியான கல்யாணி எதிரில் வந்து நின்றவ ளாக அவரையே வெறித்துப் பார்த்தாள்.

“அப்படி பாக்காதே கண்ணு… என்னென்னவோ பண்ணுது”

“நான் இப்படி பாக்கக்கூடாதுன்னா நீங்க சும்மா இருக்கணும். ஆனா இருக்க மாட்டேங்கிறீங்களே!”

“எனக்கு எதுவும் ஆகாது தாயி, கருப்பன் இந்த தடவை கட்டாயம் உதவி செய்வான். அந்த மருந்து மட்டும் கிடைச்சிட்டா… அப்புறம் உலகத்திலேயே நான்தானே மருத்துவனுக்கெல்லாம் மருத்துவன்.”

- அவர் பேசிய விதத்தில் பெரிய அளவிலான ஆசை தெரிந்தது.

அந்த நட்சத்திர ஓட்டலின் அரங்கில் மிடுக்கான – ‘டை’ கட்டிய மனிதர்களின் பெருங்கூட்டம். அவ்வளவு பேரும் தோல் பையும், கையுமாக திரியும் மருத்துவப் பிரதிநிதிகள். அவர்களில் பரணியும் இருந்தான்.

அவர்களுக்கு நடுவில் ஐம்பது வயதைக் கடந்திருந்த மிடுக்கான மனிதர், தன் கழுத்து ‘டை’யை தளர்த்தி விட்டபடியே அந்த பிரதிநிதிகள் அவ்வளவு பேரையும் பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவர் முகத்தில் சுரத்தில்லை. அந்த ஏ.சி. ஹால் குளிரையும் மீறிக்கொண்டு அவரது அகலமான நெற்றியில் எண்ணெய் பசையும், வியர்வைப் புள்ளிகளும் தெரிந்தன.

இவருக்காகத்தான் அவர்கள் எல்லோருமே காத்துக் கொண்டிருந்தனர். எனவே, அவர் வந்து நிற்கவும் அமைதி யாக அவரைப் பார்த்தனர்.

அவரும் செருமியபடியே ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார்.

“அன்புள்ள நண்பர்களே!

மிக அவசரமாக உங்களையெல்லாம் நான் இன்று சந்திப்பதற்கு ஒரு காரணம் உள்ளது. நாம் அனைவரும் பணியாற்றும் நம்முடைய மருந்துப் பொருள் நிறுவனம், போன வாரத்தில் ஒரு மேல் நாட்டு நிறுவனத்துக்கு விற்கப்பட்டுவிட்டது. அதனால் நம்முடைய நிர்வாகமே மாறி விட்டது.

இந்த நிலையில் நம் நிறுவனத்தை வாங்கி இருக்கும் அந்த மேல் நாட்டு நிறுவனம், பல புதிய முடிவுகளை எடுத்துள்ளது. அந்த முடிவுகள் நமக்கு நல்லதாக இல்லை. குறிப்பாக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இங்கே வேலையில் இருப்பவர்களுக்குத்தான் வேலை. மற்றவர்கள் விலகிக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கு மூன்று மாதங்கள் வரை அவகாசம் அளிப்பதாகவும் கூறியுள்ளது.

இந்த மூன்று மாதத்துக்கான சம்பளத்தைத் தந்து, வரும் வாரமே, அவர்கள் அவ்வளவு பேரையும் ‘ரிலீவ்’ செய்ய உத்தரவிட்டுள்ளது. புதிய நிர்வாகத்தின் இந்த முடிவை ஏற்றுக்கொள்வதாக மருத்துவப் பிரதிநிதிகள் சங்கமும் கூறிவிட்டது. அந்த வகையில் தென் பிராந்தியத்தில் மட்டுமே இருபத்தியேழு பேர் வேலை இழக்கிறார்கள்.

அதில் இந்த மதுரையில் இரண்டு பேர் அடக்கம். ஒருவர் ஆனந்தகுமார், அடுத்தது பரணி. இவர்கள் இருவரும் என்னை மிகவே கவர்ந்தவர்கள். சுறுசுறுப்பானவர்கள். அதிலும் பரணி ஒரே நாளில் அறுபது டாக்டர்களை சந்தித்து, நமது பொருட்களை அறிமுகப்படுத்தி இங்கே ஆயிரங்களில் இருந்த நம்முடைய வியாபாரத்தை லட்சத்துக்கு கொண்டு சென்றவர் ஆவார்!

அப்படிப்பட்டவரை இழப்பதை நான் பெரிய நஷ்டமாகக் கருதுகிறேன். ஆனால் வேறு வழியில்லை. அவர் என்னை மன்னிக்க வேண்டும்.”

- அந்த மனிதர் பேசிக்கொண்டே போனார். அங்கே ஒரு நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்திருந்த பரணியும் எழுந்து நின்றான்.

அவர் பேச்சும் நின்றது.

“யெஸ் பரணி... ஏதாவது கேக்கப் போறீங்களா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல. உங்கக்கூட சேர்ந்து இந்த நிறுவனத்துக்காகப் பாடுபட்டதுக்காக வெட்கப்படுறேன் சார் ‘வீட்டுக்கு கிளம்பு’ன்னு சொல்லிட்டு.... நான் அப்படி வேலை பார்த்தேன், இப்படி வேலை பார்த்தேன்னு நீங்க பேசறதெல்லாம் பெரிய கொடுமை! அதான் கிளம்புன்னிட்டீங்கல்ல. அப்புறம் எதுக்கு எனக்கு பாராட்டும், பெருமிதமும்? புடலங்கா!”

- பரணி பட்டுக் கத்தரித்த மாதிரி பேசிவிட்டு புறப்பட்டான். தோல் பையை எடுத்துக் கொள்ளவில்லை. அது அவர்கள் தந்தது. ஆகையால், கையை வீசிக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

“ஸாரி பரணி... உங்களுக்காக நான் மேலிடத்துல பேசத்தயாரா இருக்கேன். இன்னிக்கு மருத்துவத்துறையே சரியா இல்லை. உங்களுக்கே தெரியும்... சொல்ல முடியாத அளவு போட்டியிலேயும், பொறாமையிலேயும் சிக்கி இருக்கு. அதனால்தான் நம்ம ‘எம்.டி.’ இந்தத் தொழிலே வேண்டாம்னு கம்பெனியையே வந்த விலைக்கு வித்துட்டு போயிருக்கார்”

“மிஸ்டர் சீனியர் மானேஜர் நான் உங்ககிட்ட எந்த விளக்கத்தையும் கேட்கல. எனக்கு எந்த விளக்கமும் தேவையும் இல்ல. எனக்கான ‘செட்டில்மென்ட்’ பணத்தையாவது இழுத்தடிக்காம வேகமா அனுப்பி வையுங்க”

- பரணி கிளம்பிவிட்டான்.

வெளியே ஏராளமான இரும்புக் குதிரைகள் ‘மோட்டார் பைக்'குகள் எனும் பெயரில் தாறுமாறாக நிறுத்தப்பட்டிருந்தன. அதில் அவனது ‘பைக்’கும் நடுவில் சிக்கி இருந்தது. மற்ற குதிரைகளை தள்ளிவிட்டு, தன் குதிரையை வெளியே எடுத்து அதன் மேல் ஏறி அமர்வதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

நான்கைந்து உதைக்கு பிறகுதான் புறப்பட்டது. அந்த நொடி... வாழ்க்கை, வண்டி என்று எல்லாமே உதைபடுவது போல தோன்றி வெறுப்பும் கொப்பளித்தது.

சிறிது தூரம் சென்றவனுக்கு கொஞ்சம் மாறுதலான ஒரு காட்சி. அவனது இச்சைக்கு இனிய முதல் 'பிளாட்' சரண்யா தன் இருசக்கர வாகனத்தோடு நடுத்தெருவில் நின்று திணறிக்கொண்டிருந்தாள்.

அவள் அருகில் போய் தன் 'பைக்'கை நிறுத்தினான்.

அவளையும் ஏறிட்டான். முகத்தில் கணிசமான சிரிப்பு.

“என்னன்னு தெரியல-திடீர்னு நின்னு போச்சு”என்றாள்.

“பெட்ரோல் இருக்கா... பார்த்தீங்களா?”

“அதெல்லாம் நிறைய இருக்கு”

"அப்ப 'ஸ்பார்க் பிளக்' பிரச்சினையா இருக்கும்.”

"அப்படின்னா...?”

- அவள் கேள்விக்கு அவன் பதிலைக் கூறவில்லை. 'பைக்'கை ஓரங்கட்டிவிட்டு வந்து மளமளவென்று தனக்கு தெரிந்த வித்தையை காட்டத் தொடங்கினான்.ஆனால், அந்த 'ஸ்பார்க் பிளக்'கும் நன்றாகவே இருந்தது.

“ஒருவேளை 'கார்ப்பரேட்டர்' அடைக்குதோ?”

“உம்....” - அவள் நெற்றி சுருங்க ஆமோதித்தாள்.

கழுத்தில் மிகச் சன்னமாய் ஒரு தங்கச் சங்கிலி. அவ்வளவு அழகாய் இருந்தது. நுனி நாக்கால் நக்கியது போல மிக மிகச் சிறிய பொட்டு. அதன் மேல் சன்னமான விபூதிக் கீறல். இளம் சிவப்பு நிறத்தில் சுடிதார்! சர்வ லட்சணமான ஒரு பெண்ணின் இளமை என்பது எப்படிப்பட்ட சோர்வையும் விரட்டும் 'டானிக்' என்பது சரியாகவே இருந்தது.

“ஒண்ணு பண்ணட்டுமா?”

“என்ன?”

“இதை பக்கத்துல ‘மெக்கானிக்’கிட்ட விட்டுட்டு, என் வண்டியில வந்துடுங்க. அப்புறமா நான் வந்து எடுத்துட்டு வந்துவிடறேன்.”

“உங்களுக்கு எதுக்கு சிரமங்க?”

“சரி, அப்ப நான் எனக்கென்னன்னு போகட்டுமா! நீங்க தள்ளிக்கிட்டே வர்றீங்களா?”

- அந்த கேள்வி முன் அவள் சற்று அசடு வழிந்தாள்.

“இந்த “ஃபார்மாலிட்டி’யான பேச்செல்லாம் எதுக்கு...? ‘பிராக்டிக்கலா' நான் சொல்லி இருக்கேன்”

“சரி, உங்க விருப்பப்படியே செய்யுங்க”

“இது என் விருப்பம் இல்லீங்க! உங்க நேரம்....”

- என்றவன், தன் பைக் அருகே அவளை தனியே நிறுத்தாமல்... தன்னோடு வரச் சொன்னான்.

“ஐயோ உங்க ‘பைக்'கு....

“பிறவித் திருடனாலேகூட அதை உதைச்சு ‘ஸ்டார்ட்’ பண்ண முடியாது. அது எனக்கு மட்டும்தாங்க கேக்கும். நீங்க வாங்க. தனியா நின்னுக்கிட்டிருந்தா இந்த பக்கமா நிறைய பீட்டர் தொல்லை இருக்கறதால உங்களுக்குத்தான் கஷ்டம்.”

“பீட்டர் தொல்லையா?”

“பீட்டர் தெரியாது? அரைகுறை இங்கிலீஷ்!”

- நடந்தபடியே அவன் சொல்ல. அவள் சிரித்தாள் சிரித்தபோது, அவள் அழகும் பல மடங்கானது.

அவனுக்கு இவளை சந்திக்கும் விதி காரணமாகவே வேலை போனதுபோல தோன்றியது!

“அப்புறம் நீங்க என்ன பண்றீங்க?” - அவள்தான் கேட்டாள்.

“நானா…?” - அவன் திருப்பிக் கேட்டான்.

உங்களைத்தான் நானும் கேட்டேன்.

“என்னத்த சொல்றது…? மருத்துவப் பிரதிநிதியாக இருந்தேன். தோற்றத்துல் 'ராயலா”வும், ‘மென்டலிபாய்லா’வும் இருக்கற ஒரே வேலை. அதுவும் போயிடுச்சு”

“போயிடிச்சா?”

“ஆமாங்க. இப்பதான் என் சீட்டை கிழிச்ச விஷயத்தை ‘சீனியர் மேனேஜர்’ சொல்லி முடிச்சார் திரும்பி வரும்போதுதான் உங்க தரிசனம்”

“தரிசனமா?”

“பின்ன… இன்னிக்கெல்லாம் உங்கள மாதிரி ‘ஃபிகர்’களை பாக்கறதை சாதாரணமா சொல்லலாமா?”

“ ‘ஃபிகரா…’ நானா?”

“என்னங்க.எல்லாத்துக்குமே ஆச்சரியப்படுறீங்க.என் பேர் பரணின்னா அதுக்கும் ‘பரணியா?’ன்னு கேட்டு ஆச்சரியப்படுவீங்க போல….”

- அவள் திரும்ப சிரித்தாள்.

“ஆமா… உங்கள பத்தி எதுவும் சொல்லமாட்டீங்களா?”

“என் பேர் சரண்யா”

“அதான் தெரியுமே!”

“தெரியுமா? எப்படி?”

“நான் என்ன பல்போன கெழவனா! எப்படின்னு என்கிட்ட கேக்கறீங்களே….? நானும் ஒரு பீட்டருங்க. பீட்டர்ன்னா சுற்றுவட்டாரத்துல இருக்கற ‘ஃபிகர் லிஸ்ட்', அவங்க ‘பர்த்

டேட்’, ‘பர்சனல் டேஸ்ட்’டுன்னு எல்லாம் தெரிஞ்சிருக்கணும்.”

“அது எப்படி இவ்வளவு வெளிப்படையா பேசுறீங்க?”

"அப்பதானே இப்படியொரு கேள்வி கேட்பீங்க?”

- அவள் திரும்பவும் அவன் பதிலுக்காகச் சிரித்தாள்.

“நல்லவேளைங்க.... நீங்க மதுரையில இருக்கீங்க”

“நீங்க சொல்றது புரியலேயே....!”

“நீங்க மட்டும் சென்னையில இருந்து உங்கள டைரக்டர் ஷங்கரோ. இல்ல முருகதாசோ பார்த்திருந்தா நீங்க இந் நேரம் பெரிய ‘ஹீரோயின்’ ஆகியிருப்பீங்க. அப்புறம் நான் எல்லாம் 'ஸ்கிரீ ன்’லதான் பாக்கும்படி ஆகியிருக்கும்.”

“என்ன... கிண்டல் பண்றீங்களா?”

“சத்தியமா இல்ல. நான் சொல்றது ஒரு பேருண்மைங்க”

அவன் பேச்சில் சாதிக்க - "மெக்கானிக் ஷாப்’பும் வந்தது. அந்த ‘மெக்கானிக்’கே பரணியை நம்ப முடியாத படிதான் இருவரையும் பார்த்தார்.

“பாத்து வையுங்க. வந்து எடுத்துக்கிறேன்” - என்றபடியே திரும்பவும் இருவரிடமும் நடை. அவனது ‘மோட்டார் பைக்’கையும் கிளப்பினான். அவளும் ஏறி அமர்ந்து கொண்டாள். அவள் அமர்ந்த நிலையில் பக்க வாட்டில் ‘ஹேண்டிலை’ பிடித்துக் கொண்டாள்.

அவனுக்கு விரைவில் அவள் தன் தோள் மேல் கை போடும் நாள் வரும் என்று தோன்றியது. தோன்றிய வேகத்தில்... இருந்த வேலையும் போய்விட்ட லட்சணத்தில் இப்படியொரு விதமான உணர்வு தேவைதானா என்றும் தோன்றியது.

தெருவுக்குள் அவள் பின் அமர்ந்திருக்கும் நிலையில் நுழையவும் நிறைய தெரிந்தவர்கள் ஆச்சரியத்தோடு

பார்த்தனர். அவன் ‘பைக்’கும் அபார்ட்மெண்ட் பார்க்கிங்’கில் நின்றது. அவள் இறங்கிக்கொண்டு நன்றி கூறினாள்.

அவனும் தனது இரும்புச் சட்டியை ஒரு கைக்குழந்தை போல அணைத்தபடி, தனது ‘பிளாட்’டுக்குள் நுழைந்து நின்றான். அக்கா சாந்தா தலையில் பெரிய கட்டோடு அவனை எதிர்கொண்டாள். அருகில் மிக சோகமாய் அவனுடைய அம்மா மற்றும் தங்கை.

“என்னாச்சு?

“உனக்கு போன் பண்ணக்கூடாதுன்னு அந்த குருகிட்ட சொல்லி இருந்தேனே! அவன் சொல்லிட்டானா?”

“என்ன சொல்லிட்டானா?”

“அப்ப நீ இப்ப எப்படி… யார் சொல்லிடா வந்தே?”

“நீ சொல்றதே புரியலைம்மா…..! அக்காவுக்கு என்ன ஆச்சு?”

“என்ன ஆகணும்? உன் அக்கா புருஷன் வந்தான். ‘பிசினஸ்' பண்ணப் போறானாம். அதுக்கு பணம் வேணுமாம். கழுத்துல. காதுல போட்டுக்கறத கழட்டுன்னான். இவ மாட்டேன்னு சொன்னா. ‘அப்ப. நான் கட்டின தாலியைக் கழட்டு’ன்னு ஒரே ரகளை! இவளும் எவ்வளவு தான் பொறுப்பா?

‘ஃபேன்’ல தூக்கு மாட்டிக்க இருந்தா! நல்ல வேளை ஃபேன்’ கழண்டு விழுந்ததுல, தலைக் காயத்தோட தப்பிச்சா”

- அம்மா சொல்லி முடிக்க… பரணிக்குள் அதுவரை சரண்யாவால் ஏற்பட்ட குளிர்ச்சி, கொந்தளிப்பாக மாறத் தொடங்கியது.

***

# 5

"அந்த மலைப்பிராந்தியத்தை கருப்பசாமி, காவல் காப்பதாக ஒரு ஐதீகம்! ஐதீகம் என்பதைவிட அதை ஒரு நிதர்சனமான உண்மையாகவே பலரும் உணர்ந்துள்ளனர். பொதுவில் காவல் என்பது பாதுகாக்கப்பட வேண்டியவைகளுக்காக உருவாக்கிக் கொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும். ஒரு நாட்டுக்கே ராணுவம் என்னும் பெயரில் காவல் தேவைப்படுகிறது. அப்படி இருக்க, தெய்வீக வனத்துக்கே காவலா? என்னும் கேள்விக்கு பின்னால் மேலோட்டமாக பார்த்தால் ஓர் உண்மையும், ஆழமாக பார்த்தால் சூட்சுமமான அடிக்கருத்தும் புரியவரும்.

காற்று பலமாக வீசும்போது சருகுகள் பறப்பது என்பது இயல்பான விஷயம். அதுபோல மதிப்பில் மிக மேலான மூலிகைகள் உள்ள வனங்களில் அதுபற்றி தெரியாதவர்கள் நுழைந்தாலும், அந்த மூலிகைகளுக்கு ஆபத்து. அதைப் பற்றி தெரிந்தவர்கள் நுழைந்தாலும் அந்த மூலிகைகளுக்கு ஆபத்து!

எனவே, அவைகளை பாதுகாத்திடும் நோக்கத்தோடுதான் கருப்பன், கானகத்தில் உலா வருகிறான். மூலிகை காவல் என்பதையும் கடந்து ஆழ்ந்த பக்தியோடு வருபவர்களை, காட்டின் கொடூர மிருகங்களிடம் இருந்தும் கருப்பனே காப்பாற்றுகிறான்!

இவன் வடிவில்தான் நாய். உண்மையில் கருணையுள்ள பெரும் வீரன்!"

**- வன வியாசம்**

பரணியின் மனது குமுறத் தொடங்கியது. ஒரு பக்கம் வேலை போய்விட்ட வருத்தம். மறுபக்கம் அக்காள் - அவள் கணவன் வடிவில் பிரச்சனை.

அக்கா சாந்தா மவுனமாக கற்சிலை போல உட்கார்ந்திருந்தாள். கண்களில் ஒருவித உறைந்துவிட்ட

தன்மை.

இந்த 2013-லும் இது மாதிரி அக்காக்கள் தெருவுக்கு தெரு இப்படி சிலை போல் இருப்பதுதான் கொடுமை. அவனுக்கு அக்கா மேல் கோபமாகவும் வந்தது... பரிதாபமாகவும் இருந்தது.

“ஆமாம். நீ என்னப்பா இவ்வளவு சீக்கிரம் இன்னிக்கு வந்துட்டே! நீ வர எப்படியும் ஏழு, எட்டு மணி ஆகுமே?”- என்று அவனது சிந்தனையைக் கலைத்தாள் அம்மா சகுந்தலா.

அவளிடம் வேலை போய்விட்ட விஷயத்தை எப்படி சொல்வது?

ஏற்கெனவே அக்காவால் கவலை நெஞ்சைக் குமைய வைத்துக்கொண்டு இருக்கிறது!

பரணி மவுனமாகவே நீடித்தான்.

“என்னடா பதிலைக் காணோம்? உடம்புக்கு முடியலியாப்பா! சுக்கு காப்பி போட்டு தரட்டுமா?”

அம்மாவின் வாஞ்சை அவனைக் கலைத்தது.

“அம்மா... என்னை இப்ப எதுவும் கேக்காதே! ஆமா, அந்த ஆளு ஏதாவது சொல்லிட்டு போயிருக்கானா?”

- ‘அந்த ஆள்’ என்று குறிப்பிட்டது அக்கா சாந்தாவின் கணவனை!

அவன் கேட்ட கேள்வி முன் சகுந்தலா மவுனமாக நின்றாள்.

“என்னம்மா.... எதுவும் பேச மாட்டேங்கற? அப்ப ஏதோ சொல்லிட்டு போயிருக்கான்னு தெரியுது”

“ஆமாண்ணே... ஒரு வாரம் கழிச்சு மாமா வரும் போது, அக்காவுக்கு நாம போடுறதா சொன்ன பவுனை போட்டிருக்கணுமாம். அப்படி இல்லாட்டி அக்காவை அறுத்து விட்டுடுவாராம்”

- தங்கை பிரபா பதில் தந்தாள்.

“ஓ… அறுத்து விட்ருவாராமா? ரொம்ப சவுகரியமா போச்சு. முதல்ல அதை செய்யச் சொல்ல வேண்டியதுதான்” - என்றான், கசப்பான குரலில்.

“அப்புறம்?”-இந்த கேள்வியை கேட்டது தாய் சகுந்தலா!

“என்ன அப்புறம்? என் அக்கா தாலி கட்டிக்கிட்டதுக்காகவே இவனை மாதிரி பணப்பிசாசு கூட சீரழியணுமா?”

“வேண்டாம்டா….! அப்புறம் இவ எங்க போவா? யார் இவளை வெச்சுப்பா?”

“என்னம்மா கேள்வி கேக்கறே நீ…? அதான் நாம எல்லாரும் இருக்கோம்ல?”

“இப்ப இருக்கோம்டா, சாகற வரை வெச்சி காப்பாத்தணும். முடியுமா உன்னால?”

“அப்ப, சோத்துக்கு செத்து… அவன்கூட போய் எப்படியாவது ஒட்டிக்கிட்டு கிடக்கச் சொல்றியா?”

“வேண்டாம். வேற நிரந்தரமான தீர்வை நீதான் சொல்லேன்?”

‘என்ன நிரந்தரமான தீர்வு? மண்ணாங்கட்டி! உழைச்சு பொண்டாட்டிய காப்பாத்த வக்கில்லாத நாய்கிட்ட அன்பும், பாசமும் இல்லாம வாழறதுக்கு… பிரிஞ்சு வந்து வீட்டுக்கு வீடு பத்து பாத்திரம் தேய்க்கிறது எவ்வளவோ மேல்.”

“ஆக… உன் அக்காவை பத்து பாத்திரம் தேய்க்கத் தான் அனுப்புவே! புருஷன்கூட சேர்ந்து வாழ வைக்க முயற்சி செய்யமாட்டே அப்படித்தானே?”

“காசும், பணமும், தங்கமும், வெள்ளியும்தான் வாழ்க்கைன்னு நினைக்கிறவரோட, அக்கா என்னத்தம்மா வாழ்ந்துடப் போறா?”

“இதுல நம்ம தப்பும் கொஞ்சம் இருக்குப்பா”

“என்ன நம்ம தப்பு? நாம போடுறதா சொன்ன நகையை சொன்னபடி போடலைன்னு சொல்லப்போறே... அதானே?”

“பொறவு... அது தப்பு இல்லையா? வாக்கு கொடுத்திருக்கோம்ல?”

“ஏம்மா இப்படி கல்யாணத்த வியாபாரம் மாதிரி பண்றீங்க? யாரும்மா கண்டுபிடிச்சது இந்த நகை நட்டு, சீர் செனத்திய?

மேல் நாட்டுல இப்படியெல்லாம் கிடையாதும்மா. அங்க ஆணும், பொண்ணும் சமம்”

“எலேய்... எந்தக் காலத்துலேயும் சமமாக முடியாதுடா. ஆம்பள ஆம்பளதான்; பொம்பள பொம்பளதான்! இந்த சமம்கிற பேச்சையெல்லாம் என்கிட்ட பேசாதே. நாங்களும் சமம்னு சொல்லல. வளைஞ்சு கொடுத்து போய் வாழுறதுதான் இங்க வாழ்க்கை.

உனக்கு இளம் வயசு, ஆவேசமா பேசுவே. நாளைக்கே உனக்குன்னு ஒருத்தி வரும்போது தெரியும்.”

- சகுந்தலா சடைத்துக் கொண்டாள்.

சாந்தாவுக்கும் தன்னை மையமாக வைத்து இப்படி பேச்சு வளர்வது பிடிக்கவில்லை!

“பரணி.... எனக்கு உன் கஷ்டம் தெரியும் தம்பி. நீ எனக்காக கவலைப்படாதே. தலையில என்ன எழுதி இருக்குதோ... அதுதான் நடக்கும். அதை யாரும் மாத்த முடியாது” என்று சாந்தா, தன் தம்பிக்கு வக்காலத்து வாங்கினாள்.

“ஸாரிக்கா... நான் பேசணும்னு பேசல. எனக்கும் வேலை போயிடுச்சு” - என்றான் பரணி.

அவன் பதில் சகுந்தலாவை திகைப்பில் போட்டு புதைத்தது.

“டேய்... என்னடா சொல்றே?”

“ஆமாம்மா... வேலை போயிடுச்சி. நான் வேலை பார்த்த கம்பெனியை ஒரு வெளிநாட்டுக்காரன் வாங்கிட்டான்.

அவனுக்கு நான்லாம் தேவையில்லாதவனா போயிட்டேன்.”

“அது எப்படிப்பா… இத்தனை வருஷமா நீ வேலை பார்த்ததுக்கு அர்த்தமே கிடையாதா?”

“அதுக்குத்தான் மூணு மாச சம்பளத்த சும்மா தரப் போறாங்க. மத்தபடி சட்டமெல்லாம் பேசக்கூடாது. பேசினாலும் புண்ணியம் கிடையாது. வேலையில் சேரும் போதே அவங்களுக்கு சவுகர்யமா எழுதி வாங்கிட்டுத் தான் சேர்த்துக்கிட்டாங்க”

“அட கெரகமே…! என் பொழுது இன்னிக்கு இப்படியா விடியணும்?” - சகுந்த லா அழக் கூட சக்தி இல்லாதவளாக ஆனாள்.

“விடும்மா… என் அனுபவத்துக்கு நிச்சயம் வேற கம்பெனியில நல்ல வேலை கிடைக்கும். என்ன… திரும்பவும் ஆரம்பத்துல இருந்து ஒரு சலுகையும் இல்லாம எல்லாம் ஆரம்பமாகும். அதுதான் தலையெழுத்துன்னா அதை மாத்த முடியுமா என்ன?”

- என்ற பரணி, அறைக்குச் சென்று லுங்கியை எடுத்துக் கட்டிக் கொண்டவனாக நண்பன் குருவைப் பார்க்கப் புறப்பட்டான்.

“எங்க கிளம்பிட்டேய்யா?”

குருவைப் பார்த்துட்டு வர்றேன்.

“சாப்பிடலையா?”

“வந்து சாப்பிடுறேன்.”

- பதிலோடு படிகளில் ஏறி ஐந்தாவது ‘பிளாட்’டில் இருக்கும் குருவை தேடிப் போனான். மேலே அவன் ‘பிளாட்’டை அடைந்தபோது, எதிரில் அந்த ஆறாவது ‘பிளாட்’ திறந்திருந்தது. பரணியின் பார்வை அந்த ‘பிளாட்’டையும் ஊடுருவியது.

உள்ளே வர்மானி சிவப்பிரகாசத்தின் பேத்தியான கல்யாணி என்கிற பெண், பாவாடை - தாவணியில் அவன் கண்ணில் பட்டாள்.

பார்க்க குளிர்ச்சியாக இருந்தாள். தலையில் மல்லிகைப்பூ....! நெற்றியில் சற்று பெரிதான பொட்டு. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

‘இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணும் எளிதில் ாவாடை - தாவணியை நினைத்துக்கூட பார்ப்பதில்லை. ாவாடை - தாவணியை மட்டுமா? நெற்றியில் பொட்டையும் ஏதோ நுனிநாக்கில் நக்கியது போல் ஒரு முற்றுப்புள்ளி அளவுக்கு வைத்துக் கொள்வதுதான் ‘ஃபேஷன்’.

இவளிடம் அந்த விஷயத்திலும் மாறுதல்!’

அவள் பார்வை அவனைக் கடந்து குருவைத் தேடுவதுபோல் தெரிந்தது. அது பரணிக்கும் புரிந்தது. குருவும் எதிரில் வந்தான். கழுத்தில் தொண்டைப் பக்கம் சுண்ணாம்பு பூசியிருந்தான்.

“வா மாப்ள...” - என்று சற்று ஈன சுரத்தில் பேசவும் செய்தான். அப்படியே அவனும் கல்யாணியைப் பார்த்தான்.

“டேய்.... என்ன இது கழுத்துல?”

“விளக்கெண்ணையில சுண்ணாம்பை கலந்து, அம்மா பூசிவிட்டாங்க. இப்ப கொஞ்சம் பேச முடியுது” என்ற படியே ‘ஹாலில்’ கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தான். பரணியும் அமர்ந்துகொள்ள...

“என்னடா... இன்னிக்கு வேலைக்கு மட்டம் போட்டுட்டியா... கைலிக்கு மாறி இருக்கே?”

“வேலைக்கு மட்டமில்லடா... வேலைக்கே மட்டம்.”

“என்ன சொல்றேடா?”

“போயிட்டு வான்னு 'டாட்டா' காட்டிட்டாங்கடா. அதை விடு. நீடாக்டர்கிட்ட போகலையா?”

“இல்ல… யார்கிட்ட இருக்கு ஆயிரம், ரெண்டாயிரம்?”

“அப்புறம் பெருசா எதாவது ஆகிடப் போகுதுடா?”

“இதுக்கு மேல பெருசா என்ன ஆகணும்…? இதையே அதோ அந்த பொண்ணுதான் போடச் சொல்லுச்சு”

- குரு எதிர் ‘பிளாட்’டை காட்டினான்.

“அப்ப ‘டெவலப்’ ஆக ஆரம்பிச்சிடிச்சின்னு சொல்லு.”

“சேச்சே…! நீ உடனே பட்டையக் கட்டாதே. அது பாவம். ரொம்ப நல்ல பொண்ணா தெரியுது. கள்ளம் கபடமே இதுகிட்ட இல்லடா”

“ஓ….”

“கிண்டல் பண்ணாதே பரணி. அதுமட்டும் இந்த சுண்ணாம்பு பத்து போடலைன்னா, நான் இப்ப பேசிகிட்டிருக்கவே முடியாது தெரியுமா?”

“ஓ... பத்து போட்டதே மேடம்தானா… சபாஷ்.”

“உன் வேலைக்கு என்ன ஆச்சு? அதை சொல்லு….”

“அதான் சொன்னேனே…. வீட்டுக்கு போக சொல்லிட்டாங்கன்னு….”

“அவங்க சொன்னா உடனே கேட்டுக் கிட்டு போறவனா நீ?”

“இதோ பாரு… என்னை நிரந்தரம் பண்ணாம ‘புரொபேஷன்’லதான் வெச்சிருந்தாங்க. அடுத்து இதை நான் எதிர்பார்த்தேன். எனக்கும் இந்த தோல் பையை தூக்கிக்கிட்டு அரைகுறை ‘இங்கிலீஷ்' பேசிகிட்டு, இந்த வேலையைப் பாக்கறது பிடிக்கலைடா.

ஒவ்வொரு டாக்டரையும் பார்த்து பல்லைக் காட்டி, ‘எங்க மருந்தை எழுதுங்க’ன்னு கெஞ்சற மாதிரி ஒரு கொடுமை இருக்கவே முடியாது. ஆகையால மூணு மாச சம்பளத்தோட வீட்டுக்கு போன்னு சொல்லவும், உண்மையிலே நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன்

தெரியுமா? ஆனா, அவங்ககிட்ட கோபப்படுற மாதிரி நடிச்சிட்டு வந்தேன்.

“விடு... புதுசா வித்தியாசமா எதாவது செய்வோம்....”

“செய்வோமா? என்னடா என்னையும் உன்கூட கூட்டு சேர்த்துக்கறே...?”

“ஸாரிடா. பழக்கதோஷம். நீயும் ஒரு வெட்டி ஆபீசர்தானே. சரின்னு சும்மாவாச்சும் சொல்லு”

- இருவரும் பேசிக்கொண்டு இருக்கும்போது, அந்த பெண் அவர்கள் முன் வந்து நின்றாள். அவள் கையில் விபூதி இருந்தது.

“என்ன கல்யாணி....?”

“இந்த விபூதியை வாயில் போட்டுக்குங்க. பழையபடி பேச்சு வந்துடும்.”

“இப்பவே நல்லா பேச முடியுது”

“இதையும் போட்டுக்குங்க. வாயைக் காட்டுங்க.”

- அவள் சொல்ல, அவனும் வாயைத் திறக்க - அவன் வாயினுள் விபூதியைப் போட்டாள்.

அவனும் விழுங்கிட்டு அவளை இணக்கமாக பார்த்து சிரித்தான்.

“நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?” - அவள் தயங்கித் தயங்கி கேட்டாள்.

“என்ன.?”

“இல்ல... என் தாத்தா விஷயத்துல கொஞ்சம் தூரவே இருங்க. அவர்தான் உங்க வாயைக் கட்டினவர்.”

“என்ன கல்யாணி சொல்றே?”

“இல்ல... அவருக்கு கொஞ்சம் சித்து வேலையெல்லாம்

தெரியும். இந்த ஊருக்குக்கூட ஒரு காரணமாத்தான் வந்திருக்கார். அந்த வேலை முடிஞ்சா கிளம்பிடுவார். அது வரை நீங்க அவர் கண்ணுல படாதீங்க. உங்க நல்லதுக்குத் தான் சொல்றேன்.”

- அவள் தயங்கித் தயங்கி சொன்னது இருவரையும் மிரள வைத்தது.

“கல்யாணி… உன் தாத்தாகிட்ட வித்தியாசமா ஏதோ ஒண்ணு இருக்குன்னு தெரியும். ஆனா, நீ சொல்றதைப் பார்த்தா ஆச்சரியமா இருக்கு. சித்து வேலைன்னா என்ன மாதிரி சித்து வேலை…?”

“எனக்கு அதெல்லாம் விபரமாத் தெரியாது. தாத்தா ஒருத்தரை பார்வையாலேயே ஆட்டி வைப்பாரு. அது மட்டுமில்ல… அவர் கூப்பிட்டா பறவை எல்லாம் கூட அவர்கிட்ட வரும். இப்பக்கூட மாடியில கருடனுக்கு இரை கொடுக்க மேலேதான் போயிருக்கார். நீங்க மறைவா இருந்து பாருங்க. நான் சொல்றது அப்பதான் உங்களுக்கு புரியும்.”

அவள் சொன்னதை கேட்ட மறுநொடி, இருவரும் வெளியேறி. படிகளில் ஏறி மாடியில் உள்ள தளத்தை அடைந்து நாலாபுறமும் பார்த்தனர்.

சிவப்பிரகாசம், தண்ணீர் தொட்டி அருகே கையில் ஒரு கிண்ணத்தை ஏந்திப் பிடித்தவாறு ஆகாயத்தைப் பார்த்தபடி து இருக்க, ஒரு கருடன் அவரை நோக்கி வந்தபடி இருந்தது.

பரணிக்கும், குருவுக்கும் வியப்பில் விழிகள் விரிய ள் ஆரம்பித்தன!

***

# 6

சதுரகிரி பொதிகை, கொல்லி, வெள்ளியங்கிரி சேர்வராயன் போன்ற சித்த புருஷர்கள் நடமாட்டமுள்ள மலைகளில் கருப்பன் போல் நாய்கள் மட்டுமல்ல... பாம்புகளும், பட்சிகளும்கூட காவல் புது காக்கின்றன.இவைகளை மீறிக்கொண்டு ஒருவரால் சித்தர்களின் வசிப்பிடங்களான குகைப் பகுதிகளுக்கோ. இல்லை, ஆற்றோரமாக உள்ள அவர்களின் ஆசிரமப் பகுதிகளுக்கோ போய்விடமுடியாது.

மலைப் பகுதிக்குள் நுழைவோரின் விதிப்பாட்டுக்கு ஏற்ப இவைகள் நடந்துகொள்ளும். விரட்டியடிப்பது, கடித்துக் கொல்வது, விபத்துக்குள்ளாக்குவது என்று அந்த விஷயங்கள் ஆளுக்கு தகுந்த மாதிரி மாறும். ஓங்கி உயர்ந்து நிற்கும் வனத்தையும், வனத்தையுடைய மலையையும் லிங்கமாக கருதி வணங்கும் பக்தி உணர்வு மிக முக்கியம்.

அப்படியொரு மனஅமைப்பு உடையவர்கள், மலை மீது நடக்கும்போது செருப்பு அணியக்கூடாது. அதேபோல எச்சில் உமிழவோ, சிறுநீர் கழிக்கவோ கூடாது. எக்காரணம் கொண்டும் செடி கொடிகளுக்கும் பாதிப்பு வரும் விதமாக நடந்துகொள்ளக்கூடாது!

இவையெல்லாம் மலை மேல் செல்பவர்கள் கடை பிடிக்க வேண்டும். குறிப்பாக தியானத்தில் இருக்கும் சித்தர்களையோ... இல்லை, தவத்தில் இருக்கும் முனிவர்களையோ காண நேர்ந்தால், துளியும் சப்தமின்றி ஒரு சிங்கம்... புலியைப் பார்த்துவிட்டது போல கருதி அங்கிருந்து ஒதுங்கிச் சென்றுவிட வேண்டும்.

ஒரு சிறு சப்தம்கூட அவர்களுக்கு இடையூறாக அமைந்துவிடக் கூடாது.

**- வன வியாசம்**

மாடியில் பரணியும், குருவும் ஒளிந்திருந்து பார்த்த

நிலையில் அந்த சிவப்பிரகாசம் இரு கைகளை தூக்கிப் பிடித்தபடி இருந்தார். கைகளின் மேல் ஒரு பெரிய கிண்ணம். அந்த கிண்ணத்தில் மீன்கள் இருந்தன.

சரிவாக பறந்து வந்த கருடனும், அந்த கிண்ணத்து மீன்களை கவ்விக்கொண்டு திரும்பவும் வானில் மேலேறத் தொடங்கியது. சிவப்பிரகாசமும் கிண்ணத்தை கீழே வைத்து விட்டு, இரு கைகளை கூப்பிக்கொண்டு அந்த கழுகை கும்பிடத் தொடங்கினார்.

பரணியும், குருவும் அதிர்வோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். மனித வாழ்வில் அமானுஷ்ய அனுபவங்கள் எல்லோருக்கும் ஏற்படவே செய்கின்றன. ஆனால், அது சிலர் வரையில் அவர்கள் வாழ்க்கையையே திசை திருப்பிவிடுகின்றன. சிலரோ அதை அமானுஷ்யமாக உணருவதே இல்லை. தற்செயலாக நடந்த ஒரு அதிசயம் போல அதை நினைத்துக்கொண்டு விடுகின்றனர். இங்கே பரணியும், குருவும் இந்த காட்சியை எப்படி எடுத்துக்கொள்வது என்பது தெரியாத குழப்பத்தில் இருக்க. சிவப்பிரகாசம் கும்பிட்ட கைகளை விலக்கிக்கொண்டு சகஜமானவராக திரும்பத் தொடங்கினார்.

அவர் பார்வையில் பட்டுவிடாதபடி இருவரும் சுவரையொட்டி சரிந்து அமர்ந்துகொண்டு, அவர் மறையும் வரை காத்திருந்தனர். அவரும் மறைந்தார்.

‘பிளாட்’டினுள் நுழைந்த போது, கல்யாணி அவரையே குறுகுறுவென பார்த்தபடி இருந்தாள். அந்த பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள். அவரும் பார்த்தார். அவரது பார்வையில் மட்டும், ‘எனக்குத் தெரியாமல் நீ எதையுமே செய்துவிட முடியாது’ என்கிற மாதிரியான ஒரு பொருள்.

ஆனால் அது அவளுக்குப் புரியவில்லை!

மொட்டை மாடியில்…

குரு, பரணியிடம் விவாதம்!

“பரணி… இந்த ஆளை எந்த கணக்குலடா எடுத்துக்கிறது?”

“அதைத்தான் நானும் யோசிச்சிக்கிட்டு இருக்கேன். நானெல்லாம் அதிகபட்சம் தெருவுல தாயத்து விக்கிற மோடி மஸ்தான் வித்தையைத்தான் பாத்திருக்கேன். அதை கண்கட்டுன்னு சொல்லுவாங்க. ஆனா, அது என்ன கண்கட்டுன்னு கேட்டா யாருக்குமே பதில் சொல்ல தெரியாது.”

“இப்ப இதுக்கு நீ என்ன சொல்றே?”

“இது ஒண்ணும் பெரிய விஷயமில்லைடா. மீனைத் தேடி கருடன் வந்துச்சு. நீயும், நானும் மீனைப் பிடிச்சுக்கிட்டு நின்னாலும் அது வரும். ஏன்னா… கருடனுக்கு அது உணவு”

“சரி… என் வாயைக் கட்டினதைப் பத்தி என்ன நினைக்கிறே? அப்படியே அந்தரத்துல மிதந்தாரே அதைப் பத்தி என்ன நினைக்கிறே?”

“அங்கதான் எனக்கு லேசான குழப்பம்! பொதுவா தொண்டையில் கிருமிகளால பாதிப்பு வர்றது ரொம்ப சகஜம். நாம மூக்கால மட்டுமல்ல… வாயாலயும் சுவாசிக்கிறோம். அப்ப கிருமி, உள்ள நுழைய வாய்ப்பு அதிகம். அடுத்து குடிக்கிற தண்ணியாலயும் தொண்டை பாதிக்கப்படலாம். இந்த சுண்ணாம்பை எண்ணையில கலந்து போடுறதெல்லாமும் ஒருவித வைத்திய முறைதான். ஆகையால உன் வாயை அவர் கட்டினார்ங்கறதையே என்னால ஏத்துக்க முடியலை. அந்தரத்துல மிதக்கறதுல புத்த பிட்சுகள் கில்லாடிங்க. அது ஒரு யோகாசனம் மாதிரி. டி.வி.யில பாத்துருக்கேன்”

“அப்ப அவர் வரையில எந்த சித்து வேலையும் இல்லைன்னு சொல்ல வர்றியா?”

“முதல்ல சித்துன்னா என்னன்னு தெரியாம சித்து வேலையைப் பத்தி பேசக்கூடாது.”

“மாயமா - மந்திரமா பண்ணுறதுக்கு பேர்தான் சித்து வேலை”

“பொத்து! நாலு பேர் பேசினாங்கன்னு நீயும் பேசாதே. நம்ப

நாட்டு நாலு பேர் மகா மோசமானவங்க இங்க பிள்ளையார் பால் குடிப்பார். பேய், ராத்திரியில வீட்டுக் கதவைத் தட்டும். பச்சை நிறத் சேலை தேங்கிப் போனா அதை விக்கிறதுக்கும் ஒரு தோஷக் கதையை கிளப்பிடலாம் இப்ப நீயும், நானும் இங்க ஒரு திட்டம் போட்டு அழகா ஊரை ஏமாத்தலாம். நமக்கு அதுக்கு தேவை தைரியமும் குரூரமான மனசும்தான்.”

‘முடிவா நீ என்ன சொல்ல வர்றே?”

இந்த நபருக்கு பின்னால நாம தெரிஞ்சிக்கவும் புரிஞ்சிக்கவும் சில விஷயங்கள் இருக்கு. ஆனா, இதைக் கடந்து நமக்கு வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கேடா?”

“நம்ம வேலையைப் பார்ப்போம்ன்னு சொல்ல வர்றியா?”

“ஆமா.”

“பரணி.”

“என்னடா?”

“என்னை அந்த கல்யாணி பாக்கற பார்வையை நீ பார்த்தேதானே?”

“என்ன... அதை ‘லவ்’வுன்னு நினைக்கிறியா?”

“பின்ன..? அதை ஒரு பெண்ணோட பாச உணர்ச்சின்னோ... இல்லை, நட்புன்னோ சொல்லி என்னை காத்து போன பலூன் மாதிரி ஆக்கிடாதேடா”

“அப்ப அவ காதலிக்கிறாளோ. இல்லையோ! நீ காதலிக்க ஆரம்பிச்சிட்டே?”

“காதலிக்காம இருக்க நான் என்ன கெழ போல்ட்டாடா? இந்த வயசுல காதலிக்காம வேற எப்பட்டா காதலிக்கிறது?”

- குரு பரிதாபமாக கேட்டான்.

பரணி பதிலுக்கு ஒரு மாதிரி சிரித்தான். அவன் சட்டை ‘பாக்கெட்’டில் இருந்த செல்போனில் அவனுக்கு ஒரு

செய்தி வந்த சப்தம் விநோதமான ஒலியாக எழும்பி அடங்கவும் எடுத்து பார்த்தான்.

“அண்ணா... உடனே வா. அவசரம் - பிரபா” என்கிற நான்கு வார்த்தைகள்.

“யாருடா?”

“பிரபாடா... ஏதோ அவசரமாம்! வரச் சொல்றா.”

“சரி... என்னன்னு போய் பாரு. மிச்சத்தை அப்புறம் பேசிக்குவோம். ‘செல்’ இருக்கறது ரொம்ப சவுகரியம்டா. இல்ல?” - குரு விடை கொடுக்க, இருவரும் அங்கிருந்து கீழ் இறங்கினர்.

குரு தன் ‘பிளாட்’டுக்குள் நுழைய. பரணி தொடர்ந்து கீழ் இறங்கினான். முன்னதாக அப்படியே திரும்பி அந்த ஆறாவது ‘பிளாட்’டை ஒரு பார்வை!

கல்யாணி கொட்டக் கொட்ட பார்த்துக் கொண்டிருந்தாள். குருவும்!

அவன் ‘பிளாட்’டுக்குள் நுழையவும், அம்மா சகுந்தலா விடம் பெரும் ஆயாசம்.

“பரணி... வீரமணி மாமா இப்பத்தாண்டா போன் பண்ணினாரு உனக்கு வேலை போன விவரத்தை எதார்த்தமா சொன்னேன். உடனே கெட்டியா புடிச்சிக்கிட்டாருடா. அவர் வேலை வாங்கித் தர்றாராம். உன்னை கேட்டுச் சொல்லச் சொன்னாரு”

- என்ற சகுந்தலா முகத்தில் பரபரப்பு தெரிந்தது.

“இவர் எனக்கு வேலை தர்றாராமா! என்ன வேலை?”

“அது தெரியல. உனக்கு மட்டுமல்ல. உன் நண்பன் குருவும் வெட்டியாத்தானே சுத்திக்கிட்டிருக்கான். அவனுக்கும் வேலை வாங்கித் தர்றேன்னு சொன்னாரு உங்க ரெண்டு பேரையும் உடனே வந்து பாக்கச் சொன்னாரு”

“ஆச்சரியமா இருக்குதே... ஆமா, அவர் வட்டிக்கு விடுறவர்தானே?”

“வட்டிக்கு மட்டுமா? ரியல் எஸ்டேட், வீடு கட்டித் தர்றது. பழைய காருங்களை வாங்கி - விக்கிறதுன்னு அவர் செய்யாத தொழிலே இல்லை”

- என்றாள் தங்கை பிரபா.

"அப்ப மனுஷன் நம்பள வசூலுக்குத்தான் அனுப்புவான். என்னால முடியாது. அப்புறம் நான் கேக்கற சம்பளத்தையும் இவரால் தரமுடியாது. நீ அப்படியே பேசாம விட்டுரும்மா. கேட்டா எனக்கு ஏதாவது ஒரு மருந்து கம்பெனியில வேலை கிடைச்சிடுச்சுன்னு நான் சொல்லி சமாளிச்சுக்கறேன்” - லுங்கியை மடித்துக் கட்டியபடியே பரணி சொன்னது சகுந்தலாவுக்கு பிடிக்கவில்லை!

அது, அவள் முகம் போன போக்கில் தெரிந்தது.

“என்னம்மா?”

“இல்லடா. நல்ல சம்பளமும் தரலாம்ல?”

“பெரிய, பெரிய கம்பெனியாலேயே இருபதாயிரம், முப்பதாயிரம்னு தரமுடியலம்மா, இவர் தனி மனுஷன். இவருக்கு எட்டாம் வகுப்புக் கூட தேறாதவன்தான் லாயக்கு புரிஞ்சுக்கோ...”

“அது சரி... உனக்கு வேற வேலை கிடைச்சிடுமா?”

“கிடைச்சிருமா இல்லை. கிடைக்கணும். அனுபவம் இருக்கிறதால கிடைக்கும். நீயும் என்னை நாட்டாமை பண்ணுற ஜாதகத்துல பெக்கல. நாய் மாதிரி சுத்தத்தான் பெத்துருக்கே! மருந்து கம்பெனிகளுக்கும் என்ன மாதிரி நல்லா சுத்த முடிஞ்ச நாய்கள்தாம்மா தேவை”

- விரக்தியாக பேசிவிட்டு விலகிப் போனான்.

உள் அறையில் அரசு தொலைக்காட்சி இருந்தது. இயக்கத் தொடங்கினான். கவுண்டமணியிடம் செந்தில் அடி வாங்கும்

‘காமெடி சீன்’ ஓடிக்கொண்டிருந்தது. பலமுறை பார்த்துவிட்டான்.

திரும்பவும் பார்த்தான். லேசாக சிரிக்க முடிந்தது. அப்படியே தரை மேல் தலையணையை போட்டுக் கொண்டு படுத்துவிட்டான்.இப்படி இவனெல்லாம் படுக்கத் தொடங்கிவிட்டால், தியேட்டரில் சினிமா எப்படி ஓடும்?

அந்த ‘அபார்ட்மெண்ட்’ முன் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதில் இருந்து வயதான ஒருவரும், நடு வயதுக்காரரும் இறங்கினர். மெள்ள நடந்து வந்து வாசலில் கூட்டிக் கொண்டிருந்த பிரபாவிடம், “இங்க சிவப்பிரகாசம் கற வர்மானி வீடு எது?” என்று கேட்டனர். அவளும் மாடியைக் காட்டி, “ஆறாவது பிளாட்” என்றாள்.

அந்த வயதானவர் அதைக் கேட்டபடி படி ஏற முற்பட, “லிப்ட் இருக்கு” என்றாள் பிரபா. ஆனால், அதை காதிலேயே வாங்காமல் அவர்கள் படிகளில் ஏறினர்.

வயதானவருக்கு எண்பது, தொண்ணூறு வயது இருக்கும். அவர் அசராமல் நடந்தது பிரபாவுக்கே பெரிய ஆச்சரியம். பார்த்தபடியே இருந்தாள்.

ஆறாவது ‘பிளாட்’! திறந்தே இருந்தது. இருவரும் உள்ளே நுழைந்தனர்.

சிவப்பிரகாசம் அந்த வயதானவரைப் பார்த்து வேகமாக முன் வந்து, “குருஜி… நீங்களா?” என்றபடி அவரது காலில் விழுந்தார்.

“எழுந்திருடா…. உனக்கெதுக்குடா இப்படியொரு இடம்? உன்னால பாரு… நானும் இங்க வரவேண்டியதா போச்சு” என்றார் அவர்.

“தப்பா எடுத்துக்காதீங்க குருஜி. நான் ஒரு திட்டத்தோடதான் இங்க இருக்கேன்” என்றார் சிவப்பிரகாசம்.

“என்ன திட்டம்… பெரிய திட்டம்! நான் சொல்லி இருந்தது என்னாச்சு?”

“இடத்தைக் கண்டுபிடிச்சுட்டேன். இந்த அமாவாசை அன்னிக்கு வேலையை முடிச்சிடுவேன் குருஜி.”

“இடத்தைக் கண்டுபிடிச்சுட்டியா... நிஜமாவா?”

“ஆமாம். கார்ப்பரேஷன் ஆபீசுக்குள்ளேயே போய் பார்க்க வேண்டியவங்கள பார்த்து, கொடுக்க வேண்டியதைக் கொடுத்து 1932-ம் வருஷத்து மதுரை நகர வரை படத்தை வாங்கி, அதுல சோமாஸ்கந்தர்ங்கற உங்க குருநாதர் தங்கி இருந்த இடத்தைக் கண்டுபிடிச்சுட்டேன்.”

“இப்ப அந்த இடம் எங்க இருக்கு?”

“அந்த இடத்துல இப்ப ஒரு பெரிய பங்களா இருக்கு. அந்த பங்களாவுல இருக்கற அவ்வளவு பேருமே ரொம்ப செல்வச் செழிப்போட ஆரோக்கியமாவும் இருக்காங்க. அங்க போனப்போ என்னால பல உண்மைகளைப் புரிஞ்சுக்க முடிஞ்சது.

உங்க குருநாதர் நட்டு வளர்த்த நாகலிங்க மரம், பிரம்மாண்டமா வளர்ந்திருக்கு. மாமரத்துலயும் பழங்கள் நிறைய கெடக்கு. மொத்தத்துல அந்த பங்களாவே அருளோட இருக்கு குருஜி”

“அதுல என் குருநாதர் சமாதியான இடம் உனக்கு தெளிவா தெரிஞ்சதா?”

- அவர் கேட்க, அதற்கு மட்டும் சிவபிரகாசத்திடம் ‘இல்லை’ என்னும் தலையசைப்பு!

***

# 7

மலைக்கு ஒரு பெரும் சிறப்பு உண்டு. தரை என்பது படுக்கைவாட்டில் விரிந்து கிடப்பது மலை மட்டும்தான் உயரமாக வளர்ந்து நிற்பதாகும். மிருகங்கள் எல்லாமே அகலவாக்கில்தான் வளரும். மனிதன் மட்டும்தான் உயரவாக்கில் வளருகிறவன். உயிரினங்களிலும் மனிதனே தன் ஆறறிவால் உலகை வென்றவனாக உள்ளான். எனவே, மலைகள்... மனிதனை எதிரொலிக்கின்றன. அதனால் தான் மலை ஏறும்போது மனிதனுக்கு பரவசமும், ண்டி அவனுக்குள் ஆத்மசக்தியும் அதிகரிக்கிறது.

அடுத்து, மலை மீதான பார்வையே பெரிய பார்வையாகும். அங்கிருந்து காணும் காட்சியே பெரும் காட்சியாகும். மலை மேல் நிற்கும் ஒருவருக்கு கிடைப்பதுஎல்லாமே பெரியதாகும். பெரிய ஆகாயம், அதிகக் காற்று, பெரிய காட்சி என்று எல்லாமே மலையில் பெரியது.

இதனாலேயே மலை மேல் அமையும் கோவில்களும்

தனிப்பெரும் சக்தியோடு விளங்குகின்றன!

- **வன வியாசம்**

சிவப்பிரகாசத்தின் மறுப்பான தலையசைப்பு, அப் பெரியவர் முகத்தில் ஏமாற்றத்தை மெள்ள உருவாக்க ஆரம்பித்தது. அது, முகம் போன போக்கில் தெரிந்தது. அவர் பெயர் ஜீவானந்த சிவம்.

“நீங்க அதுக்காக கவலைப்பட வேண்டாம். அந்த பங்களாவுக்குள்ள போனா நான் கண்டுபிடிச்சிடுவேன்.”

“கண்டுபிடிக்கிறது மட்டுமில்ல... எனக்கு அதுக்குள்ள இருக்கிற எல்லாம் பத்திரமா அப்படியே வேணும்.”

“என்ன இருக்கோ அதை எடுத்துட்டு, முதல் தகவலை உங்களுக்குத்தான் தருவேன்.”

“உன் தகவலுக்காக காத்திருக்கேன். குறிப்பா… அந்த சமாதிக்குள்ள இருக்கிற என் குருநாதர் அணிந்திருந்த ‘ருத்ராட்ச மாலை, அப்புறமா அவர் எழுதின ஏடுகள்”

“குருஜி… அந்த ஏடுகள் செல்லரிக்காம அப்படியே இருக்குமா?”

“என் குருநாதர் உடம்பே முழுசா அப்படியே இருந்தாலும், நான் ஆச்சரியப்படமாட்டேன். அப்படி இருக்க, அவர் தன்னோடு சேர்த்து வெச்சிருக்கிற ஏடுகள் எப்படி செல்லரிக்கப்பட முடியும்?”

“உங்க நம்பிக்கை பொய்யாக வேண்டாம். வர்ற பவுர்ணமிதான் நான் தேர்வு செய்திருக்கிற நாள். அன்னிக்கு நிச்சயமா சமாதிக்குள்ள இறங்கிடுவேன் குருவே!”

“ஆசிர்வாதம்… சகலமும் நல்லவிதமாக முடியட்டும். இந்த மாதிரி சமாதிகளுக்கு, காவல் நாகம் இருக்கக்கூடும். அது கண்ணுலபட்டா தப்பித் தவறி உன் கையால அடிச்சுடாதே. அதை வணங்கி, வழிக்கு கொண்டு வரப்பாரு முடியலேன்னா திரும்பிடு. தப்பா எதாவது பண்ணி. குருநாதரின் கோபத்துக்கும், சாபத்துக்கும் ஆளாகி விடாதே’

“உத்தரவு குருஜி” என்ற சிவப்பிரகாசத்தை ஜீவானந்த சிவமும் ஒரு முறை ஏற இறங்க பார்த்தார். பின் எழுந்து கொண்டார்.

புறப்படுவதற்கு முன் சிவப்பிரகாசத்தோடு இருந்த கல்யாணியையும் ஒரு பார்வை பார்த்தார்.

"ஆமா… ஏன் இவ உன்கூட இருக்கா?”- கேட்டார்.

“நான் வெளிக்கையால சாப்பிடுறதில்ல குருவே இவதான் சமைச்சு போடுறா”

“சரி… கவனம்” என்று இரண்டு வார்த்தைகளோடு புறப்பட்டு விட்டவரை வெளியே விடச் சென்றார் சிவப்பிரகாசம்.

“நீ வர வேண்டாம். நான் போய்க்கிறேன். அப்புறம் ஜோசியம் பார்க்கறேன்னு கூட்டம் சேர்க்காதே. அது ஆபத்துல

முடிஞ்சிடும். உன்னைப் பத்தி யாருக்கும் எதுவும் தெரியக்கூடாது. நம்மைப் போன்ற சித்த யோகிகளுக்கு மனுஷக் கூட்டமும், அவங்க ஆசாபாசங்களும் பெரிய எதிரி. மறந்திருக்க மாட்டேன்னு நினைக்கிறேன்.”

“மறக்கல குருஜி... மறக்கல”

“இந்தப் பொண்ணையும் சீக்கிரம் கட்டிக் கொடுத்துடு. தனியா இருக்கப் பழகு. இல்லே நீ விரும்பற இளமைபும் சரி, ஆயுளும் சரி. உனக்கு கிடைக்காம போயிடும்.”

- நின்றபடியே ‘மளமள’வென்று பேசிவிட்டு விறு விறுவென்று நடந்து போயே போய்விட்டார். அவர் அகலவும், சிவப்பிரகாசத்தை மிக ஊடுருவிப் பார்த்தாள் கல்யாணி.

“என்ன கண்ணு... அப்படி பாக்கறே?”

“என்ன தாத்தா இது? 'ஜீவசமாதி... ஏடு’ன்னு சாமி என்னவெல்லாமோ சொல்லிட்டு போறார்?”

“அது ஒண்ணுமில்லம்மா. நூறு வருஷத்துக்கு முந்தி, இந்த மதுரையில திருப்பரங்குன்ற மலையையொட்டின ஒரு இடத்துல கைலாசகிரிங்கற சித்தர் சாமி இருந்தார். ஒருநாள் தனக்குத்தானே அவர் சமாதி கட்டிக்கிட்டு உள்ளே இறங்கி விட்டார்.

சித்தர் சாமிங்க என்ன இந்த ஜனங்கள மாதிரியா? அவங்க உடம்பு கல்ப உடம்பு. அதை நெருப்பும், மண்ணும் தின்ன விட மாட்டாங்க. அவங்களோட ஆத்மாவும், அவங்க விரும்பற காலம் வரை இந்த உலகத்தை சுத்தி வரும். அந்த சமாதியை கண்டுபிடிச்சு அதை கும்பிடணும்கிறது என் குருநாதர் விருப்பம்”

“அது எப்படி? அதான் இப்ப அங்க பங்களா வந்துருச்சே! அப்புறம் எப்படி கும்பிட முடியும்?”

“கண்ணு. என்ன ரொம்ப குடையாதே! நடக்கறதை எல்லாம் பொறுமையா இருந்து கவனி. வெளியேயும் யார் கிட்டயும் இங்க பேசிக்கிறதைப் பத்தி மூச்சு விடக்கூடாது.”

“ஏன் தாத்தா… இவ்வளவு வயசுக்கு பிறகு எதுக்கு இந்த சமாதியைக் கண்டுபிடிக்கிறது. தோண்டுறது எல்லாம்?”

- கல்யாணியின் கேள்வியால். அவளை முறைத்துப் பார்த்தார் சிவப்பிரகாசம். அவளுக்கும் ஒரு மாதிரி இருந்தது அதன் பிறகு ஒரு வார்த்தைக்கூட பேச வரவில்லை.

பரணியின் ‘பிளாட்’டுக்கு அந்த வீரமணியே திரும்ப வந்திருந்தார். சகுந்தலா ‘வாங்கண்ணே’ என்று அவரை வாஞ்சையாக அழைத்தாள்.

அவரும் கண்ணில்பட்ட நாற்காலியில் அமர்ந்தவராக, “பரணி எதாவது சொன்னானா?” என்று கேட்டார்.

“இல்லண்ணே! அவன்… அவன்” - சகுந்தலா பதில் சொல்லத் தடுமாறிட, பரணியே எதார்த்தமாக எதிரில் வந்தான்.

“வா பரணி என்னப்பா…. வேலை போயிடுச்சாமே? கேக்கவே சங்கடமா இருந்துச்சு எனக்கு…”- அவர் வாசிக்கத் தொடங்கவும், கையை உயர்த்தி சைகையாலேயே ‘நிறுத்துங்க’ என்பது போல பார்த்தான். பின் தன் லுங்கியை அவிழ்த்து இறுக்கமாக கட்டிக் கொண்டான்.

“எனக்கு உங்களோடெல்லாம் சேர்ந்து வேலை பார்க்க முடியும்னு தோணலை. என்கூட படிச்ச பசங்க இப்ப எடுத்த எடுப்புல நாப்பதாயிரம், ஐம்பதாயிரம்னு சம்பளம் வாங்கறாங்க. நீங்க பத்தாயிரத்தையே லட்ச ரூவா அளவுக்கு யோசிக்கிற ஆள். ஆகையால் நான்லாம் உங்களுக்கு ஒத்து வரமாட்டேன்” என்றான் பளிச்சென்று.

“நீ எவ்வளவுப்பா எதிர்பார்க்கறே?”

“நீங்க கேக்கறதைப் பார்த்தா லட்ச ரூவான்னாலும் கொடுத்திடுவீங்க போல இருக்கே?”

“இதோ பாரு பரணி. நான் எனக்காக கேக்கலை. வேற ஒருத்தருக்காகத்தான் கேக்கறேன். நீ சம்பளமா அம்பதாயிரம், லட்சம்னு பணத்துல இருக்கே. ஆனா, தங்கத்திலேயே உனக்கு சம்பளம் தர ஆள் இருக்கு

தெரியுமா?”

“என்ன மாமா... கடத்தல் தொழிலா?”

“ஐய்யய்யோ.... நீ என்னப்பா குண்டைத் தூக்கிபோடுற?”

"தங்கம்ன்னா அவங்களால மட்டும்தான் தர முடியும். ஏன்னா... கடத்தறதே தங்கமாத்தான் இருக்கும்.”

"அதெல்லாம் இல்லப்பா. இது நல்ல விஷயம்தான்.”

“நல்ல விஷயத்துல எப்படி மாமா தங்கத்தை ஒருத்தர் சம்பளமா தரமுடியும்? இன்னிக்கு தங்கம் விக்கிற விலை தெரியும்தானே?”

"அப்ப நான் சொல்றதை நம்பமாட்டே?”

“மாமா... நான் இந்த காலத்து பையன். தவறாம பத்திரிகை படிக்கிறவன். தினமும் டி.வி. பார்க்கிறவன். ஊர் உலகத்துல நடக்கற நல்லதைவிட.... கெட்டதை நிறைய தெரிஞ்சு வெச்சிருக்கிறவன். என் கிட்ட உங்க ‘ரேணி குண்டா’ வேலையெல்லாம் வேண்டாம்”

“ரேணிகுண்டா வேலையா.... அப்படின்னா?”

“இப்படி தங்கம் - பித்தளைன்னு பேசறதுதான். நான் ‘சின்சியரா' வேலை பார்த்த மருந்து கம்பெனியிலயே என்னால நல்ல சம்பளம் வாங்க முடியலை. அவ்வளவு அதிர்ஷ்டம்? இதுல தங்கமா ஒருத்தர் சம்பளம் தந்து, நான் வாங்கப் போறேனா?

ஆமா.... நீங்க விபரமான ஆளாச்சே! எப்படி இப்படி ஒண்ணுமில்லாம போனீங்க?”

- பரணி கிண்டலும் செய்தான். அவர் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை. அவன் எதிரில் சிவப்பிரகாசம் தந்த தங்கத்தை எடுத்துக்காட்ட ஆரம்பித்தார்.

“என்ன மாமா இது?”

“தங்கம்பா... சொக்கத்தங்கம்.... உரசிப் பார்த்துட்டேன்.”

“சரி, இதை எதுக்கு காட்டுறீங்க?”

“இது எனக்கு தரப்பட்ட சம்பளம் இப்ப நம்புவியா?”

- அவன் உடனேயே அந்த தங்க உருண்டையை வாங்கி, பந்தைப் போல தூக்கிப் போட்டெல்லாம் பிடித்தான்.

சுற்றிலும் சகுந்தலா, சாந்தா, பிரபா என்று அவன் அம்மா - அக்கா - தங்கை... அவர்கள் முகத்தில் ஆச்சரிய ரேகைகளின் ஓட்டம்.

“இது தங்கம்தானா?”

“ஆமா. நகைக் கடைக்கே போய் கொடுத்து பரி சோதனை பண்ணி பார்த்துட்டேன்.”

“அப்ப ‘ரேணிகுண்டா’ வேலைதான். சந்தேகமே இல்லை”

“என்ன சொல்றே நீ.?”

“கடத்தல் வேலை மாமா”

“அதுக்கு வாய்ப்பு இருக்கற மாதிரி தெரியலைப்பா?”

“அந்த நபர் யாருன்னு சொல்லுங்க. நான் அப்புறம் மத்த விபரம் சொல்றேன்.”

“நீ சம்மதம்னு சொன்னாத்தான் நான் மேற்கொண்டு பேச முடியும்?”

“சரி, நான் என்ன வேலை பார்க்கணும்? அதைச் சொல்லுங்க”

“அது எனக்கு தெரியாது.ஆனா, அவர் கடத்தல் பண்றவர் இல்ல. கிட்டத்தட்ட சாமி மாதிரி”

“சாமி மாதிரின்னா. சாமியாரா?”

-‘பளிச்’சென்று ‘பாயிண்ட்’டுக்கு வந்தான்.

“கொஞ்சம் அப்படித்தான்.”

“அப்ப சரி, புரிஞ்சிடிச்சு மாமா,நீங்கள்லாம் யோசிக்கவே மாட்டீங்களா? இப்பல்லாம் சாமியார்லதான் உலக மகா ‘ஃபிராடெல்லாம்’ இருக்காங்க. அவ்வளவு ஏன்.... சாமி யாருன்னாலே ‘ஃபிராடு’தான்.’

“சத்தம் போட்டு பேசாதே பரணி. பேச்சை இதோட விட்ரு. நான் வேற ஆளைப் பார்த்துக்கிறேன்.”

- வீரமணி எழுந்து கொண்டார்.

“ஐயோ மாமா. கோவிச்சுக்காதீங்க. உங்கள பார்த்தா பரிதாபமா இருக்கு. தயவுசெய்து ‘ஏஜெண்டு’ வேலையெல்லாம் பார்க்காதீங்க. இந்த தங்கம் சுத்தமானதா இருக்கலாம். சில ‘டிரேடிங் கம்பெனி’ங்க இருக்கு... ஊரை நல்லா ஏமாத்தறதுக்காக, முதல்ல வர்றவங்களுக்கு நிறைய கொடுப்பாங்க. அதை நம்பி கூட்டம் சேரும். அப்புறம் பார்த்தா கடையைப் பூட்டிட்டு, ஊரைவிட்டே ஓடிடுவாங்க. உங்க விஷயமும் அப்படி ஆகிடப் போகுது.”

- பரணி போட்ட போடு, அவரிடம் நன்றாகவே வேலை செய்தது. தீவிரமாக யோசிக்கலானார்.

“முதல்ல இந்த தங்கத்தை திருப்பிக் கொடுத்து, தப்பிக்க பாருங்க. ஏதாவது திருட்டு சரக்கா இருக்கப் போகுது. பார்த்தாலே தெரியுது.... பழைய நகைகளை உருக்கி ஊத்தி உருண்டைப் பிடிச்சமாதிரி இருக்கு....”

- அந்த தங்க உருண்டையை பார்த்தபடியே சொன்னான். வீரமணியும் எழுந்தார்.

“சரிப்பா நான் வரேன்... நீ சொல்ற மாதிரிதான் இருக்கணும். எதுக்கும் நான் கொஞ்சம் தெளிவாகிக்கிறேன்.”

- என்று கிளம்பியவர், அப்படியே படிகளில் கீழே இறங்காமல். மேலே ஏறத் தொடங்கினார்.

“என்னடா நீ.... அவரை இப்படி பயமுறுத்தி அனுப்பறே? உனக்கு இஷ்டமில்லைன்னா அதோட நிறுத்திக்கலாம்ல?” - என்று கேட்டாள் சகுந்தலா.

“நீ சும்மா இரும்மா. ஆமா, இவர் எதுக்கு மேல போறார்…?”

“அந்த ஜோசியக்காரரைப் பார்க்க இருக்கும்.”

ஒருவேளை அந்த சாமியாரே அவர்தானோ?”

“என்னடா சொல்றே?”

“அவர் ஒரு பெரிய ‘டுபாக்கூர்’ம்மா. அந்தரத்துல மிதப்பாராம், பறவைங்கல்லாம் கூப்பிட்டா வருமாம். வரும் என்ன…. வந்துச்சு. நானும்தானே பார்த்தேன். ஆனா, நான் கையில மீனோடு நின்னு கூப்பிட்டாலும் வரும். அது வேற விஷயம்”

“என்னடா…. என்னென்னவோ சொல்றே?”

“கொஞ்சம் இரு…. வந்துடுறேன்….”

- பரணியும் மாடி ஏறினான். சிவப்பிரகாசத்தின் ‘பிளாட்’டைபார்த்தபடி எதிரில் உள்ள குருவின் ‘பிளாட்’டுக்குள் நுழைந்தான். அப்படியே ஜன்னல் அருகே போய் நின்றபடி உள்ளே பார்க்க ஆரம்பித்தான். குரு தூங்கிக் கொண்டிருந்தான்.

அங்கே வீரமணி…. சிவப்பிரகாசம் முன்னால்,

“சாமி…. எனக்கு உங்க விஷயம் பிடிபடவே மாட்டேங்குது. வேலைக்கு ஆள் கேட்டீங்க. ஆனா, அவங்களுக்கு எந்த மாதிரி வேலைன்னு தெளிவா சொல்லல. அப்புறம். சம்பளத்துக்கு பதிலா தங்கம்கறது சந்தேகப்படுறமாதிரிஇருக்கு ‘என்ன-எதாவது கடத்தல் தொழிலா?’ன்னு என்கிட்ட திருப்பி கேட்கறாங்க.”

- என்று உள்ளதை உள்ளபடி போட்டு உடைத்தார்.

“நீ என்ன சொன்னே?”

“நான் என்ன சொல்வேன்? எனக்கும் சந்தேகமாத்தான் இருக்கு!”

“அப்ப சரி…. நீ புறப்படு”

“சாமீ...”

“இனி நீ என்கிட்ட பேச எதுவுமில்லை. கிளம்பு’

“இல்ல சாமி.... நான் என்ன சொல்ல வந்தேன்னா?”

“எதுவும் சொல்லாதே... புறப்படு. இதான் நீ என்னை சந்திக்கிற கடைசி சந்திப்பு. இனி எங்கேயும், யார் கிட்டேயும் என்னைப் பத்தி பேசவே கூடாது.”

“இப்பகூட நான் உங்களைப் பத்தி பேசல சாமி. ஒரு சாமியாருன்னு பொதுவாத்தான் சொன்னேன்.”

“இனி அதைக்கூட சொல்லாதே..... கிளம்பு”

“சாமி....”

“கிளம்பறியா.... இல்ல....” -அவரிடம் கடுமை கூடவும், வீரமணி புறப்பட்டார். அந்த தங்க உருண்டையையும் அவர் முன் வைத்தார்.

“அதை எடுத்துக்கிட்டு போ.... நான் கொடுத்ததை திருப்பி வாங்கறதே கிடையாது”

- அந்த பதிலால் வீரமணியிடம் திகைப்பு. அதைவிட பெரிய திகைப்பு பரணியிடம்!

***

# 8

‘பூமியின் பூகோளவியலில் மலைகளுக்கு மட்டும் பிரத்தியேக சிறப்புகள் உண்டு. அதில் அதன் வளமான பசுமை, முதல் சிறப்பாகும். இந்தப் பசுமை எதனால் உண்டாகிறது என்று கேட்டால், மலைகளில் அதிக மழைப்பொழிவு இருக்கும். அதனால் தான் என்று கூறுவார்கள். அது ஒரு காரணம். அதே சமயம் மலையின் அடிப்பாகத்தைவிட, மேலே செல்லச் செல்ல நிலப்பரப்புக்குள் அபரிதமான ஆற்றல் உருவாக அதன் 'பிரமிடு’ போன்ற முக்கோணத் தன்மை ஒரு முக்கிய காரணம்.

ஒரு 'பிரமிடு’க்குள் நான்கு திசை பாகமும் சரிந்து, உச்சியில் ஒரு கூரிய முனை உருவாகும். கீழே சதுரமும், மேலே அதன் மையப் புள்ளியும் மட்டுமே இருக்கும். இந்நிலையில் கீழுள்ள சதுரப் பகுதி நான்கு பக்கமும் சரிவடைந்த காரணத்தால் அழுத்தம் ஏற்பட்டு, அது கூரிய மையப் புள்ளி வழியாக பீறிடக் காத்திருக்கும். இதனால் மேற்பரப்பில் அழுத்தம் அதிகம். மலைகளின் உள்ளேயும் இந்த வினைப்பாடு உள்ளது.

அடுத்து, மலைகளில் தேங்கும் மழை நீருக்கு பல விதமான குணப்பாடுகள் ஏற்படுகின்றன. மலைப் பாறைகளிலும், மண்பாங்கான இடங்களிலும் தேங்கி நிற்கும் நீரில்.... அந்த நீர் தழுவி வந்த தாவரங்களின் குணமும், சக்தியும் இருக்கும்.

இது போக மலை மேல் இடி - மின்னல் போன்றவைகள் தாக்கும்போது, குறிப்பாக பாறையில் தேங்கியுள்ள நீரில் இடி விழும்போது, இடி சக்தியின் மின் அடர்வு அந்த நீருக்குள் சில வேதியியல் மாற்றங்களை செய்கிறது. இந்த நீரும் குடிக்க உகந்த நீராக இல்லாமல், நிறம் மாறி சற்று எண்ணெய் போல ஆகிவிடும்.

இந்த நீர் கிடைப்பது அபூர்வம்!’

**- வன வியாசம்**

பெரியவர் சிவப்பிரகாசம் அந்த தங்கத்தை அற்பமாக கருதி, ‘எடுத்துக்கொண்டு போ’ என்று சொன்னது பரணியையும் ஆச்சரியப்படுத்த… அடுத்து நடப்பதை கவனிக்கத் தொடங்கினான். வீரமணி, தங்க உருண்டையோடு சில விநாடிகள் அப்படியே நின்றார். அது சிவப்பிரகாசத்தை நிரடியது.

“உன்னை நான் போகச் சொல்லிட்டேன். நின்னு வெறிச்சா என்ன அர்த்தம்?”

“இல்ல… இது எம்பது கிராமுக்கு மேல இருக்கற தங்கம். கிட்டத்தட்ட பத்து பவுன். இன்னிக்கு விலைக்கு ரெண்டரை லட்சம். இதை போனா போகட்டும்னு நீங்க விடுறதைப் பார்த்தா எனக்கு ஆச்சரியமா இருக்கு”

“உனக்குதான் இது ரெண்டரை லட்சம். என் வரையில அம்பது ரூவா மதிப்பு பெறாத செம்பு. அவ்வளவு தான்.”

“செம்பா…?”

“ஆமா… எனக்கு அது செம்புதான். உனக்குத்தான் தங்கம்.

“எனக்குப் புரியல….”

“புரியாது. புரியவும் தேவையில்லை. நீ இடத்தை காலி பண்ணு”

“இல்ல… பின்னாடியே போலீஸ் கீலீஸ் வந்துடாதுல்ல?”

“என்ன உளர்றே?”

“இது திருட்டு நகையா இருந்து, உருக்கி உருட்டியிருந்தா எப்ப வேணா போலீஸ் வரலாம்ல?”

“அடிச்சு மண்டையைப் பொளந்துடுவேன். எது திருட்டு நகை? யார் சொன்னது திருட்டு நகைன்னு…?”

- சிவப்பிரகாசத்தின் முகம் சிவந்து, உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவர் எழுந்து நின்றார். வீரமணி ஒரு விநாடி ஆடிப்போனார்.

“அய்யா…. என்ன தப்பா நினைக்கக்கூடாது. செய்திகளில் தினமும் பல மாதிரி விஷயங்கள் படிக்கறேன் - பார்க்கிறேன். அதான்…”

“என் குருநாதர், ‘இங்கேயா குடி இருக்கே?’ன்னு கேட்டப்பவே நான் ஆச்சரியப்பட்டேன். ‘ஏன் இப்படி கேக்கறார்?’ன்னு கொஞ்சம் அதிர்ச்சியும் ஏற்பட்டது அதுக்கு அர்த்தம் இப்ப புரியுது. எனக்கு என் நோக்கமே பெருசாபோச்சு. சுத்தி இருக்கறவங்க நோக்கத்தைப் பத் நான் யோசிக்கவே இல்லை.

உனக்கு நான் முகக்குறிகூட சொல்லி இருக்ககூடாது தப்பு பண்ணிட்டேன். சரி, அந்த தங்கத்தை அப்படி வை"

- சிவப்பிரகாசத்தின் கட்டளை வேலை செய்தது.

“புறப்படு…” என்றார். வீரமணியும் புறப்பட்டார்.

கொஞ்சம் வியர்த்திருந்தார்.

விறுவிறுவென்று படிகளில் இறங்கத் தொடங்கினார்.

அவரை பரணியும் பின்தொடரத் தொடங்கினான்.

அவன் பின் தொடர்வதை சிவப்பிரகாசமும் கவனித்தார்.

அருகில் உள்ள ஜன்னல் அருகே போய் நின்று கொண்டே வெளியே ‘அபார்ட்மெண்ட் மெயின் கேட்’டைப் பார்க்கத் தொடங்கினார். யார் வந்தாலும், அதன் வழியாகத்தான் வெளியே செல்ல வேண்டும்.

வீரமணி அந்த ‘கேட்’டைக் கடந்து, தான் வந்திருந்த இருசக்கர வாகனத்தைக் கிளப்ப முனையவும் பரணி ஓடிச் சென்று அவர் அருகில் நின்றான்.

“என்ன தம்பி?”

“எல்லாத்தையும் பார்த்துக்கிட்டுதான் இருந்தேன். அந்த பெரியவர்தான் தங்கம் கொடுத்து, ‘வேலைக்கு ஆள் வேணும்’னு கேட்டவரா?”

“த… தம்பி… உனக்கு எப்படி தெரியும்?”

“அதான் அவர்கிட்டப் போய் நீங்க பேசிக்கிட்டிருந்தைப் பார்த்தேனே! ஆமாம்… திருட்டு நகையா இருக்கும்கற என் சந்தேகத்தை நான்தான் சொன்னேன்னு சொல்ல வேண்டியதுதானே?”

"ஐயோ தம்பி… ஆள விடு! உனக்கும் இப்ப சொல்லிக்கிறேன். ஜாக்கிரதையா இருந்துக்கோ. அவரை பாம்பாவும் நினைக்க முடியல - பழுதாவும் நினைக்க முடியல. ஒரே குழப்பமா இருக்கு…”

“ஒரு குழப்பமும் வேண்டாம். பாம்பேதான் இந்த மாதிரி ஆளுங்க! இவன மாதிரி ஆளுங்க இந்த மாதிரி குடியிருப்பு பகுதியில் இருக்கக்கூடாது. இவங்க ‘ஜிகர்தண்டா ரேணி குண்டா’ வேலையையெல்லாம் ஊருக்கு வெளியே வெச்சுக்கணும். அந்த ஆளை நான் விரட்டுறேன். நீங்க கிளம்புங்க….”

“நீ என்னப்பா பண்ணப்போறே?”

“என்ன… பயமா இருக்கா?”

“ஆமாம்ப்பா. வம்பை விலைக்கு வாங்காதே.”

“நான் எதுக்கு வாங்கணும்? அதுவே எங்களைத் தேடி வந்துருச்சி! என் நண்பன் வாயைக் கட்டுறேன்னு ஏதோ பண்ணி…. அவன் பாவம், அரண்டு போய் கிடக்கிறான். அந்த ஆள் கவனிக்கப்பட வேண்டிய பேர்வழிதான்.

வாயில லிங்கம் வரவழைக்கிறது, கையில இருந்து விபூதி கொட்டுறதுன்னு ‘டுபாக்கூர்’ வேலை காட்டுறவங்களும் வந்துகிட்டே இருக்காங்க. அதுல இந்த ஆள் எந்த ரகம்னு தெரியல! ஆனா நான் விடப்போறதில்ல”

- பரணி சன்னமாக ஆவேசம் காட்டினான்.

மேலே ஜன்னல் வழியாக சிவப்பிரகாசம் பார்த்துக் கொண்டே இருந்தார். அவர் பேத்தி கல்யாணியும், அவருக்கு பின்னால் நின்று அதை கவனித்தாள். அவளுக்குள் பயம்

ஏற்படத் தொடங்கியது.

‘பேசியதுபோதும்’ என்று கீழே வீரமணி ‘மொபட்’டில் விலக - பரணியும் திரும்பினான். எதிரில் புன்னகையோடு சரண்யா.

லுங்கி சட்டை என்கிற “ஹோம்லி’யான உடையில் அவனைப் பார்த்தவள், 'இதுதான் உங்க ‘கேஷிவல் டிரெஸ்’ஸா?’ என்று கேட்டாள்.

“ஆமாம்...” - அவனுக்கு வெட்கமாகவும் இருந்தது உள்ளே அவள் அண்ணன் ரவிக்குமாரும் இருந்தான். அவன் பெர்முடாஸ் டிரவுசர், டி-சர்ட் என்று நவீனமாக தென்பட்டான். காதில் ‘இயர் போன்’, சட்டைப் ‘பாக்கெட்’டில் செல்போன்! யாருடனோ பேசியபடி இருந்தான்.

அவனைப் பார்த்தவனுக்கு தன் உடை நடுத்தரத்துக்கு மிகக் கீழானது என்பது புரிந்து ஒரு கூச்சமும், நெருடலும் உருவானது. வேகமாக அங்கே இருந்து விலகி, மாடிப் படிகளில் ஏறத் தொடங்கினான்.

“ஒரு நிமிஷம்” - அவள் தடுத்தாள். ஐந்தாறு படிகள் ஏறிவிட்ட நிலையில், திரும்பிப் பார்த்தான்.

“என் ‘மொபட்’ எப்ப வரும்?”

“ஓ.... வண்டி இன்னும் வரலையா...? ஐ ஆம் சாரி. நான் இப்பவே போன் பண்றேன்.”

“வண்டி வந்தாத்தான் வெளியே போக முடியும். இல்ல... நீங்கதான் வெளியில கூட்டிக்கிட்டு போகணும். அவசரமா ஒரு வேலை இருக்கு”

“ஓ.... அப்படியா?”

“ஆமாம். என் ‘அசைன்மென்ட் பேப்பர்’களை ‘ஜெராக்ஸ்’ எடுக்கணும். அப்புறம் என் வீட்டு ‘பிரிண்டர்’ வேற‘ரிப்பேர்’. ஆகையால ‘பிரிண்ட்’ வேற போடணும்.”

“இருங்க… ‘மெக்கானிக்’கிட்ட பேசிட்டு வர்றேன்.”

- என்று மேலே சென்றவன், ஒரு ஐந்து நிமிட இடைவெளியில் திரும்பி வந்தான். மிடுக்காக பேண்ட் - சண்டை ‘இன்’ செய்து கூலிங் கிளாசும் போட்டிருந்தான். முன்பு லுங்கியில் பார்த்ததற்கு நேர் எதிர்!

“வாவ்…. வாட் எ சேஞ்ச்?” அவள் வியந்தாள்.

“போகலாம்… புறப்படுங்க”

“எங்க?”

“வண்டி ரெடியாகல. நாளைக்குதான்னு சொல்லிட்டான். அதான் உங்க வேலைய உங்களோட விருப்பப்படி முடிச்சு தரலாமேன்னு வந்தேன்.”

“ஓ…. ரொம்ப சந்தோஷம்.”

- வேகமாக உள்ளே சென்று அவளும் சுடிதார் - துப்பட்டா என்று மாறியவளாக கையில் ஒரு ‘ஃபைலோடு’ வெளியே வந்தாள். அவள் அண்ணன், ‘பால்கனி’ பக்கம் ஒதுங்கி பேசிக் கொண்டே இருந்தான்.

ஒரு வார்த்தைக்கூட தமிழில் இல்லை. ஆங்கிலத்தில் பேசியதை வைத்து அவன் ஒரு பெண்ணுடன் வழிவதை பரணியால் யூகிக்க முடிந்தது.

‘பார்க்கிங்’கில் இருந்த அவனது வாகனம், உறுமிய படி புறப்பட தயாரானது. அவள் ஏறி அமரவும், ‘கியர்’ விழுந்து ஓடத் தொடங்கியது. அவனுக்கு அவளோடு இப்படி வெளியே புறப்பட்டது மிகப் பிடித்திருந்தது. பேச்சும் தொடங்கியது.

“ஆமா…. உங்க அண்ணன் என்னைக் கவனிக்கவே இல்லை! நீங்களும் வெளியே போறேன்னு சொல்லவே இல்லையே?”

“அவன் கூட நான் பேசறதில்ல. அவன் ஒரு ‘பெக்கூலியர் டைப்.”

“அப்படின்னா?”

“அவன் பேச்சைத்தான் எல்லாரும் கேக்கணும்னு எதிர்பார்ப்பான். யார் என்ன சொன்னாலும் காது கொடுத்து கேட்கமாட்டான்.

“தெரிஞ்சிச்சே!”

“எப்படி?”

“அதான் போன்ல பேசிக்கிட்டிருந்தாரே. பேச்சை நிறுத்தாம இவர்தான் பேசிக்கிட்டிருந்தார். அப்புறம் ஒரே வழிசல்”

“அப்ப வாணிகிட்ட வழிஞ்சிக்கிட்டிருப்பான்”

“வாணியா:?”

“ஆமாம். அவனோட ‘வுட் பீ!”

“வுட் பீ.யூ மீன். வருங்கால மனைவி”

“’வுட் பீ’ன்னாலே அப்படித்தானே அர்த்தம்”

“ஓ…. நிச்சயமெல்லாம் முடிஞ்சிருச்சா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்ல. இவன் முடிவு பண்ணிட்டான். ஆனா, என் அப்பா இன்னும் சம்மதம் சொல்லலை.”

“ஓ… அப்படி போகுதா கதை?”

- அவன் ரசனையோடு குறிப்பிட,

“ஆமா, எங்க அப்பா ரொம்பவே சுதந்திரம் கொடுத்துட்டார் அவனுக்கு” - அவளும் அண்ணன் பற்றி அலுத்துக் கொண்ட அந்த நொடி, அவன் மோட்டார் ‘பைக்’ பின்னால் ஒரு கார் பின் தொடர்ந்தபடி வந்தது. காருக்குள் மூன்று பேர். ஒருவன் 'டிரைவிங் சீட்’டில் இருக்க, பின்னால் இருந்த இருவரிடமும் கூர்மையான பார்வை.

“தயாளா… நல்லா பார்த்துக்கோ. அவதான் இன்ஸ்பெக்டரோட மகள். மனுஷன் போலீஸ்

‘குவாட்டர்ஸ்’ல வீடு கொடுத்தும், இங்க ஒரு 'பிளாட்’ வீட்ல குடியிருக்கான். அவனை வழிக்கு கொண்டு வர... இவளை இப்ப தூக்கறதைத் தவிர நமக்கு வழியே கிடையாது.”

“எப்படி தூக்கறது... முதல்ல அதைச் சொல்லு!”

“‘பைக்க ஓட்றவன் யாருன்னு தெரியல. யாரா இருந்தாலும் சரி, அவன் மண்டையில ஒரு போடு போட்டு தள்ளிவிட்டுட்டு... அவளை இந்த கார்ல தூக்கிப் போட்டுக் கிட்டு போய்கிட்டே இருக்க வேண்டியதுதான்.”

“அப்ப... அவ்வளவா கூட்டம் இல்லாத இடமா பார்த்து ‘பைக்’கை மறிச்சி காரை நிறுத்து.”

- கட்டளையைத் தொடர்ந்து காரின் வேகம் கூடியது. அது ‘பைக்’கையும் கடந்து முன் பக்கம் சென்று அப்படியே வளைத்து பரணியை ‘பிரேக்’ போட வைத்தது. அவர்களும் காரில் இருந்து இறங்கினர். முகத்தை கைக்குட்டையால் கட்டி மறைத்திருந்தனர். பரணிக்கு ‘பகீர்’ என்றது!

***

# 9

மலைகளிலும் பல வகைகள் உண்டு. துளியும் பசுமைக்கு இடம் தராத பாறைகளால் ஆன மலைகள், பசுமையான மண் பரப்பை உடைய மலைகள், இரண்டும் கலந்த மலைகள் என்று மலைகளிலும் பல பிரிவுகள் உண்டு. இவை அனைத்தும் அந்த மலை அமைந்துள்ள இடத்தின் பூகோளத் தன்மையையும், கடலில் இருந்து அது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதையும் பொறுத்து மாறுபடும்.

பெரும் மண் பரப்பை உடைய மலைகளே இயற்கை கொஞ்சி விளையாடும் இடமாக உள்ளது. இங்கே தான் மனிதனும் குடிபுகுந்து விவசாயம் செய்து, மலையகத்தை தன் ஊராக்கிக் கொண்டுவிடுகிறான்.

ஆனால் மண்ணும், பாறையுமான இடங்களில்தான் அபூர்வமான தாவரங்கள் உருவாகின்றன. எந்த மலையகத்தில் சம அளவில் பஞ்சபூதம் ஆட்சி செலுத்துகிறதோ, அங்கேதான் ஆச்சரியமூட்டும் மூலிகைகள் விளைகின்றன.

அப்படிப்பட்ட மூலிகைகளில் ஒன்றுதான் 'சங்கு நாராயண சஞ்ஜீவி.'

**- வன வியாசம்**

வளைத்து நின்ற காரில் இருந்து இறங்கிய இருவரும், 'கிரீச்'சிட்டு நின்ற பரணியின் 'பைக்' முன் ஆவேசமாக வந்தனர். கைக்குட்டையால் முகத்தை மூடியிருந்ததால் அவர்கள் யார் என்பதில் ஒரு தெளிவு இல்லை.

சாலையிலும் அவ்வளவாய் ஜன நடமாட்டம் இல்லை! அது அவர்களுக்கு மிக வசதியாக இருந்தது.

ஒருவன், பரணியை அடிக்க கையை ஓங்கினான். இன்னொருவன், சரண்யாவை இழுத்துக்கொண்டு காரை நோக்கி ஓடினான். சரண்யா திமிறத் திமிற… காருக்குள் அவளைத் தள்ளினான். அதற்குள் பரணியை அடிக்க

கையை ஓங்கியவன், முகத்தில்விட்ட குத்து அவனை பிரண்டு விழச் செய்தது.

காரும் புறப்பட்டுவிட்ட நிலையில், "ஜேக்கப் கமான்..." என்று உள்ளே இருந்து அழைப்பு. அது பரணியின் காதில் நன்றாக விழுந்தது. அவன் நிமிர்ந்து எழுவதற்குள், ஜேக்கப் டிச்சென்று காரில் ஏறிக்கொள்ள. அது சரண்யாவோடு பறந்துவிட்டது.

பரணி விக்கித்துப்போனான்.

இந்த மாதிரி சம்பவங்களை சினிமாவில்தான் பார்த்திருக்கிறான். இப்போது நிஜத்தில்! அவனது 'பைக் விழுந்து கிடந்தது. மெள்ள எழுந்து சென்று, அதைத் தூக்கி நிறுத்தி உதைத்தான்.

நல்லவேளை.... 'ஸ்டார்ட்' ஆனது.

சாலையில் செல்வோர் மருள மருள அவனைப் பார்த்தனர். ஆனால், யாரும் அவனிடம் வந்து... 'உனக்கு எதாவது வேண்டுமா?' என்று கேட்கவில்லை! 'நமக்கெதுக்கு ஊர் வம்பு?' என்கிற பாரத தேசத்தின் இயல்பான பயம்.

பரணிக்கு அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை. வீடு திரும்பி, நடந்ததை சரண்யாவின் அண்ணனிடம் சொல்வதுதான் ஒரே வழி என்று அப்போதைக்கு தோன்றியது.

'பைக்'கும் புறப்பட்டது.

காருக்குள் சரண்யா! அவளிடம் கதறல். காரின் கண்ணாடிகள் ஏற்றிவிடப்பட்டிருந்தன. காரிடம் தாறுமாறான வேகம்.

"யாருடா நீங்க..? என்னை எதுக்கு கடத்துறீங்க....? நான் யார் தெரியுமா?"- சரண்யா உள்ளே சீறத் தொடங்க, அவள் வாயில் ஒரு 'பிளாஸ்திரி'யை ஒருவன் வேகமாக ஒட்டினான். அவளது கையையும் இறுக்கமாகக் கட்டினான்.

அவள் கண்கள் இரண்டும் பிதுங்கி தெறித்துவிடும் போல்

இருந்தன.

“என்ன பாக்கறே….! உன் அப்பனை வழிக்கு கொண்டு வரத்தான், உன்னைத் தூக்கி இருக்கோம். போலீஸ் இன்ஸ்பெக்டருன்னா பெரிய பருப்பா? யார் மேல வேணா உன்னோட அப்பா கை வெச்சு உள்ளே தூக்கி வைப்பானா? உன் வரையில என்ன செய்யறான்னு பாக்கறோம்.”

- அவர்களில் ஒருவன் சொன்னதில், அவளுக்கு பிரச்சினை விளங்கிவிட்டது. காரும் நகரின் குறுகலான சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து ஓடத் தொடங்கியது.

'டிரைவிங் சீட்’டில் இருப்பவன் கேட்டான். “காரை இப்ப எங்கே விடட்டும்?”

“நேரா பாபா நகருக்கு விடு.”

“பாபா நகருக்கா?”

“என்ன வாய பொளக்கறே?”

“இல்ல… அங்கதான் இதோ இந்த பொண்ணோட வீடும் இருக்கு.”

“சரியா சொன்னே! நாம இப்ப போகப் போறதும், இவ குடியிருக்கிற ‘அபார்ட்மெண்ட்'டுக்கு பக்கத்துல இருக்கிற வீட்டுக்குத்தான்.”

“இது தயாளனுக்கு தெரியுமா?”

“இதை சொன்னதே தயாளன்தான்.”

“அங்க எப்படி இவளை அந்த போலீஸ்காரன் கண்ணுலபடாம வெச்சிருக்க முடியும்? இது ரொம்ப ஆபத்து!”

“இதுலதான் ஆபத்து குறைவு. நீ ரொம்ப சினிமா பாக்கறது இல்ல போல இருக்கு”

“இப்ப எதுக்கு சினிமா பத்தின பேச்சு?”

“ஒரு சினிமாவுல ஐஜி மகளை கடத்தி அவரோட வீட்டு ‘ரெஸ்ட் ஹவுஸ்’லயே வெச்சிருப்பான் வில்லன். ஐ.ஜி.யோ ஊர் பூரா தேடிக்கிட்டு இருப்பார். பாக்கற மங்களுக்கு பரிதாபமா இருக்கும்.”

"சினிமாவுல எப்படி வேணா கதை உடுவாங்க. நிஜ வாழ்க்கையில அதெல்லாம் சாத்தியமில்ல. மாட்டிக்கிட்டா அந்த இன்ஸ்பெக்டர் நம்ப டவுசரை கழட்டிடுலான்.”

"மாட்டிக்கிட்டாத்தானே...! நீ பேசாம நான் சொன்னதைச் செய்”

- அவர்களுக்குள்ளேயே வாக்குவாதம். இறுதியில் கார், சரண்யாவின் ‘அபார்ட்மெண்ட்’ இருக்கும் தெருவுக்குள்ளேயே நுழைந்ததுதான் ஆச்சரியம்!

“அந்தப் பய, கார் நம்பரை ‘நோட்' பண்ணியிருப்பானே?”

“கார்ல அந்த நம்பர் இல்ல. வேற நம்பர் தான் இருக்கு. ஓடிக்கிட்டு இருக்கும்போதே நம்பரை மாத்தற வசதி உள்ள கார், இது. தைரியமா இரு. இப்ப போலீஸ் கவனமும் சரி, மத்தவங்க பார்வையும் சரி... ஊருக்கு வெளியேதான் இருக்கும். சொல்லப் போனா... நாம இப்ப இவ வீட்டுக்கே போய், ‘தாகமா இருக்கு ஒரு சொம்பு தண்ணி குடுங்க’ன்னு வாங்கிக் குடிச்சிட்டு வரலாம். நம்பளை யாருக்கும் அடையாளமும் தெரியாது’ - என்றான், அவர்களில் ஒருவனான ஜேக்கப்.

சரண்யாவுக்கு மலைப்பாக இருந்தது. வேறு வழியின்றி வெறித்தாள். காரும் அவளது ‘அபர்ட்மெண்ட்’டையொட்டிய சிறிய வீட்டின் முன் நின்றது. ஒருவன் மட்டும் இறங்கிச் சென்று, கதவைத் திறந்தான். பின்னர் தெருவில் நின்று பார்த்தான். அப்போதுதான் பரணி தனது ‘பைக்’கை உருட்டிக்கொண்டு தெருவுக்குள் நுழைந்தான். அது ‘ரிப்பேர்’ என்பது பார்க்கும்போதே தெரிந்தது.

பரணியைப் பார்க்கவும் அவனுக்கு சுருக்கென்றது. “ஜேக்கப்... இவள ‘பைக்’ல கூட்டிக்கிட்டு வந்து அடிபட்டவன் இப்பத்தான் வர்றான். வண்டி பழுதானதால உருட்டிக்கிட்டு வர்றான்.”

“அப்ப சரி! இனிதான் இவ அப்பனுக்கு தகவல் போகும். ஆமா… சந்தேகப்படுற மாதிரி அவன் பாக்கறானா பாரு."

“பாக்கறேன்… இரு”- ஜேக்கப் சொல்லி முடிக்க, பரணி காரைக் கடந்தான். அந்த காரின் மேல் பரணிக்கு துளிகூட சந்தேகமே வரவில்லை. உள்ளே இருந்தபடியே சரண்யா அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். கத்த முடியாததால், உடம்பை நெட்டி முறித்தாள். அந்த இடைவெளியில் அவளை இழுத்தவர்கள், அதிகபட்சம் ஐந்து நொடிக்குள் அந்த வீட்டுக்குள் கொண்டு சென்றுவிட்டார்கள்.

அவர்கள் முகத்தில் வெற்றிச் சிரிப்பு

“நிஜமாலுமே தாகம்தான். இந் வீட்ல தண்ணி இருக்கா?”

“இல்ல… இனிதான் ஒரு ‘கேன்’ வாங்கிட்டு வரணும். நம்ம காரியம் முடிஞ்சு, இவ விடுதலையாக நாலைஞ்சு நாள் கூட ஆகலாம். அதுவரை சமாளிக்க பால்,பழம்,’பிரெட்’னு வாங்கிட்டு வந்து வெச்சுக்கணும்.

- அவர்கள் பேசிக்கொண்டே கதவைத் தாழிட்டனர்.

“இரு… நான் இவ வீட்டுக்கே போய் தண்ணி வாங்கி குடிச்சிட்டு, நிலவரத்தையும் தெரிஞ்சுக்கிட்டு வர்றேன்” - என்றபடி அந்த ஜேக்கப் மட்டும் தைரியமாக புறப்பட்டான்.

இன்று தவறான செயல்களில் ஈடுபடுகிறவர்கள்தான் பெரிய அளவில் புத்திசாலிகளாகவும், தைரியமானவர்களாகவும் உள்ளனர்.

சரண்யாவின் ‘பிளாட்’!

அவள் அண்ணன் ரவிக்குமார் முன், பரணி பேந்தப் பேந்த நின்றான். அப்போதும் செல்போனில் பேசியபடி நான் இருந்தான் அவன்.

பரணியைப் பார்க்கவும், ‘நான் அப்புறமா கூப்பிடுறேன்’ என்று செல்போனை அணைத்தான்.

“சார்.”

“என்ன… எங்க சரண்….?”

“அது வந்து….”

“என்ன வந்து - போய். சரண்யா எங்க?”

“நடக்கக்கூடாதது நடந்துடிச்சி சார் யாரோ ரெண்டு பேர், ஒரு கார்ல வந்து…." - பரணி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே வெளியே வந்து நின்ற ஜேக்கப்பிடம் இருந்து குறுக்கீடு.

“சார்….”

“யாரு?" - ரவிக்குமார் கவனமும் அவன் பக்கம் திரும்பியது.

“நான் ‘கேபிள் நெட்வொர்க்’ல இருந்து வர்றேன். உங்க வீட்ல டி.வி.நல்லா தெரியுதுதானே சார்?”

“நோ பிராப்ளம்.”

“தேங்க்ஸ் சார். அதான் கேட்டேன். சார்… குடிக்க கொஞ்சம் தண்ணி கிடைக்குமா?”

- ஜேக்கப் திரும்பி பரணியைப் பார்த்தபடியே கேட்க, அவனுக்கு கோபமாக வந்தது.

“சார்… முதல்ல நான் சொல்ல வேண்டியதை சொல்3

விடுறேன். உங்க தங்கையை சிலர் கடத்திட்டு போயிட்டாங்க. அடிச்சி தள்ளினதுல எனக்குக் காயம். பாருங்க” - என்று கழுத்துப் பக்கம் காட்டினான்.

“என்னது, சரண்யாவை கடத்திட்டாங்களா...? ஏய்… என்ன சொல்றே நீ?”

“அதான் கடத்திட்டாங்கன்னு சொன்னேனே! முதல்ல உங்க அப்பாவுக்கு தகவல் கொடுங்க”

“என்னய்யா! என்ன சொல்றே நீ? யார் கடத்தினா. எதுக்கு கடத்தினாங்க” - படபடத்தான் ரவிக்குமார்.

“தெரியல சார் கார் ல எங்களப் பின்தொடர்ந்துகிட்டே வந்து, என் ‘பைக்’ முன்னால நிறுத்தி இறங்கி வந்து. என்னை அடிச்சிட்டு, உங்க தங்கச்சியை தூக்கிட்டுப் போயிட்டாங்க”

- பரணி சொல்லவும், ஜேக்கப்பும் அதிர்ச்சிக்கு ஆளானது போல முகம் மாறினான்.

“அடக் கொடுமையே….! சினிமா மாதிரியே இப்ப நிஜத்துலயும் நடக்க ஆரம்பிச்சிடிச்சா?” - என்று கருத்து வேறு கூறினான்.

ரவிக்குமார் அடுத்த நொடி செல்போனில் தன் அப்பாவை தொடர்பு கொண்டான். ஆனால், ‘லைன்’ கிடைக்கவில்லை. அவர் யாருடனோ பேசியபடியே இருந்தார்.

“சரி சார். நீங்க என்னன்னு பாருங்க. நான் வர்றேன்” என்று ஜேக்கப்பும் பரிதாபப்படுகிற மாதிரி திரும்பத் தொடங்கினான்.

உள்ளே ஏதோ வேலையாக இருந்த சரண்யாவின் தாய் மல்லிகா, ‘ஹால்' பக்கம் வரவும்…. பரணியைப் பார்த்தாள். உடனே ரவிக்குமார், “அம்மா! சரண்யாவை யாரோ கடத்திட்டாங்களாம். அப்பாவுக்கு அவசரமா தகவல் தர போன் பண்ணினா, இப்பதான் அவர் யார் கூடவோ மும்முரமா பேசிக்கிட்டு இருக்காரு. ச்சே….” என்றான்.

மல்லிகா அடுத்த நொடியே தலை மேல் இடி விழுந்த மாதிரி ஆகி-“டேய்… என்னடா சொல்றே?” என்று புலம்பத் தொடங்கினாள்.

காவல் நிலையம்.

இன்ஸ்பெக்டர் ராஜதுரை யாருடனோ பேசி முடித்த நிலையில், செல்போனை ‘பாக்கெட்’டில் போடப் போன போது, திரும்பவும் அழைப்பு. ‘அச்சம் என்பது மடமையடா’ எனும் எம்.ஜி.ஆர். பட பாட்டல் ஒலித்தது.

தன் இருக்கையில் உட்கார்ந்தபடியே காதைக் கொடுத்தவரின் காதுக்குள் தயாளன் குரல்.

“என்ன ராஜதுரை… எப்படி இருக்கே?”

“யாருடாது…. என்ன பேர் சொல்லி கூப்பிட்டுக்கிட்டு?”

“பேர் எதுக்கு இருக்கு…. கூப்பிடத்தானே?”

“டேய்! யாருடா நீ….? உனக்கு இப்ப என்ன வேணும்?”

ராஜதுரை! நான் தயாளன் பேசறேன்.

“தயாளனா…. எந்த தயாளன்?”

“என்னைத் தெரியாத மாதிரி நடிக்காதே! இப்ப எந்த பூபதியைப் பிடிச்சு, யாருக்கும் தெரியாம உன் ‘கஸ்டடி’யில வெச்சு சித்திரவதை பண்ணிக்கிட்டு இருக்கியோ…. அந்த பூபதியோட அண்ணன் சிம்மக்கல் தயாளன்தான் பேசறேன்.”

“பூபதியைப் பிடிச்சு வெச்சு, நான் சித்திரவதை பண்ணிக்கிட்டிருக்கேனா…. என்ன உளர்றே?”

“ராஜதுரை… என்கிட்ட நடிப்பெல்லாம் வேண்டாம். என் தம்பியே எங்கிட்ட பேசிட்டான். உன் ‘டிபார்ட்மெண்ட்’ல இருக்கிற கருப்பு ஆடுங்க மூலமா அவன் என்கிட்ட பேசி….. நானும் ஒரு முடிவோடதான் இப்ப உனக்கு போன் பண்ணியிருக்கேன்.’

“ஆமா… நீ இப்ப எங்க இருந்து பேசறே?”

“எதுக்கு…. தேடி வந்து ‘அரெஸ்ட்’ பண்ணவா? நல்லா தெரிஞ்சுக்கோ…. என்னை உன்னால இல்ல - யார் வந்தாலும் பிடிக்க முடியாது. நானாக வந்து ‘சரண்டர்’ ஆனாத்தான் உண்டு. இந்த விஷயத்துல என் தம்பி நிரபராதி. ஆனா, அவனை சித்திரவதை பண்ணி….என் இடத்தை நீ தெரிஞ்சுக்க நினைக்கிறது சரியில்ல. உனக்கு தைரியமும், புத்தியும் இருந்தா தேடிப்பிடி அதை விட்டுட்டு என்னோட சொந்தங்கள் மேல கை வைக்கிறதையெல்லாம் விட்டுடு.”

“என்ன…. மிரட்டுறியா?”

“மிரட்டுறது மட்டுமில்ல. உன் மக இப்ப எங்க கையில என்

தம்பிய வெளியில விட்டா, உன் மகளும் பழுது இல்லாம திரும்ப வருவா. இல்ல... அவளை கிழிச்சு, அடிச்சிக் குதறி பொணமாத்தான் உன்னோட வீட்டு வாசல்ல போடுவோம்”

“தயாளா....”

“கத்தாதே....! உன் போலீஸ் புத்தியை மூட்டை கட்டி வெச்சுட்டு, என் பேச்சை கேளு, உனக்கு ரெண்டு நாள் ‘டயம்’ தர்றேன்.”

- போன் ‘கட்’ ஆனது. ராஜதுரை முகமும் வெளிறிப்போனது. திரும்ப அழைப்பு. ரவிக்குமார் பேசி.... சரண்யா கடத்தப்பட்டதைக் கூறி முடிக்கவும், ராஜதுரையிடம் ‘தெரியும்’ என்கிற ஒரே வார்த்தை பதில்!

“என்னப்பா பண்ணப் போறீங்க?”

“அந்தப் பையன், உன்கிட்டதானே இருக்கான்?”

“ஆமாப்பா.”

“அவன்கிட்ட போனை கொடு”

- ரவிக்குமார் போனைத் தர, பரணியும் பேசினான்.

“ஸாரி சார். அடிபட்டு விழுந்ததுல கார் நம்பரைக் கூட நான் சரியா பாக்கல. வெள்ளை நிறம் சார். அதுல என்ன ரகம்னும் ஞாபகமில்லை. தூக்கிட்டு போனவங்க முகத்தை கைக்குட்டையால் கட்டியிருந்தாங்க.... அதனால அவங்களை அடையாளமும் தெரியல. ஆனா, அதுல ஒருத்தன் பேர் ஜேக்கப். அதுமட்டும் தெரியும்.”

“சரி.... நீ அங்கே மேலதானே குடியிருக்கே?”

"ஆமா சார் மூணாவது 'பிளாட்’ல இருக்கோம்”

“அங்கேயே இரு. எங்கேயும் போயிடாதே. நான் வன்றேன்” - பேச்சு முடிந்தது.

பரணியும் ரவிக்குமாரிடம், “சார்... நான் எங்க வீட்ல இருக்கேன் எதுன்னாலும் கூப்பிடுங்க” என்றபடியே

விலகினான்.

“வீட்டுக்கு போய்.... அம்மாவிடம் நடந்ததை சொன்னால் பதறிப் போவாள். பேசாமல் குருவிடம் பகிர்ந்துகொள்வோம்’ என்று தோன்றவே, நேராக அவனது 'பிளாட்’டை நோக்கி நடந்தான்.

***

# 10

'சங்கு நாராயண சஞ்சீவி' எனும் மூலிகைச் செடி மிகவும் அபூர்வமானதாகும். இதில் பல வகைகள் உள்ளன. இந்தச் செடியை பார்ப்பதே அபூர்வம். இதன் பூ மஞ்சள் நிறத்தில் இருக்க, இலை சங்கு வடிவில் இருக்கும். அதை வைத்தே இதற்கு 'சங்கு நாராயண சஞ்சீவி' என்று பெயர் வந்தது.

சஞ்சீவி என்றால் சமயத்தில் உதவுவது என்று பொருள். மகாவிஷ்ணுவாகிய பெருமாளும் அழைத்த மாத்திரத்தில் ஓடி வந்து காப்பாற்றும் ஒருவன். இந்த உதவும் தன்மை, காப்பாற்றும் குணம்.... இந்த மூலிகையிடமும் இருப்பதாலும் இதற்கு இப்பெயர் வந்ததாகச் சொல்வார்கள்.

இதில் செம்பு, துத்தநாகம், சுண்ணாம்புச் சத்து அதிகம். இந்தச் செடியின் சங்கு போன்ற இலைதான் மூலிகையாகவும் உள்ளது. இதை தினமும் என்று ஒரு மண்டலம் *(48* நாள்*)* ஒருவர் சாப்பிட்டு வர, அவர் உடம்பில் உள்ள எல்லா வியாதிகளும் நீங்கி காயகல்பம் சாப்பிட்டது போல் உடம்பு கல்லாகி விடும்.

இது சில வியாதிகளை குணப்படுத்த துணை மூலிகையாகவும் பயன்படுகிறது. குறிப்பாக இதன் சாறு. உடம்பில் - ரத்தத்தில் கலந்துவிட்ட நிலையில் உடம்பெங்கும் ஒரு புதுவிதத் துடிப்பு உருவாகி மலை மேல் இருந்து குதிக்கக்கூட மனம் அஞ்சாத ஒரு தைரியம் உருவாகிவிடும். இதைச் சாப்பிடும்போது பத்தியம் இருக்க வேண்டியது அவசியம்*!*

**- வன வியாசம்**

குரு அவன் 'பிளாட்'டில் சுக்குக் காப்பி போட்டுக் கொண்டிருந்தான். அதன் வாசம், உள் நுழைந்தபடி இருந்த பரணியின் மூக்கையும் நிமிண்டியது.

"எலேய்.... சுக்குக் காப்பியா?"

"ஆமான்டா.... நீயும் குடிக்கிறியா?"

“கொடு…. கொடு. மனசு, உடம்பு ரெண்டும் அப்படியே அலண்டு போய் கிடக்கு.”

“வேலை போனதும், உனக்கு உசுரு போனது போல இருக்குன்னு சொல்லு”

“நிஜமாலுமே உசுரு போக இருந்து, தப்பிச்சி வந்திருக்கேன்டா.”

“என்னடா சொல்றே?”- குரு, சுக்கு காப்பியை தம்ளரில் ஊற்றியபடியே கேட்டான். பரணியும், நடந்ததை எல்லாம் சொல்லத் தொடங்கினான். சுடச் சுட சுக்கு காப்பியும் கைக்கு வந்து சேர்ந்தது.

அவன் சொல்ல ஆரம்பிக்கும்போதே பெரியவர் சிவப்பிரகாசத்தின் பேத்தியான கல்யாணியும் ஹாலுக்கு வந்திருந்தாள். இவர்கள் இருவருமே அவள் வந்து நிற்பதை கவனிக்காமலே பேசினர்.

பரணி நடந்ததை சொல்லி முடிக்க…. குருவிடம் ஆச்சரியத் தொற்று.

"பரணி, சினிமா மாதிரியே இருக்குடா. என்னால இப்பவும் நம்ப முடியல. இன்னிக்கு ஒண்ணும் ஏப்ரல் ஒண்ணாம் தேதியும் இல்லை. ஆகையால நீ முட்டாளாக்க பொய் சொல்றேன்னு சொல்ல முடியாது.”

“அடக் கோட்டி… நான் சொன்னது சத்தியம்டா” என்று பரணி சொன்னபடியே எதார்த்தமாக திரும்ப, கல்யாணி தெரிந்தாள்.

பேச்சும் தடைப்பட்டது.

குருவிடம் தடுமாற்றம்.

“என்ன கல்யாணி?”

“உங்கள பாக்கத்தான் வந்தேன்.”

எதாவது முக்கியமான விஷயமா?”

“ஆமா….” - என்று மிடறு விழுங்கிய கல்யாணி, பரணியை ஆழமாக ஒரு பார்வை பார்த்தாள்.

“என்ன கல்யாணி…. எதுக்கு பரணியை இப்படி பாக்குறே?”

“அது வந்து…”

“எது வந்து…..?”

“கொஞ்சம் மெல்லப் பேசுங்க. என் தாத்தா தூங்கவும், நைசா வந்திருக்கேன். தாத்தாவுக்கு இப்ப உங்க மேல இவர் மேலல்லாம் ரொம்பக் கோபம்.”

“கோபமா…. நாங்க என்ன செஞ்சோம்?”

“தாத்தாவை நம்பாம தப்பு தப்பா இவர் ஒருத்தர் கிட்ட பேசியிருக்கார்… அதான்.”

- கல்யாணி திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே பேசினாள்.

“ஹலோ…. நீ என்ன சொல்ல வர்றேன்னு தெரியுது வீரமணி மாமா உங்க வீட்டுக்கு வந்துட்டு போன விவரப் தானே?”

“பேரெல்லாம் எனக்கு ஞாபகமில்லை. ஆனா, தாத்தா ரொம்பவே கோபமா இருக்கார். அவர் உங்ககூட பேசிக்கிட்டே வெளிய போனதையும் பார்த்தார். உங்களை ஏதாவது செய்துடுவாரோன்னு எனக்கு பயமா இருக்கு.”

“இது என்னடா கொடுமையா இருக்கு! நான் என் மனசுலபட்டதைப் பேசினேன். வீரமணி மாமா குறிப்பிட்ட நபர், உன் தாத்தாதான்னே முதல்ல எனக்கு தெரியாது. அதை ஞாபகத்துல வெச்சுக்கோ”

“நீங்க சொல்றது உண்மையா இருக்கலாம். ஆனா, என் தாத்தா வருத்தப்படுற மாதிரி மட்டும் தயவு செய்து நடந்துக்காதீங்க. அவர் நல்லவருக்கு நல்லவர்; கெட்டவங்களுக்கு ரொம்பவே கெட்டவர்.”

“என்னம்மா…. எதுக்கு இப்படி எங்கள பயமுறுத்துறே? அதுவும் வயசான தாத்தாவை சொல்லி நீ பயமுறுத்துறதும்,

அதுக்கு நாங்க பயப்படுறதும் பெரிய கேவலம்.... தெரிஞ்சுக்கோ.”

“நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்” - கல்யாணி... குருவின் மீதுள்ள பிரியத்தாலும், தாத்தாவிடம் தனக்கு இருக்கும் சில வேண்டாத விஷயங்களாலும் நல்ல எண்ணத்தோடு சொல்ல வந்தது பரணி வரையில் ‘செல்ல’வில்லை.

அவன் முகம் சிவந்து போனதுதான் மிச்சம்.

அப்போது சற்றும் எதிர்பாராதபடி தாத்தாவே வாசலைக் கடந்து உள்ளே வரவும் அவளிடம் அதிகபட்ச பதற்றம்.

குரு, பரணி இருவருக்குமேகூட கொஞ்சம் பதறியது. அவரிடமோ விடைப்பான பார்வை. கல்யாணியை பார்வையாலேயே போகச் சொன்னவர், இருவர் எதிரிலும் ஹாலில் கடந்த நாற்காலியில் அமர்ந்தார். கால் மேல் கால் போட்டுக் கொண்டார்.

பரணி அவரது உடலசைவுகளை சளைக்காமல் பார்த்தபடியே இருந்தான். குருவிடம் தடுமாற்றம்.

“ஆமா... உங்க அம்மா - அப்பா எங்கே?” என்று அவரிடம் கேள்வி ஆரம்பம். குருவும் பதில் சொல்லத் தொடங்கினான்.

“அப்பா விசாகப்பட்டணத்துல இருக்கார். அங்க ‘டிரான்ஸ்பர்’ ஆகிடிச்சி அம்மா இங்க கலெக்டர் ஆபீஸ்ல வேலையில இருக்காங்க வர ஆறு மணி ஆகும்.”

“நீ அவங்களுக்கு ஒரு பையன்தானா?”

“ஆமா....”

“அதான் பொறுப்பில்லாம இருக்கே....”

அந்தப் பதில் பரணியைத் தாக்கியது.

“இப்ப என்ன பொறுப்பில்லாம இவன் தப்பு பண்ணிட்டான்னு நீங்களும் பெருசா சொல்ல

வந்துட்டீங்க?"

"என்ன.... உன் நண்பனைச் சொல்லவும் வக்காலத்து வாங்கிட்டு வர்றியா?"

"ஆமா.... என் கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க"

"வயசுப் பையன் எப்ப பாரு வீட்ல சோபாவில படுத்து கிட்டு டி.வி. பாத்துக்கிட்டிருக்கறதுதான் பொறுப்பான செயலா?"

"படிச்சு முடிச்சாச்சு வேலை கிடைக்கற வரை வேற என்ன பண்றது?"

"எவ்வளவோ பண்ணலாம். சாதிக்க ஓராயிரம் விஷயம் இருக்கு தெரியுமா?"

"அது சரி.... இந்த உலகத்துல ஓராயிரம் இல்ல.... ஒரு லட்சம்... தப்பு தப்பு, கோடி, கோடி விஷயம் இருக்கிறது எனக்கும் தெரியும். ஆனா, எல்லாம் எல்லாருக்கும் கிடைக்கணுமே?"

"கிடைக்கும்.... கட்டாயம் கிடைக்கும். தீவிரமா - தீர்க்கமா, தடுமாற்றம் - குழப்பம் இல்லாம விரும்பினா கிடைச்சே தீரும்.அதுதான் மனோசக்தியோடவிசேஷமே...."

"மனோ சக்தியா.... நீங்களா மனோ சக்தி பத்தி யெல்லாம் பேசறீங்க?"

"நான் பேசாம...? நான் மனோ சக்தியாலதான் பல காரியங்களை சாதிச்சிருக்கேன். அது தெரியுமா உனக்கு?"

"ரொம்ப சந்தோஷம்.... எங்கே மாயம் மந்திரம்னு எதாவது சொல்வீங்களோன்னு நினைச்சேன்."

"புரியாததைதான் மாயம் - மந்திரம்னு சொல்வாங்க. எப்படி சொன்னா என்ன...? நினைச்சது நடந்தா போதுமே...?"

"நான் பாத்துக்கிட்டிருந்த வேலையே போயிடிச்சு. இதுல புதுசா இனிமே ஒண்ணு நினைச்சு அது நடக்கவா?"

"நீ உன் வேலையை நூறு சதம் விரும்பி இருந்தா, அது

உன்னைவிட்டு போயிருக்காது. ‘தலையெழுத்தே’ன்னு ஒப்புக்கு வேலை பாத்துருப்பே....”

- பெரியவர் பதில், பரணியை இந்த இடத்தில் கொஞ்சம் கட்டிப் போட்டது. அவரை சற்றுத் திணறலுடன் பார்த்தான்.

குருவுக்கும் அப்போது ஒரு கேள்வி.

“பெரியவரே....”

“என்னை ‘குருஜி’ன்னு மரியாதையா கூப்பிடு”

"நீங்க எதுல எங்களுக்கு குரு? உங்களை நாங்க குருஜின்னு கூப்பிடுறதுக்கு...?” - பரணி இடையிட்டான்.

"தம்பி, இப்ப ஒரு முடிவோடதான் உங்க முன்னால வந்து நின்னுருக்கேன். கையில வெண்ணெயை வெச்சுகிட்டு, இனி நெய்க்கு அலைய தயாரா இல்லை. நேராவே விஷயத்துக்கு வந்துட்றேன். அந்த வீரமணிகிட்ட ரெண்டு வாலிப பசங்க வேலைக்கு வேணும்னு கேட்டது நான்தான்.

ஆனா, என்ன வேலை? எவ்வளவு சம்பளம்? என்கிற கேள்விகளால அந்த விஷயம் தப்பா போயிடிச்சு. அதனால பரவாயில்ல. இப்ப நேராவே உங்ககிட்ட வந்துடுறேன். நான் சில விஷயங்களை தேடி அலையற ஒருத்தன். அதை கண்டுபிடிக்கறதுதான் உங்க வேலை. சம்பளமா தங்கம் தரேன். வேண்டாம்னா எத்தனை ஆயிரம்னாலும் கேளு. தரேன்.”

- பெரியவர் இப்படி இவ்வளவு நேராக விஷயத்துக்கு வருவார் என்று பரணி கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அவரையே உற்றுப் பார்த்தான்.

“என்ன பாக்கறே? என்னை எப்படி எடுத்துக்கறது, எப்படி புரிஞ்சுக்கறதுன்னே தெரியலை இல்ல. பரவாயில்ல விடு... விதி அனுமதிச்சாதான் எதுவுமே நடக்கும். அது அனுமதிக்கப் போய்தான் நீங்க என்னைப் பார்க்க முடிஞ்சது.

எல்லாத்துக்கும் பின்னால ஒரு சரியான காரணமும் இருக்கு. காரணம் இல்லாம ஒரு விஷயம்கூட இந்த

உலகத்துல நடக்கறது கிடையாது. அதை நல்லா தெரிஞ்சுக்கோ.”

“போதும் பெரியவரே…! புரியாமலே பேசறீங்க. நீங்க பேசறதே புரியல. நான் இப்ப வேற ஒரு சிக்கல்ல இருக்கேன் தெரியுமா உங்களுக்கு?”

“அப்படியா?”

“என்ன அப்படியா? போங்க. போய் உங்க வேலை எதுவோ அதைப் பாருங்க. உங்ககிட்டல்லாம் எங்களால வேலை பார்க்க முடியாது. இதுல சில விஷயங்களத் தேடி கண்டுபிடிக்கறதுதான் எங்க வேலைங்கற விளக்கம் வேற. இப்ப நான் ஒரு பொண்ணையே தொலைச்சுட்டுதான் நின்னுகிட்டிருக்கேன். அவளை கண்டுபிடிக்கணும். அது எப்படின்னே தெரியல.”

“அது ரொம்ப சுலபமாச்சேப்பா”

- பெரியவர் பதில் பரணியை வியப் போடு மட்டுமல்ல. பெரும் கோபத்தோடும் பார்க்க வைத்தது.

“என்ன சுலபம்… போலீஸ் இன்ஸ்பெக்டர் மகளையே e O 39 கடத்தி இருக்காங்க. அது உங்களுக்கு சுலபமா?

“நிச்சயமா…!”

"அப்படியா…. அப்ப அவ எங்க இருக்காள்னு சொல்ல முடியுமா உங்களால….?”

“என் வரையில அது ரொம்ப அற்பம்.”

“அப்ப எங்க இருக்காள்னு சொல்லுங்களேன் பார்ப்போம்…”

“நான் சொல்றது இருக்கட்டும். சரியா சொல்லி அவளும் கிடைச்சிட்டா, நான் சொல்றதை எல்லாம் நீ கேட்பியா?”

“என்ன…. போட்டு வாங்கறீங்களா?”

“சரி… அவ எங்க இருக்காள்னு சரியா சொல்லணும். தலையைச் சுத்தி மூக்கைத் தொடக்கூடாது.”

“நான் சொன்ன பிறகு உனக்கே புரியும். அப்புறம் என் பேச்சை கேட்பியா?”

- அவர் கேட்க.... பரணி யோசிக்க ஆரம்பித்தான்!

***

# 11

‘மூலிகை வனத்திலே எவ்வளவோ மூலிகைகள். அதில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குணம். இந்த குணம் தெரிந்திருக்க ‘மூலிகை ஞானம்’ மிக முக்கியம். இந்த ஞானம் இல்லாமல் இம்மூலிகைகள் பற்றி கேள்விப்பட்டதை வைத்தோ அல்லது எப்போதோ பார்த்ததை வைத்தோ இவைகளைப் பறித்து பயன்படுத்தக்கூடாது.

ஒவ்வொரு மூலிகையுமே ஒரு தேவதையைப் போன்றதாகும். மூலிகையைப் பறிப்பதற்குக்கூட ஒரு முறை உள்ளது. கோவிலுக்குச் செல்ல எப்படி குளித்திருக்க வேண்டுமோ.... அப்படி மூலிகைச் செடி முன்னாலும் குளித்துதூய்மையுடடன் செல்ல வேண்டும். அவைகளைப் பறிக்க அவைகளிடம் முறையிட வேண்டும். பிறகுதான் பறிக்க வேண்டும். பறிப்பதிலும் ஒரு முறை உண்டு. கவனமாக கிளைவிட்ட பாகத்தை பார்த்து, அதன் வளர்ச்சி நிலை பாதிக்காதபடி கிளைகளை ஒடிக்க வேண்டும். பறித்து முடித்த பின் அதன் நல்வளர்ச்சிக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும்.

சில சித்த புருஷர்கள், நவதானியங்களை ஒரு மண்பானையில் போட்டு அதில் நீர்விட்டு ஒரு இரவுக் காலம் வைத்திருந்து.... அந்த மண்பானையுடன் தான் மூலிகை பறிக்கச் செல்வார்கள். காட்டில் மூலிகை பறித்த பின் நவதானியத்தில் ஊறிய நீரை, சம்பந்தப்பட்ட மூலிகைச் செடிக்கு தன் கைகளால்விட்டு.... ஒரு கைப்பிடி ஊறிய நவதானியத்தையும் அச்செடிக்கு உரம் போல போடுவார்கள். அடுத்து.... பறித்த மூலிகையையும் பானையில் உள்ள நீரில் போட்டு, அதன் குணப்பாடு காற்றில் காய்ந்துவிடாதபடி பாதுகாப்பாக எடுத்து வருவார்கள்.

அப்படி எடுத்து வந்து பயன்படுத்த வேண்டிய மூலிகைகளில் ஒன்றுதான் 'பிரம்ம தண்டு' எனப்படும் ஒட்டிப்பூண்டுச் செடியாகும். இதன் தன்மை மிக

விசித்திரமானது! அது..."

**- வன வியாசம்**

பரணி மவுனமாக யோசித்தபடியே நிற்பது பெரியவரை சற்று கோபப்படுத்தியது.

“என்னப்பா... எதுக்கு இவ்வளவு யோசிக்கறே? முடியும். முடியாதுன்னு ஒரு வார்த்தைச் சொல்ல இவ்வளவு நேரமா?”

- கோபத்தோடு கேட்டார்.

“நீங்க அந்தப் பொண்ணு இருக்கற இடத்தை எப்படி கண்டுபிடிப்பீங்கன்னு கொஞ்சம் சொல்ல முடியுமா?”

“அதை எதுக்கு நான் சொல்லணும்?”

“நான் தெரிஞ்சிக்கவும், புரிஞ்சிக்கவும்தான்....”

“அதுக்கு நீயும், உன் சிநேகிதனும் என்னை மதிச்சு என் சிஷ்யனாகுங்க.... தெரிஞ்சிக்கலாம், புரிஞ்சிக்கலாம்.”

"அங்கதான் எனக்கு இடிக்குது?”

“என்ன இடிக்குது... ஒரு கட்டடம் கட்டற கொத்தனார் கூட, தனக்கு தெரிஞ்சதை உடனே தன்கிட்ட வேலைக்கு சேர்றவங்களுக்கு சொல்லித் தர்றதில்லை. அவ்வளவு ஏன்.... ஒரு பிச்சைக்காரன்கூட புதுசா ஒருத்தன் பிச்சை எடுக்க வந்தா, தனக்கு தெரிஞ்சதை பகிர்ந்துக்கிறது கிடையாது.

வித்தைங்கிறது செல்வம். அதை பணிவா - சிஷ்ய பாவனையோட அணுகினாத்தான் அது வசப்படும்.”

“நீங்க சொல்றது.... வித்தைக்கு பொருந்தலாம். ஆனா, உங்ககிட்ட வித்தை இருக்கறதாவே என்னால நினைக்க முடியாதப்ப, எப்படி என்னால ஏத்துக்க முடியும்?”

“அப்ப என்கிட்ட என்ன இருக்கறதா நீ நினைக்கறே?”

“கண்கட்டு…. மாய்மாலம்…. அதாவது ஏதோ ஒருவித பித்தலாட்டம்.”

“இவ்வளவுதானா…. இல்ல இன்னும் இருக்கா?”

“இன்னும் கடுமையா சொல்லலாம். ஆனா, இதுவே போதும்னு நினைக்கிறேன்.”

“சரி…. நீ கண்கட்டுன்னு சொன்னியே! அப்படின்னா என்னன்னு அர்த்தம் தெரியுமா?”

“கண் கட்டுக்கு என்ன பெருசா அர்த்தம் சொல்லணும்? ஏமாத்தறதைத்தான் கண்கட்டுன்னுவாங்க”

“ஆக…. மத்தவங்க சொல்றதைத்தான் நீயும் சொல்றே. ஆனா, உனக்கு நிஜத்துல என்னன்னு தெரியாது”

“சரி, நீங்கதான் சொல்லுங்களேன்…. கண்கட்டுன்னா என்னன்னு….”

“அப்படி கேளு. இதோ உன் எதிர்லயே கண்ணை கட்டி - உனக்கு விளக்கமும் தர்றேன். இங்க இப்ப உன் எதிர்ல இருக்கறது என்ன?”

- அவர் சுவரில் தொங்கியபடி இருந்த 'காலண்டர்’ ஒன்றை காட்டிக் கேட்டார். அதில் ஒரு நடிகையின் படம்: நடிகை ஒரு முகப்பூச்சு கிரீ முக்காக பளபளவென்று ‘போஸ்’ கொடுத்தபடி இருந்தாள்.

“இது ஒரு நடிகையோட காலண்டர்” என்றான் பரணி.

“காலண்டரா? தப்பா சொல்றியே…. இப்ப பாரு” என்று அவன் கண்முன் ஒரு சொடக்கு போட்டார். அடுத்த நொடி, காலண்டர் தொங்கியபடி இருந்த இடத்தில், அந்த நடிகையே நின்று கொண்டிருந்தாள். பரணியைப் பார்த்து சிரிக்கவும் செய்தாள்! இதெல்லாமே ஒரு ஐந்தாறு நொடிக்காலம் இருக்கலாம். பரணி பிரமித்துப் போய் அவரைப் பார்த்து விட்டு திரும்பவும்…. இம்முறை காலண்டர்தான் தெரிந்தது.

“என்ன…. அந்த நடிகையே நேர்ல வந்தாளா?”

“ஆமா.”

“வந்தவ திரும்பவும் காலண்டர் ஆகிவிட்டாளா?”

“ஆமா.”

“இதுக்கு பேர்தான் கண்கட்டு. நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ. வசியம்னு ஒரு பயிற்சி உண்டு. அதுல தேறிட்டா.... எதிரில் இருக்கறவங்க மனசுக்குள்ள அவங்க அனுமதி இல்லாமலே நுழைஞ்சு, அவங்களை நம்ம விருப்பப்படி நினைக்க வைக்கலாம். அப்படித்தான் இப்ப நானும் உன் கண்ணுக்கு.... அதாவது மனக்கண்ணுக்கு நடிகை இருக்கற மாதிரி காட்டி நம்ப வெச்சேன்.

இங்க நான் அந்த நடிகையைத்தான் காட்ட முடியும். வேற எதையும் காட்ட முடியாது. இதை பிரமை - மனத் தடுமாற்றம் - குழப்பம் - அப்படி இப்படின்னு பல மாதிரி சொல்லலாம். இதுவும் ஒரு கல்விதான். ஆனா, இதை சொல்லித் தர..... நாட்டுல இருக்கற பள்ளிக்கூடம் - காலேஜால முடியாது. ஏன்னா இதைப் பத்தி தெரிஞ்ச வாத்தியார்கள் காட்டுக்குள்ள சித்தர்களா, முனிவர்களா திரிஞ்சிக்கிட்டிருக்காங்க. நான் அவங்கள தேடிப் போய் அவங்ககிட்ட கத்துக்கிட்டவன்.

இப்படி இதுக்கு பின்னால அடுக்கடுக்கா இருக்கற விஷயங்களை பத்தி எதுவுமே தெரிஞ்சிக்காம கண்கட்டு - கால்கட்டுன்னு பேசாதே.”

- பெரிய வரின் விளக்கத்தில் அப்படி ஒன்றும் ஏமாற்றும் விஷயமோ.... பசப்பான காரியமோ இருக்கிற மாதிரி தெரியவில்லை. பரணியிடமும் ஒரு மாற்றம் உருவாகிவிட்டிருந்தது.

“சரி.... நான் உங்கள மதிச்சு கேக்கறேன். அந்தப் பொண்ணு இருக்கற இடத்தை எப்படி கண்டுபிடிப்பீங்க.... அதுக்கு நீங்க எதை பயன்படுத்துவீங்க?”

“எனக்கு தேவை அவ புகைப்படம். கிடைக்குமா..?”

“அது ஒண்ணும் பெரிய விஷயமில்ல... அவள நானே என்

செல்போன்ல அவளுக்கு தெரியாம படம் எடுத்து வச்சிருக்கேன்”

“ஓ…. அவ மேல காதலா?”

“ஆ…. ஆமா” - அவனிடம் லேசான வெட்கம்.

“சரி, அந்த படத்தை காட்டு” - அவர் கேட்க, அவனும் தன் செல்போனில் சரண்யாவின் நிழற்படத்தை காட்டினான்.

உற்றுப் பார்த்தார். ஒரு முப்பது நொடி வரை பார்த்தவர், “எனக்கு ஒரு பத்து நிமிஷம் அவகாசம் கொடு. அவ எங்க இருக்கா. எப்படி இருக்காள்னு எல்லாத்தையும் அப்படியே ஒரு காட்சியா சொல்றேன்.”

- என்றவர், அப்படியே ஒரு இடத்தைத் தேர்வு செய்து பத்மாசனம் போட்டு அமர்ந்தார். கைகளையும் பரபரவென்று தேய்த்துக்கொண்டு, மூச்சை இழுத்துவிட்டு சுவாசித்தவர்… ஒரு கட்டத்தில் இரு கைகளையும் மார்போடு கட்டிக்கொண்டார். அவர் உடம்பில் விரைப்புத் தன்மை ஏற்பட ஆரம்பித்தது.

அப்படியே சில நொடிகள். பின் படிப்படியாக அவரது உடலில் விரைப்புத் தன்மை நீங்கியது. அமைதியாக ஒரு தவசியைப் போல மாறினார்

கடிகாரத்திடமும் ஓட்டம். குரு, பரணியை மலங்க மலங்கப் பார்த்தான். அந்த வீட்டில் அப்படியெல்லாம் நடக்கும் என்பதை அவன் கொஞ்சமும் நினைத்துக்கூட பார்த்ததில்லை. வாசற்புறம் நிழலாடியது. கல்யாணி தெரிந்தாள். தயங்கித் தயங்கி வந்து, தாத்தா என்ன செய்கிறார் என்பது போல பார்த்தாள். குரு கவனிக்கவும், பதிலுக்கு மருட்சியோடு ஏறிட்டாள்.

கீழே சரண்யா ‘பிளாட்’டுக்குள் அவளது அப்பாவும், இன்ஸ்பெக்டருமான ராஜதுரை பிரவேசித்திருந்தார். அவரோடு இரண்டு போலீஸ்காரர்களும் வந்திருந்தனர். அவர்கள் வசம் இரைச்சலோடுகூடிய “வாக்கி டாக்கி’கள். அவர்களும் அதன் மூலம் கட்டுப்பாட்டு அறைக்கும்,

போக்குவரத்து போலீஸ்காரர்களிடம் பேசியபடி இருந்தனர்.

உள்ளே நுழைந்தவர்.... மகன் ரவிக்குமாரிடம்,

“எங்க அந்த பய? - என்றுதான் கேட்டார்.

“அவங்க ‘பிளாட்’லதான் இருக்கான்ப்பா”

“போய் கூட்டிக்கிட்டு வா...”

“சரிப்பா” - என்ற ரவிக்குமார், மளமளவென்று முதல் தளத்துக்கு வந்து... பரணியின் வீட்டை எட்டிப் பார்த்தான். அவன் அம்மா சகுந்தலாதான் கண்ணில்பட்டாள்.

“என்ன தம்பி?”

“பரணி இல்லையா?”

“இல்லையே! எதுக்கு கேக்கறீங்க?”

“இல்லையா... வீட்டுக்கு போறதால்ல சொல்லிட்டு போனான்.”

“சரி, நீங்க எதுக்கு பரணியைக் கேட்கறீங்க?”

“என்னம்மா நீங்க... என் தங்கையும், உங்க மகனும் வெளியே போனப்ப - அவளை சில சமூக விரோதிகள் வந்து கடத்திட்டாங்க. எங்க அப்பா - அம்மான்னு எல்லோரும் துடிச்சிகிட்டு இருக்கோம்மா. பரணி உங்ககிட்ட எதுவும் சொல்லலியா?”

“ஐயோடா....இவ்வளவு விஷயம் நடந்துருக்கா? எனக்கு எதுவும் தெரியாது. அவனும் இங்க இன்னும் வரலை...”

- சகுந்தலா கைவிரித்திட, ரவிக்குமார் சலிப்போடு திரும்பினான். அப்பா ராஜதுரை எதிரில் வந்தவன், “டாட்... அவன் வீட்ல இல்ல. எங்கேயோ போயிட்டான்” என்றான்.

“எங்கையோ போயிட்டானா...? ‘விசாரணை பண்ணனும். வீட்ல இரு’ன்னு சொன்னேனே! அவனும் ‘சரி’ன்னு சொன்னானே?” - அவரிடம் படபடப்பு.

வெளியே ராஜதுரை வந்ததையும், போலீஸ் நிற்பதையும் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான் ஒருவன். ஓசைப்படாமல் நடப்பதை அப்படியே சொல்லிக் கொண்டிருந்தான்.

“தயாளா… ராஜதுரை இப்பதான் வந்துருக்கான். வீட்ல அவன் பொண்டாட்டிகிட்ட ஒரே புலம்பல். ‘பைக்’ல அந்த பொண்ணை கூட்டிக்கிட்டு வந்த பையன்கிட்ட விசாரணை பண்ணப் போறான்போல தெரியுது…”

- என்று செல்போனில் பேசியதை கேட்க அங்கே யாரும் இல்லை.

அவன் பேச்சோடு பேச்சாக உள்ளே பார்த்தான் வாயில் ‘பிளாஸ்திரி’யோடு பரிதாபமாக நாற்காலியில் கட்டப்பட்டிருந்தாள் சரண்யா, ‘பிளாஸ்திரி’ இல்லாத நிலையில் அவள் ‘டாடி’ என்று கத்தினால், நிச்சயம் அது ராஜதுரை காதிலும் கேட்கும். அவ்வளவுதான் தூரம்! ஆனாலும், அதற்கு அவளுக்கு சந்தர்ப்பமில்லை.

ராஜதுரையும் குட்டி போட்ட பூனை மாதிரி நடந்த படி இருக்க… அவர் மனைவி மல்லிகா அவரிடம், “அவங்கள வெளிய போய் தேடாம… இங்க வீட்ல குட்டிபோட்ட பூனை மாதிரி நடந்தாக்கா என்னங்க அர்த்தம்?” என்று கேட்டாள்.

“மல்லிகா! நீ கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இரு.நம்ம பொண்ணுக்கு எதுவும் ஆகிடாது. ஏன்னா…. எதிரியோட ஆட்கள் என் ‘கஸ்டடி’யில இருக்காங்க. அவன் ‘பிளாக் மெயில்’ பண்ணுறான். அவனோட ஆளை நான் விட்டுட்டா, அவனும் நம்ம பொண்ணை விட்டுடுவானாம். ஆனா, ஒரு நல்ல போலீஸ்காரன் இந்த மாதிரி மிரட்டலுக்கு படியமாட்டான்னு அவன் தெரிஞ்சுக்க போறான்.”

“சரிதான்! உங்க கடமை உணர்ச்சிக்கு என் மகள்தான் கிடைச்சாளா?”

“அவ உன் மகள் மட்டுமல்ல… எனக்கும் மக.”

“அப்படி நினைச்சிருந்தா அப்பவே அவங்கள விட

வேண்டியதுதானே?”

“நீ தயவுசெய்து போலீஸ்காரன் பொண்டாட்டின்னு வெளிய சொல்லிக்காதே!”

- அவர்கள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் மூளத் தொடங்கியது.

குருவின் ‘பிளாட்’டில் பெரியவர் கண் திறந்துவிட்டிருந்தார். முகத்தில் மெல்லிசாய் ஒரு புன்னகை. பரணி படபடப்போடு பார்த்தான்.

“தம்பி… அந்தப் பொண்ணு கட்டப்பட்ட நிலையில இருக்கா. பேச முடியாதபடி வாயிலயும் ஒட்டு.ஆனா, ரொம்ப தூரத்துல இல்ல. இங்க இருந்து 100 மீட்டர் சுற்றளவுக்குள்ளதான் இருக்கா. அவ இருக்கிறது ஒரு பழைய வீடு.

அந்த வீட்டுக்கு வெளியே ஒரு சினிமா போஸ்டர். அதுல எம்.ஜி.ஆர். முகம் தெரிஞ்சது. அவள சுத்தி இரண்டு பெர்தான் இப்ப இருக்காங்க.என் திருஷ்டியில தெரிஞ்ச இந்த விஷயம் எதுவும் தப்பு இல்லை. நூறு மீட்டருக்குள்ள பழைய வீடு எதுன்னு பாரு. அங்க சினிமா போஸ்டர் இருந்தா… அதே வீடுதான் அவ இருக்கற வீடு” - அவர் அழுத்தமாக சொல்ல, பரணியிடம் ஒரு உத்வேகம்!

***

# 12

பிரம்ம தண்டு என்னும் இந்த மூலிகையை சாப்பிட்டால், உடல் பொலிவடையும். முகம், சூரியன் போல் பிரகாசிக்கும். ரத்தம் சுத்தமாகி, சிந்தனை ஆற்றல் அதிகரிக்கும். இதை எப்படிச் சாப்பிட வேண்டும் என்று முறை உள்ளது. அதன்படி சாப்பிட வேண்டும்.

அதுமட்டுமல்ல... இதை கண்டறிவதும் அத்தனை சுலபமல்ல. இந்த மூலிகை வசப்பட சில வைத்தியர்கள், விரதம் இருந்து 'நாராயண பூஜை' செய்து மலை ஏறுவார்கள். ஏனென்றால், அபூர்வ சக்தி கொண்ட மூலிகை, இது. இதைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு எலும்பு - நரம்பு தொடர்பான சிக்கல்களே வராது!

பிரம்மதண்டு போல இன்னும் பல மூலிகைகள் உடம்புக்கு பயன்படும். ரசமணிகள் செய்யவும், ரசவாதம் செய்யவும்கூட மூலிகைகள் பெரிதும் பயன்படுகின்றன.

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் தன் தூர தரிசன சக்தியால் கண்டறிந்து சொன்ன விஷயங்கள் பரணிக்குள் ஒரு புதுத் தெம்பை உருவாக்கின. அருகில் இருந்த குருவின் முகத்திலும் ஆச்சரிய ரேகைகள்.

“ஐயா... இப்ப நீங்க சொன்னதை நான் அதிகபட்சம் பத்து நிமிஷத்துல ஊர்ஜிதப்படுத்திட்டு வந்து அப்புறம் உங்ககிட்ட பேசுறேன்”

- என்று வேகமாக வெளியே செல்ல கால் எடுத்தான். அவனை சிவப்பிரகாசம் பார்வையாலேயே தடுத்தார்.

“அந்த பொண்ணு கிடைச்ச மறுநிமிஷம், நீ இங்க இருக்கணும்.”

“அதுல உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம்.”

“இன்னொரு முக்கியமான விஷயம்”

“சொல்லுங்க.”

“நான்தான் என் விசேஷ சக்தியால சொன்னேன்னு யாருக்கும் தெரியக்கூடாது.”

“ஏன் அப்படி?”

“ஒரு நல்ல சிஷ்யனா - கேள்வி கேட்காம, சொல்றத மட்டும் செய்யறவனா நடந்துக்க பாரு.

"நான் உங்க சிஷ்யன்னு முடிவே பண்ணிட்டிங்களா?”

“சரி, நீயே முடிவு பண்ணிக்கோ. என்னை நீ குருவா ஏத்துக்கிட்டா... உனக்குத்தான் அது நல்லது. நல்லதுன்னா அது சாதாரண நல்லதில்ல.”

“எதுவா இருந்தாலும் நிச்சயம் திரும்ப வருவேன். அப்ப உங்களோடு நான் நிறைய பேசவும் செய்வேன்... ஏன்னா, இப்படி உக்காந்த இடத்துல உங்களால தூர இருக்கறதைப் பார்க்க முடியுதுன்னா... சி.பி.ஐ., மிலிட்டரி, 'இண்டர்போல்’னு பெரிய பெரிய அமைப்புக்கெல்லாம் உங்களயே தலைவரா போட்டுடலாம். ஒரு தீவிரவாதிகூட எங்கேயும் ஒளிய முடியாது. இதை நான் ஒரு அபிப்பிராயமா சொன்னேன். தப்பா எடுத்துக்காதீங்க. வரேன்”

- பரணி புறப்பட, “நானும் வரேன்” என்று குருவும் தொற்றிக் கொண்டான்.

அதே அடுக்குமாடியில் தீவிர சிந்தனையில் இருந்தார் சரண்யா அப்பா ராஜதுரை. அண்ணன் ரவிக்குமார் போனில் யாருடனோ பதற்றமாகப் பேசிக்கொண்டிருந்தான். போலீஸ்காரர்கள் இருவரும் வெளியே பரணியைத் தேடி புறப்பட ஆரம்பித்த நொடி. மாடிப்படிகளில் பரணியே இறங்கி வருவதைப் பார்த்து அவர்கள் முகத்தில் ஒரு சலனம்.

பரணியும் நேராக ராஜதுரை முன்னால்தான் போய் நின்றான்.

ராஜதுரையும் ஏறிட்டார்.

“நீ…”

“நான்தான் சார் பரணி”

“எங்கய்யா போயிட்டே?”

“மேல குருவோட இருந்தேன் சார்”

“அது யார் குரு?”

- அவர் கேட்டது மறைமுகமாக சிவப்பிரகாசத்துக்கும் பொருந்தியது. அதை உணர்ந்தபடியே உடன் இருந்த குருவை காட்டி, “இவன்தான் சார்… இவன் பேர் குரு பிரசாத்” என்றான்.

“சரி… என் மகளைக் கடத்துன அந்த கார், அதோட நம்பர்னு ஏதாவது ஞாபகம் இருக்கா உனக்கு?”

“சார்… பதற்றத்துல கவனிக்கல. அதனால ஒண்ணுமில்ல. எனக்கு ஒரு கால் மணி நேரம் அவகாசம் கொடுங்க சரண்யா இருக்கற இடத்தை நான் கண்டுபிடிச்சு சொல்றேன்.”

“பதினைஞ்சு நிமிஷத்துல நீ சொல்றியா? என்னப்யா.. அது எப்படி முடியும்?”

“அதையெல்லாம் கேட்காதீங்க. நான் வந்து விபரமா சொல்றேன். நீங்க தயாரா இருங்க.”

- பரணி பதிலோடு குருவைப் பார்க்க, அவன் புறப்பட தயாரானான். ராஜதுரை முகம் சுழித்து... ஆச்சரியமும், பதற்றமும் கலந்த கலவையானார்.

வெளியே வந்த இருவரும் மெல்ல நடக்கத் தொடங்கினர்.

“என்னடா உன் திட்டம்?”

“நம்ம ‘அபார்ட்மெண்ட்’டை ஒரு சுத்து சுத்தி வருவோம். ஒட்டுச்சரிவு வீடு - எம்.ஜி.ஆர். பட ‘போஸ்டர்’ இரண்டுமே

பார்க்க முடிஞ்ச அடையாளங்கள்தான்.”

“சரி. நான் வலப்பக்கத்துல பார்க்கறேன். நீ இடப் பக்கத்துல பாரு.

- அடுக்குமாடி குடியிருப்பின் பிரதான சாலைக்கு வெளியே வந்துவிட்டிருந்தனர். இடப்புறத்தில் இருந்த பழைய வீட்டு முகப்பில் ஜேக்கப் புகை பிடித்தபடி நின்றிருந்தான். அவன் முன்னால் அவனது இன்னொரு சகாவான பாபி என்பவன். இருவரும் அருகில் சுவரில் ஒட்டப்பட்டிருந்த எம்.ஜி.ஆர். பட சுவரொட்டியை மறைத்தபடி நின்று கொண்டிருந்தனர்.

அதனால் அவர்களைப் பார்க்க முடிந்தது. ‘போஸ்டர்’ தெரியவில்லை. குருவும், பரணியும் கடந்துவிட்டனர். அவர்கள் விலகவும் ஜேக்கப்பும், பாபியும் ஒருவரை ஒருவர் கேலியாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டனர்.

“உள்ளே பொண்ணோட அப்பனான இன்ஸ்பெக்டர் மண்டைய உடைச்சிக்கிட்டு இருப்பான்...”

“ஒண்ணும் பெருசா செய்யற மாதிரியே தெரியலியே? ரெண்டு போலீஸ்காரங்களும் வாசல்ல நின்னுகிட்டு. ‘அபார்ட்மெண்ட்’ல அப்படியும், இப்படியும் நடக்கற பொம்பளங்களதான் நோட்டம் விட்டுக்கிட்டு இருக்காங்க.”

“என்ன பண்ண முடியும்....? நம்ம தயாளன், கடப்பாரைய விழுங்கி அதை சுக்கு கசாயம் குடிச்சு ஜீரணம் பண்ற ஆள்!”

“அப்ப பிடிச்சி வெச்சிருக்கற நபரை ராஜதுரை விட்ருவான்னு சொல்லு”

“விட்டுதான் தீரணும். இல்லேன்னா இந்நேரம் ‘இன்ஸ்பெக்டர் மகள் மாயம்’னு டி.வி.யில செய்தி வாசிச்சிக்கிட்டு இருப்பாங்க. இவன் உஷார் பேர்வழி... அதான் பொண்ணு காணாம போனதையே பெரிய விஷயமா ஆக்கிடாம. அமுக்கி வாசிக்கிறான்.

இப்ப போனானே ஒருத்தன்... இவன்தான் நம்மகிட்ட இருக்கறவளை ‘பைக்’ல வெச்சு ஒட்டிக்கிட்டு வந்தவன். இவனையே ‘ப்ரீயா’ விட்டுட்டாங்களே... அப்ப என்ன

அர்த்தம்?”

- ஜேக்கப்பும், பாபியும் சர்வசாதாரணமாக துளியும் பதற்றம்... பயமின்றி பேசிக்கொண்டிருக்க - குருவும், பரணியும் ஒரு ‘ரவுண்டு’ அடித்து முடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தனர். இருவர் முகத்திலும் ஏமாற்றம்.

“என்னடா பரணி... அந்த அடையாளத்துல வீடும் இல்லை. எம்.ஜி.ஆர். பட போஸ்டரும் இல்லையேடா..?”

“ஒரே வீடுதான். அது நம்ம ‘காம்பவுண்டை’ ஒட்டி இருக்கற வீடு. ஆனா, அங்க ‘போஸ்டர்’ இல்லை. அதான் இடிக்குது....”

- பேசிக் கொண்டே அருகே வந்துவிட்டவர்கள் திரும்ப. ஜேக்கப்பும், பாபியையும் பார்த்தனர். அவர்கள் கவனித்த நொடி பாபி... சிகரெட் பற்ற வைக்க முனைய தீப்பெட்டி கைநழுவி கீழே விழுந்தது.

அதை எடுக்க குனிந்தான்.

அப்போது பளிச்சென்று தெரிந்தது அந்த எம்.ஜி.ஆர் பட ‘போஸ்டர்’!

குரு அதைப் பார்த்த விநாடி, "பரணி... எம்.ஜி.ஆர். பட போஸ்டர்டா...” என்று கத்தியேவிட்டான். அது ஜேக்கப், பாபி இருவரையும் சற்று அதிரச் செய்தது.

பரணியும் பார்த்தான். அவர்கள் முகத்தில் ஒரு படபடப்பு பரவுவதையும் கவனித்தவன் சமாளிக்க தொடங்கினான்.

“ஆமாண்டா குரு. இந்த படத்தைத்தான் பார்க்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தோம். இன்னிக்கே போவோம்” என்றபடியே அங்கிருந்தே பார்வையை உள்பக்கம் செலுத்தினான். கதவு தாழிடப்பட்டிருப்பது தெரிந்தது.

“ஆமா,நீங்க யார்-நான் உங்கள பார்த்ததில்லையே?”

- என்று அவர்களிடமும் கேட்டான்.

“நாங்க இந்த வீட்டுக்கு குடிவரப் போறோம்”

- என்று ஜேக்கப்பிடமும் சமாளிப்பு.

"அப்படியா?”

“ஏன் வரக்கூடாதா?”

“சேச்சே... சும்மா தெரிஞ்சுக்க கேட்டேன்”

- என்றபடியே வழிசலாக சிரித்தான். பின், குருவோடு நடக்கத் தொடங்கினான்.

ஜேக்கப்பும், பாபியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பரணி எதார்த்தமாக பேசின மாதிரியும்... ஆழம் பார்த்த மாதிரியும் இருந்தது. அந்த குழப்பம் இருவர் முகத்திலும் தெரிந்து, திரும்பி பரணியையும், குருவையும் பார்ப்பதற்குள் அவர்கள் ராஜதுரை ‘பிளாட்’டுக்குள் ழைந்திருந்தனர்.

ராஜதுரையை அவர் மனைவி மல்லிகா உலுக்கிக் கொண்டிருந்தாள்.

“முதல்ல நீங்க பிடிச்சு வெச்சிருக்கற ஆளை வெளிய விடுங்க. என் மக ஒரு மணி நேரத்துல இந்த வீட்ல இருக்கணும். நீங்களும், உங்க ‘டிபார்ட்மெண்ட்'டும்...” என்று அவரிடம் புலம்ப,

“பொறுமையாக இரு மல்லி. நானும் அந்த எண்ணத்துல இருக்கறதாலதான் எஸ்.பி.யை தாண்டி யாருக்கும் தகவல் தரலை. ஆனா, நான் மட்டும் இப்ப வெளிய விட்டேன்... இந்த வருஷமும் எனக்கு ‘பிரமோஷன்’ அவ்வளவு தான். ‘ஏ.சி., டி.சி.’ன்னு எல்லா பதவியும் அப்புறம் கனவுல தான்.”

“வேண்டாம். உங்க போலீஸ் பொழப்பே வேண்டாம். எனக்கு அதைவிட என் பசங்க பெருசு.”

- இருவரின் வாக்குவாதத்துக்கு இடையே பரணி உள் புகுந்தான்.

“சார்… சரண்யா இங்க நமக்கு ஒரு நூறு அடி தூரத்துக் குள்ளதான் இருக்காங்க. நீங்க கான்ஸ்டபிளோட’ வந்தா புடிச்சிடலாம் சார்”

“என்னப்யா உளர்றே…?”

“உளறல சார் நான் சொல்றது நிஜம்.”

“எப்படி கண்டுபிடிச்சே?”

“அதை மட்டும் கேட்காதீங்க. அப்படியே லேசா வெளியே போய் பாருங்க. சந்தேகப்படுற மாதிரி இரண்டு தடியனுங்க நின்னுகிட்டிருப்பாங்க. அவங்க நிக்கற அந்த குச்சு வீட்டுக்குள்ள சரண்யா இருக்க நிறைய வாய்ப்பு இருக்கு சார்”

“நீ எதை வெச்சுய்யா இவ்வளவு தீர்மானமா சொல்றே? நான் பக்கத்துல இருக்கறது தெரிஞ்சே இங்க என் பொண்ணை எப்படிய்யா கொண்டு வருவாங்க.”

“சார்… இதெல்லாம்தான் இப்ப ‘கிரிமினல்’ களோட ‘ஸ்டைல்’.”

“அட என்னங்க நீங்க கேள்வியா கேட்டுக்கிட்டு… வெளிய போய் அந்த வீட்ட பார்த்துட்டா தெரிஞ்சு போகுது” - மல்லிகா ஒரு உந்து உந்தினாள்.

அரை மனதாக ராஜதுரையும் வெளியே செல்ல காலெடுக்க, “சார்… அவங்கள பார்க்கிற மாதிரி போகாதீங்க, ஓடிடப் போறாங்க” என்று பரணி பின்னிருந்து குரல் கொடுக்க,

“ஒரு போலீஸ்காரன் நான்… எனக்கு தெரியும்ப்யா எப்படி போகணும்னு…” என்று கோபமான குரலில் சொன்னபடியே வெளியில் இறங்கியவர்… ஜேக்கப், பாபி இருவரையும் பார்த்தார்.

ஏற்கெனவே குழப்பத்தில் இருந்தவர்கள் - ராஜதுரை பார்க்கவும், விபரீதத்தை உணர ஆரம்பிக்க…

ராஜதுரையும் காவலர்களோடு எங்கோ பார்த்தபடி

அவர்களை நெருங்க ஆரம்பித்தார்.

மாடியில் தன் ‘பிளாட்’ ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டே இருந்தார் சிவப்பிரகாசம்!

***

# 13

‘சதுரகிரி, பொதிகை, கொல்லி, சேர்வராயன், கல்ராயன், கஞ்சமலை, மகேந்திரகிரி என்று தமிழகத்தில் வளமான மலை வனப்பகுதிகள் பல உள்ளன. இதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். இவைகளில் கஞ்சமலை,இரும்பு கனிமவளத்தை பெரிதும் உடைய ஒரு மலையாகும். இதன் மேல் பாறைகளற்ற மண் தாவரங்கள் சில உண்டு. இத் தாவரங்கள் இந்த மண்ணைத் தவிர வேறு எங்கும் வளராது. பகல் பொழுதில் இவ்வனப் பகுதி பாறைகள், இரும்புக் குணம் காரணமாக நெருப்பில் தகிக்கும். அதுவே இரவானால் பனியாக குளிரும். இப்படி இருவிதத்திலும் எதிர்மறை குணத்தோடுதிகழும் இந்த மலைகளின் ஊற்று நீருக்கு தோல் வியாதிகளை குணப்படுத்தும் ஆற்றல் உண்டு.

அந்த நாளில் தொழு நோய், வெண்குட்டம் போன்றவைகளுக்கு ஆளாகிவிட்டவர்களை இந்த மலையில் தங்கச் செய்து, ஊற்றுகளில் வெயில் வேளையில் குளிக்கச் சொல்வார்கள். இதில் இறங்கி முழுக்கு போட்ட நிலையில் உடம்பை துவட்டிக்கொள்ளாமல் வெயிலில் காய விட வேண்டும். பின் இறங்கிக் குளிக்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு *12* முறை என்று ஒரு மண்டலம் *(48* நாட்கள்*)* குளிப்பதோடு, உள்ளே ரத்த சுத்தியாக பசலைக்கீரை மற்றும் முருங்கைக் கீரையை உணவாக எடுத்துக்கொள்ளச் சொல்வார்கள். நெய், பசும் தயிர் போன்றனவும் நோயின் தாக்கத்திற்கேற்ப தேவைப்படும். இதுபோக, சில மூலிகைச்சாறுகளும் உடம்பில் பூசப்பட வேண்டும்

இன்று அந்த முறைகளை முற்றாக இழந்துவிட்டோம். ஊற்றுகளும் அடைபட்டுவிட்டன*!"*

- **வன வியாசம்**

சிவப்பிரகாசம் கீழே நடப்பதை பார்த்தபடி இருக்க அந்த ஒட்டுச்சரிவு வீட்டின் முன்னால் சலனத்தோடு நின்று கொண்டிருந்த பாபியும், ஜேக்கப்பும் தங்கள் முகத்தில்

தங்களை மீறி ஒரு பதற்றத்தை காட்டத் தொடங்கினர்.

இன்ஸ்பெக்டர் ராஜதுரை அதை துல்லியமாக உணர்ந்தார். அவர்களைக் கடந்து நடப்பது போல சில அடிகள் நடந்தவர், அப்படியே திரும்பி வந்து அவர்கள் இருவரையும் ஏற இறங்க பார்த்தார்.

அவர்களிடமும் படபடப்பு பெருக ஆரம்பித்தது.

“யாருப்பா நீங்க…! இங்க உங்கள நான் இதுக்கு முந்தி பார்த்தது இல்லையே?” என்று ஆரம்பிக்க, அவர்கள் ஒருவரை ஒருவர் வழிசலோடு பார்த்துக்கொண்டனர்.

அவர் பார்வை அப்படியே வீட்டு வாசல் கதவின் மேல் சென்றது. தன்னுடன் வந்திருக்கும் போலீஸ்காரர்கள் இருவரையும் பார்க்க… அவர்கள் கதவை நோக்கிச் சென்றனர்.

அப்போது செல்போனில் சிணுங்கல். ஜேக்கப் அதன் திரையைப் பார்த்து… ‘தயாளன்’ பெயர் தெரியவும் வேகமாக அனைத்தான்.

அணைத்த வேகத்தில் ஒரே தள்ளாக ராஜதுரையை தள்ளிவிட்டு, தெருவில் இறங்கி ஓடத் தொடங்க… அவனை பாபியும் பின்தொடரத் தொடங்கினான்.

அதற்குள் போலீஸ்காரர்கள் கதவை உடைத்து திறந்ததில்… வாயில் பிளாஸ்திரியோடு - கைகளில் கட்டோடு சரண்யா இருப்பது தெரிந்தது.

அவர்கள் ஓடவும்… பரணியும், குருவும்கூட தங்கள் ‘பிளாட்’ வாசலில் இருந்து ஓடி வந்தனர்.

சரண்யா வேகமாக விடுவிக்கப்பட்டாள்.

ராஜதுரை, மகளை கட்டிக்கொண்டார்.

அவரால் நம்ப முடியவில்லை!

போலீஸ்காரர்கள் அடுத்ததாக தெருவில் இறங்கி

அவர்ளைத் தேடிப் பார்த்துவிட்டு ஏமாற்றமுடன் திரும்பினர்.

சரண்யாவை மார்போடு அணைத்தபடி ராஜதுரை அழைத்து வரவும், அவர் மனைவி மல்லிகா - அண்ணன் ரவிக்குமார் என்று எல்லோரிடமும் ஆச்சரியத் திகைப்பு.

சரண்யா ஓடிப்போய் தாயை அணைத்தாள். பயத்திலும், சோர்விலும் வெளுத்துப் போயிருந்தாள். அத்தனைக்கும் நடுவில் அவள் பார்வை பரணியையும் ஏறிட்டது.

ராஜதுரை நெருங்கி கைகுலுக்கத் தொடங்கினார்.

“பரணி… இந்த உதவியை நான் மறக்கமாட்டேன். நீ எப்படி சரண்யா இங்க இருக்கறதை கண்டுபிடிச்சே…? என்னால இதை இப்பக்கூட நம்ப முடியல…” என்றார்.

பரணிக்கு உடனடியாக சிவப்பிரகாசம் நினைப்பு தான் வந்தது. அவரே அவன் வாய்க்கு பூட்டு போட்டதும் நினைவுக்கு வந்தது.

சற்று திணறிவிட்டு, “அந்த இரண்டு பேர் மேல வந்த சந்தேகத்துலதான்… சரண்யா அங்க இருக்கணும்னு யூகிச்சேன். அடுத்து இவ்வளவு பக்கத்துல இருக்கிறது ஒரு விதத்துல அவங்களுக்கு பெரிய பாதுகாப்பு. நீங்க இங்க இருக்கறதால உங்க ‘டிபார்ட்மெண்ட்'டும் நிச்சயம் இந்த பகுதியைச் சந்தேகப்பட மாட்டாங்க. இதெல்லாம்தான் இப்ப ‘கிரிமினலா’ யோசிக்கறவங்க செயல்பாடு.” என்றான்.

“ ‘யூ ஆர் ரைட்!’ இன்னிக்கு 'கிரைம் ரேட்’டும் சரி, அவங்க புத்திசாலித்தனமும் சரி… சர்வதேச ‘லெவலுக்கு’ போயிடிச்சு. நான்கூட பிடிச்சு வெச்சிருக்கற ஆளை வெளிய விட்டுத்தான் சரண்யாவை மீட்க வேண்டியது இருக்கும்னு நினைச்சேன். நீ அதுக்கு அவசியமே இல்லாத படி பண்ணிட்டே ‘தேங்க்யூ ஸோ மச்’!

உனக்கு எந்த உதவின்னாலும் கேளு… நான் செய்ய தயாரா இருக்கேன். அப்புறம்… எதிரிங்க இப்ப உன் மேலயும் கோபப்பட்டு, உன்னை பல வகையில மடக்க

நினைக்கலாம். தனியா எங்கேயும் போகாதே! குறிப்பா இரவு நேரத்துல வெளியே போகவே போகாதே”

- என்று ஒரு இன்ஸ்பெக்டராகவும் அவனை எச்சரித்தார்.

சரண்யா பார்த்தபடியே இருக்க... இப்போது ‘அபார்ட்மெண்ட்’டே வெளியே வந்து - நடந்து முடிந்துவிட்ட அந்த சாகசத்தைப் பார்த்தபடி இருந்தது. அவர்களில் பரணியின் அம்மா சகுந்தலாவும், அக்கா சாந்தாவும், தங்கை பிரபாவும்கூட இருந்தனர்.

தனது ‘பிளாட்’டுக்குள் ஜன்னல் அருகே நின்று கொண்டு மர்மமான புன்னகையோடு சிவப்பிரகாசமும் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பேத்தியான கல்யாணியிடம் மட்டும் எந்த உற்சாகமும் இல்லை.

“தாத்தா...”

“சொல்லு”

“உங்க ஜோசியம் பலிச்சிடிச்சு போல இருக்கே?”

“ஜோசியம் இல்ல... இது. தூர திருஷ்டி!”

“ஏதோ ஒண்ணு... ஆனா, நல்லதுதான் செய்திருக்கீங்க.”

“நான் எப்பம்மா கெட்டது செய்திருக்கேன்??”

“வாஸ்தவம்தான்! இருந்தாலும் உங்களைப் புரிஞ்சுக்க சிரமமாகவும், பயமாவும் இருக்கு”

“உன் வயசுக்கு அப்படிதான் தோணும். தாய் - தகப்பனை இழந்துட்ட உன்னை ‘ஆஸ்டல்’ல போட்டு வளர்க்கவும் விருப்பமில்லை. கூடவே நீ இருக்கறதால அது உனக்கு நல்லதா... இல்லை கெட்டதான்னும் தெரியல.”

“ஹூம். கண்ணுக்கு தெரியாம மறைஞ்சு இருக்கறவங்களைப் பத்தியெல்லாம் சொல்லப் தெரியுது. ஆனா, நான் கூடவே இருக்கறது நல்லதா - கெட்டதான்னு தெரியலியா?”

“பரவாயில்ல… நீ இப்பல்லாம் ரொம்பவே புத்தி சாலித்தனமாப் பேசறே!”

“நான் இன்னும் கேக்க வேண்டியதைக் கேக்கவே இல்லையே?”

“என்ன கேக்கப் போறேன்னு தெரியும்மா? அந்தப் பசங்கள என்ன பண்ணப் போறேன்னுதானே கேக்கப் போறே?”

“ஆமா. அவங்க பாவம் தாத்தா!”

“என்னம்மா. அவங்கள நான் என்னமோ தப்பா பயன்படுத்தி, அவங்க வாழ்க்கையைக் கெடுத்துடப் போற மாதிரி பேசறே.?”

“படிச்சி முடிச்சிட்டு நல்ல வேலைக்கு போக வேண்டியவங்க, உங்களுக்கு எடுபிடியா இருந்து எதைத் தாத்தா சாதிச்சிட முடியும்? நாளைக்கு அவங்களையும் ‘சித்து வேலைக்காரங்க’ன்னு ஊர்ல சொல்ல ஆரம்பிச்சிட்டா?”

“அப்படியெல்லாம் நடக்காது. என் காலத்துக்கு பிறகு என் சித்தும், எனக்கு தெரிஞ்ச மத்த எல்லா ரகசியங்களும் இவங்க மூலமாத்தான் இந்த உலகத்துல வாழப்போகுது.”

"அப்ப நீங்க…?”

“பயப்படாதே! இன்னும் சில காலம் இருப்பேன். அது வாரமா - மாசமா - வருஷமாங்கறதை நீ பாத்து தெரிஞ்சுக்கோ. நான் இந்த மதுரைக்கு வந்தது - இங்க தங்கினது எல்லாமே இப்படிப்பட்ட ரெண்டு பேருக்காகத்தான்…”

“இவங்க ஒருவேளை உங்களைப் பாக்க வராமலே போயிட்டா?”

“வருவாங்க… வந்தே தீருவாங்க. அவங்களுக்கு வேற வழி கிடையாது கல்யாணி”

- அவர் குரலில் அசாத்திய உறுதி.

சிகுந்தலா கத்திக் கொண்டிருந்தாள்.

“இவ்வளவு விஷயம் நடந்திருக்கு! ஆனா, நாங்க எதுவும் தெரியாம வீட்டுக்குள்ளேயே இருந்திருக்கோம். நீயும் என்னடான்னா பச்சப்பிள்ளையாட்டம் மூஞ்சியை வெச்சுகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கே....?” - என்கிற தனது ஆலாபனையைத் தொடர்ந்தாள் அக்கா சாந்தா.

“பரணி.... உனக்கெதுக்குடா ஊர் வம்பு? அந்த திருட்டுக் கூட்டம் நாளைக்கு உன்னைப் பழிவாங்க வந்தா என்னடா செய்வே?” என்று கேட்டாள்.

“ஆமாண்ணே.... எனக்கும் பயமா இருக்கு” என்றாள் தங்கை பிரபா.

“பரணி... இப்ப அதாண்டா பயம்” என்று குருவும் கூட்டுச் சேர்தான்.

பரணியிடம் நீண்ட மவுனம். ஆழ்ந்த யோசனை வேறு....

“நாங்க இவ்வளவு சொல்றோம். எதாவது பதில் பேசறியா நீ?” என்று திரும்பச் சீறினாள் சகுந்தலா.

“பயப்படாதீங்க! எதுவும் ஆகாது. என் வாழ்க்கையும் இன்னில இருந்து மாறுது. நான் இப்ப ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா ஏறி இறங்கறவன் கிடையாது.”

“என்னடா சொல்றே?”

“இனி மருத்துவ பிரதிநிதி இல்லைன்னு சொல்ல வந்தேன்.”

“அப்படின்னா யார் நீ?”

“யாருன்னா...? இப்ப சொல்லத் தெரியல! ஆனா ஒண்ணு... நான் நிச்சயமா உருப்படியா பெருசா சாதிக்கப் போற ஒருத்தன்.”

“என்னடா ஆச்சு உனக்கு.... இப்படியெல்லாம் நீ பேச மாட்டியே....?”

“எப்பவும் எல்லாரும் ஒரே மாதிரி இருக்கற தில்லைம்மா.

மாறிகிட்டே இருக்கறதுதான் வாழ்க்கை. இவ்வளவு வயசான உனக்கு இது எதுவும் தெரியாதா?”

“டேய்... நீ பேசறதைக் கேட்டா ஒரு சன்னியாசி பேசற மாதிரி இருக்குடா”- என்றாள் அக்கா சாந்தா.

“வெச்சுக்கோ.இப்ப சன்னியாசிகளுக்குதானே காலம்! டி.வி.யில பார்க்கிறியே.... எத்தனை விதமான சன்னியாசிங்க”

“போதும்டா ! இப்படியெல்லாம் பேசி எங்கள கவலைப்பட வைக்காதே” எனும்போது வாசல் அருகே ஓர் உருவம்.திரும்பினாள்.பரணியின் அக்கா சாந்தாவின் கணவன் நின்றுகொண்டிருந்தான். இதுவரை அவனது சார்பாக அவன் அனுப்பிய ஆட்கள்தான் வந்திருந்தனர். இப்போது அவனே வந்திருந்தான்.

ஆச்சரியமாக மட்டுமில்லை... பரணிக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது.

“வாங்க மாப்ளே....” - என்று சகுந்தலா வரவேற்றாள். இறுக்கமான முகத்தோடு வந்தவன், பரணியை ஏற இறங்கப் பார்த்தான்.

அதில் ஆயிரம் அர்த்தங்கள்!

***

# 14

“பரந்த இந்தப்பூவுலகில் ஒரு தீபகற்பம் போலவும், அதே சமயம் அசாத்தியமான ஒரு நிலப்பரப்பாகவும் இருந்தது பரத கண்டம் எனப்படும் இந்த பாரத தேசமே! பூவுலகத்துக்கான சிறப்பே பஞ்ச பூதங்களின் சமநிலையில் உயிர்கள் உருவாகி, அவைகளால் இந்த மண்ணில் வாழ முடிவதுதான். இந்த பஞ்சபூத சமநிலை என்பது பாரத தேசத்தில்தான் மிகுதியாக உள்ளது. கிழக்கு - மேற்காக சமுத்திரமும், தெற்கில் அதன் விரிவும்... பின் வடக்கில் உலகின் மிக உயர்ந்த இமயமலைச் சிகரமும் என்று காட்சியளிக்கும் ஒரு நிலப்பரப்பு, இந்தப் பூவுலகில் வேறு எங்கும் இல்லை. இதனாலேயே அபூர்வமான மூலிகைகள் இங்கே விளைய முடிகிறது. அதிலும் தென் பகுதியில் உள்ள வனங்கள் மிக விசேஷமானவை. அதில் சதுரகிரி, கஞ்சமலை, சேர்வராயன் என்றும் வரிசையில் வருவதுதான் கொல்லிமலை!

சித்த புருஷர்கள் தங்கள் சித்தத்தை அடக்கி தவம் புரிய மிக உகந்த மலை, ஒரு சித்தன் உயிர் வாழ ஒரு குவளை நீருடன், ஆறே ஆறு மிளகு இருந்தால் போதும்! அந்த மிளகும், ஏலமும் கொல்லி மலையிலும் விளைவது விசேஷம். இந்த மலையின் சிறப்பே.... இங்கே காவல் கொண்டிருக்கும் 'கொல்லிப் பாவை' என்னும் பெண் தெய்வம்தான்.'

**- வன வியாசம்**

வந்து நிற்கும் அக்கா சாந்தாவின் கணவான சண்முகம் எனும் அந்த வீட்டு மாப்பிள்ளையின் கண்களில் நல்ல சிவப்பு. லேசாக குடித்துவிட்டு வந்திருப்பதை அங்கு இருப்பவர்களுக்கு புரிய கைத்துவிட்டது அவனின் நடவடிக்கை.

மாப்பிள்ளையைப் பார்த்த நொடியில் வாரி சுருட்டிக் கொள்ளத் தொடங்கினாள், சகுந்தலா,

“வாங்க மாப்ளே... வாங்க....”-என்று பிடித்திருக்கிறதோ....

பிடிக்கவில்லையோ என்ற மனப்பாங்கில் வரவேற்றாள்.

சாந்தா ஏற இறங்கப் பார்த்தாள். பிரபாவிடமோ அந்த இடத்தில் சகஜ நிலை மாறிவிட்டது போன்ற தவிப்பு.

சண்முகம் சுற்றி ஒரு பார்வை பார்த்தான். அப்படியே பரணியின் மேலும் அவன் பார்வை பரவியது. பரணி கூர்மையாக குத்துவது போலவே பார்த்தான்.

“என்ன பரணி.... அப்படிப் பாக்கறே....? மாமா. வந்துருக்கேன். ‘வாங்க’ன்னு கூப்பிடமாட்டியா?” - என்று சண்முகம் நக்கலாக வேறு கேட்டான்.

“அதான் வந்தாச்சே.... அப்புறம் என்ன கேள்வி?”

- பரணியிடம் கோபமான எதிர்கொள்ளல்.

சகுந்தலா அதைப் பார்த்து பதற்றப்பட ஆரம்பித்தாள்.

“பரணி.... நீ ஒரு வார்த்தை பேசக் கூடாது. அமைதியா இருக்கணும். இது அம்மா மேல ஆணை....” என்றாள்.

“அட.... என்ன அத்தை நீங்க? பரணி என்னமோ என்னை கடிச்சுக் குதறிடுற மாதிரி - இவனுக்கு வாய்ப்பூட்டெல்லாம் போடுறீங்களே. என்ன பரணி, என் மேல உனக்கு அவ்வளவு கோபமா?” - சண்முகம் கேட்ட விதத்தில் ஒரு இளக்காரமும், எச்சரிப்பது போன்ற ஒரு பாவனையும் நன்றாகவே தெரிந்தது.

பரணி பதிலுக்கு நேராக விஷயத்தைப் பிடித்தான்.

“எங்க வந்தீங்க....? ‘நகை போட்டாதான் எங்க அக்காவோடு குடும்பம் நடத்துவேன். இல்லாட்டி ‘டைவர்ஸ்’ பண்ணுவேன்’ன்னு சொல்லவா?”

“அட.... ‘கரெக்டா பாய்ன்ட்’டைப் பிடிச்சிட்டியே? என்ன முடிவு எடுத்திருக்கீங்க....?”

“இடத்தைக் காலி பண்ணுங்க ‘டைவர்சு’ நீங்க ஒண்ணும் பண்ண வேண்டாம். எங்க அக்காகிட்ட இருந்து உங்களுக்கு

‘நோட்டீஸ்’ வரும்.”

- அவன் பதில், எல்லோருக்குமே ஒரு இடியைப் போல இறங்கியது.

“டேய்ய்….” - என்று பதறிக்கொண்டு முன் வந்தாள் சகுந்தலா.

“சும்மா இரும்மா…. இந்த ஆள்தான் பூச்சி காட்டுவானா? நமக்கு காட்டத் தெரியாதா? இது என்ன காலம் தெரியுமா? எனக்கு நீ இப்ப பொண்ணு பாக்க ஆரம்பிச்சாலே… கல்யாணம் நடக்குமாங்கறது சந்தேகம். ஏன்னா, நான் ஒரு சாதாரண பட்டதாரி. ஆனா, இந்தக் காலத்து பொண்ணுங்க அவ்வளவு பேருமே முதுகலை பட்டதாரிம்மா. தங்களுக்கு வர்ற புருசன், தங்களைவிட கூடுதலா படிச்சவனா…. நல்ல வேலை பாக்கறவனா இருக்கணுங்கறதுதான் அவங்க ‘கண்டிஷன்’.

இங்க எனக்கே இதுதான் நிலை. இதுல இந்த ஆள் ‘டைவர்ஸ்’ பண்ணிட்டு, யாரைப் போய் கல்யாணம் பண்ணிப்பாரு? ஆனா, அக்காவுக்கு வாழ்க்கை தர ஆயிரம் அசலான ஆம்பளைகள் இருக்காங்கம்மா.

பெண்ணே இன்னிக்கு பொன்தான்! இதுல தனியா பொன் தர இவர் என்ன ராஜாவா…. இல்ல மந்திரியா?”- ஒரு வாங்கு வாங்கினான் பரணி.

அவனின் இந்தப் பேச்சு, சண்முகத்தை வெல வெலக்க வைத்துவிட்டது.

“பரணி… நீ என்ன பேசறேன்னு தெரிஞ்சுதான் பேசறியா?” - என்று சத்தமான குரலில் கேட்டான்.

“ஏன்…. நான் பேசினது உனக்குப் புரியலியா? வேணும்னா இன்னொரு தடவை சொல்லவா?”

"இதோ பாரு…. நீங்க போடுறதா சொன்ன நகையைத் நான் எங்க வீட்ல கேக்கறாங்க. அதை ஞாபகத்துல வெச்சுக்கோ.”

“நாங்க சொன்னது வாஸ்தவம்தான்! இப்பக்கூட

சொல்றேன்…. நான் வேலைக்குப் போய் சம்பாதிச்சு, அந்த நகையை போட்டுட்டுத்தான் என் கல்யாணத்தை பத்தியே நினைக்க இருந்தேன். ஆனா, இப்படி ஈட்டிக்காரன் மாதிரி கழுத்துல கத்தியை வைக்கறதா இருந்தா உங்க உறவே தேவையில்லை”

“சரி…. அதுக்கு எவ்வளவு நாளாகும்?”

“யாருக்குத் தெரியும்….? எனக்கு வேலை கிடைக்கணும். அதுலநான் நிலைக்கணும். சுமாரா சொல்றேனே… ஒரு நாலஞ்சு வருஷம் ஆகலாம்….”

"அப்ப அதுவரை நான் காத்திருக்கணுமா?”

“ஆமா…. இதுதான் இப்ப இந்த வீட்டு எதார்த்த நிலை"

- பரணியின் பதிலை வழிமொழிவது போல சாந்தாவும் வாய் திறக்கத் தொடங்கினாள்.

“பரணி…. நான் சொல்ல நினைச்சதைத்தான் நீ சொல்லியிருக்கே. அவர் என்னை கல்யாணம் பண்ணிக்கல. எனக்குப் போட இருந்த நகையைத்தான் பெருசா நினைச்சிருக்காரு அந்த நகையைப் போட முடியாம போனது நம்ம தப்பு தான். அதுக்கு பரிகாரமா, நான் ஒதுங்கி…. அவர் கேட்கற விவகாரத்தை கொடுத்துடறேன். வேற யாரையாவது கல்யாணம் பண்ணிகிட்டு, அவரை நல்லா இருக்கச் சொல்லு நானும் வேலைக்குப் போறேன். எனக்காக நீயும் கஷ்டப்பட தேவையில்லை”

மனைவியின் குடும்பத்தை ஒரு ஆட்டு ஆட்டலாம் என்று வந்த சண்முகத்துக்கு, இப்போது, தான் ஆட்டப்பட்டுவிட்டது போலத் தோன்றியது. மவுனமாக எழுந்தான்.

சகுந்தலா மட்டும், “மாப்ளை…. நீங்க உக்காருங்க இவங்க புரியாம பேசறாங்க” என்று கெஞ்சலாகப் பேசிப் பார்த்தாள். ஆனால், சாந்தா - பரணி இருவரையும் முறைத்துப் பார்த்துவிட்டு…. வந்தது போலவே விறுவிறுவென்று திரும்பிவிட்டான் சண்முகம்.

சகுந்தலாவுக்கு கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது.

“ஏண்டா… எதுவும் பேசாதேன்னு சொன்னேன்ல. இப்படியா வெட்டி விடுறதுலேயே குறியா இருப்பே?” என்று வெடித்தாள்.

“அம்மா…. நீதான் புரியாம இன்னும் பழைய பஞ்சாங்கமாவே இருக்கே! நான் சரியாத்தான் பேசியிருக்கேன். போய் உன் வேலையப் பாரு. நான் வரேன்….” - என்று விருட்டென்று புறப்பட்டான்.

“எங்கே புறப்பட்டுட்டே…? நீ இன்னும் சரியா சாப்பிடக்கூட இல்லை”

“எனக்கு இப்ப சாப்பாடு முக்கியமில்ல” - என்கிற அவனது தேய்ந்த குரல் மட்டும் அவர்கள் காதில் விழுந்தது.

ஹாலில் - தரையில் பத்மாசனத்தில் அமர்ந்தபடி 5. தாடையை வருடிக் கொண்டிருந்தார், சிவப்பிரகாசம். குருவும், பரணியும் எதிரில் வந்து நின்றனர். அவரும் ஏறிட்டார். சற்று தள்ளி கல்யாணி.

கல்யாணியைப் பார்த்து, “நீ போய் அரச மரத்து பிள்ளையாருக்கு, அருகம்புல் மாலை போட்டு பதினொரு சுத்து சுத்திட்டு… வரும்போது கொஞ்சம் அருகம்புல்வோடு வா” என்றார் சிவப்பிரகாசம்.

“நான் இப்ப இங்க இருக்கறது உங்களுக்கு பிடிக்கலைன்னு சொல்லுங்க.”

“இல்ல தாயி. இங்க பேசப்போற விஷயம், ஊனமில்லாம நல்லபடியா நடக்கணும். இன்னிக்கு - இப்ப மூல நட்சத்திரம் நடக்குது. இந்த நடசத்திரத்துக்கு உரிய கிரகம் கேது.அவருக்கு உரிய தெய்வம் கணபதி. அந்தக் கணபதிக்குரியது அருகம்புல். அது தழைக்கிற இடத்துல வெயில், காற்று, தண்ணி, பூமிங்கற எல்லாமே நல்லா இருக்குன்னு அர்த்தம். சூன்யமான இடங்கள்ல அது துளிர்க்காது.

அது துளிர்க்கற இடம் சுபிட்சமா இருக்கும். அடுத்து அருகம் புல்லை ஒரு விவசாயி பயிர் பண்ணத் தேவையில்லை.

அருகம்புல் வரையில காலம்தான் விவசாயி. துளசி வில்வம் மாதிரி ஒரு தேவப்பயிர். அந்த பயிர்னா கணபதிக்கும் உயிர். அதை நாம சாற்றும்போது, கணபதிக்கு உகந்த பூஜையா அது மாறுது. இன்னும் பல ரகசியங்கள் இதுக்கு பின்னால இருக்கு நேரம் போயிடப் போகுது. நீ புறப்படு” என்றார்.

கல்யாணியும் புறப்பட்டாள்.

ஒரு அருகம்புல்லைப் பற்றி அவர் பேசிய பேச்சுக்கு பின்னாலே இவ்வளவு விஷயம் இருப்பதே பரணிக்கு இப்போதுதான் தெரியும்.

அது பிரமிப்பாக அவன் முகத்தில் எதிரொலித்தது!

“என்னப்பா.... அப்படிப் பாக்கற?”

“உங்க வார்த்தை ஒவ்வொண்ணும் எனக்கு ஆச்சரியம் தருது”

“புல்லுக்கே ஆச்சரியமா..? ஒரு சித்தன் வாழ்க்கையின் எவ்வளவோ இருக்குப்பா.”

“உண்மைதான்! இன்னிக்குத்தானே நான் முதன் முதலா அனுபவப்பட்டு இருக்கேன்.”

“என்ன... அந்தப் பொண்ணு கிடைச்சுட்டாதானே?"

“கிடைச்சுட்டாய்யா.இதை நம்பவும் முடியல. நம்பாம இருக்கவும் முடியல.”

“போகப் போக இன்னும் நிறைய அனுபவங்கள் ஏற்படும்போது, இப்படி நீ பேசமாட்டே...."

"ஆமா.... எனக்கு இந்த மாதிரி அனுபவங்கள்தான் இனி பெருக. நானும்.... சொன்ன மாதிரி உங்ககிட்ட வந்துட்டேன் நீங்க சொல்ற வேலைகளை செய்யவும் தயாரா இருக்கேன். ஆனா, மனசாட்சிக்கு விரோதமா மட்டும் எதையும் செய்யச் சொல்லிடாதீங்க”

“இந்த வயசுல நேர்மை மேல உனக்கு நிறைய பற்று இருக்கறதை நினைச்சு சந்தோஷப்படறேன். பக்தியும் வந்துட்டா உன்னை கையில பிடிக்க முடியாது”

“பக்தியா….?”

“ஆமா, பக்தி; குருபக்தி - கடவுள் பக்தி”

- சிவப்பிரகாசம் சொன்னதைக் கேட்டு லேசாக சிரித்தான் பரணி.

“என்னப்பா நீ…. பகுத்தறிவுன்னு பேசிக்கிட்டு, இந்த நொள்ளக்கண்ணுக்கு புலப்படுறதுதான் உலகம்னு னைக்கறவனா?”

“நொள்ளக்கண் இல்லய்யா. நல்ல கண் இது.”

“இதா கண்ணு…? கண்ணு உள்ளே இருக்குப்பா. உள்ளே இருக்கு” - சிவப்பிரகாசம் நெஞ்சைத் தொட்டுக் காட்டி பேசினார்.

“அது மனக் கண்.”

“அதுதான் நிஜக் கண். உன் கண்ணை நான் எப்பவேனா கட்டுவேன். அதான் கட்டிக்காமிச்சேனே….

"அய்யா…. இப்படி பத்திரிகைகாரங்க பேட்டி மாதிரி பேசிக்கிட்டே இருந்தா எப்படி? நாங்க… உங்க வரையில என்ன செய்யனும்? அதை முதல்ல சொல்லுங்க.”- அதுவரை பேசாத குரு, மெதுவாக வாய் திறந்தான்.

சிவப்பிரகாசமும் அந்த ஜீவசமாதியை – சமாதிக்குள் அடங்கிவிட்ட சித்த புருஷரை நினைக்கத் தொடங்கினார்.

***

# 15

கொல்லிமலை கொல்லிப்பாவை பற்றி பல கதைகள் உண்டு. சித்த புருஷர்கள் தவம் செய்த போது, அங்கே வந்த ஒரு கன்னிப்பெண்.... அவர்களுக்கு சேவை செய்து தன் தவத்தினால் தெய்வமாகி அங்கே நடமாடுவதாக ஒரு கதை சொல்லுகிறது.

இல்லையில்லை....

சித்த புருஷர்கள் தங்கள் சக்தி வழிபாட்டுக்குரிய தெய்வமாக வாலைக் குமரியான பாலாவை பூஜித்தார்கள். தங்கள் உபாசகா தெய்வமாக அவர்கள் உருவாக்கியதுதான் கொல்லிப்பாவை' என்றும் ஒரு கதை!

அதுவுமில்லை....

கொல்லிப்பாவை ஒரு தீய சக்தியாக அந்த பகுதியில் எவரையும் நடமாட விடாதபடி செய்துகொண்டிருக்க, சில சித்தர்களே அதற்கு சாப விமோசன மளிக்கப் போய் அவள் எல்லோருக்கும் அருள் செய்யவும், அந்த மலையில் தவம் செய்வோர்க்குக் காவலாகவும் இருப்பதாக கூறுவது இன்னொரு கதை!

எது எப்படியோ.... 'கொல்லிப்பாவை'யின் உதவி இல்லாமல் கொல்லிமலையில் உயர்ந்த ஜாதி மூலிகைகளை ஒருவர் அடைய முடியாது. இந்த கொல்லிமலையிலுள்ள அறப்பளீ சுவரர் கோவிலும் ஒரு பரிகாரத்தலத்துக்குரிய சக்தி அம்சத்தையே கொண்டுள்ளது. இங்கு பாயும் மீன், பள்ளியாற்று மீன்களுக்கு தங்க மூக்குத்திஅணிவிக்கும் நேர்த்திக் கடன் ஒன்று இந்தப் பகுதியில் உண்டு.

அந்த தங்க மூக்குத்தி மீன்களுக்குப் பின்னாலும் சுவையான பல சங்கதிகள் உண்டு!"

**- வன வியாசம்**

சிவப்பிரகாசத்தின் நினைப்பு அப்படியே சோமாஸ் கந்தர் என்னும் அந்நாளில் வாழ்ந்த சித்தரின் மேல் சென்றது.

தன்னையும் மறந்து கண்கள் மூடிக்கொள்ள. கையிரண்டும் கூப்பியது. அவர் தியானத்தில் மூழ்கப் போவதாக நினைத்தனர் பரணியும், குருவும். சகஜமாக பேசிக்கொண் டிருக்கும்போதே இப்படி செய்தது அவர்களுக்கு ஆச்சரியமாக மட்டுமில்லை... அது ஒரு வித்தியாசமான அனுபவமாகவும் இருந்தது.

தன்னை மறந்து அப்படி மாறியவர், அதன்பின் கூப்பிய கரத்தை விலக்கவோ - திரும்ப கண்களைத் திறக்கவோ இல்லை! எதிரே சிலை ஒன்று இருப்பது போல்தான் பரணிக்குத் தோன்றியது.

ஆச்சரியம் விலகாமல் குருவைப் பார்த்தான்.

“பரணி... என்னடா இவர் திடீர்னு இப்படி கண்ண மூடிக்கிட்டு உட்கார்ந்துட்டார்...?”

“இந்த மாதிரி ஆளுங்க விஷயமே இப்படித்தான். கொஞ்சம் பொறு...” என்றவன், “ஐயா... ஐயா...” என்று அவரை கூப்பிட்டுப் பார்த்தான். அவர் கண்களைத் திறக்கவில்லை.

“முகத்துல தண்ணிய தெளிச்சுப் பார்ப்போமா?” என்றான் குரு.

“இவர் என்ன மயக்கத்துலயா இருக்காரு... தண்ணிய தெளிக்க? தியானத்துல இறங்கிட்ட மாதிரி தெரியுது. விடு... அவரா கண் திறந்துட்டு, நம்மை கூப்பிடட்டும். நாமளும் கொஞ்சம் விலகிப் போய் ஒரு காப்பி குடிச்சிட்டு வருவோம்.”

- பரணி மெள்ள அங்கிருந்து விலகினான். குருவும் பின் தொடர்ந்தான். ‘பிளாட்’டுக்கு வெளியே வந்தனர். மாடிப் படிகளில் யாரோ வரும் சப்தம்.

“கல்யாணி, கோவிலுக்கு போயிட்டு வந்துட்டா போல இருக்கு....” என்றான் குரு. ஆனால் வந்தது குருவின் தாயான ராஜேஸ்வரி. தோளில் ‘ஹேண்ட்பேக்’குடன் வேலை முடிந்து வந்தவள். குரு, பரணி இருவரையும் நேருக்கு நேர் பார்த்தாள்.

வீட்டுக்குள் அரட்டை அடித்தபடி இல்லாமல் வராந்தாவில் அவர்கள் நிற்கவும்.

“இங்க என்னடா பண்றீங்க?” என்று ஆரம்பித்தாள்.

“புழுக்கமா இருந்துச்சு மொட்டமாடிக்கு போவோம்னு வந்தோம். அதுக்குள்ள நீங்க வந்துட்டீங்க...” - சமாளித்தான் குரு.

“ஆமா... ஏம்ப்பா பரணி, உனக்கு என்ன லீவா? இந்த நேரம் நான் உன்னைப் பார்த்ததே கிடையாதே...?”

“அது ஒரு பெரிய கதைம்மா... உள்ள வாங்க சொல்றேன். அப்புறம்மா - ரொம்ப ‘டயர்டா’ இருக்கு நல்ல காப்பியா போட்டுக் கொடுங்க..."

குரு பேசியபடியே பரணியையும் அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ராஜேஸ்வரி தன் ‘பிளாட்’டுக்குள் நுழையும் முன் எதிர் ‘பிளாட்’டில் ஒரு பார்வை பார்த்தாள். பெருமூச்சு விட்டபடியே உள்ளே வந்தாள். பரணியும் அதைக் கவனித்தான்.

உள்ளே வந்தவள் பரணியைத்தான் ஏறிட்டாள். அவனுக்கும் அவளது பார்வைக்கும் அர்த்தம் புரிந்தது.

“அது வந்தும்மா நான் பாத்துக்கிட்டிருந்த வேலை போயிடிச்சி. இனிமே அடுத்த வேலையத்தான் பாக்கணும்.”

“வேலை போயிடிச்சா... என்னப்பா சாதாரணமா சொல்றே! ஏதாவது பிரச்சினையா?”

“ஒரு பிரச்சினையுமில்ல... மருந்து கம்பெனிங்கன்னாலே அது அப்பப்ப கை மாறிகிட்டே இருக்கும். என் கம்பெனியையும் ஒரு வெளிநாட்டுக்காரன் வாங்கி இருக்கான். புது நிர்வாகம்... புதுசு புதுசா கொள்கைகள்! அதுல ஆட்குறைப்பும் ஒண்ணு. இப்பதான் பெரும்பாலும் எல்லா வேலைகளுக்கும் ‘மெஷின்’ வந்துடிச்சே?”

“நீ ‘ரோபோ'வை சொல்றியா? அது என்ன ‘எந்திரன்’ ரஜினிகாந்த் மாதிரி ஒவ்வொரு 'டிஸ்பென்சரியா’ ஏறி -

இறங்கி டாக்டர்கள்கிட்ட ‘சாம்பிள்ஸ்’ கொடுத்து விளக்கம் சொல்லுமா என்ன?”

ராஜேஸ்வரி பேசியபடி ‘பேக்’கை வைக்க வேண்டிய இடத்தில் வைத்தாள். குளியலறைக்கு போய் கை, கால், முகம்’ கழுவிக் கொண்டாள். சேலையை இடுப்பில் செருகி விட்டு, ‘கியாஸ்’ அடுப்பை பற்ற வைத்து பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பினாள். பிரிட்ஜைத் திறந்து பால் பாக்கெட்டை எடுத்து அதை கத்தரிக்கோலால் வெட்டி, அடுப்பில் இன்னொரு பக்கத்தில் கொதிக்க வைக்கத் தயாரானாள்.

வேலைக்குப் போய்விட்டு வந்த நிலையிலும் அந்த சுறுசுறுப்பு பரணிக்கு ஆச்சரியமாக இருந்தது. “ஆன்ட்டி…. உங்களுக்கு நல்ல ‘ஸ்டாமினா’! வைட்டமின் எல்லாமே உங்ககிட்ட போதுமான அளவு இருக்கு…” என்றான்.

“நீ ஒண்ணுப்பா… முதுகு வலியோட நான் படறபாடு எனக்குத்தான் தெரியும். ‘மெனோபாஸ் பீரியட் வேற… பெண் ஜென்மமாவே பிறக்கக்கூடாது. எதுக்கு டாக்டர்கிட்ட போனாலும், ‘இப்ப அப்படிதான் இருக்கும். 'பீரியட்' பாஸானதும் சரியாயிடும்’னு 'பெய்ன் கில்லர்’ மாத்திரையை எழுதிக் கொடுத்துடுறாங்க. ஆனா வலி…. உயிர் போகுது. ஏதோ அந்த நாள்ல சாப்பிட்ட சாப்பாட்டால இப்ப சமாளிக்க முடியுது.”

“ஆமா… முதுகு வலிக்கு என்ன மாத்திரை போட்டுக்கிறீங்க?”

“அது யாருக்குப்பா தெரியும். சீட்டு கொடுத்தா கடையில கொடுக்கிறேன். அவன் தர்றதுதான்…”

“’ஓவர் டோஸ்’ எடுத்துக்காதீங்க. அப்புறம் ‘சைடு எபக்ட்’ ஆயிடும்”- அவர்களிடம் பேச்சு திசை மாறியது.

“இப்ப எதுல ‘சைடு எபக்ட்’ இல்ல? அந்த காலத்துல எங்க வீட்டுல வெண்கல பாத்திரத்துலதான் அம்மா காப்பி போடுவாங்க. அதுவும் விறகு அடுப்புல. அந்த புகை கரிச்சாலும் கண்ணுக்கு அவ்வளவு நல்லது! பாலும், வீட்டு வாசல்ல மாட்டை கூட்டிட்டு வந்து நம்ம எதிரிலயே கறந்து

தருவான். காப்பிக் கொட்டையையும் நாங்களே வறுத்து அரைப்போம். இப்ப என்ன அப்படியா?

எல்லாம் கலப்படம். முதல்ல 'கியாஸ்' அடுப்பே தப்பு. அவ்வளவும் பெட்ரோலிய வாயு! அடுத்து இந்த பாக்கெட் பால். இதுக்குள்ள எவ்வளவு 'கெமிக்கல்' இருக்கு தெரியுமா? மாடு அதிகம் பால் கறக்கணும்னு ஊசியா போட்டு கறக்கறாங்க. அதானே இது! இதை குடிக்கப் போய்த்தான் பொட்டப் பிள்ளைங்களும் பத்து, பன்னெண்டு வயசுலேயே வயசுக்கு வந்துடுறாங்க.

ஒரு தம்ளர் காப்பிக்குள்ளேயே இவ்வளவு கேடு இதுக்கு மேலே அரிசி, பருப்பு, காய்கறின்னு எவ்வளவு இருக்கு? அவ்வளவும் ரசாயன உரங்களாலதான் உருவாக்கப்படுது.

என் காலத்துல இப்படியெல்லாம் மாதுளை, ஆப்பிள் பழங்கள பார்த்ததே இல்லை. பொசு பொசுன்னு ஊட்டமா மாம்பழம்தான் இருக்கும். இப்ப அதைக்கூட 'கார்ப்னேட்'டுங்கற கல்ல வெச்சு பழுக்க வைக்கறாங்களாமே?"

-ராஜேஸ்வரி ஒருபாட்டம் பேசினாள். ஆனால் பேச்சுக்கு பேச்சு, கைக்கு கை என்று வேலை முடிந்து பரணி, குரு இருவர் முன்னாலும் காப்பி தம்ளர் நீண்டது.

பரணிக்கு பிரமிப்பாக இருந்தது. காப்பியிலும் நல்ல வாசம்!

"ஆமாம்.... உன் அக்கா வந்திருக்கற மாதிரி இருக்கே? எதாவது பிரச்சினையா?"- ராஜேஸ்வரி அப்படியே 'டிராக்' மாறி பரணியின் அக்காவிடம் வந்தாள்.

"ஆமாம் ஆன்ட்டி..." - என்று இரு வார்த்தைக ளோடு அதற்கான பதிலை முடித்துக்கொண்டான்.

"ஏம்ப்பா... என்கிட்ட உங்க வீட்டுப் பிரச்சினையை பேச உன் சுயமரியாதை இடம் தரலையா?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லை ஆன்ட்டி இது ஒரு வீணாப் போன பிரச்சினை. அக்காவும் ஒரு முடிவு பண்ணிடுச்சு. நானும் இன்னிக்குத்தான் அந்த விஷயத்துல

தெளிவான முடிவோடபேசினேன்...”

“என்ன பேசினே?”

பரணியும் காப்பியைப் பருகியபடியே அவ்வளவையும் சொல்லி முடித்தான்.

அதைக் கேட்ட ராஜேஸ்வரி முகத்தில் தீவிரமான சிந்தனை.

“என்ன ஆன்ட்டி யோசிக்கிறீங்க?”

“இந்த தங்கத்தை நினைச்சேன்... இது படுத்துற பாடு கொஞ்ச நஞ்சமில்லைப்பா. வீடு நாடுன்னு சகலத்தையும் ஆட்டிப் படைக்குது. பத்து வருஷம் முந்தி வாங்கின டி.வி., பிரிட்ஜ், காரு, பைக்குன்னு எதை எடுத்தாலும் அதெல்லாம் ஒரு பத்து, இருபது சதவிகிதம் விலை ஏறியிருந்தாலே அதிசயம். ஆனா, இது மட்டும் இருநூறு மடங்குக்கு மேலே ஏறியாச்சு.

இவ்வளவுக்கும் அது கருக்காதுங்கறதைக் கடந்து அதைப் பத்தி பலருக்கும் எதுவும் தெரியாது. நம்ம நாட்டு பொம்பளைங்கதான் காது, மூக்கு, காலு, கைன்னு தங்கத்துக்கு அடிமைன்னா... மேல் நாட்டுக்காரங்களும் அப்படித்தான் இருக்காங்க.

இந்த தங்கம் பெரிய புதிருப்பா...”

- ராஜேஸ்வரி பெருமூச்சோடு சலித்துக்கொண்டாள்.“

இவ்வளவு சொல்ற நீங்களும் கால், கைன்னு ஒரு அஞ்சாறு பவுனோடதானே இருக்கீங்க?"

“அது சரி... இது என் அப்பா ஆசையா செய்து போட்டதுப்பா. அப்புறம் நான் உழைச்சு சம்பாதிச்சது.”

“இல்ல... நகை போட்டுக்கணும்னா அதான் கருக்காதபடி ‘கவரிங்’ நகை வந்துடிச்சில்ல. அதுக்கு மாறிக்கலாம்ல?”

“வாஸ்தவம்தான்! ஆனா ‘கவரிங்’ ஏன் பெருசா ‘சக்ஸஸ்' ஆகலை தெரியுமா?”

“ஏன் ஆண்ட்டி?”

“என்னதான் இருந்தாலும் அது ‘டூப்ளிகேட்’ ‘ஒரிஜினல்’ கிடையாதுங்கற ஒரு எண்ணம் அதை வாங்கும் போதே வந்துடுது. இந்த உலகம் எவ்வளவோ விஷயத்துல கெட்டிருந்தாலும், அசலுக்குண்டான மதிப்பை கொடுக்கற விஷயத்துல மட்டும் துளிகூட மாறலைப்பா. மாறவும் கூடாது. உண்மை எப்பவும் உண்மையாத்தான் இருக்கணும். இருக்கவும் முடியும்.

நீ கூட பாரு… நல்லவங்களை விட கெட்டவங்ககிட்டதான் இந்த உண்மை மேல பற்று அதிகம் இருக்கும்.”

“என்ன ஆன்ட்டி சொல்றீங்க… அது எப்படி? எனக்குப் புரியலை…”

“என்ன புரியல? இப்ப சினிமாவுலேயே ஒரு வில்லன் இருக்கான்னு வை. அவனுக்கு யாராவது துரோகம் பண்ணுறாங்கன்னு தெரிஞ்ச உடனே சுட்டுக் கொன்னுடுவான். ஏன்னா… அந்த துரோகத்தை அவனால தாங்கிக்க முடியல. நாம என்ன செய்வோம்? ஜீரணம் பண்ணப் பார்ப்போம். அதிகபட்சம் புலம்புவோம். அவனை மாதிரி அதுக்கு ஒரு தண்டனை தருவோமா?”

“சரிதான் ஆன்ட்டி… அப்ப இந்த நல்லதுக்குக் காலம் இல்லைன்னு சொல்றதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?”

“அதெல்லாம் சும்மா…. உளறல்! நல்லதுக்குக் காலம் இல்லைன்னா.. இந்த ஊர் இப்படியா இருக்கும்? நம்ம மதுரை மக்கள் தொகை முப்பது லட்சத்தைத் தாண்டிடுச்சு. போலீஸ்காரங்க எண்ணிக்கை ரொம்ப குறைச்சல். அவங்களால என்ன பண்ண முடியும்? எப்படியோ கட்டுப்பாடா வெச்சுகிட்டிருக்காங்க?”

“அப்ப இவங்க ‘வேஸ்ட்’டுன்னு சொல்ல வர்றீங்களா?”

“மண்ணாங்கட்டி… அந்த முப்பது லட்சத்துல ஒரு சதவிதம் வேணும்னா தப்பா இருக்கலாம். அதாவது ஒரு மூவாயிரம்

பேர்... அவங்களை கட்டுப்படுத்த இவங்க வேணும்ல. மீது தொண்ணூத்து ஒன்பது சதவிதம் பேர் மானம் மரியாதைக்கு கட்டுப்பட்டுதானே வாழறோம்? அப்புறம் எதை வெச்சு காலம் கெட்டுப் போச்சுன்னு சொல்றே நீ?"

"ஆன்ட்டி... எப்படி உங்களால இப்படி யோசிக்க முடியுது? உங்ககிட்ட பேசிகிட்டு இருந்தா மனசுக்கு ரொம் தெம்பா இருக்கு"

"ஐஸ் வெச்சது போதும்... சீக்கிரமா நல்ல வேலையில் சேரப் பாரு. அப்படியே இவனுக்கும் எதாவது ஏற்பாடு பண்ணு..."

"நிச்சயமா ஆன்ட்டி. இந்தத் தடவை ரெண்டு பேருக்குமே ஒரு வேலை கிடைக்கற மாதிரி இருக்கு... பார்ப்போம்

"எந்த கம்பெனியில்ப்பா....?"

"கம்பெனி... கம்பெனி..."

"என்ன தந்தி அடிக்கறே?"

"இது கம்பெனி இல்ல ஆன்ட்டி எனக்கு குரு தான் கம்பெனி, குருவுக்கு நான்தான் கம்பெனி"

"புரியற மாதிரி சொல்லுப்பா."

"இப்ப விட்ருங்க. ஒரு நாள் விளக்கமா சொல்றேன் எங்க வேலையில எனக்கு குழப்பமும், சந்தேகமும் வர நிறைய வாய்ப்பு இருக்கு அப்ப உங்ககிட்டதான் வருவேன். ஏன்னா.. உங்க சாதுரியம் எனக்கு பிரமிப்பா இருக்கு..."

"ரொம்பவே குழப்பறே... இதுல இருந்தே ஏதோ கோக்குமாக்கான வேலையாத்தான் இருக்கும்போல தெரியுதே?"

"அது இப்ப தெரியாது ஆன்ட்டி. ஆனா, அப்படி மட்டும் இருந்தா நிச்சயம் அதைச் செய்ய மாட்டோம்"

"அந்த தெளிவு இருந்தா போதும்ப்பா. மனசாட்சி தப்புன்னு

சொல்ற ஒண்ணை செய்யாதீங்க. வயசுப் பசங்க சும்மா மட்டும் இருக்கக்கூடாது.

இந்த காலமும், நேரமும் போனா வரவே வராது. 'வயசானவங்களோட ஒரு நொடிக்கு ஒரு பொன்னுன்னா... வாலிப நொடிக்கு பத்து பொன்’னுன்னு ஜப்பான் நாட்டு பழமொழி சொல்லுது. இந்த காலத்துல படுற இன்பம், துன்பம் ஏமாற்றம்னு எதுவும் வீண் போகாது. பின்னால இதுதான் உலகத்தை எடை போட்டுப் பாக்க பயன்படும்.”

ராஜேஸ்வரியின் பேச்சு, பரணிக்கு ஒரு புது தெம்பையே தந்தது.

“நல்லது ஆன்ட்டி... நீங்க வேலையைப் பாருங்க. நான் வரேன்”

- பரணி புறப்பட்டான். குருவும் புறப்பட... ராஜேஸ்வரி தடுத்து “இருடா... உனக்கு ஒரு வேலை இருக்கு” என்றாள்.

பரணி வெளியே வந்தான். எதிரில் போய் உள்ளே பார்த்தான். சிவப்பிரகாசத்திடம் அசைவே இல்லை. ஆனால், கல்யாணி வந்திருந்தாள். முகத்தில் உணர்வே இல்லாதபடி பார்த்தாள். அவனை நெருங்கினாள்.

“பேசிகிட்டே இருந்தாரு... தியானத்துல ஆழ்ந்துட்டார்ய்” என்றான்.

“இப்படி தாத்தா உக்காந்துட்டா... வெளிய சஞ்சாரம் போயிருக்கறதா அர்த்தம்” என்றாள் கல்யாணி

“வெளிய சஞ்சாரமா?”

"ஆமா... தாத்தாவுக்குள்ள இப்ப தாத்தா இல்லை”

"நீ சொல்றதே புரியல...”

“இப்ப புரியாது... ஆனா போகப் போகப் புரியும்.”

“ஹூம்... உன் தாத்தாவை எப்படி எடுத்துக்கிறதுன்னே எனக்கு தெரியல. பெரிய புதிரா இருக்காரு...”

“ஆமா... பெரிய புதிர்தான்! நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா?” கல்யாணி கேட்டாள்.

“என்ன?”

“நீங்க ரெண்டு பேரும் ஒரு மாசத்துக்கு எங்க்கேயாவது போயிடுங்களேன்.”

“என்ன சொல்றே நீ?” திடுக்கிட்டாள் பரணி.

“தாத்தாவோடு நீங்க சேர வேண்டாம். உங்க வாழ்க்கை மாறிடும். அப்புறம் அந்த காடும் ரொம்ப ஆபத்தானது அங்க போன யாரும் புலிப்பாறைகிட்ட போனதே இல்லை.”

”என்னென்னமோ சொல்றியே... புலிப்பாறை, காடு... புரியலியே...?”

-பரணி கேட்கவும்,சிவப்பரகாசத்துக்கு விழிப்பு வரவும் சரியாக இருந்தது.

***

# 16

‘கொல்லி மலை அறப்பளீசுவரர் கோவிலையொட்டிப் பாயும் மின்பள்ளி ஆற்றில் அந்த நாட்களில் மீங்களைப் பிடித்து, அவகளுக்கு தங்கத்தால் ஆன மூக்குத்தியை அணிவித்து அதை திரும்ப ஆற்றில் விட்டுவிடுவார்கள். பெண் பிள்ளைகளுக்கான திருமணத் தடை, பிள்ளை இல்லாத குறை, கணவனுக்கான நீண்ட ஆயுள்.... இதனால் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

மீன்களுக்கு மூக்குத்தி எதற்கு என்னும் கேள்வி எழலாம்! மின்பள்ளி ஆற்றில் தேவதைகளே மீன்களாக வருவதாக ஐதீகம். எனவே, அவைகளுக்கு தங்கம் காணிக்கையாக தருவது என்பது அவர்களுக்கு மகிழ்வை அளித்து, அவர்கள் ஆசிகளால் குறை நீங்குவதாகப் பொருள்.

வனப்பகுதிகளில் நிலவும் இதுபோன்ற நம்பிக்கைகள் அறிவுக் கண்ணோட்டத்தோடு பார்த்திட ஒரு மாதிரி தோன்றினாலும், இதன் பின்னே ஏராளமான நுட்பங்கள் உள்ளன.

அந்த நாளில் தொண்டை மண்டலத்தில் ஒரு பேரூரில் தனவந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது முன்னோர்கள் அவ்வளவு பேருக்குமே தொழுநோய் பாதிப்பு இருந்தது. கிட்டத்தட்ட நான்கு தலைமுறை முன்னோர்களும் தொழு நோய் பாதிப்புக்கு ஆளாகியே இறந்தனர். அதனால் அவருக்கும் அந்த நோய் தொற்றும் என ஒரு பயம் அவரிடம் இருந்தது. இதனால் அவரை மணக்கவும் யாரும் தயாராக இல்லை.

எதன் காரணமாக இப்படி ஆகிறது என்பதை அறிந்திட அவர் ஜோதிடம் பார்த்தார். ஜோதிடத்தில் அது சிவாலயத்து சொத்தை கொள்ளையடித்த சாபத்தால் வந்தது என்பது தெரிந்தது. அதற்கு பரிகாரமாக மலைத் தலத்தில் அவர் ஆயிரத்து எட்டு வில்வ மரங்களை நட்டால், நோய் அணுகாது என்றும் கூறப்பட்டது.

அவரும் தென்பகுதி வனங்களை பத்து பங்காய்

பிரித்துக்கொண்டு ஒவ்வொரு அமாவாசையில் தொடங்கி பவுர்ணமி வரை என்று கணக்கிட்டு மாதம் நூற்று ஒரு மரம் என்று பத்து மாதங்கள் மரங்களை நட்டார். பின் அவைகளை பன்னிரண்டு வருடங்கள் பேணி வளர்த்தார். அதன்பின் என்ன நடந்தது தெரியுமா?

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் கண் விழிக்கவும், கல்யாணியிடம் பேச்சு அப்படியே மாறத் தொடங்கியது.

“என் தாத்தா… உங்க தாத்தா மாதிரி வழக்கமான தாத்தா கிடையாது. பெரிய யோகி” என்றாள்.

பரணியும், குருவும் புரிந்துகொண்டனர்.

நல்லவேளை…

கல்யாணி எச்சரித்தது பற்றி அவருக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

“என்னய்யா… பேசிகிட்டே இருந்தீங்க. அப்படிடே கண்ண மூடி தியானத்துல உக்காந்துட்டீங்களே…?” என்று பரணியும் கேட்டான்.

“அட.. ஆமால்ல…”

“நாங்க ரொம்ப நேரமா பார்த்துகிட்டிருக்கோம்”

“நல்லதுப்பா! நான் அப்படியே வெளிய சஞ்சார போயிட்டு வந்தேன்.”

“சஞ்சாரமா?”

“ஆமா… அதைப் பத்தியெல்லாம் உங்களுக்கு சொன்ன இப்ப எதுவும் புரியாது. நாளைக்கு காலையில நல்வா குளிச்சிட்டு அரச மரத்தடியை தேடிப் போய், அங்க இருக்கர பிள்ளையாருக்கு அருகம்புல் மாலை சாத்திட்டு அப்படியே பன்னிரண்டு பிரதட்சணம் செய்யுங்க. அப்புறமா அகத்திக்கீரையை வாங்கி, பசியோட இருக்கற பசு

மாட்டுக்கு கொடுங்க. பிறகு என்னைப் பார்க்க வாங்க. உங்களுக்கு நாள் ஒரு வேலை சொல்றேன். அதை நீங்க செய்யலாம்” என்றார்.

“இந்த பிள்ளையார்… அருகம்புல்… அகத்திக்கீரை… இதெல்லாம் எதுக்கு சாமி?”

“பிள்ளையார் பராசக்தியோட மந்திர வடிவம். யானையைப் பார்த்திருப்பே… அதுக்கு பாக்கற கண்ணு ரொம்ப சின்னது. ஆனா, கேக்கற காது ரொம்பவே பெருசு. அப்புறம் சுவாசிக்கற மூக்கே கை… நேரா நின்று பார்த்தா ‘ஓம்’ங்கற எழுத்தை பார்க்கற மாதிரியே இருக்கும்.

இந்த ‘ஓம்’ங்கற சப்தத்துக்குள்ள இருந்துதான் நீயும், நானும் பேசற பாஷையில இருந்து அமெரிக்காவுல ஒபாமா பேசற ஆங்கிலம், துபாய்ல ஷேக்குகளோட உருது, ஜெர்மன்ல பிரெஞ்சுன்னு உலகம் முழுக்க இப்ப பேசப்படற ரெண்டாயிரம் பாஷையும் பிறந்தது.

பேச முடிஞ்சதாலதான் மனிதனால வளர முடிஞ்சது. மற்ற உயிரினங்கள் கிட்ட இருந்து வேறுபடவும் முடிஞ்சது. இதே பேச்சு நல்லவிதமா அடங்கினா அமைதி. தப்பா அடங்கினா ஆரவாரம்!

இந்த அமைதி - ஆரவாரம் இரண்டுக்கும் அடிப் படையான சக்தி… கணபதி. ஆக, அவரைப் புரிஞ்சு வணங்கறவங்க மனசு நல்லவிதமா அடங்கி நிம்மதிங்கற அமைதி வசப்படும்.

அருகம்புல் அழியாத தாவரம். பெருகறதுல இதுக்கு இணை எதுவுமில்லை. இது பெருகுவது போலவே நமக்குள்ள ஞானம் பெருகணும்னுதான் இதை கணபதிக்கு சாத்தறோம்..

அகத்திக்கீரை, பசுவுக்கு மிகவும் பிடித்தமான சத்துள்ள உணவு. ஒரு பசுவோ ஆயிரம் தாய்க்கும், பத்தாயிரம் தேவர்களுக்கும் சமம். உலகத்துலயே கழிவுப் பொருளான சிறுநீரும், சாணியும்கூட மருந்தா இருக்கறது பசுகிட்ட மட்டும்தான். அப்படிப்பட்ட பசுவோட பசிக்கே உணவிடுகிற

புண்ணியம் ஒரு பெரிய வினைப்பாடு. அது மிகப் பெரிய தீவினைகளுக்கும் பரிகாரம்.

நாளையில இருந்து நீங்க செய்யப் போறது ஆத்ம யோகமான செயல்பாடுகள். அதுல உங்களுக்கு நல்ல அனுபவங்களும், ஞானமும் ஏற்படத்தான் இதையெல்லாம் செய்துட்டு வரச் சொன்னேன்" - என்று முடித்தார் சிவப்பிரகாசம்.

பரணிக்கு உண்மையில் பிரமிப்பாக இருந்தது. அவர் ஏதோ குருட்டாம்போக்காகத்தான் அதையெல்லாம் செய்யச் சொன்னதுபோல் இருந்தது. ஆனால், அதற்கு பின்னால் இவ்வளவு பொருள் செறிவா?

அமைதியாக விலகத் தொடங்கினான், குரு. கல்யாணி மட்டும் குழப்பமாகப் பார்த்தாள்.

சரண்யாவின் "பிளாட்"! அவளிடம் இன்னமும் படபடப்பு தெரிந்தது. அவள் தாயான மல்லிகா, அவளுக்கென கலந்து வந்திருந்த காப்பி ஆறிப்போய்விட்டிருந்தது. அண்ணன் ரவிக்குமாரும் கவனித்தபடி வந்தான்.

"என்ன… இன்னமும் பயம் நீங்கலையா?" என்று ஆரம்பித்தான்.

"ஆமாண்டா… படுபாவீங்க! எப்படி கட்டிப்போட்டு வெச்சிருக்காங்க தெரியுமா..? கையைப் பாரு. இன்னும் தழும்புங்க அப்படியே இருக்கு…"

- அவள் புலம்ப, ராஜதுரையும் வந்தார்.

"தைரியமா இரும்மா… இனி தனியா மட்டும் எங்கேயும் போகாதே! அந்த தயாளன் 'குரூப்'பைப் பிடிச்சு உன்னை கட்டிப் போட்ட மாதிரியே கட்டிப் போட்டு, உன் கையில 'பெல்ட்'டைக் கொடுத்து அவங்களை அடிச்சு துவம்சம் பண்ணினாத்தான் என் ஆத்திரம் அடங்கும்" என்றார்.

"விட்டா இவ கையில கத்திய கொடுத்து குத்துன்னு கூட சொல்வீங்க போல இருக்குதே…?"

“அப்படிச் செய்தாலும் ஒண்ணும் தப்பில்ல மல்லிகா. அவங்கள்லாம் உயிர் வாழறதுக்கே தகுது இல்லாதவங்க.”

“அவங்களைக் கேட்டா நம்மளைச் சொல்வாங்க. உங்கள கெஞ்சி கேட்டுக்கிறேன்-இனிமே ஒரு போலீஸ்காரரா வீட்ல எதையும் செய்யாதீங்க. யார் செஞ்ச புண்ணியமோ… அந்த பரணியால வந்த பிரச்சினை அவனாலயே தீர்ந்துடுச்சு.”

“போதும். சராசரி மனுசங்களா புலம்பாதீங்க. ஒரு போலீஸ்காரனா இருக்கறதுங்கறது பெருமைப்பட வேண்டிய விஷயம்….”

-ராஜதுரை நெஞ்சை நிமிருத்திக்கொண்டபோது, அவர் செல்போனில் அழைப்பொலி. அதில் காதைக் கொடுக்கவும் அந்த தயாளனே பேசினான்.

“என்ன இன்ஸ்பெக்டர்….. மகளை கண்டிபிடிச்சுட்டே போல இருக்கு…”

“ஓ… நீயா? என்னடா பயந்தாங்கொள்ளி…. ‘பப்ளிக் பூத்’ல இருந்து பேசறியா…? நம்பரைப் பார்த்தப்பவே நினைச்சேன்….”

“உன் கிட்ட சிக்கிக்க நான் என்ன கேனயனா…? எங்கே எப்ப தைரியத்த காட்டணும்னு எனக்கு தெரியும்.”

“மண்ணாங்கட்டி… கடைசியில நான் யாருங்கறதை காட்டினேன்ல….?”

“நீ எங்க காட்டினே… எல்லாம் அந்த பசங்க பண்ண வேலை! சும்மா சொல்லகூடாது… ரெண்டுபேரும் நல்லா துடியாத்தான் இருக்காங்க. மத்தபடி நீயும் உன் துறையும் வடிவேலு ‘காமேடி’ பண்ற மாதிரி – ‘லைசென்ஸ்’ இல்லாம போற வர்வங்ககிட்ட தான் உங்க வீரத்தைக் காட்டுவீங்க.”

“டேய், நீ அதிகம் பேசிற! உன் ஆள் அன் ‘கஸ்டடி’யில தான் இருக்கான். இப்ப போய் வைக்கறேன் பாரு கச்சரியை…”

“அதுக்கு பதில் ஆப்பு வைக்கறேன். ஆனா, அதை எப்படின்னு சொல்லமாட்டேன். எந்த பசங்களை வெச்சு நீ

உன் பொண்ணை கண்டுபிடிச்சியோ... அந்த பசங்க என்ன வெளிய வராமலா போயிடுவாங்க...?”

“என்ன... மிரட்றியா?”

“மிரட்டலை! இது சவால்.”

- மறுபக்கம் போன் ‘கட்’ ஆனது.

ராஜதுரை முகம் இருளத் தொடங்கியது.

கவனித்தபடி இருந்த மல்லிகா, ரவிக்குமார், சரண்யா மூவரும் அவரையே வெறித்தனர்.

“யாருங்க... திரும்பவும் அந்த தடிப் பசங்களா?”

“ஆமாம். திருட்டு நாயி.... சவால் விடுறான் என்கிட்டயே....”

“என்னனுப்பா...?”

“ரவி... நீ போய் அந்த ரெண்டு பேரையும் கொஞ்சம் கூட்டிகிட்டு வாயேன்....”

“எதுக்குப்பா?”

“சொன்னதைச் செய்” - அவர் அதட்டவும் மகன் விலகினான். அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அவர் எதிரில் பரணியும், குருவும் நின்றனர்.

“பரணி. குரு! உங்க ரெண்டு பேருக்கும் ஒரு முக்கியமான விஷயம். அந்த ‘கடத்தல்’ புள்ளிகள் இப்ப உங்க மேல குறி வெச்சிருக்காங்க. உங்க உதவியாலதான் நான் சரண்யாவை கண்டுபிடிச்சேன்னு அவங்களுக்கு தெரிஞ்சிருக்கு. அதனால உங்க மூலமா எனக்கு தொந்தரவு கொடுக்க தயாராயிட்டாங்க. அதனால நீங்க எங்கேயும் தனியா போகவே கூடாது.

மீறி போக நேர்ந்தா சொல்லுங்க.... எங்க போலீஸ் உங்களுக்கு காவலுக்கு வரும். தப்பித் தவறியும் எனக்கு தெரியாம மட்டும் எங்கேயும் போயிடாதீங்க. இது உங்களுக்கு மட்டுமில்ல.... உங்க அக்கா - தங்கை - அம்மா -

அப்பான்னு அவ்வளவு பேருக்கும்தான்.... ‘கிட்நாப்பர்ஸ்’ எப்பவுமே நல்லா ‘மிஸ்கைட்’ பண்ணுவாங்க. அதாவது, உங்கள குறி வெச்சிருக்கறதா சொல்லிட்டு, உங்க குடும்பத்துல உள்ளவங்களையும் கடத்தலாம். அதனால சொன்னேன்....”

- ராஜதுரை மிக எச்சரிக்கையாகவே பேசினார்.

சரண்யா, பரணியை மிகவும் பரிதாபமாக பார்த்தாள். ஆனால், பரணியிடம் எந்தப் படபடப்பும் இல்லை.

“சார்... நீங்க கவலைப்படாதீங்க. அவங்க வரட்டும் நான் பார்த்துக்கிறேன்.”

“என்னப்பா... சினிமா ‘ஹரீரோ’ மாதிரி பேசுற? சினிமாவுல மட்டும்தான் பத்து பேரை அடிக்கிறது சாத்தியம். ஆனா, சினிமா வில்லன்கள் விஷயம். நிஜத்துலயும் சாத்தியம். நீ ஜாக்கிரதையா இருக்கறது மட்டுமில்ல... த்திசாலித்தனமாவும் இருக்கணும்.”

“சரிங்க சார்”- என்று அரைக் கண்ணால் சரண்யாவைப் பார்த்தபடியே அங்கிருந்து அகன்றான் பரணி.

சரண்யாவின் பார்வையோ ‘வெரி ஸாரி’ என்று அவனிடம் கெஞ்சுவதுபோல் பார்த்தது!

வீட்டுக்குள் நுழைந்தவனை சகுந்தலா, சாந்தா, பிரபா என்று மூவரும் பிடித்துக்கொண்டனர். அவனும் ராஜதுரை - சொன்னதை அப்படியே சொன்னான். அதைக் கேட்டு சகுந்தலா மிரண்டுவிட்டாள்.

“ஹூம்... பட்ட கால்லயே படும். கெட்ட குடியே கெடும்.முதல்ல உனக்கு வேலை போச்சு. இப்ப உயிருக்கே ஆபத்து. நமக்கு மட்டும் ஏண்டா இப்படியெல்லாம் நடக்குது?” - என்று மூக்கைச் சிந்தினாள்.

“சும்மா இரும்மா... வேலை போய் வீட்ல ‘டி.வி’.யில ‘காமெடி சேனல்’ பார்த்துக் கிட்டு வாழ்க்கையே ‘காமெடி’யா ஆகிடுமோன்னு பயந்துக்கிட்டிருந்தேன். இப்பதான் எனக்கு சந்தோஷமா இருக்கு...”

“அட போடா. ஊருக்கெல்லாம் ஒரு வழின்னா - இவனுக்கு மட்டும் தனி வழி”

“ஆமாம்மா.... தனி வழியில போறதுதான் பெருமை....”

“வாயை மூடு. இப்ப சொல்றேன் - இந்த வீட்டை விட்டு நீ எதுக்காகவும் எங்கேயும் போகக்கூடாது.”

“அம்மா... சார், என்னை மட்டும் சொல்லல. உங்களுக்கும்தான் சொல்லி இருக்கார்”

“ஆமாண்டா! நாங்களும் எங்கேயும் போகப் போறதில்லை”

“அதுசரி... எத்தனை நாளைக்கு இப்படி?”

“எத்தனை நாளைக்குன்னா... அவன் பிடிபடுற வரைக்கும்.”

“அதுக்கு பல வருஷம் ஆகலாம்...”

“நாமளும் வீட்டுக்குள்ளேயே இருப்போம்.”

“அப்படியே வெளிய... ‘இது சென்ட்ரல் ஜெயிலின் கிளை’ன்னு ஒரு ‘போர்டு’ எழுதிப் போட்டுடலாமா?”

“என்ன கிண்டலா?”

பின்ன என்னம்மா... யாராவது மூட்டப்பூச்சிக்கு பயந்துகிட்டு வீட்டையேவா கொளுத்துவாங்க?”

“அப்ப வெளிய போய் அவங்க கையில சிக்குவேன்னு சொல்றியா?”

“நான் ஏன் சிக்கறேன்? அவன் சிக்குவான் பாரு!”

“இந்த அசட்டு தைரியமெல்லாம் வேண்டாம்டா”

“அட என்னம்மா நீ... சரண்யா இருக்கற இடத்தைச் சொன்ன சிவப்பிரகாசய்யா, இந்த திருட்டு நாய் இருக்கற இடத்தைத்தான் சொல்லாம போயிடுவாரா என்ன?”

- அவளையும் மீறி வெளிப்பட்ட உண்மை, அவர்கள்

மூவரையும் அப்படியே வாய் பிளக்க வைத்தது. குறிப்பாக சகுந்தலா. பரணியை அதிர்ச்சி குறையாதபடி பார்த்தாள். அவளுக்குள் இப்போது வீரமணி மாமா சொன்னது எல்லாமும் சேர்ந்து ஓடத் தொடங்கியது.

***

## 17

'பன்னிரண்டு வருடங்கள் வரை அந்த வில்வ மரங்களை பார்த்துப் பார்த்து வளர்த்த அவருக்கு தொழுநோய் குணமாகிவிடவில்லை. அது தன் தன்மைக்கு ஏற்ப வளரவே செய்தது. ஆனால், அவருக்கு எதனால் தனக்கு தொழுநோய் வந்தது என்பதற்கான காரணம் தெரியவந்தது. அவரது வீட்டுத் திண்ணையில் தங்கிய ஒரு நாடோடி சித்தர், அவர் உடம்பைப் பார்த்து வருத்தப்பட்டு ஜாதகத்தை எடுத்துவரச் சொல்லி பார்த்தார். அதில் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் காரணம் பளிச்சென்று தெரிந்தது.

அவரது தலைமுறையினர் பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டி விற்று வந்ததும், உடல் சுகத்துக்காக பிற உயிர்களை துளியும் நிரடலின்றி கொன்று தின்றதும் தெரிய வந்தது. இவர்களால் வதைபட்டு செத்துப் போன உயிர்களின் பெருமூச்சும் – வலியும் கால கதியில் பதிவாகி, பின் இவர்கள் பிறப்பெடுக்கும்போது வினையாய் உள் புகுந்து இவர்கள் உடல் 'செல்'களில் உயிர் இல்லாதபடி செய்து உடல் அழுகும் ஒரு தன்மை ஏற்பட்டிருக்கிறது.

அதே சமயம் அவ்வாறு தவறாக வாழ்ந்த நாளில் செய்த சில நற்செயல்கள், பக்தியை இப்பிறப்பில் இவருக்குள் உருவாக்கியது. பக்தி வரவுமே... விமோசனத்துக்கான வழியும் தெரியத் தொடங்கிவிட்டது. அதுதான் வில்வ மரங்களை நடச் செய்தது. அந்த மரங்கள் வளரவும், அதில் பல ஆயிரம் பறவைகள் தங்கி இளைப்பாறின. அதன் கீழே உள்ள நிழல் பலருக்கு இதமளித்தது. நாட்டில் பெய்த மழைக்குள் அந்த ஆயிரம் மரங்களின் பங்களிப்பும் இருந்தது. இப்படி நல்வினைகள் சொட்டுச் சொட்டாக நிரம்பும் நீர்க்குடம் போல நிரம்பவும் வீட்டுத் திண்ணைக்கே சித்தர் வந்தார். வந்தவர் காரணகாரியங்களையும் புட்டுப் புட்டு வைத்தார். அப்படியே ஒரு மூலிகை மருந்தை உட்கொள்ளச் சொன்னார். அந்த மருந்து, தொழு நோயை பெருமளவு கட்டுப்படுத்தியது.

அந்த சித்தர் அவரது தொழுநோயை ஒப்புக் கொண்டு அந்த நசிவை ஏற்றுக்கொள்ளவும் சொன்னார். இதனால் அடுத்த பிறப்பில் வஜ்ஜிரம் போல உடல் அமைந்து - நல்ல வாழ்க்கை வாழும் நிலை உருவாகும் என்றார். அப்படியே சில ஆண்டுகளில் குறிப்பிட்ட நாளில் அவருக்கு மரணம் நேர இருப்பதையும் கூறினார்.

அவரும் அந்த சித்தர் சொன்னபடியே நடக்கத் தொடங்கினார்!"

**- வன வியாசகம்**

மூவரும் ஸ்தம்பித்துவிட... பரணி சற்று திக்கு முக்காடத் தொடங்கினான். தன்னையும் அறியாமல் சிவப்பிரகாசம் பற்றி பேசிவிட்டதற்காக நொந்து கொள்ளவும் செய்தான்.

அவன் அம்மா சகுந்தலா மிக நெருங்கி வந்தாள். உற்றுப் பார்த்தாள். அவனோ அந்த பார்வையைத் தவிர்த்தான்.

“என்னப் பாருடா... என் முகத்தைப் பாரு... இப்ப நீ என்ன சொன்னே? எங்க திரும்பச் சொல்லு” – என்று அவனை நோண்டினாள்.

“அம்மா விடும்மா... எனக்கு எதுவும் ஆகாது. போய் நீ வேலைய பாரு.”

“அது அப்புறம்... ஆனா அந்த பெரியவர் சொன்னார்னு சொன்னியே...”

“ஆமா. அவர் தன் சக்தியால – சரண்யா கிட்டத்துலதான் இருக்கான்னார். நானும், குருவும் அதை வெச்சு அவ இருக்கற இடத்தை கண்டுபிடிச்சோம்.”

"அப்ப அவரைப் பத்தி வீரமணி அண்ணன் சொன்னதெல்லாம் உண்மையா?”

"ஆமாம்... உண்மைதான்.”

"நீ இதையெல்லாம் நம்பற ஆள் கிடையாதே?”

“இப்பக்கூட நான் முழுசா நம்பிடலை. எனக்குள்ள அவர் வரையில பல கேள்விகள் இருக்கு”

“இதோ பாரு... இந்த மாதிரி விஷயத்துல ஒண்ணு முழுசா நம்பணும். இல்லேன்னா அடியோடு விலகிடணும். ரெண்டும் கெட்டானா மட்டும் இருக்கவே கூடாது.”

“எனக்கு தெரியும்... எங்க எப்படி நடந்துக்கணும்னு. நீங்க அநாவசியமா என்னைப் பத்தி கவலைப்பட வேண்டாம்.”

“பரணி... வாடா! நானும் இப்ப உன் கூட வர்றேன். உன் அப்பா எப்ப திரும்பி வருவார்? உன் அக்கா அவ புருஷன் வீட்டுக்கு எப்ப வாழப் போவாள்னு அவர்கிட்ட நான் கேட்க பல விஷயங்கள் இருக்குடா...”

“ஆரம்பிச்சிட்டியா... ஒரு மனுஷன்கிட்ட கொஞ்சம் வித்தியாசமா ஒரு சக்தி இருக்குன்னா உடனேயே உங்க புத்தி இப்படித்தானே போகும்...?”

“இதுல என்னடா தப்பு இருக்கு? உடம்பு சரியில்லேன்னா டாக்டர் கிட்ட காட்டுற மாதிரிதானே இதுவும்.”

முதல்ல இவர் எப்படிங்கறதை தெரிஞ்சிகிட்ட பிறகு. நீ கேட்க நினைச்ச கேள்விகளை நானே அவர் கிட்ட கேட்கறதாத்தான் இருக்கேன். அதுவரை அமைதியா இருங்க போங்க...போய் வேலையப் பாருங்க” - என்று தற்காலிகமாக அவர்களைக் கத்தரித்தான்.

ஆனால், அவனுக்கு தெரியாமல் பெரியவர் சிவப்பிரகாசத்தைப் பார்க்க மனதுக்குள் தீர்மானித்துவிட்டாள் சகுந்தலா. அவன் அறைக்குள் சென்று டி.வி.யைப் போட்டுக் கொண்டு அமரவும்... மெல்ல வெளியேறி அவரை நோக்கி நடக்கத் தொடங்கினாள். சாந்தா மட்டும் அவள் எங்கே போகிறாள் என்பதை புரிந்துகொண்டாள்.

பெரியவர் அவருக்கான ‘பிளாட்’டில் இல்லை கல்யாணிதான் இருந்தாள். சகுந்தலா வரவும் ஆச்சரியப்பட்டாள்.

“பெரியவர் இல்லையாம்மா?”

“தாத்தா இருக்கார், மொட்டை மாடிக்கு போயிருக்கார்.”

"அப்படியா... சரி நான் மாடிக்கே போய் பாக்கறேன்" - என்று மெட்டை மாடி நோக்கிச் சென்றாள். அவள் போய் நின்றபோது, அந்த இளமாலை நேரத்தில் அவர் வைத்த மாமிச உணவை ஏற்றுக்கொள்ள ஒரு கழுகு பறந்து வந்து கொண்டிருந்தது.

சகுந்தலா அந்த காட்சியை ஆச்சரியத்தோடு பார்த்தாள். தட்டில் வைத்து, அவர் தந்த உணவை பெற்றுக் கொண்டு அதுவும் திரும்ப வானமேறியது. அவரும் திரும்பினார். எதிரில் சேலையின் முந்தானையை இழுத்துப் போர்த்தியபடி பவ்வியமாய் சகுந்தலா. அவர் பார்த்த நொடி கும்பிட்டாள். அவரும் ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக மெலிதாக சிரித்தார்.

“உங்கள பார்க்கத்தான் வந்தேன்....”

“எதிர்பார்த்தேன்.”

“நீங்க செய்த உதவியை பரணி சொன்னான். கேட்கவே சிலிர்ப்பா இருந்தது. முன்னாலேயே கேள்விப்பட்டிருக்கேன். இப்ப இங்க கண் எதிர்ல பார்த்துட்டேன்.”

“வந்த விஷயத்தைச் சொல்லுங்க”

“அந்த போலீஸ் அதிகாரி பொண்ணு கிடைச்சிட்டா. இனி என் மகனை, திருட்டுப் பசங்க எதாவது செய்துடுவாங்களோன்னு பயமா இருக்கு.”

“அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. கவலைப்பட வேண்டாம்.”

“ரொம்ப சந்தோஷம். அப்புறம் உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.”

“பேசுங்க...”

“என் புருஷன் இப்ப எங்கக்கூட இல்ல. அதே சமயம் அவர் காசியில இருக்கறதா கேள்விப்பட்டேன்’

“அவர் திரும்ப வரணுமா?”

“ஆமா… புருஷன் இருந்தும் இல்லாம வாழற கொடுமைய அனுபவிச்சுச் பார்த்தாதான் தெரியும்.”

“கவலைப்பட வேண்டாம். அவர் வரப்போற நாள் தூரத்துல இல்லை. உங்க பொண்ணும், தன் புருஷன் வீட் டுக்கு வாழப் போயிடுவா”

“ஐயோ… நான் கேக்கவே இல்ல. ஆனா, கேக்கலாம்னு என் மனசுல நினைச்சதை பளிச்சின்னு சொல்லிட்டீங்க”

“என் வரையில எதிர்ல வந்து நின்னா போதும். எதுவும் பேசத் தேவையில்லை.”

“பரணியும் வேலையத் தொலைச்சிட்டு நிக்கறான்.”

“தெரியும். அவனுக்கு இனிமேதான் நிறைய வேலை இருக்கு”

“எந்த குறையும் இல்லாம நல்லா இருப்பான்தானே?”

“கவலைப்பட வேண்டாம். என்கிட்ட வந்துட்டவனை உயரத்துக்கு கொண்டு, போக வேண்டியது என் பொறுப்பு”

“ரொம்ப சந்தோஷம். இப்பக்கூட நான் உங்கள வந்து பார்த்தது அவனுக்கு தெரியாது.”

“தெரியும். நீ போய் தைரியமா உன் வேலைய பாரு இனிமே உங்க குடும்பத்துக்கே நல்ல காலம்தான்.”

- சிவப்பிரகாசம் கையை உயர்த்தி ஆசீர்வதிப்பது போல சொன்னதைக் கேட்டு சகுந்தலா பூரித்துப் போனாள்.

“நீங்க சொன்ன அருள்வாக்குக்கு நான் எவ்வளவு காணிக்கை தரணும்?” - என்று கேட்டாள். பதிலுக்கு சிரித்தார். மனதுக்குள், ‘உன் மகனையே தந்துவிட்டாய் ஆனால், அது உனக்குத் தெரியாது’ என்று கூறிக்

கொண்டவர், “எனக்கு தேவைப்படும்போது நானே கேட்டு வாங்கிக்கிறேன். நீ இப்ப போகலாம்” என்றார்.

சகுந்தலாவும் சந்தோஷமாக அங்கிருந்து அகன்றாள்

மறுநாள்.

சிவப்பிரகாசம் சொன்ன பரிகாரத்தைச் செய்ய பரணி தயாரானான். குருவும் வந்து சேர்ந்துகொண்டான்.இருவரும் வெள்ளை வேட்டி - சட்டையில், நெற்றியில் விபூதியோடு புறப்பட்ட விதமே அலாதியாக இருந்தது. அவர்களை அப்படியொரு உடையில் அந்த ‘பிளாட்’டில் யாரும் பார்த்ததில்லை. இப்போது பார்த்த சிலரும் ஆச்சரியப்பட்டனர்.

பரணி தன் ‘மோட்டார் பைக்’கை நெருங்கி உதைத்து கிளம்பப் பார்த்தான். அப்போது எதிரில் சரண்யாவின் இருசக்கர வாகனம் நின்றபடி இருந்தது. ‘மெக்கானிக்’ கொண்டு வந்து நிறுத்திவிட்டு போயிருக்கிறான். சரண்யாவும் இவனைப் பார்த்துவிட்டு ஜன்னல் அருகே நின்றபடி "ஹாய்” என்று அழைத்தாள்.

திரும்பினான்.

“வண்டி வந்துடிச்சி…”

“அதான் பாத்தாலே தெரியுதே! ஓட்டிப் பாத்துட்டீங்களா?”

“இல்லை. அப்பாதான் வெளிய போகவே கூடாதுன்னு சொல்லிட்டாரே?”

“எங்களையும்தான் சொன்னார். ஆனா, நாங்க கிளம்பிட்டோமே?”

“பார்த்து… ஜாக்கிரதையா போயிட்டு வாங்க”

“பிரச்சினையே இல்லை. என் மேல கைவெச்சா அவங்களுக்குத்தான் ஏழரை…”

“ஏழரையா… அப்படின்னா?”

“ஏழரைன்னா தெரியாதா?”

அவள் உதட்டைச் சுழித்து சிரித்தபடி ‘தெரியாது’ என்பது போல தலையை அசைத்தாள்.

“சரி… அப்புறமா வந்து ஏழரைக்கு விளக்கம் கொடுக்றேன். இப்ப சில முக்கிய வேலைகள் இருக்கு” – சிரித்தபடி ‘பைக்’கை கிளப்பினான். சரண்யா அவன் மறையும் வரை பார்த்தபடி நின்றாள். ‘பைக்’கிடம் நல்ல சீற்றம். பின்னால் குரு

“பரணி… உன் ஆள் உன் மேல ரொம்பவே அக்கறையா இருக்காடா”

“பாத்து போயிட்டு வாங்கன்னு சொன்னதை வெச்சு சொல்றியா?”

“அதை வெச்சு மட்டுமில்ல… கண்ணவிட்டு நீ மறையற வரை ஜன்னலைவிட்டு நகரலை”

“அப்படியா…?”

“என்ன அப்படியான்னு… எதுவும் தெரியாத மாதிரி எங்கிட்டயே கேக்கறே.”

“குரு… எனக்கென்னவோ நம்ப வாழ்க்கை ரொம்பவே மாறிட்ட மாதிரி ஒரு ‘பீலிங்’. நீயே யோசிச்சு பாரு. நாம எவ்வளவோ ஊரைச் சுத்தி இருக்கோம். ஆனா, ஒரு நாள் கோவிலுக்குன்னு போயிருக்கோமா?”

“ஆமால்ல…?”

“என்ன ஆமால்ல…! பெரியவர் நம்மளை நமக்கே தெரியாம கோமாளி ஆக்கிடுவாரோ?”

“வேண்டாம் பரணி… அப்புறம் அவர் நாம இப்படி நினைச்சி பேசினதை எல்லாம் அப்படியே சொல்லி நமக்கு அதிர்ச்சி தரப் போறாரு”

“அதுவும் சரிதான்” - என்றபடி அரசமரத்தடி பிள்ளையார்

கோவில் ஒன்றின் முன் ‘பைக்’கை நிறுத்தினான் பரணி அங்கேயே அருகம்புல் மாலை கிடைத்தது ஆனால், விலைதான் அதிகம். ‘புல் கெட்ட கேடு! போனாள் போகிறது’ என்று வாங்கிப் போட்டான். பின் அகத்தி கீரை... கீரை விற்பவரே பசு மாட்டையும் கட்டியிருந்தார் அவர் வரையில் பசு மாட்டுக்கு தீனி போட்டது போலவும் ஆயிற்று - புண்ணியத்தையும் வருபவர்களுக்கு கொடுக்க முடிகிறது.

குரு அவர் முன் நூறு ரூபாயை நீட்ட. “சில்லரை இல்லை” என்றார். வாங்கி வருவதாக கூறி விலகினான் குரு. பரணி மட்டும் தன் வசம் இருந்த கீரையை பசுமாட்டுக்கு கொடுக்கத் தொடங்கினான். அதே நேரம் சில்லரையை எண்ணிக்கொண்டு நடந்து வந்த குருவை ஒருவன் வந்து வாயைப் பொத்த... மற்றொருவன் அப்படியே தூக்க... அதி வேகமாய் அருகில் வந்து நின்றது ஆம்னிவேன்!

***

# 18

‘அந்த மனிதர் இப்போது தனக்கான தொழு நோயை எண்ணி கலங்கவில்லை. அது ஒரு அளவுடன் நின்றுவிட்டது. உடம்பில் பெரிய குணப்பாடு ஏற்படாவிட்டாலும், அவர் மனதுக்குள் நிறைய குணப்பாடுகள்! பார்பதற்கு ஒன்றாக தெரியும் ஒரு மனிதன் உண்மையில் உடல், உள்ளம் என்று இரண்டாக இருப்பவன். உடலுக்கு மருந்தாக மூலிகைகள் அமைவதைப் போல் உள்ளமாகிய அமைகின்றன. வலிமையான எண்ணங்கள் உருவாக அறிவுக்கு தெளிவு முக்கியம். ஆறிவுத் தெளிவுக்கு ஞானம் முக்கியம்.

நாம் எதை செய்தாலும், நம் மனதுக்கு தெரியாமல் செய்யவே முடியாது. கடவுளைக்கூட ஏமாற்றி விடலாம். ஆனால், ஒருவன் தன்னையே ஏமாற்றிக் கொள்ள மட்டும் முடியவே முடியாது. இதுதான் ஞானத்தின் முதல்படி. இதன் அடிப்படையில் பார்த்தால் பல உண்மைகள் தெரியவரும். அதன்படி நமக்கு ஏற்படும் நன்மை - தீமை அனைத்துக்கும் நாமே பொறுப்பாகிறோம்.

‘ஒரு சக்தி அல்லது கடவுள் நம்மை ஆட்டி வைக்கிறார். நாம் ஆடுகிறோம்’ என்பதெல்லாம் ஒரு சில கோணத்தில் பொருந்தும் உண்மை மட்டுமே! எல்லா கோணங்களுக்கும் அது பொருந்தாது. நம்மை ஆட்டிப் படைத்து. கடவுளுக்கு ஆக வேண்டியதும் எதுவுமில்லை. கோடானு கோடிபேரை ஒரு கடவுளால் ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஆட்டிப் படைக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படிக் கூறுவதால் அவருக்கும், நம் வாழ்வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று பொருளில்லை. ஆழமாக யோசித்தால், இந்த உலகில் உள்ள நன்மை-தீமை என்னும் இரண்டுக்கும் இடையில் நாம் வாழ்ந்துகொண்டிருப்பது புரியும். இதில் தீமை பக்கம் அறவே நெருங்காமல், நன்மையின் பக்கமே நின்று வாழ்வதே வெற்றிகரமான வாழ்வாகும். அப்படி வாழ உதவும் சக்திதான் கடவுள். ஆனால், நாம் அந்த சக்தியை வேண்டிப் பெறாமல், தீயதன்

பக்கமும் சென்றதன் விளைவுதான் நம் வாழ்வில் நமக்கு ஏற்படும் துன்பங்களுக்கு காரணமாக அமைகின்றன. இது நாமாக வரவழைத்துக் கொண்டது, அனுபவித்து தீர்த்துவிடுவதே ஞானம், அந்த ஞானம், வில்வ மரங்களை நட்டு வளர்த்த அந்த மனிதருக்கு வந்ததுதான் விந்தை!'

**- வன வியாசம்**

பசு மாட்டுக்கு அகத்திக்கீரை கொடுத்துக்கொண்டிருந்த பரணி, கீரையைக் கொடுத்து முடித்துவிட்டு திரும்பி பார்த்தான். குருவை காணவில்லை. பரணியின் பார்வை நாலாப்புறமும் தேடத் தொடங்கியது. அப்போது பரணியின் செல்டோனில் அழைப்பு. குருதான் பேசினான்.

“டேய் எங்கடா போயிட்டே?”

“எங்கேயும் போகலை... சில்லரை மாத்த வந்த என்னை தூக்கிட்டாங்கடா.

“என்னடா சொல்றே?”

“ஆமாண்டா! அவங்கதான் இப்ப உன்கூட பேசவும் சொன்னாங்க.” - குரு சொல்லி முடிக்க, வேறு ஒருவன் இப்போது அதே போனில் பேசினான்.

“என்ன ஹீரோ... அந்த ராஜதுரைகிட்ட எங்களைப் பிடிச்சு கொடுத்தேல்ல. எங்கே... 'தில்’ இருந்தா இப்ப உன் நண்பனை வந்து பிடிச்சிட்டு போ பார்க்கலாம்.”

“அடப் பாவிங்களா... உங்களுக்கு நாங்க என்னடா கெடுதல் செய்தோம்?”

“என்ன கெடுதல் செய்தியா? அந்த புள்ளையை வெச்சு, எங்க ஆட்களை வெளிய எடுக்க இருந்தோம். எல்லாம் உன்னாலதான்டா கெட்டுச்சு”

“இதோ பாரு... உனக்கும், அந்த போலீஸ் ஆபீசருக்குமான சண்டையில எங்கள இழுக்காதே! என்கூட வந்தப்ப நான் அந்த பெண்ணை நீங்க கடத்தினீங்க. நான் தொலைச்ச பெண்ணை நானே கண்டுபிடிச்சு தர்றதுதானே நியாயம்?"

"அப்படியா... அப்படின்னா அப்ப கண்டுபிடிச்ச மாதிரியே இப்பவும் கண்டுபிடிச்சுக்கோ. முடியலேன்னா உள்ளே இருக்கற எங்க ஆட்களை வெளிய விடச் சொல். உன் நண்பன் முழுசா வீடு வந்து சேருவான். இல்லைன்னா உன்னோட வீட்டுக்கு தினம் ஒரு 'பார்சல்' வரும். அதுல தினம் ஒரு விரல் பரிசா இருக்கும். உன் நண்பனை மொட்டைக்கையா - நொண்டியா பார்க்க விருப்பமான்னு யோசிச்சுக்கோ'

செல்போன் 'கட்' ஆனது பரணியிடமும் ஒரு முடிவு.

அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் பரணி, சிவப்பிரகாசம் முன்னால்தான் இருந்தான்.

"ஐயா... தப்பு நடந்துடுச்சி..."

"தெரியும்."

"தெரியுமா... என்ன சொல்றீங்க?"

"காலையில எழுந்ததுல இருந்தே உங்க ஞாபகம்தான் என் திருஷ்டியில. உங்க ரெண்டு பேரை தவிர எதுக்குமே இடமில்லை. அப்படி இருந்த நிலையில அதோ என் வீட்டு கண்ணாடித் தொட்டியில் உள்ள மீன்களை உத்து பாத்துகிட்டு இருந்தேன். அதுல ஒண்ணு அதோ துடிச்சிகிட்டு இருக்குது பாரு..." - என்று எதிரே சுட்டிக் காண்பித்தார் சிவப்பிரகாசம். அதைப் பார்த்த பரணிக்கு 'பகீர்' என்றது.

"ஐயா அப்ப குருவும்." - என்று கேட்க முற்பட்டவனின் வாயை அடைத்தவர், "அவனுக்கு ஆபத்துன்னு தான் இந்த மீன் சொல்லி இருக்கு. இதோட உயிரும், உன் நண்பன் உயிரும் ஒண்ணு கிடையாது. இப்படி... சூழ் நிலையால நடப்பதை தெரிஞ்சிக்க முயற்சிக்கிறது ஒரு விதம். இது ஒண்ணும் அதிசயம் கிடையாது. நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் புறத்துல இருக்கற பல விஷயங்களோடு தொடர்பு உண்டு. எல்லாமே அலைவரிசையில் இயங்கறதாலே ஒரு அலை போய் இன்னொரு அலைமேல மோதும் போது ஏற்படுற விளைவுகளைத்தான் பார்த்து

தெரிஞ்சிக்கிறோம். இதை 'சகுனம்'னு சொல்வாங்க சகுனம்னா உடனேயே அதை மூடநம்பிக்கைன்னும் சொல்லிடுவாங்க. அப்படிச் சொல்றவன்தான் மூடன் சகுனத்தை சரியா உணர்ந்து சொல்லத் தெரியணும் சகுனங்கறது மாயமில்லை - மந்திரமில்லை. அது ஒரு விஞ்ஞானம்.

நீ ஒரு நல்ல காரியத்துக்காக புறப்படுறே. அப்ப ஒரு முடவன் எதிரில் வர்றான்னா அந்த நல்ல காரியம் நடக்காதுன்னு அர்த்தம். அந்த காரியம் நடக்கற காரியமா இருந்தா எதிரில் வரும் முடவனை நீ பார்க்கவேமாட்டே தெருவில் ஆயிரம் பேர் போறாங்க. எல்லாரையுமா நாம கவனிக்கிறோம்?"

"ஐயா. இப்ப எதுக்கு இந்த விளக்கமெல்லாம்? இதை நான் பிறகு தெரிஞ்சிக்கிறேன். உங்க மனோசக்தியால... குரு இப்ப எங்க இருக்கான்னு மட்டும் சொல்லுங்க. அவனை எதிரிங்க கடத்திட்டதை இன்ஸ்பெக்டர் ராஜதுரை ஐய்யாகிட்டக்கூட சொல்லல. உங்ககிட்டதான் நேரா வந்துருக்கேன். குரு அவங்க கையில சிக்கினதும், ஒரு விதத்துல நல்லதே. அந்த கூட்டத்தையே பிடிச்சாதான் நீங்க சொல்லப் போற வேலைகளை நாங்க செய்ய முடியும்."

"தெரியும் பரணி... கவலைப்படாதே. எனக்கு பத்து நிமிஷம் அவகாசம் கொடு. உன் நண்பன் இருக்கிற இடத்தை சொல்றேன்" - என்ற சிவப்பிரகாசம் அப்படியே கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தார். பார்த்துக் கொண்டே இருந்த கல்யாணியின் கண்களில் கண்ணீர் திரண்டிருந்தது. ஜாடை காட்டி அவனை மாடிக்கு அழைத்தவளாக முன்னால் சென்றாள் அவள்.

மொட்டைமாடியில் காயப் போட்டிருந்த துணிகள், ஆடிக்காற்றில் அல்லாடிக்கொண்டிருந்தன. காலை பதினொரு மணிப் பொழுதுக்கான சூரியன், மேகங்களுக்கு இடையில் தெரிந்துகொண்டிருந்தான். தொலைவில் ஒரு வீட்டு விசேஷ நிமித்தம் கட்டப்பட்டிருந்த 'லவுட் ஸ்பீக்கரில்' – "எங்கே அவள். என்றே மனம்.' எனும் அந்தக் கால எம்.ஜி.ஆர். பாட்டு ஒலித்தது. தெருவில் தள்ளுவண்டி

வில் ஒருவன், இஸ்திரி போட்டுக்கொண்டிருந்தான்.

பரணி ஆரம்பித்தான்.

“என்ன கல்யாணி.?”

“ஏன் இப்படி ஆபத்தான விஷயங்களைத் தேடிப் போறீங்க?”

“இதை சொல்லத்தான் கூப்பிட்டியா?”

“எனக்கு ரொம்ப பயமா இருக்கு. அவரை அவங்க ஏதாவது பண்ணிட்டா என்ன பண்றது?”

“பயப்படாதே! அதான் உன் தாத்தா, இப்ப இடத்தை சொல்லிட்டா நான் கண்டுபிடிச்சிடுவேனே?”

“தாத்தாவால் பளிச்சின்னு சொல்ல முடியாது. அவர் சொல்றதை வெச்சு கண்டுபிடிக்கறது கஷ்டம். பல போலீஸ்காரங்க, ஒளிஞ்சிருக்கிற கொலைகாரங்களைப் பிடிக்க தாத்தாகிட்ட வந்து பேசி... தாத்தாவும் சொல்லி இருக்கார். ஆனா, கொலைகாரங்களை போலீஸ் பிடிச்சதே இல்ல”

“நீ இப்ப என்ன சொல்ல வர்றே?”

“இன்ஸ்பெக்டர்கிட்டேயும் நீங்க சொல்லுங்க. அவருக்கு எதுவும் ஆகிடக்கூடாது.”

“உன் காதல் எனக்குப் புரியுது. ஆமா... உன் தாத்தா மேல உனக்கே மதிப்போ - நம்பிக்கையோ கிடையாதா?”

“அப்படி இல்லை. அவர் விஷயத்தை புரிஞ்சிக்க முடியாது. ரொம்ப குருட்டாம்போக்கா இருக்கும். அப்புறம் தாத்தா ஆசைப்படுற விஷயம் உலகத்துல இதுவரை நடந்ததே இல்லை”

“அது என்னன்னு சொல்லு. அப்புறம் அது நடந்திருக்கா இல்லையான்னு நான் சொல்றேன்.”

“தாத்தா ஒரு ஐநூறு வருஷமாவது வாழனும்னு ஆசைப்படுறார்”

“அப்புறம்….?”

“உங்களைப் போல வாலிபனாக விரும்பறாரு”

“ஓ…. இப்படியும் ஒரு விருப்பமா… அப்புறம்?”

“கூடுவிட்ட கூடு பாயவும் விரும்பறார்.”

“அவ்வளவுதானா. இன்னும் இருக்கா?”

“இவ்வளவுதான். இதெல்லாம் சாத்தியமே இல்லைன்னு நான் நினைக்கிறேன்.”

“நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.”

"அப்ப நீங்க எப்படி இவரோடு சேர்ந்து செயல்பட முடியும்?”

“வாஸ்தவம்தான்! ஆனா, உன் தாத்தாகிட்ட சில ஆச்சரியமான விஷயங்களும் இருக்கே”

“ஆனா, அவர் ரொம்ப ஆபத்தானவர். இப்பகூட உங்களை என்ன செய்யச் சொல்லப் போறாருன்னு எனக்கு தெரியும்.”

“அது என்னன்னும் சொல்லிடு”

“ஐம்பது அறுபது வருஷத்துக்கு முந்தி ஒரு சித்தர், திருப்பரங்குன்றம் பக்கம் இருந்திருக்காரு. அவர் ஒரு நாள் ஜீவசமாதி ஆகிட்டாரு. காலப்போக்குல அந்த சமாதி 556 இருக்கற இடம் தெரியாம அது மேலேயே கட்டடங்கள் வந்துடுச்சு”

“அதனால….?”

“அந்த கட்டடம் எதுன்னு கண்டுபிடிச்சு…. அங்கே பூமியில் இருக்கிற ஜீவசமாதியைத் தோண்டி, அந்த சமாதியில இருக்கிற ஜெபமாலை - ஏடு ரசமணின்னு அந்த சித்தர் வெச்சிருந்ததை எல்லாம் எடுத்துட்டு வந்து தர வேண்டியதுதான் உங்க வேலை”

“இப்ப அதெல்லாம் இவருக்கு எதுக்கு?”

“அந்த ரசமணி இருந்தா, மிருகங்கள் நம்மை எதுவும் செய்யாது. அந்த ஜெபமாலை இருந்தா, சித்தர்களை சுலபமா தரிசனம் பண்ணலாம். ஏட்டு கட்டுக்குள்ள நித்திய இளமைக்கு என்ன பண்ணணும், எந்த மூலிகை சாப்பிடணுங்கற ரகசியங்கள் ஒளிஞ்சிருக்கு” .

“இந்த மூணு விஷயங்களை கையில வெச்சுக்கிட்டிருந்த சித்தர் மட்டும் தொடர்ந்து வாழாம சமாதி ஆகிட்டாரா. வேடிக்கையா இருக்கே?”

“இதைப் பத்தி நான் கேட்டா. தாத்தா கோபப்படுவார். சித்தர் சாமிங்க வாலிபத்தை பெருசா நினைக்க மாட்டாங்களாம். அடுத்து, அவங்க நினைச்சப்போ நினைச்ச சித்தரை தரிசனம் பண்ணிக்கிட்டுதான் இருந்தாங்களாம். அந்த சித்தர் கூடு விட்டு கூடு பாய்வாராம்.”

“சுவாரசியமா இருக்கே. இதோ பாரு கல்யாணி. நான் இப்ப வாழ்க்கை மேல வெறுப்பும், கோபமுமா இருக்கற ஒருத்தன். உங்க தாத்தா விஷயம் உண்மையோ – பொய்யோ... எனக்கு அதுல ஒரு சுவாரசியம் இருக்கு. அதே நேரம் உங்க தாத்தாவை நூறு சதவிகிதம் ஏமாத்துப் பேர்வழின்னு என்னால நினைக்க முடியலை.

அப்படி நான் நினைக்கும்போது, நிச்சயம் விலகிடுவேன். நீ கவலைப்படாதே. இப்ப உன் தாத்தா என்ன சொல்றாருன்னு பார்த்து முதல்ல குருவை கண்டுபிடிக்கிறேன் அப்புறமா நீ சொல்ற அந்த ஜீவ சமாதி விஷயத்துக்கும் வர்றேன். இப்ப நேரமில்லை.... பிறகு பேசுவோம்.”

- பரணி அப்போதைக்கு பேச்சை முடித்துக்கொண்டு கீழே இறங்கினான். சிவப்பிரகாசம் எதிரில் போட் நின்றான். அவரும் கண்களைத் திறந்தார்.

“பரணி.... நான் சொல்ற அடையாளங்களை நல்லா குறிச்சுக்கோ. தரையெல்லாம் கடல் மணல் - அதனால கடலோரமாதான் குரு இருக்கான். அதே கடலோரமா உயர்ந்த முருகன் கோவில் கேபுரம் தெரியுது. அது நிச்சயம் திருச்செந்தூர் கோயில் கோபுரம்னு நினைக்கிறேன் அனேகமா ஆறுமுகனேரிக்கும் திருச்செந்தூருக்கும்

நடுவுவ இந்த இடம் இருக்கணும். கூடவே சவுக்கு மரங்கள் நிறைய தெரியுது. ஆகையால, கடலோர சவுக்குக் காட்டுக்குள்ள இருக்கணும். அந்த வீடு மேல சிலுவை குறி தெரியுது. ஆனா அங்க தெய்வீக அதிர்வு கொஞ்சமும் இல்லை. அதனால அது பழைய 'சர்ச்'சா இருக்கலாம். அப்புறம் தெற்கு பக்கம் காட்டுது. அங்க ஒரு வேப்ப மரம் இருக்குது. இதுதான் திருஷ்டியில் எனக்கு தெரிஞ்ச விஷயம். குருவை கட்டிப் போட்டிருக்காங்க. அவன் பேச முடியாதபடி இருக்கான். உயிருக்கு ஆபத்து இல்லை."

- சிவப்பிரகாசம் சொல்லி முடித்தார். பரணியும் புறப்பட்டான். "ஒரு நிமிஷம் இரு" என்று தடுத்தவர், உள்ளே போய் கோலிக்குண்டு போல் ஒரு ரசமணியை எடுத்து வந்தார்.

"இதை 'பாக்கெட்'ல வெச்சுக்கோ. உன் நோக்கத்தை இது ஈடேத்திக் கொடுக்கும்" என்றார். அவனும் வாங்கிக் கொண்டு புறப்பட்டான்!

***

# 19

விருட்சங்கள் தங்கள் வளர்ச்சிக்கு காரணமானவர்களுக்கு பெரிதும் அருளும் தன்மை உடையதாகும். விருட்சங்களை நட்டு அதன் வளர்ச்சிக்கு துணை நிற்பது என்பது மிகப்பெரிய பரிகாரமும்கூட! 'விருட்ச சாஸ்திரம்' இம்மட்டில் விண்ணில் உள்ள கோள்களையும், நட்சத்திர ராசி மண்டலங்களையும் பட்டியல் போட்டு எந்த விருட்சம் எந்த ராசியோடும், நட்சத்திரத்தோடும் தொடர்புடையது என்று கூறுகிறது.

ராசிக் கட்டங்களில் பன்னிரண்டு ராசிக் கட்டங்கள் உள்ளன. இந்த ராசிக் கட்டங்களுக்குள் இருபத்தியேழு நட்சத்திரங்கள் உள்ளன. ராசிக் கட்டங்களில் முதல் ராசியாக மேஷ ராசி கருதப்படுகிறது. இந்த ராசியின் குணத்தை பிரதிபலிக்கும் ஒரு விருட்சமாக சந்தன வேங்கை என்னும் மரம் விளங்குகிறது. அடுத்த ராசியான ரிஷப ராசிக்குரிய மரம் 'எழிலைப் பாலை' என்பதாகும். மிதுனத்துக்கு பலா, கடகத்துக்கு பலாசு, சிம்மத்துக்கு பாதிரி மரம், கன்னி ராசிக்கு மாமரம், துலாத்துக்கு மகிழ மரம், விருச்சிகத்துக்கு கருங்காலி, தனுசுக்கு அரச மரம், மகரத்துக்கு தோதகத்தி, கும்பத்துக்கு வன்னி, மீனத்துக்கு ஆலம் என்று ராசிக்குரிய மரங்களை 'விருட்ச சாஸ்திரம்' பட்டியல் போட்டுள்ளது.

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் வீட்டைவிட்டு வெளியே வந்த பரணியின் பார்வை, எதிரில் உள்ள குருவின் 'பிளாட்'டை தான் பார்த்தது. அவன் அம்மா வேலைக்குப் போய் விட்டிருந்தாள். எனவே, கதவில் பூட்டு தொங்கியது. நல்ல வேளை... இப்போது வீட்டில் இருந்தால்... "எங்கே குரு?" என்று கேட்பாள். ஒன்று, உண்மையைச் சொல்ல வேண்டும். இல்லை. பொய்யைச் சொல்ல வேண்டும். எதைச் சொன்னாலும் அவஸ்தைதான்!

அப்படியே கீழ் இறங்கியவன், தன் வீட்டுக்குள் நுழைந்து மேசை 'டிராயரைத்' திறந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டான். அவன் தாயான சகுந்தலா, சமையல்

கட்டில் இருக்க - அக்கா குளியலறையில் இருக்க - தங்கை கல்லூரிக்கு போயிருக்க, இங்கே இவர்களிடம் நடந்துவிட்ட விபரீதத்தைப் பேச அவசியமற்ற ஒரு சூழ்நிலை.

அடுத்து கீழே சரண்யாவின் ‘பிளாட்’ அருகே வரவும் ‘ஹாலில்’ அவனுக்காகவே காத்திருந்ததுபோல ஏறிட்டாள் அவள்.

“அப்பா இல்லையா?” என்று கேட்டான்.

“ஸ்டேஷனுக்கு போயிட்டார். ஏன்… அவரைப் பார்க்கணுமா?”

“இல்ல… சும்மாதான் கேட்டேன். சரி…. வரேன்” என்று புறப்பட்டவனை, “பார்த்துப் போங்க. உங்களுக்கு பாதுகாப்பு போட்டிருக்கு. கண்ணாயிரம் அங்கிள்தான் உங்க பாதுகாப்பு” என்று வெளியே கை காட்டினாள். சாதாரண உடையில் ஒரு போலீஸ்காரர் தெரிந்தார். அவரைப் பார்க்க கோபம்தான் வந்தது. ‘கோவிலுக்குப் போகும்போது, இவர் எங்கே போனாரோ?’ என்று கேட்கத் தோன்றியது.

“சரி வரேன்…” என்றவனிடம் நிறைய பேச விரும்பியவள் போல பார்த்தாள். அப்படியே, "பரணி… இன்னிக்கு இரவு கொஞ்சம் மொட்டை மாடியில மனம்விட்டுப் பேசுவோமா?” - என்று கேட்டாள்.

“பார்ப்போம்” - என்கிற ஒரு வார்த்தை பதிலோடு, அந்த கண்ணாயிரத்தை நோக்கித்தான் சென்றான். அவர் சிரித்தார்.

“என்ன தம்பி.. வெளிய கிளம்பிட்டீங்களா?” என்றும் கேட்டார்

“ஆமா! ஆனா, நீங்க எனக்கு துணையா வரத் தேவையில்லை. ஏன்னா… எது நடக்கக் கூடாதோ அது நடந்து முடிஞ்சிடிச்சு” என்றான்.

அவர் முகத்தில் மெல்லிய அதிர்ச்சி.

“என்ன தம்பி சொல்றீங்க?"

“என் நண்பன் குருவை கடத்திட்டாங்க.”

"ஐயோடா… எப்போ?

“இந்த கேள்வியை ராஜதுரை சார் உங்ககிட்ட கேட்டா என்ன சொல்வீங்க?”

"நான் "டூட்டி’க்கு வந்து அப்படி எதுவும் நடக்கலைன்னு சொல்வேன்.”

“உங்க ‘டியூட்டி டைம்’ எப்ப?”

“இந்த விஷயத்துல ‘டைம்’ எல்லாம் கிடையாது தம்பி. நான் சாப்பிட போனப்போ நீங்க வெளியே போயிருக்கணும். அப்பதான் தப்பு நடந்துருக்கணும்.”

“ம்… டீக்கடையும், ஒட்டலும் உங்கள நம்பிதான் இருக்குன்னு எனக்கும் தெரியும். அதான் வெட்டும் குத்தும் சர்வசாதாரணமா போச்சு. சம்பிரதாயத்துக்கு ஒரு மோப்ப நாய் வரும். ஆனா, அது ஒரு குற்றவாளியை கண்டுபிடிச்சு நான் பார்க்கல. பெரிய பெரிய ‘வி.ஐ.பி.’ங்க விஷயத்துலயே ஒரு துப்பும் துலங்கல. நானெல்லாம் சாமானியன் என்னை எல்லாம் கடத்தினா நீங்க ‘கிளுகிளு’ன்னுதான் கண்டுபிடிப்பீங்க”

- பரணி வெறுப்பும், கிண்டலுமாக பேசியபடியே ‘பைக்’கில் ஏறி அதை கிளப்பினான். அவரும் பதற்றமாக அவனைப் பின்தொடர்ந்தார்.

போலீஸ் நிலையம்!

நடந்ததை ராஜதுரையிடம் சொல்லி முடிக்க, அவரிடம் நடுநெற்றியில் ஒரு குறுகுறுப்பு.

"அந்த தயாளன் ரொம்பவே ‘ஓவரா’ போய்க்கிட்டு இருக்கான்… இப்ப என்ன பண்றது? - என்று யோசிக்க கண்ணாயிரமும் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்தில், “என்ன கண்ணாயிரம். காத்தால ‘டிபன்’ சாப்பிட்டாச்சா? இப்ப மத்தியானம் ‘புல் மீல்ஸ்’ எந்த ஒட்டல்ல? சைவமா…. அசைவமா?” என்று கோபமும்,

கிண்டலு இழையோட கேட்டார். கண்ணாயிரம் தலை தாழ்ந்தது.

“சார்… இவர் எங்களை பின் தொடர்ந்து வந்திருதாலும் பியோஜனமில்லை. இவரை ஒரு தட்டு தட்டிட்டு தூக்கிட்டு போயிருப்பாங்க. இப்ப பிரச்சினை இவர் இவ்வு அந்த தயாளன் ‘குரூப்'தான். அவங்க இருக்கற இடம் தொடர்பா எனக்கு சில தகவல் கிடைச்சிருக்கு. நான் அந்த இடத்தை தேடிப் போய் பார்த்து எல்லாத்தையும் உறுதி செய்துட்டு, உங்களுக்கு போன் பண்றேன். அப்ப நீங்க உங்க கூட்டத்தோட வந்து கோழி அமுக்கற மாதிரி அமுக்கினா போதும்” என்றான் பரணி.

“எப்படி தகவல் கிடைச்சது?”- ராஜதுரை கேட்டார்.

“எல்லாத்தையும் நான் அப்புறம் சொல்றேன். முதல்ல இப்ப புறப்படுறேன்.”

“பரணி… உன்னை தனியா அனுப்ப எனக்கு பயமா இருக்கு”

“நான் இப்ப தனியாதான் சார் போகணும். சொல்லப் போனா என்னை அவங்க ஆட்கள் கவனிச்சிக்கிட்டேகூட இருக்கலாம். இப்ப நான் உள்ளே வந்தது வரை வெளியே நின்னு பார்த்துக்கிட்டு இருப்பாங்க. அதனால வந்த வழியா போக விரும்பலை. இந்த ஸ்டேஷனோட பின் பக்கம் ஏதாவது வழி இருக்கா?”

“இருக்கு… காம்பவுண்டு வாசல் ஏறி குதிச்சா ஒரு காலி ‘பிளாட்’, அதன் முடிவுல அடுத்தத் தெரு.”

“அது போதும்! நான் இங்க உங்க பாதுகாப்புல இருக்கிறதா அவன் தகவல் தருவான். அதே நேரம் அவன் இடத்தை தேடிக் கண்டுபிடிச்சு ஊர்ஜிதம் பண்ணுறேன். அப்படி என்கிட்ட இருந்து போன் வந்துட்டா நீங்க எந்த பரபரப்பும் இல்லாம கிளம்பி வாங்க” - என்றபடியே பின் பக்கம் சென்றான்.

“பரணி… ஒரு போலீஸ்காரன் மாதிரியே நல்லா யோசிக்கறே நீ” என்றார் ராஜதுரை.

“ஸாரி சார். உங்க ‘டிபார்ட்மெண்ட்’டோட என்னை சேர்க்காதீங்க. நான் அவ்வளவு மோசமெல்லாம் இல்லை”- என்று ஒரு ‘பஞ்ச்’ வைத்தான். அதே வேகத்தில் சுவர் எட்டிக் குதித்தான். காலி ‘பிளாட்’டில் வேகமாய் ஓடி தெருவில் வந்து கொண்டிருந்த ஆட்டோ ஒன்றை கைகாட்டி நிறுத்தி ஏறிக்கொண்டான். சிவப்பிரகாசம் சொன்னதை மனதில் ஓட விட்டுக்கொண்டான். “தெற்கு கடலோரம் சவுக்குத் தோப்பு’ என்றது நினைவுக்கு வர. ஆட்டோவை பஸ்ஸ்டாண்டுக்கு விடச் சொன்னான்.

மாட்டுத்தாவணி பஸ்ஸ்டாண்ட்! திருச்செந்தூர் பஸ் தயாராக இருந்தது. அதில் ஏறிக்கொண்ட 200 ஆவது நிமிடம் ஆறுமுகனேரி வந்தது. இறங்கிக் கொண்டான். அங்கே ஒரு ஆட்டோவைப் பிடித்தான். அவரிடம் கடற்கரை ஓரமாக போகவேண்டும் என்றான்.

“கடற்கரை ஓரமா… எங்க சார்?” - ஆட்டோக்காரன் கேட்டான்.

“சவுக்குத் தோப்புல இருக்கிற ‘சர்ச்’சுக்குப் போகணும்.”

“சவுக்குத் தோப்புல ‘சர்ச்’சா…? எந்த சவுக்குத் தோப்பு?”

“கடற்கரை ஓரமா இருக்கற சவுக்குத் தோப்புப்பா”

“அப்படி பார்த்தா ரொம்ப தூரம்ல போகணும்.”

“போ… அங்க எனக்கு ‘சர்ச்’ முக்கியம்.”

“அது எனக்குத் தெரியாது.”

“நீ போ. போய் பார்த்தா தெரிஞ்சிட்டுப் போகுது…”

“சார்… இங்க இருந்து எப்படியும் ஏழு, எட்டு கிலோ மீட்டர் வரும். ஐநூறு ரூவா கொடுத்திருங்க”

“திருச்செந்தூருக்கே பஸ்ல பத்தோ, இருபதேதானேய்யா.”

“பஸ்சும், ஆட்டோவும் ஒண்ணா சார்? பெட்ரோ என்ன விலை விக்குது?

“சரி... ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு உன் ஆட்டோ எவ்வளவு கி.மீ. தரும்?”

“எதுக்கு சார் அதெல்லாம்....?”

“சொல்லுய்யா.”

“என்ன சார்...ஒரு முப்பது கிலோ மீட்டர் தரும்.”

“அதுக்கு பெட்ரோல் ஆகும்:?”

“ஏன் சார் பேஜார் பண்ணுறீங்க? வண்டி வாடகை, தேய்மானம், எனக்கு சம்பளம்னு எவ்வளவு இருக்குது.”

“நீ எனக்கு எதையும் இலவசமா தராதே! எல்லாத்தையும் கணக்கு வெச்சே கூட்டல் போடுவோம். மீட்டர் போட்டு ஒட்டினா பிரச்சினையே இல்லைல்ல.”

பேச்சோடு பேச்சாக ஆட்டோ ஒடியது.

ஆட்டோக்காரர் முகம் இருண்டு போனது.

“சரி சரி... அழுவாத, நீ கேட்ட காசை தர்றேன். அதே சமயம் நீ எனக்கு கொஞ்சம் உதவி செய்யணும்.”

“என்ன சார்?”

“நான் யாரோ இல்ல... இப்ப போலீஸ், அதை தெரிஞ்சுக்க” - பரணி, பேச்சில் சுருதி சேர்த்தான்.

"ஐயோ சார்... இதை ஏன் முதல்லயே சொல்லல?”

“எதை எப்ப சொல்லணுமோ அப்ப சொன்னாத்தானே "த்ரில்’?”

“சரி சார்... நான் என்ன உதவி செய்யணும்?”

“சவுக்குத் தோப்புல ஒரு ‘சர்ச்’ இருக்கு. அது இப்ப பாழடைஞ்சு கிடக்கு சரியா அங்க போகணும்.”

“காயல்பட்டனத்துல நம்ம ‘தோஸ்து’ ஆட்டோ ஓட்டுறான்.

அவனாண்ட கேட்டா சொல்வான் சார், கேக்கட்டுமா?”

“முதல்ல கேளு”

ஆட்டோ டிரைவரும் கேட்க, அந்த நபரும் “எனக்கு தெரிஞ்சு பச்சக்குப்பத்துக்கு அப்பால ஒரு சவுக்கு தோப்பும், அதுலதான் ஒரு இடிஞ்ச ‘சர்ச்’சும் இருக்கு எனவும்... ஆட்டோவும் அதை நோக்கியே ஓடியது.

சவுக்கு மரங்களில் காற்றின் உசாவல்! உய்ய்... உய்ய்.. என்ற சப்தம் வேறு. ஆனால், காட்டுக்குள் ஆளரவயே இல்லை. தொலைவில் கடலின் விரிவு - அலைகளின் அட்காசம். கரையோரமாக கவிழ்ந்து கிடக்கும் உடைந்த படகுகள். ஆட்டோ ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றுவிட பரணி இறங்கி நடக்கத் தொடங்கினான்.

“நீ இங்கேயே காத்திரு. அவசியப்பட்டா உன்னை கூப்பிடுவேன்” என்று கூறிவிட்டு தான் நடந்தான். தூரத்தில் உச்சந்தலை யில் சிலுவையுடன் ‘சர்ச்’ தெரிந்தது முன்னால் ஒரு வேப்பமரம்! பரணிக்கு சிவப்பிரகா சொன்ன எல்லா தடயங்களும் பொருந்தியதில் மகிழ்ச்சி ‘சர்ச்’சுக்கு வெளியே ஒரு வேன் நின்றுகொண்டிருந்தது அதற்கு மேல் நெருக்கமாக சென்று பார்க்க எச்சரிக்கை உணர்வு தடுத்தது. வேகமாய் திரும்பியவன், ஆட்டோகாரனிடம் காதைக் கடித்தான்.

ஆட்டோக்காரன் முகத்தில் பீதி பரவியது.

“பயப்படாதே... நீ இதை சரியா செய்துட்டா உனக ‘ரிவார்டு’ நிச்சயம்.”

“அதெல்லாம் பிசாத்து காசு சார்.இந்த திருட்டுப் பசங்க என்னக் குறி வெச்சுட்டா கதை அவ்வளவுதான் சார்”

“நான் சொன்ன மாதிரி செய். எதுவும் ஆகாது”

“சரி சார், இப்ப ‘டிபன்’ பொட்டலத்துக்கும், பிராந்து பாட்டிலுக்கும் துட்டு வேணுமே?”

“வா... போய் வாங்கிட்டு வருவோம். நீ அதோடு போய் அங்க

இருக்கறவங்ககிட்ட. ‘தயாளன் கொடுத்து அனுப்பினான்’னு மட்டும் சொல். அப்படியே உள்ளே யாரையாவது கட்டிப் போட்ருக்காங்களான்னு பாரு பார்த்துட்டு வந்துடு.”

“சார். என்ன சுத்துல உட்டுடாதே சார்”

"தைரியமா சொன்னதைச் செய்யிய்யா”

- அடுத்த பத்தாவது நிமிடம், அந்த ஆட்டோ டிரைவர் ஒரு ‘கேரிபேக்’கில் டிபனும், இரண்டு தண்ணீர் பாட்டிலுமாக அந்த ‘சர்ச்’ நோக்கி நடக்கத் தொடங்கினான்.

பரணியும், ராஜதுரைக்குப் போன் செய்தான்.

“சார், தூத்துக்குடி தாண்டி ஆறுமுகனேரிகிட்ட பச்சைக்குப்பம் பக்கத்துல இருக்கற சவுக்குத் தோப்புக்குள்ள ஒரு பாழடைஞ்ச ‘சர்ச்’சுலதான் இப்ப குருவும், அந்த தயாளன் கோஷ்டியும் இருக்காங்க. அதை ஊர்ஜிதப்படுத்த ஒரு ஆட்டோ டிரைவரை அனுப்பி இருக்கேன். நீங்க புறப்பட்டு வந்தா சரியா இருக்கும்னு நினைக்கிறேன்” என்றான்.

“பரணி… நிஜமாவா சொல்றே! அதுக்குள்ள கண்டு பிடிச்சிட்டியா?”

“ஒரு பத்து நிமிஷம் பொறுங்க சார் உறுதி பண்ணிடுறேன்.”

- பரணி போன் பேசி முடிக்க, எதிரில் ஆட்டோ டிரைவர் ஓடி வர. சரியாக இருந்தது.

நெருங்கி வந்தவன், “சார். நீங்க சொன்னது ரொம்ப சரி. உள்ளே ஒருத்தன கட்டிப்போட்டு வெச்சிருக்காங்க. எல்லாரும் ‘ஃபுல்’ தண்ணியில வேற இருக்காங்க. நான் ‘குவாட்டர்’ பாட்டில தயாளன் கொடுத்தான்னு கொடுக்கவும் ஒரே ‘குஷி’யாயிட்டாங்க. இவங்கள்லாம் யார் சார்?” என்று ஒரே மூச்சில் கேட்டான்.

“ஒரு சில மணி நேரத்துல எல்லா உண்மையும் உனக்கு தெரியும் பாரு” என்ற பரணி, அடுத்த நொடி ராஜதுரைக்கு தகவல் தந்து முடித்தான். அவன் இதயத் துடிப்பும் பலமாக

அடிக்கத் தொடங்கியது.

***

# 20

ராசி வாரியான மரங்களைப் போலவே நட்சத்திர வாரியான மரங்களும் உள்ளன. இந்த மரங்களின் குணமும், ஒரு நட்சத்திரத்தின் குணமும் பொருந்திச் செல்லும். உதாரணமாக, மிக அதிக கசப்பு சுவையை உடைய எட்டி மரம், அஸ்வினி நட்சத்திரத்தின் பிரதிநிதியாகும். கசப்புச் சுவை பொதுவாக எவருக்கும் பிடிக்காது. வாழ்வில் கசப்புச் சுவை கொண்ட விஷயங்களும் உண்டு. பொறாமைப்படுவது, பிறரை இம்சிப்பது, மிகுந்த சுயநலத்தோடு நடந்துகொள்வது போன்றவை எவருக்குமே பிடிக்காத கசப்பான விஷயங்களாகும். ஒருவர் எட்டி மரத்தை நட்டு வளர்த்திடும்போது தான் கசப்பாக இருந்துகொண்டு குழலை அது இனிப்பாக்குவது போல அஸ்வினி நட்சத்திரக்காரர்கள் நடந்துகொள்வார்கள். அவர்களுக்கு நிகழ வேண்டிய கசப்பான விஷயங்களை எல்லாம் எட்டி மரம் அவர்கள் பிரதிநிதியாக இருந்து, தான் ஏற்றுக்கொள்ளும் என்பது இதன் சூட்சுமம் ஆகும்

விஞ்ஞானபூர்வமாக இதை சிந்தித்தால், இந்த விஷயம் முற்றாக வேறாக தோன்றும். பொதுவாக ஒரு மரம் வளர்வது, இயற்கைக்கு நல்லது. ஆனால் அதற்கும் ஒரு மனிதனின் நன்மை - தீமைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதே விஞ்ஞானப் பார்வை. ஆனால், ஆன்மிகப் பார்வை இதை மறுக்கிறது. உன் ஒவ்வொரு செயலும் ஒரு வினை ஆகும். அதற்கொரு பயன் உண்டு. அந்த பயனை ஒருவர் அடையவும் செய்கிறார். தாகத்தோடு இருப்பவன், தண்ணீரைத் தேடுகிறான். பசியோடு இருப்பவன், உணவைத் தேடுகிறான். தேடு தலுக்குக்கேற்ப தேடப்படுவது கிடைப்பதுபோல வினைகளின் பயன் என்பது விதைப்பவர்களைச் சென்று சேர்கிறது. உடம்புக்குள் வினையாற்றும் உயிர் இயக்கத்தை எப்படி ஒரு புள்ளியில் பார்க்க இயலாதோ... அப்படி பார்க்கமுடியாத ஒரு சூட்சுமம், இது இதை உணரத்தான் முடியும். உணர்வதிலும் ஆழ்ந்த ஒருமைப்பட்ட மனம் அவசியம். இம்மட்டில் எட்டி மரம் அஸ்வினி நட்சத்திரத்துக்குரியதாகும். இப்படி

இந்தப்பட்டியல் நீள்கிறது. அது...."

**- வன வியாசம்**

ஆட்டோக்காரன் 'திருதிரு'வென விழித்ததோடு சுற்றிச் சுற்றிப் பார்த்தான். விபரீதமாக ஏதாவது நடந்து அதில் தனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்கிற அச்சம் அவனிடம் அதிகமாகிக் கொண்டே போனது. செய்தித் தாள்களில் படித்த 'என்கவுண்டர்' விஷயங்கள் ஞாபகம் வரத் தொடங்கின. இதில் ஒர் ஆச்சரியம் என்னவென்றால், போலீசின் எந்த ஒரு 'என் கவுண்டரை'யும் ஆட்டோக்காரனான அவனும் சரி, பொதுஜனமும் சரி... நல்லவிதமாக எடுத்துக்கொண்டதே இல்லை. அடுத்து, பெரும்பாலும் சுட்டுக் கொல்லப்படுபவர்களும் ரவுடிகளாகவும், சமூக விரோதிகளாகவுமே இருப்பதால் அவர்களுக்காக வருத்தப்பட தேவையில்லாமல் போய்விடுவதும் ஒரு காரணம். பரணியோ ஆட்டோக்காரனுக்கு நேர் எதிர் திசையில் சிந்தித்துக்கொண்டிருந்தான்.நேரமும் மூன்று மணி நேரத்தை கடந்துவிட்டது. அவன் மனதில் இப்போது சிவப்பிரகாசம் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தார். அவர் மேலான மரியாதை அவனுக்கு அதிகரித்திருந்தது.

"உட்கார்ந்த இடத்தில் எப்படி அவரால் இந்த சூழ்நிலையை சொல்ல முடிந்தது?' என்பதுதான் இப்போது அவனுக்குள் பிரதானமான கேள்வியே..!

இதை மாயம் என்பதா.... மந்திரம் என்பதா?

இதே விஷயத்தை யாராவது சொல்லும்போது, அவர் மிகையாகவோ - பொய்யாகவோ சொல்லதாகத்தான் நினைப்போம். ஆனால், இங்கே அவ்வளவு நிதர்சனமான அனுபவம். 'சிவப்பிரகாசத்தை விடகூடாது. அவரிடம் அதிசய சக்திகள் நிறையவே இருக்கின்றன' என்று அவனுக்கும் உறுதியாகத் தோன்றிய போது, துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது.

சத்தமும் சவுக்குக் காட்டுக்குள் அந்த தேவாலயம் இருக்கும் பக்கமாகத்தான் கேட்டது. ஆட்டோக்காரன் அடுத்த நொடி அலறத் தொடங்கினான்.

“சார்... அந்த ரவுடிப் பசங்க நம்பள பாத்துட்டுதான் சுடுறாங்க. வாங்க சார்... ஓடிடலாம்” என்று ஆட்டோவை நோக்கி ஓடத் தொடங்கினான்.

தொடர்ந்து சத்தம் கேட்க ஆரம்பித்தது.

ஏதோ பெரிய விபரீதம் நடக்க ஆரம்பித்துவிட்டதை பரணியும் புரிந்துகொண்ட நொடி... ஆட்டோக்காரன் ஆட்டோவை கிளப்பிக்கொண்டு பறக்கத் தொடங்கி விட்டான்.

பரணிக்கும் பயம் கவ்வ ஆரம்பித்தது.

சவுக்குக் காட்டுக்குள் சிலர் ஓடி வருவதும் வருகிறவர்கள் அப்படி அப்படியே அங்கங்கே முதுகின் குண்டு பாய்ந்து கீழே விழுவதும் தெரிந்தது. யாரை யார் சுடுகிறார்கள் என்றே தெரியவில்லை. 'ஓடிவிடலாமா?” என்றும் தோன்றியது. அதே வேளையில் ராஜதுரை அள் படையோடு வந்து கொண்டிருப்பதாக சொன்னதும் மனதி அலைமோதியது.

குழப்பமும், தவிப்புமாக பரணி நின்றபோது... அவன் கைபேசியிடம் கூவல். படபடப்பு குறையாமல் எடுத்தான். திரையில் ராஜதுரை பெயர். அவர்தான் பேசுகிறார். காதைக் கொடுத்தான்.

“பரணி... பயப்படாதே. இங்க எல்லாரும் மாட்டிக்கிட்டாங்க. சிலரை போட்டும் தள்ளிட்டோம். குருவையும் பாதுகாப்பாக மீட்டுட்டோம்” என்றார் ராஜதுரை.

“சார் என்ன சொல்றீங்க?”

“உன்னை பார்த்துக்கிட்டேதான் பேசறேன்.நீ நிக்கிறது தெரியுது. நான் உனக்கே தெரியாம எதிர் திசையில வந்து, ‘சர்ச்’சை ‘ரவுண்டப் பண்ணிட்டேன்.”

“ஓ.... அப்ப இப்ப சுட்டது நீங்கதானா?”

“நானேதான். அந்த தயாளனையும் பிடிச்சாச்சு. ஆமா, இவங்க இங்கதான் இருக்கான்னு எப்படி நீ கண்டு பிடிச்சே?”

- அவர் கேட்க… பரணி மெதுவாக ‘சர்ச்’சை நோக்கி நடக்கத் தொடங்கினான். சிவப்பிரகாசம்தான் சொன்னார் என்றால் நம்புவாரா? சிவப்பிரகாசமோ தன்னைப் பற்றி வெளியே தெரியக்கூடாது என்று பூட்டு போட்டிருக்கிறார். இவரிடம் எதைச் சொல்ல? இவரோ விடவில்லை!

“பரணி… ரெண்டாவது தடவையா ஒரு பெரிய காரியத்தை சாதிச்சிருக்கே, உண்மையிலே நீ என் “டிபார்ட்மெண்ட்’ல இருக்க வேண்டிய ஆள்….”

“தேங்க்யூ சார்”

“எப்படி இந்த இடத்தைக் கண்டுபிடிச்சே?”

“சார்…. அது…." - பரணி தயங்கினான். கால்கள் சுடப்பட்டு கிடப்பவர்களை கடந்தபடியே நடந்தான்.

“தயாளன் ஆட்கள் யாராவது உன்னை மிரட்டும் போது தங்களை அறியாமல் எதாவது ‘க்ளூ’ கொடுத்து அதை வெச்சு பிடிச்சியா?”

- அவரே ஒரு ‘பாய்ண்ட்’டை கொடுக்கவும், அதையே ஆமோதித்தான். ‘சர்ச்’சை நெருங்கவும், குரு ஓடிவந்து கட்டிக்கொண்டான். கட்டிக்கொண்ட நிலையில் காதோரமாக, “சிவப்பிரகாசம் ஐயா கொடுத்த ‘க்ளூ’ வால தானே?” என்று மெல்லிய குரலில் கேட்டான். அதற்கு மவுனத்தையே இவன் பதிலாக வைக்க. ராஜதுரையும் அருகில் வந்து கைகுலுக்கி நிறையவே பரவசப்பட்டார்.

தயாளனை விலங்கு போட்டு பூட்டியிருந்தார்கள். குரூரமாக அவன் விலங்குக் கைகளோடு பரணியைப் பார்க்க பரணியும் முதல் முறையாக அவனை நேரில் பார்த்தான். அந்த பார்வை, ‘உன்னை என்ன செய்கிறேன் பாரு’ என்பதுபோல் சுட்டெரித்தது. அப்படியே ‘தரதர’ வென்று இழுத்துப்போய் அவனையும், மற்ற ஆட்களையும் ஜீப்பில் ஏற்றிடத் தொடங்கினர். குண்டடிபட்டு இறந்து கிடந்தவர்கள் அருகில் போலீஸ்காரர்கள் போய் நின்றுகொண்டார்கள். அங்கே அவர்களுக்கான நடைமுறைகள் காத்திருந்தன.

“பரணி... என் வாழ்க்கையில இது பெரிய சாதனை எனக்கு துணை கமிஷனர் பதவி உறுதி. அதே நேரம் நீ விரும்பினா, என் ‘டிபார்ட்மெண்ட்’ல உனக்கு வேலை போட்டுத் தர ஏற்பாடு செய்யறேன்....” என்று ராஜதுரை ரொம்பவே நெகிழ்ந்து போனார்.

“தேங்க்யூ சார்... எப்படியோ குருவுக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாம அவனை காப்பாத்திட்டோம். எங்க வீட்டுக்கும் சரி, குரு அம்மாவுக்கும் சரி... எதுவுமே தெரியாது.”

“உண்மைதான். இனி தெரிஞ்சா ரொம்ப பதற்றப் ஆவாங்க. அதனால பரவால்ல. நீங்க போய் நடந்ததை சொல்லுங்க. அப்புறம் பத்திரிகைகாரங்க, டி.வி.காரங்க வந்துகிட்டிருக்காங்க. நீங்க அவசியம் இருக்கணும் என்றார். அவர் அப்படிச் சொல்லவும் ‘பகீர்’ என்றது.

“சார்... இதுல நாங்க எந்த விதத்துலயும் அடிபட விரும்பல. நீங்களே பாத்துக்குங்க. எங்க மேல ‘கேமரா’ வெளிச்சம் விழ வேண்டாம் சார்....”

“அப்படியெல்லாம் பண்ண முடியாது பரணி. இது பெரிய சாதனை. போலீஸ் துறை வரையில ஒரு “பவர்புல் ஆப்பரேஷன்'. இன்னிக்கு எங்களுக்கு தலைவலியே இந்த மாதிரி தீவிரவாதிகள், ரவுடிகள்தான். இந்த செய்தி பரவும் போது மக்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கை வரும்.”

பரணி, குரு இருவரையும் ராஜதுரை ஒரே அமுக்காக அமுக்கிவிட்டார்.

மதியம்.

டிவி பார்த்தபடி இருந்தாள் பரணியின் அக்கா சாந்தா. அம்மா சகுந்தலா கண் அயர்ந்துவிட்டாள். அப்போது தயாளன் கும்பல் பிடிபட்ட தகவல், வரியாக ஓடத் தொடங்கியது.

'தப்பி ஓட முயன்ற மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தயாளனையும், அவன் கூட்டாளிகளையும் போலீசார் சுற்றி வளைத்தனர். இதற்கு பரணி என்கிற இளைஞரின் தைரியமும், புத்திசாலித்தனமுமே காரணம் என்கிறார்

போலீஸ் அதிகாரி ராஜதுரை. என்று ஓடிய செய்தி, சாந்தாவை படபடக்க வைத்தது. தாயை எழுப்பி திரையைக் காட்டினாள். செய்தி சேனலுக்கு வேகமாக மாறினாள். அதில் பரணி, குரு இருவரும் பத்திரிகை நிருபர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தனர்

அதற்குள் பக்கத்து ‘பிளாட்’, எதிர் ‘பிளாட்’டில் எல்லாம் செய்தி பரவிவிட்டது. விஷயம், மேலே சிவப்ரகாசம் காதுக்கும் சென்றது. கல்யாணி அவர் எதிரில் டி.வி.யைப் போட்டாள். அவர்கள் தெரிந்தனர். சிவப்பிரகாசம் பற்றி எங்கும் மூச்சே விடவில்லை. அவருக்கு முகத்தில் புதிய தெம்பு ஊடுருவியது.

“சாதிச்சிட்டான் பரணி… இவன் கெட்டிக்காரன். இவனாலதான் நான் நினைக்கற அவ்வளவையும் சாதிச்சு காட்ட முடியும்” என்றார் பெருமிதமாக,

கல்யாணி பதிலுக்கு கலக்கத்தோடு பார்த்தாள். “என்ன பாக்கறே…? விதி வலியது. அதை மாத்த யாராலயும் முடியாது. அதே நேரம் என் விதியை மாத்த எனக்கு தேவையான சக்தி கிடைச்சாச்சு. நான் இந்த மதுரைக்கு… குறிப்பா இந்த வீட்டுக்கு வந்தது வீண் போகலை. அந்த சக்தியான பாலா எனக்கு சரியான வழியைக் காமிச்சிட்டா…” என்று பூரித்துப் போனார்.

மாலைவேளை.

பரணியும், குருவும் ராஜதுரையுடன் ஜீப்பில் வந்து இறங்கினர். செய்தி கேள்விப்பட்டு ‘பெர்மிஷன்’ போட்டு விட்டு வந்திருந்த குருவின் தாயான ராஜேஸ்வரி ஓடி வந்து மகன் கையைப் பிடித்துக்கொண்டு, “என்னடா இது… எட்டு மணி நேரத்துல என்னென்னவோ நடந்துடிச்சி. தப்பித் தவறி உனக்கு எதாவது ஆகியிருந்தா?” என்று கேட்டு கண் கலங்கினாள்.

எவ்வளவு மனோதைரியம் உள்ளவர்களையும் பிள்ளைப்பாசம் கண் கலங்க வைத்துவிடும் அதிசயத்தை பரணியும் பார்த்தான். ‘பிளாட்” வாசிகள் ஆளுக்கு ஆள் வந்து கை கொடுக்கத் தொடங்கினர். சகுந்தலாவுக்கும்

சாந்தாவுக்கும் பெருமையாக இருந்தது. சாந்தா, திருஷ்டி. கழித்தாள். சரண்யா, வாசலுக்கு வந்து வைத்த கண் வாங்காமல் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் காதல் பொங்கி வழிவதை பரணியும் உணர்ந்தான் அவனுக்கே நடப்பதெல்லாம் கொஞ்சம் கனவு போலவும் கொஞ்சம் நனவு போலவும்தான் இருந்தது. இரண்டொரு நாளிலேயே எவ்வளவு பெரிய மாற்றம்!

ஒரு மனிதன் சில மணி நேரங்களில் நாடு முழுக்க தெரிந்தவனாக ஆகிவிட முடியுமா என்ன?

ஆகிவிட்டேனே!

காவல்துறையே வேலை தருகிறேன் என்கிறதே.

மென்மையாக தனக்குள் அசை போட்டபடியே இருந்த பரணியைப் பற்றி ராஜதுரை எல்லோரிடமும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தார். சரண்யாவுக்கு அவனை கட்டி அணைத்து முத்தமிட வேண்டும் போல தோன்றி... அந்த உணர்வை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மொத்தத்தில் ஒரு மாறுபட்ட பரபரப்பான சந்தோஷமான சூழல். அப்போது அவன் மனதுக்குள், ‘பரணி... இந்த சந்தோஷத்துல மயங்கி உன்னைத் தொலைச்சிடாதே. இதைவிட பெரிய பெரிய காரியங்கள் உனக்கு காத்திருக்கு. அதுக்காக உன்னை எதிர்பார்த்து நானும் காத்திருக்கேன்’ என்னும் சிவப்பிரகாசத்தின் குரலும் ஒலித்தது. அவர் தீவிரமாக தன்னை நினைத்து தியானிப்பதை புரிந்துகொண்டான்.

“சார் ‘கசகச’ன்னு இருக்கு குளிச்சிட்டு வந்துடுறேன்” என்று விலகியவனாக ஆறாவது ‘பிளாட்’ நோக்கித்தான் ஓடினான். அங்கே கதவு திறந்தே இருந்தது. குருவும் பின் தொடர்ந்தான். உள்ளே நுழைந்தவர்கள் - எதிரில் அமர்ந்திருந்த சிவப்பிரகாசம் முன் பணிவோடு கை கட்டியபடி நின்றனர்.

முன்பு அவர் எதிரில் நிற்கிறபோது மனதுக்குள் என்னென்னவோ கேள்விகள். இப்போது அப்படி

எதுவுமில்லை.

சற்று தள்ளி கடப்பாரை, மண்வெட்டி, இரும்புச் சட்டி என்கிற வீடு கட்டும் கொத்தனார் பொருட்கள். கூடவே ‘எமர்ஜென்சி” விளக்கு அப்போது, “ஐயா வரலாங்களா?” என்றபடியே ஒருவர் வந்து நின்றார்.

“உன்னைத்தான் எதிர்பார்த்துகிட்டே இருந்தேன் கந்தசாமி. நல்லவேளை வந்துட்டே…” என்றார் சிவபிரகாசம்.

“சந்தோஷம்ய்யா. இந்தாங்கய்யா அந்த வீட்டுச் சாவி. எல்லாரும் திருப்பதிக்கு கிளம்பிட்டாங்க. எப்பவும் கையோட கொண்டு போறவங்க, இந்த முறை நீங்க சொன்ன மாதிரியே என்கிட்ட தந்து, வீட்டை பார்த்துக்கச் சொல்லிட்டு போயிருக்காங்க. ஐயா. இங்க இருந்துகிட்டே எல்லாரையும் ஆட்டி வைக்கறது நல்லாவே தெரியுது”

“எல்லாம் என் குருநாதர் அருளப்பா. நல்லது. இதோ இவங்க ரெண்டு பேரும் ராத்திரி வருவாங்க. நீயும் கூட இருந்து இவங்களுக்கு உதவி செய்”

“அது என் பாக்கியமாச்சே” என்றார் அவரும்!

அப்படியே கந்தசாமி என்கிற அவர் பரணி, குரு இருவரையும் பார்த்தார். பார்த்தபடியே “வனம் புகப் போறதும் இவங்கதானா?” என்று கேட்டார்.

“ஆமாம்… அந்த 'அபாய வனம்’ இவங்க வரையில பிருந்தாவனம்….”-சிவப்பிரகாசம் சொன்னபடியே ‘மர்ம’ மாக சிரித்தார்!

***

# 21

'நட்சத்திரங்கள் உண்மையில் இருபத்தி எட்டு ஆகும். ஆனால், நடைமுறையில் இருபத்தி ஏழு நட்சத்திரங்களையே நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்படுகிறோம். இருபத்தி எட்டாவது நட்சத்திரத்தை ‘அபிஜித் நட்சத்திரம் என்பார்கள்!

இந்த நட்சத்திர காலம் மிக அபூர்வமானது அபிஜித் முகூர்த்த காலம்' என்றும் கூறுவர். இந்த கால கட்டத்தில் செய்யப்படும் செயல்கள் பெரும் வெற்றிபெறும். இது நண்பகல் உச்சி வேளையில் தோன்றும் நட்சத்திர காலமாகும். இதைப் பற்றி முழுமையாக தெரிந்துகொள்ள தேர்ந்த ஜோதிடஞானம் அவசியம்.

இருபத்தி ஏழு நட்சத்திரங்களுக்கும் இருபத்தி ஏழு விருட்சங்கள் உள்ளன. இதில் கார்த்திகைக்கு அத்தி, ரோகிணிக்கு நாவல், மிருகசீரிடத்துக்கு கருங்காலி, திருவாதிரைக்கு திப்பிலி, புனர்பூசத துக்கு மூங்கில், பூசத்துக்கு அரசு என்று ‘விருட்ச சாஸ்திரம்' பட்டியல் போட்டு சொல்லிக்கொண்டு செல்கிறது.

எந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் மூங்கில் நட்டு வளர்த்தால் அவர்களிடம் செல்வம் வேகமாக சேரும்.'

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் ‘அபாய வனம்’ பற்றி பேசிய பேச்சு பரணி, குரு இருவரையும் யோசிக்க வைத்தது. அதை சிவப்பிரகாசமும் கவனித்தார்.

“என்னப்பா யோசனை?”

“இல்ல... ஏதோ அபாயவனம் - பிருந்தாவனம்னு சொன்னீங்களே...?”

“ஆமா உங்க இரண்டு பேருக்குமே சவாலான ஒரு வேலை, அது. ஆனா, உங்களால முடிக்க முடியும்.”

“அந்த வனம் எங்க இருக்கு...? அங்க நாங்க என்ன செய்யணும்?”

“சொல்றேன். இப்ப இதோ இந்த கந்தசாமிகூட நாம புறப்படுவோமா?”

“அந்த திருப்பரங்குன்ற வீட்டுக்கா சாமி....?”

“ஆமா. அங்கதான் நமக்கு முக்கியமான வேலை இருக்கு.”

“அங்க போய் என்ன செய்யப்போறோம் சாமி?”

“அதை அங்க போன பிறகு சொல்றேன். இப்ப கிளம்பலாமா?”

“சாமி... கொஞ்சம் வீட்டுக்கு போய் குளிச்சிட்டு யாருக்கும் தெரியாம அங்க வந்துடுறோம். நீங்க முன்னால போங்க சாமி”

“அதுவும் சரிதான்!” - ஆமோதித்தவர்,"இது யாருக்கும் தெரியாமத்தான் நடக்கணும். அதேநேரம், ரெண்டு பேரும் வேட்டி இருந்தா கட்டிக்கிட்டு வாங்க” என்றபடி அவர் நடக்க, இளைஞர்கள் இருவரும் புறப்பட்டனர்.

அந்த வீட்டின் ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு குருவையே பார்த்தபடி இருந்தாள் கல்யாணி. அவள் கண்களில் குழப்பமான உணர்வு. குருவும் வீட்டு வாசலைத் தாண்டும்போது, திரும்பி அவளைப் பார்த்தான். அதில் ஆயிரம் அர்த்தங்கள்!

பரணி குளித்து முடித்தான். பெரியவர் சொன்னபடியே வேட்டி அணிந்துகொள்ள தேடினான். கட்டி கொள்ள முனைந்தபோது என்னவோ போல் இருந்தது லுங்கியில் சுகம் கண்டவர்களுக்கு வேட்டி சற்று சிரமமானதுதான். ஒரு சிலர் வரையில் அது எப்போது அவிழ்ந்துகொள்ளுமோ எனும் அச்ச உணர்வு இருந்து கொண்டே இருக்கும். பரணியிடமும் அந்த உணர்வு!

அக்கா சாந்தா ஆச்சரியமாகப் பார்த்தாள். அதை விட அதிக ஆச்சரியத்தோடு ஏறிட்டாள் தங்கை பிரபா.

“ஒரு முழு ஆம்பளைய பார்க்கற மாதிரி இருக்குண்ணே.” - என்றாள் ரசனையோடு.

“என்னடா.... வேட்டிக்கு மாறிட்டே?”

“கோவிலுக்கு வேட்டிதானே தோது?”

“எந்த கோவிலுக்கு?”

“திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு....”

“பாருடா... நீ என்ன எங்களுக்கு இன்ப அதிர்ச்சியா கொடுக்கறதுன்னு முடிவே பண்ணிட்டியா?”

- சாந்தா கேட்க, குருவும் வேட்டியோடு வந்து நின்றான். வெளியே கோவில் வரை போயிருந்த அம்மா சகுந்தலாவும் வந்து பார்த்து வாய் பிளந்தாள்.

“பரணி... கோவில்லகூட உன்ன பத்திதான் பேச்சு. அப்புறம் நம்ம இன்ஸ்பெக்டர் உனக்கு போலீஸ்லயே வேலை வாங்கி தர்றேன்னு சொன்னாராம்ல?” - சகுந்தலா ‘பாயிண்ட்'டுக்கு வந்தாள்.

“அம்மா. அது மரியாதைக்கு சொன்னது. போலீஸ் வேலை என்ன மளிகைக்கடை சரக்கா. போய் கேட்ட உடனே அவர் எழுந்திரிச்சு எடுத்துக் கொடுக்க...?”

“அட போடா... அவர் இதெல்லாம் தெரியாமலா சொல்லி இருப்பார்?”

“சரிம்மா, நாங்க திருப்பரங்குன்றம் கோவிலுக்கு போயிட்டு வர்றோம். வந்து பேசுறேன்.”

“சாப்பிட்டுட்டுப் போடா”

“கோவிலுக் பட்டினியா போனாதானேம்மா புண்ணியம்.”

- பேச்சோடு மிக வேகமாக கீழே இறங்கினான்.

வெளியே சென்று மோட்டார் பைக்கையும் கிளப்பினான். சத்தம் கேட்டு, வீட்டு ஜன்னலை விலக்கிக்கொண்டு

பார்த்தாள் சரண்யா.

“டேய் உன் ஆள் பார்க்கறாடா?”

“தெரியும்” - என்றபடி ஏறி அமர்ந்தான். தன் விரோதியாக கருதி உதைத்தான். கிளம்பிவிட்டது. குருவும் ஏறி அமர்ந்தான்.

அந்த இரும்புக்குதிரை தெருவில் இறங்கிவிட்டது.

காற்று முகத்தில் அறைந்தது. தெருவில் சாக்கடை அடைப்புக்காக தோண்டிப் போட்டிருந்தார்கள். அதனால் போக்குவரத்து நெரிசல்.

இப்படி போட்டு நெருக்கடியை உருவாக்கிவிட்டார்களே?’ என்கிற நெருடல் ஒருவரிடமும் இல்லை.

“இந்த மாதிரி சிங்கப்பூர், மலேசியாவுல போட முடியுமா?”

“அது எப்படி முடியும்? அங்க போனாதான் நாமளும் அவங்கள மாதிரி நாகரீமா மாறிடுவோமே”

“இங்க மட்டும் ஏன் இப்படி? ஒரு சிலைக்கு செருப்பு மாலை போட்டா... ஊரையே கொளுத்திடுறாங்க. இங்க ஒரு தெருவையே நாறடிச்சிருக்காங்க. எனக்கென்னன்னு போறாங்களே பரணி?”

“நாம மட்டும் என்ன... இறங்கி அதை அள்ளி போட்டுட்டா போறோம்?”

“குறைந்தபட்சம் கவலையாவதுபடுறோமே?

“அதனால ஒரு பயனுமில்ல. நல்லா கேட்டுக்க குரு. என் வரையில மக்கள்தான் எப்பவுமே தப்பா இருக்காங்க. தப்பான வங்க தப்பான அரசியல்வாதியை ஆதரிக்க. தப்பானவனே அதிகாரத்துக்கும் வந்துடுறான். எப்பவும் தப்பான விஷயங்கள் ரொம்ப தப்பாத்தான் முடியும்.”

“அப்ப நம்மைப் போல நல்லதை விரும்பறவங்க நிலை?

“இங்க மக்களை முடிஞ்சா முட்டாளாக்கு. இல்லையா...

இந்த நாடே வேண்டாம்னு விடு ‘ஜூட்'.”

“சரி.... திருப்பரங்குன்றம் வீட்ல நாம என்ன செய்யப் போறோம்?”

“சமாதியை தோண்டறோம்.”

“சமாதியா?"

“ஆமா”

“அங்க எங்க இருக்கு சமாதி?”

“தோண்டும்போது தெரியத்தானே போகுது?”

“அமா.... நாம என்ன வெட்டியானா... இதையெல்லாம் செய்ய?”

"அப்ப ஐயா சொன்னா முடியாதுன்னு சொல்லிடுவோமா?”

"இல்ல... இதைச் செய்ய நாம எதுக்கு? கூலிக்கு யாரையாவது கூப்பிடலாமேன்னேன்.

“நீ ‘ட்டியூப் லைட்' டாடா?”

"நான் என்ன தப்பா கேட்டுட்டேன்.”

"முண்டம்! நாம யாருக்கும் தெரியாம செய்யப்போறோம். அந்த வீட்ல இருக்கிறங்களுக்கே தெரியக்கூடாதுன்னு அங்க இருக்கறவங்கள திருப்பதிக்கு அனுப்பிட்டாரு ஐயா. அப்படின்னா இது எவ்வளவு ‘சீக்ரெட்’டானதுன்னு யோசி”

“சரி... சமாதியில எலும்புதான் இருக்கும். அது எதுக்கு?”

“இனி கேள்வி கேட்காதே! மவுனமா அவர் சொல்றதை கேட்போம். பெரியவரை தூர இருந்து கொஞ்சமும் புரிஞ்சுக்க முடியாது. நெருங்க நெருங்கத்தான் புரியும்.”

“நாளைக்கு எதாவது கொலை வழக்கு அது இதுன்னு.”

“பயப்படாதே! நாம இப்ப பாதி போலீஸ்.இந்த விஷயத்துல

போகப் போகத்தான் எதுவும் தெளிவா புரியும்.”

- ‘பைக்’கில் பேசியபடியே சென்றனர். வழியிலேயே வீட்டு முகவரியை கந்தசாமியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு கச்சிதமாக அந்த பங்களா முன் சென்று நின்றனர்.

இரவு நேரம்.

பக்கத்தில் திருப்பரங்குன்றம் மலை ஒரு பூதம் போல தெரிந்தது. வானில் வெள்ளைப் பூசணித் துண்டு போல நிலா விசிறி எறிந்த பஞ்சுப் பொதியாக மேகத் துணுக்குகள் பங்களாவில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. தெருவிலும் பெரிதாக நடமாட்டம் இல்லை.

இருவரும் உள்ளே நுழைய... கந்தசாமி எதிர்வந்து அழைத்துக்கொண்டு சென்றார். அந்த பங்களா வீடு ‘டைல்ஸ்’ தரையோடு மிகவே மிடுக்காக இருந்தது. ஹாலில் சோபாக்கள் - ஜன்னலில் திரைச்சீலைகள் - சுவரில் 'எல்.சி டி டி.வி’ கண்ணாடி பீரோக்களில் அழகிய பொம்மைகள் கண்ணாடித் தொட்டியில் ஒன்பது மீன்கள். அதில் எட்டு மீன்கள் காவி வண்ணத்திலும், ஒன்று கறுப்பு நிறத்திலும்

'ஹால்’ நடுவில் அமர்ந்திருந்தார் பெரியவர்.

இளசுகள் வரவும் ஏறிட்டார். கடிகாரத்தில் மணி எட்டை கடந்திருந்தது. சற்று தள்ளி கடப்பாரை, மண்வெட்டி. இருவரும் அதைப் பார்த்தனர்.

“ஆளுக்கு ஒண்ணு எடுத்துக்குங்க” - என்றார். எடுத்துக் கொண்டனர்.

“பரணி, குரு... நான் இப்ப சொல்றதை நல்லா கேட்டுக்குங்க. நீங்க இருக்கிற இந்த பங்களா ஒரு அறுபது, எழுபது வருஷத்துக்கு முந்தி ஜீவ சமாதி இருந்த இடம். இப்பல்லாம் மனுஷன் பஞ்ச பூதங்கள்ல ஒண்ணான நிலத்தையும், நீரையும் திருடறதுல போட்டி போடுறான். சுடுகாடா இருந்த இடமெல்லாம் மனுஷங்க குடியிருப்பா மாறிப் போச்சு.

காட்டையும் அழிச்சு, அங்கேயும் போய் நாசம் பண்ண

தொடங்கிட்டதால அங்க வசிக்கிற யானை, புலி எல்லாம் ஊருக்குள்ள வந்து உணவு தேடி அலையற கொடுமையைப் பாக்கறோம். காரணம், மனிதனோட சுயநலம்!

அந்த சுயநலம்தான் குருநாதரான சோமாஸ் கந்தர்ங்கற சித்தரோட ஜீவ சமாதியையும் விழுங்க வெச்சிருக்கு அப்படிப்பட்ட இந்த ஜீவ சமாதியைத் தோண்டி - அன்னிக்கு சோமாஸ்கந்தரோடு சேர்த்து சமாதியில வைக்கப்பட்ட ரசமணி, ஜெபமாலை, ஏட்டுக் கட்டு. இவைகளை இன்னிக்கு எடுத்தாகணும்.

அப்படியே சித்தர் சாமியோட எலும்புகளை எடுத்து வேற இடத்துல புதைச்சு - அங்க ஜீவசமாதியைப் புதுப்பிக்கணும்ங்கறது என் எண்ணம்" - என்று அவர்களிடம் சொல்லி முடித்தார்.

"சாமி... அந்த ரசமணி, ஜெபமாலை, ஏட்டுக் கட்டுல அப்படி என்ன இருக்கு?"

"போகப் போக அதை தெரிஞ்சிப்பீங்க. நல்ல சீடனுக்கு அழகு... கேள்வி கேட்காம - சொன்னதைக் கேட்டு செயல்படுறதுதான்."

- அவர் முத்தாய்ப்பாக சொன்னதைத் தொடர்ந்து கந்தசாமி வெளியே போய் கதவைத் தாழிட்டுவிட்டு வந்தார்.

"பரணி, குரு... இப்ப ஜீவ சமாதி இருக்கற இடத்தை துல்லியமா கண்டுபிடிக்கப் போறோம்" - என்ற சிவப்பிரகாசம் ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து உள்ளங்கையில் வைத்து ஏதோ மந்திரம் ஜெபித்துவிட்டு கீழே தரையில் வைத்தார். பின் அதை உற்றுப் பார்க்கத் தொடங்கினார். சில நிமிடங்களுக்கு பிறகு அது அசைய ஆரம்பித்தது.

பின்னர் உருளத் தொடங்கியது.

பரணி, குரு இருவருமே இமைக்கக்கூட மறந்து பார்த்தனர். எலுமிச்சம் பழம் உருண்டுகொண்டே அந்த வீட்டின் பூஜை அறை முன் ஓர் இடத்தில் நின்றது. சிவப்பிரகாசம் உடனே

கற்பூரம் ஏற்றினார். அப்படியே விழுந்து வணங்கி னார். அவர்களும் விழுந்து வணங்கினார்கள்.

“இந்த வீடு நல்லவிதமா இருக்க - ஜீவ சமாதிக்கு மேலே பூஜையறை இருக்கறதும், அங்க நித்தமும் வழிபாடு நடக்கறதும்தான் காரணம். இதோ இந்த கற்பூரம் எரியற இடத்துல தோண்டுங்க” - என்றார்.

பரணி, குரு இருவரும் சட்டையைக் கழற்றி வைத்தனர். பரணி தன் செல்போனில் அக்காவை அழைத்தான்.

“அக்கா.”

“சொல்லு பரணி”

“இங்க சாமி கும்பிட்டுட்டோம். அப்படியே எங்க நண்பன் வீட்டுக்கு போயிட்டு, அங்கேயே ராத்திரி படுத்துட்டு காலையில வந்துடுறோம்க்கா. எங்கள காணோம்னு பயந்துடாதீங்க”

“அப்படி எந்த நண்பன் அங்க இருக்கான்?”

“அதையும் நாளைக்கே சொல்றேன். குருவோட அம்மாகிட்டயும் சொல்லிடு”

- புத்திசாலித்தனமாக வீட்டுச் சூழலை சமாளித்தவன், தரையைத் தோண்ட ஆரம்பித்தான். பழக்கம் இல்லாத வேலை. ஆனாலும், மனதில் ஈடுபாடு. அதிக சத்தம் கேட்காதபடி நிதானமாகவே வேலை தொடர்ந்தது. கந்தசாமி, மண்ணை அள்ளி அள்ளி பக்கத்திலேயே அம்பாரமாக கொட்டத் தொடங்கினார். மூன்று மணி நேரம் சென்ற நிலையில் ஒரு கருங்கல் சதுரமாய் தட்டுப்பட்டது. மூன்றடி நீளம், மூன்றடி அகலத்தில்.

“அதுதான் கூரை, அதை மெள்ள நெம்பித் தூக்குங்க”- என்றார் சிவப்பிரகாசம். அவர்களும் அப்படியே செய்தனர். கல்லும் அசைந்து அசைந்து நிமிர்த்தப்பட - உள்ளே இருளடைந்த குழி!

சிவப்பிரகாசம் ஆவலாக தன் வசம் இருந்த 'டார்ச்

லைட்’டை உள்ளே அடித்தார். அப்போது தெரிந்த காட்சியைப் பார்த்து பரணியும், குருவும் அப்படியே வாயடைத்த நிலையில்... ‘புஸ்ஸ்’ என்று சீற்றம். திரும்பினால் - அம்பாரமாய் குவிக்கப்பட்ட மண் மேல் பன்னிரண்டு அடிக்கு குறைவில்லாத நாகம் ஒன்று படம் விரித்த நிலையில்!

***

# 22

நட்சத்திரங்களில் ஆயில்யத்துக்கு புன்னை மரத்தையும், மக நட்சத்திரத்துக்கு ஆல மரத்தையும், பூர நட்சத்திரத்துக்கு பலாசு என்னும் மரத்தையும் 'விருட்ச சாஸ்திரம்' சுட்டிக் காட்டுகிறது. இந்த நட்சத்திரங்களுக்கென்று பிரத்தியேக தன்மை உண்டு. ஆயில்யம்... கருணை - பாசம் போன்ற உணர்வுகளை அதிகம் தரும். மகம்... பெருமைப்படும்படியான சாதனைகளைச் செய்ய உதவும். மகத்துக்கு ஒரு பிரத்தியேக தன்மை உண்டு. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெரும்பாலும் 'பிள்ளைக் கலி' என்னும் குழந்தைகள் இல்லாத மலட்டுத்தன்மை இருக்காது.

ஆலமரம் எப்படி கிளைகளைப் பரப்பியபடியே விரியுமோ அப்படி சந்ததிகளை அதிகம் உருவாக்கிடும் ஒரு நட்சத்திரம், இது. இதற்கு சாஸ்திர சாட்சிகள் இல்லை. நூறு மக நட்சத்திரக்காரர்களை அழைத்து பரிசோதித்தபோது தெரிய வந்த ஒரு சிறு உண்மைதான், இது மக நட்சத்திரம்... ஆண்களைவிட பெண்களை அதிகம் உயர்த்திப் பிடிக்கிறது. இவர்களில் கர்ம பயன் காரணமாக திருமண பந்தமே யாருக்காகவது நடைபெறாமல் போனாலும், அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் மற்றவர்களுக்கு தாயாக காட்சி தருகின்றனர்.

அதேபோல பூர நட்சத்திரம். இது தூய்மையையும், பிரகாசத்தையும் அளிப்பதில் முன்நிற்கிறது. பூரநட்சத்திரத்தில் பிறந்தவர்களிடம் பிறப்பிலேயே ஒரு ஆய்வுக்குணம் இருக்கும். எவர் தூண்டுதலும் இல்லாமல் ஆய்வுகளைச் செய்து அதில் வெற்றியும் பெறுவார்கள்!

**- வன வியாசம்**

மண் அம்பாரம் மேல் தெரிந்த நாகம். ஒரு மிரட்டு மிரட்டியது. பரணி, குரு இருவருக்கும் ‘குப்பென்று வியர்த்து விட்டது. கந்தசாமியும் முகம் வெளிறிப் போனார் சிவப்பிரகாசம் முதலில் சற்று பயந்தாலும், சுதாரித்துக் கொண்டு அந்த நாகத்தைப் பார்த்து கைகளை குவித்து

வணங்கினார்.

கீழே குழிக்குள் கல்பலகை விலகி, உள்பாகம் தெர்ந்தது. பாம்பிடம் அதே சீற்றம்!

“ஐயோ... இப்ப என்ன பண்றது?” - காற்றுக்குரலில் கேட்டான் பரணி.

“பயப்படாதீங்க. வந்திருக்கிறது சித்தர் சாமிதான்! என் நோக்கம் சாமிக்குத் தெரியும்” என்றவர், எழுந்து அந்த சர்ப்பத்தைப் பார்த்து தரையில் விழுந்தும் வணங்கினார்.

ஒரு விஷ ஜந்துவை சித்தராக அவர் கூறியது பரணி, குரு இருவரையும் மிகவே நெருடியது. பழைய பரணியாக இருந்தால் பலமாக சிரித்திருப்பான். இப்போதுள்ள பரணி பக்தியைப் பொறுமையோடும், கூர்மையாகவும் இயக்க முனைந்துள்ளான். எனவே, மனதுக்குள் சிவப்பிரகாசம் கூறியதற்காக சிரித்துக்கொண்டாலும்... வெளியில் அடக்கிக்கொண்டு வேடிக்கை பார்த்தான்.

குரு தன் வாழ்வில் அப்படியொரு சர்ப்பத்தைப் பார்த்ததே இல்லை. அந்த சர்ப்பமும் படம் விரித்த நிலையில் அசையாமல் வெறித்தது. குழியைவிட்டு பரணி, குரு இருவரையும் மேலே வரச் சொன்னார் சிவப்பிரகாசம். அவர்களும் வந்தனர். அதன்பின் அவர் அந்த சர்ப்பத்தை வணங்கியபடியே குழிக்குள் இறங்கினார். ‘எமர்ஜென்சி’ விளக்கை கேட்டு வாங்கிக்கொண்டார். உள்ளே வெளிச்சம் படவும், இருண்ட அந்த சமாதிக் குழியின் உட்பாகம் நன்றாக தெரிந்தது.

அங்கே சோமாஸ்கந்தரின் பூத உடல் அப்படியே இருந்தது. பத்மாசன கோலத்தில் ஒரு கையில் ஜெபமாலை. அந்த ஜெபமாலையின் ருத்திராட்சம் ஒன்றை கட்டை விரலும், ஆள்காட்டி விரலும் பிடித்தபடி இருக்க... அது தொங்கியபடி இருந்தது. தலையில் கிரீடம் போல அம்பாரமாக முடி முகத்தில் தாடி, அவைகளெல்லாம் அப்படியே இருந்தன.

சோமாஸ்கந்தர், காவி வஸ்திரம் உடுத்தி கீழே விரித்த புலித்தோல் மேல் அமர்ந்திருந்தார். அந்த தோல் மேல் பத்து,

பதினைந்து ஏட்டுக் கட்டுகள் சீராக அடுக்கப்பட்ட நிலையில் இருந்தன. மறுபுறம் கமண்டலம். ஆனால், அது காலியாக தெரிந்தது. கால் - கை இரண்டிலும் நகங்கள் கிட்டத்தட்ட ஏழெட்டு அங்குலம் வரை வளர்ந்திருந்தன.

குழிக்குள் இறங்கிய சிவப்பிரகாசம் அறுபது ஆண்டுக்கு முன் அடக்கமான சித்த யோகியின் அந்த உடலைப் பார்த்து கைகள் நடுங்க பரவச உணர்வோடு வணங்கினார். மேலே இருந்தபடியே குரு, பரணி, கந்தசாமி மூவரும் உட்புறம் தெரிந்த அந்த காட்சியைப் பார்த்து அவர்களும் வியந்து நிற்க, கந்தசாமி மட்டும் கண்ணீர்விடத் தொடங்கினார் பின்னர், அவரும் விழுந்து சர்ப்பத்தை வணங்கினார். ‘நாமும் கும்பிடுவோமே!’ என்பது போல குருவும் பார்க்க. பரணி தடுத்தான்.

குழி உள்ளே யோகியின் உடல் முன் சிவப்பிரகாசம் மண்டியிட்டார். அப்படியே மனதார பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். குழிக்கு மேலே மண் குவியல் மேல் படம் விரித்தபடி இருந்த சர்ப்பத்திடம் அசைவு. அது குவியலில் இருந்து நெளிந்து. குழியை நோக்கி வரத் தொடங்கியது.

பரணி, குரு, கந்தசாமி மூவரும் வேகமாக விலகிக் கொள்ள, அது கீழே இறங்கியது. அப்படியே சிலையாக - அமர்ந்த நிலையில் இருக்கும் சோமாஸ்கந்தர் மேனி மேல் தழுவியபடி ஏறியது. பின் அவர் கழுத்தை வளைத்துக் கொண்டு - சிவபெருமான் கழுத்து நாகம் போல் படம் விரித்து எதிரில் மண்டியிட்டிருக்கும் சிவப்பிரகாசத்தைப் பார்த்தது.

அவர் பூரித்துப் போனார்.

“சாமி... காணக் கிடைக்காத காட்சியை எனக்குத் தந்துட்டீங்க! தங்கம் - வைரத்தை துச்சமாகவும், பட்டம் - பதவிகளை குப்பையாகவும் நான் நினைத்ததற்கு... இதை விட ஒரு பெரிய பரிசை நீங்க எனக்கு தந்துட முடியாது! நான் பாக்கியசாலி.... பாக்கியசாலி” என்று வாய்விட்டு முணு முணுத்தார். அது பரணி, குரு, கந்தசாமி மூவர் காதுகளிலும் விழுந்தது. பிறகு ஜெபமாலை, ஏட்டுக்கட்டு,

கமண்டலம் ஆகிய மூன்றையும் ஒவ்வொன்றாக எடுத்தார். கமண்டலத்தில் ரசமணி இருந்தது. ஆக, சிவப்பிரகாசம் தேடிய மூன்றும் கிடைத்துவிட்டது.

அந்த மூன்றையும், தான் கொண்டு வந்திருந்த மரப் பெட்டிக்குள் வைத்தார். அப்படியே தூக்கி பரணியின் வசம் தந்தார். அதை கையில் தொட்ட நொடி, மின்சாரம் வெட்டியது போல உணர்ந்தான். அவன் அந்த பரவசத்தில் இருந்த நொடி... சிவப்பிரகாசம், பத்மாசனத்தில் இருந்த சோமாஸ்கந்தர் உடலை அப்படியே தொட்டுத் தூக்கி தோளில் போட முயன்றார். சர்ப்பம் விலகிக்கொண்டது.

ஒரு சிலையைப் போல அது அவருக்கு வசப்பட்டது. பத்மாசனமிட்ட கால்கள் பிரியாமல் அப்படியே இருந்தன. உடம்பும் மரத்துண்டை தொடுவது போல்தான் உணர்த்தியது. மேலே இருந்த கந்தசாமி, சிவப்பிரகாசத்துக்கு கைகொடுத்து... அவர் மேலே உடம்போடு வர உதவினார். சிவப்பிரகாசமும் மேலே வந்தார். சர்ப்பத்தை காண வில்லை. சிவப்பிரகாசமோ மேலேயே கவனமாக இருந்ததில், அது எங்கே. எப்படிச் சென்றது என்பதை உணர முடியவில்லை. மேலே வந்த நிலையில் - அந்த உடலோடு கந்தசாமியை பார்த்தார்.

“ஐயா...”

“போய் கதவைத் திறந்து காரை ‘ஸ்டார்ட்’ பண்ணி வை. நான் சாமியோட இந்த திருமேனியோடு வர்றேன். அப்படியே நாம வைகை ஆத்தோரமா இருக்கிற என் வாழைத் தோட்டத்துக்கு போவோம்” என்றார். கந்தசாமி உடனே வேகமானார்.

“கந்தசாமி.... இந்த பெட்டியையும் எடுத்துக்கோ” - எனவும் அவர் அந்த மரப்பெட்டியைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டார். சிவப்பிரகாசம் பார்வை பரணி, குரு மீது விழுந்தது.

'நீங்க ரெண்டு பேரும் இந்த குழியை மூடிடுங்க. தரை யோட தரையா மட்டமா மண்ணை மெத்தி. தரையில ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற 'டைல்’சுக்கு பொருத்தமா ‘டைல்ஸ்’

பதிச்சிடுங்க” என்றார்.

“ஐயா... எங்களுக்கு இந்த பூசறது, பதிக்கிறது எல்லாம் தெரியாது”

“இப்ப செய்யுங்க. எல்லாம் தானாக வரும்.”

“ஐயா...”

“பரணி! உன் பூர்வ ஜென்ம புண்ணியம்தான்... நீ என்னைப் பார்த்தது. அதைவிட பெரிய புண்ணியம்... இதோ சாமியோட திருமேனியைப் பார்த்துட்டே இது பிணமில்ல... அதே நேரம் உயிருடம்பும் இல்ல. இதுக்கு பின்னால நீ புரிஞ்சுக்க நிறைய விஷயங்கள் இருக்கு. இந்த “ஸ்தூல சரீரம்" என் வாழைத்தோப்புல திரும்பவும் சமாதியாயிடும். ஆனா, வழிபாடு செய்யப்படும்.

சாமி விரும்பும்போது விரும்பற வடிவத்துல வந்து - போக அங்க வழி இருக்கும். இங்க கலி கொடுமையால இப்படியொரு வீடு வந்துடுச்சி. இது எதனாலங்கறதுக்கு பின்னாலயும் சரியான காரணம் இருக்கு. இப்ப என் எதிரில் பரணியா இருக்கற நீ, உன் பூர்வ ஜென்மத்துல கோவில் கட்டின ஆகமம் தெரிஞ்ச சித்தன். கருவூர் சித்தர் பரம்பரையில வந்தவன். உன் கைக்குள்ள கட்டடக் கலை இப்பவும் ஒளிஞ்சி இருக்கு. நீ செயல்படத் தொடங்கு. உன் கை தானாக வேகமா செயல்பட ஆரம்பிச்சிடும். பாவ - புண்ணியங்கள் மட்டுமல்ல... கற்ற வித்தைகளும் ஏழு ஜென்மத்துக்கு கூடவே வரும். மற்ற விஷயங்களை நாம வைகை ஆத்து தோப்புல பேசிக்கலாம். தப்பித் தவறிக்கூட இந்த ஜீவசமாதி அனுபவங்களை யார் கிட்டேயும் பகிர்ந்துக்காதீங்க. அதுக்கு காரணம் உண்டு. நீ இந்த தரையை சரி செய்த பிறகு பார்த்தா இங்க இப்படியொரு சம்பவம் நடந்ததே தெரியக்கூடாது. அதுக்குப் பிறகு கதவைப் பூட்டிக்கிட்டு புறப்படுங்க. நீங்க வெளியேறும்போது யாராவது பார்த்தாலும் கவலைப்படாதீங்க. போகும்போது திருப்பரங்குன்றம் சரவணப் பொய்கையில குளிச்சிட்டு – முருகப்பெருமானையும் வழிபட்டு, சந்நதி விபூதியைப்

பூசிக்கிட்டு புறப்படுங்க. உங்க வீட் லயும் வழக்கமா கேட்கற கேள்விகள் எதுவும் இருக்காது!” - நீண்ட விளக்கத்தோடு சிவப்பிரகாசம், சோமாஸ்கந்தரின் உடம்பை சுமந்தபடியே நடக்கத் தொடங்கினார்.

வெளியே தெருவில் நடுநசியின் இருள். தெருவிளக்கு மட்டும் எரிந்தபடி இருந்தது. கந்தசாமி, கார் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு நிற்க... தோளில் உடலோடு - வேதாளத்தை விக்கிரமாதித்தன் சுமந்து வந்தது போல வரவும் - எங்கிருந்தோ சில தெரு நாய்கள் குலைத்துக்கொண்டே வந்தன.

“ஐயோ சாமி... வேகமா ஏறுங்க” என்று பதறினார் கந்தசாமி.

“பயப்படாதே... எல்லாமே சாமிங்கதான்...” என்றார் சிவப்பிரகாசம். அந்த நாய்கள் அவரை ஏதோ சிலையைச் சுற்றுவதுபோல ஒரு சுற்று சுற்றி வந்துவிட்டு - எஜமானன் கட்டளைக்கு கீழ்படிவது போல ஒரமாக வரிசையாக நின்று கொண்டன.

“இனிமே உங்களுக்கெல்லாம் விமோசனம்தான்.” என்றபடியே உடம்பை பின் இருக்கையில் அப்படியே பொம்மை போல அமர்த்தினார் சிவப்பிரகாசம். மறுபுறம் வந்து கதவைத் திறந்து அருகில் அமர்ந்து கொண்டார். காரும் புறப்பட்டது!

உள்ளே மண்வெட்டியால் மண்ணை இழுத்துவிட்ட படி இருந்தான் பரணி.குரு முகத்தில் கேள்விகள்.

“என்னடா... வேகமா வேலையைப் பாரு”

“இல்ல. இதெல்லாம் நிஜம்தானா? இல்ல, நாம ரெண்டு பேரும் ‘மம்மி' மாதிரி ஏதாவது சினிமா பார்த்துக் கிட்டிருக்கோமா?”

"நீ கேட்டுட்டே! ஆனா, நான் மனசுக்குள்ள உன்னை மாதிரிதான் நினைக்கிறேன்.”

“அது சரி... அந்த பாம்பைப் பாத்தியா! அது எங்கே போச்சு?”

“நானும் உன் கூடத்தானே இருக்கேன்... என்னைக் கேட்டா..?”

“பரணி. இந்த சிவப்பிரகாசம்கூட நம்மால தாக்குப் பிடிக்க முடியும்ன்னு நினைக்கிறியா?”

“இது பயமா... இல்ல, வேற மாதிரி உணர்வா?”

“சொல்லத் தெரியல! போற போக்குல உன்னையும் வேற ஒரு சித்தர்ன்னு சொல்லிட்டுப் போறாரு நீ சித்தன்னா என்னால ஒரு சித்தனையும் மதிக்க முடியாது. நாம ரெண்டு பேரும் இந்த ஊர்ல கார்-பங்களான்னு வாழத் துடிக்கிறவங்க அழகான ஒவ்வொரு பொண்ணை பார்க்கும்போதும் முதல்ல பார்த்த பொண்ணை ஒதுக்கிட்டு, பாத்துக்கிட்டிருக்கற பொண்ணை பொண்டாட்டியா நினைக்கிறவங்க.

உலகம் பூரா சுத்தணும். எல்லாத்தையும் அனுபவிக்கணும். அம்பானி போன்றவர்களை எல்லாம் ‘ஓவர்டேக்' பண்ணணும். முடிஞ்சா உலக பணக்காரரான புருனேசுல்தானோடு உக்கார்ந்து விருந்து சாப்பிடணும். இப்படி பல கனவுகள் நமக்கு. இதெல்லாம் நடக்காதுன்னு நல்லா தெரிஞ்சாலும்... கற்பனைதானே? காசா பணமான்னு அந்த கற்பனையில மிதக்கிறவங்க நாம.

ஆனா, வேடிக்கையைப் பார்த்தியா? யாரதுன்னே தெரியாத ஒரு வீட்டுக்குள்ள சவக்குழியைத் தோண்டிகிட்டு இருக்கோம். இப்ப கொத்தனார் வேலையும் பார்க்கணும். கேட்டா... பூர்வ ஜென்ம புண்ணியம்னு சொல்றாரு பெரியவர். வேடிக்கையா இல்ல...?”

- குரு ஒரு வழியாக பேசி முடித்தான். பரணி வெறித்துப் பார்த்துவிட்டு தோளைக் குலுக்கிக்கொண்டு சிரிக்கத் தொடங்கினான்.

“என்னடா சிரிக்கிறே?”

“விடுடா... கொலையா பண்ணிட்டேன்? சிரிக்கத் தானே செய்தேன்?”

“பார்த்தியா நம்ம நிலை, நமக்கே சிரிப்பா இருக்கு”

“இல்லடா... இந்த சிரிப்புக்கு வேற அர்த்தம்”

“என்ன அர்த்தம்?”

“நல்லா யோசிச்சு பாரு. இப்படியொரு பங்களாக்குள்ள. இப்படி சமாதி இருக்கறது எவ்வளவு பெரிய ஆச்சரியம்?”

“என்ன ஆச்சரியம்! நம்ம தத்தனேரி சுடுகாட்டு பக்கம் வா. எப்படி ஆக்கிரமிப்பு செய்யலாங்கறதை நான் கண்ணாரக் காட்டுறேன்.”

“ஆக்கிரமிப்பை விடுடா. அது எனக்கு பெருசு இல்ல. சக்தி வாய்ந்த பாம்பு காவல் காக்கற ஒரு ஜீவ சமாதியையே மூடி பங்களா கட்டி இருக்காங்க. ஆனா, இவங்களை மகா சக்தி படைச்ச சித்தர் வேடிக்கைதான் பார்த்திருக்கார். கட்டும்போதே பயங்காட்டி துரத்தி இருக்கலாம். ஏன் அப்படிச் செய்யலைன்னு தெரியலை! அதே நேரம் அந்த உடம்பு, துளிகூட கெட்டுப் போகாம அப்படியே இருந்தது பார்த்தியா?”

“அது எனக்கு ஒண்ணும் ஆச்சரியமாபடலை. எகிப்துல ‘மம்மி’கள் அதாவது மூலிகை தைலம் பூசப்பட்டு பதப்படுத்தப்பட்ட பிணங்கள், ரெண்டாயிரம் வருஷமெல்லாம் அப்படியே இருக்கு. ஆனா, திடீர்ன்னு பாம்பு வந்துட்டுப் போனதுதான் பெரிய புதிரா இருக்கு!”

“நிறைய கேள்விகள் நமக்குள்ள இருக்கறது ஐயாவுக்கும் தெரியும். வா... நாம வேலையைப் பார்ப்போம். முடிச்சிட்டு வைகை ஆத்தோரமா உள்ள வாழைத்தோப்புக்கு போவோம். இங்க இருந்து எடுத்த அந்த ஏடுகள்ல என்ன இருக்குங்கறதுதான் எனக்கு இனி முக்கியம்”- பரணி தீர்மானமாக பேசியபடி மண்வெட்டியால் மண்ணை இழுத்தான்.

அப்போது…

***

# 23

‘நட்சத்திரங்களில் உத்திரம் - அஸ்தம் - சித்திரை இந்த மூன்றும் கன்னி ராசிக்குள் வருபவை. இதில் உத்திரத்துக்கு அரளியும், அஸ்தத்துக்கு காட்டு மா மரமும், சித்திரைக்கு வில்வ மரமும், 'விருட்ச சாஸ்திரம்' பரிந்துரைக்கும் மரங்களாகும். அடுத்து வரும் துலா(ம்) ராசி மண்டலத்துக்குள் சுவாதி, விசாகம், அனுஷம் என்கிற நட்சத்திரங்கள் வருகின்றன.

இதில் சுவாதிக்கு மருத மரமும், விசாகத்துக்கு விலா மரமும், அனுஷத்துக்கு மகிழ மரமும் நடப்பட வேண்டியவையாகும். இந்த நட்சத்திரங்களை உடையவர்கள் இம்மரங்களை எதாவது ஒரு கோவிலில் நட்டு அதுவும் தழைத்து வளரும் நிலையில் அந்த மரமானது கோவிலில் இருந்து வெளிப்படும் தெய்வீகக் கதிர்கள்பட்டு காலகாலத்துக்கும் பாதுகாப்புடன் இருக்கும்.

அத்துடன் அம்மரங்களில் தங்கி கூடு கட்டும் பறவைகளாலும், மர நிழலில் இளைப்பாறுபவர்களின் மனச்சாந்தியாலும், அந்த மரங்களால் ஆற்றுப் படுத்தப்படும் காற்றின் போக்காலும், அதை நட்டு வளர்த்தவர் அதற்குண்டான எல்லா நன்மைகளையும் அடைவார். குறிப்பாக நல்ல மனைவி, பிள்ளைச் செல்வம், சொந்த வீடு, போதிய அளவு தங்கம், வழி காட்டும் குரு, நல்ல பெயர், உடல் ஆரோக்கியம் என்று சப்த செல்வங்களையும் உறுதியாகப் பெறுவார்!"

- **வன வியாசம்**

தோண்டிய குழிக்குள் மண்ணை இழுத்துப் போட்டு வேகமாக மூடியவன், அதை மிதித்து நன்றாக அமுக்கினான். அந்த வீட்டில் ஏற்கெனவே பதிக்கப் பட்டிருந்த ‘டைல்ஸை’ பார்த்து கந்தசாமி புது ‘டைல்ஸ்’ வாங்கி வந்திருந்தார். குரு அதை தூக்கி வந்து அப்படியே போட்டபோது பரணி கோபப்பட்டான்.

“முட்டாள்... கீழே சிமெண்டுக் கலவையைப் போட்டு அதன்

மேலே ‘டைல்ஸை’ப் பரப்பணும். அப்படியே போடக் கூடாது” என்றான். குரு ஆச்சரியப்பட்டான். பரணியோ கலவையை தயார் செய்தான். தலா அரை மூட்டை மணல் - சிமெண்டு, பூசு கரண்டி, மட்டக் கம்பு என்று எல்லாம் இருந்தது. மட்டக் கம்பால் மண் பரப்பை சமப்படுத்தி மேலே தண்ணீர் விடவும், பல அங்குலங்கள் அது இறங்கியது.

“என்னடா... பல வருஷமா கட்டடம் கட்டுறவன் மாதிரி ‘மளமள’ன்னு செய்யறே! ஐயா சொன்ன மாதிரி நீ, கோவில் கட்டின கருவூர் சித்தர் வம்சத்துல வந்தவன்கறது ஒருவேளை உண்மையோ?” என்று கேட்டான்.

பரணி அதற்கெல்லாம் பதில் கூறவில்லை. அடுத்தடுத்து செய்ய வேண்டியதைச் செய்தான். ஹாலில் கடிகாரம் சத்தம் போட்டது. பார்த்தபோது மணி ஐந்து!

“பரணி. விடியப்போகுது.”

“நமக்கா? இல்ல... பொழுதுக்கா?”

“ஹை... இந்த நிலையிலேயும் ரசனையா எப்படிடா பேச முடியுது?”

“என்னமோ தோணிச்சு... கேட்டேன்” - பதிலோடு கலவையைப் பூசி முடித்து ‘டைல்ஸ்’களை மேலே பார்த்துப் பார்த்து வைத்து - ஏற்கெனவே உள்ள தரைப் பரப்புக்கு மட்டமாக கவனமாக மெத்தினான். பின், ஒரு துணியால் அழுந்த துடைத்துவிட்டு சற்று விலகி நின்று பார்த்தபோது, அது தோண்டிப் பூசப்பட்ட இடம் என்று யாரிடம் சொன்னாலும் நம்ப மாட்டார்கள். அப்படியொரு நேர்த்தியோடு இருந்தது.

குரு, வாயைப் பிளந்துவிட்டான். பின்னர், குளியலறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு புறப்பட தயாராயினர்.

“ஐயா, சரவணப் பொய்கையில குளிச்சிட்டு முருக தரிசனம் பண்ணிட்டு வரச் சொன்னாரு நேரா சரவணப் பொய்கைக்கு போகப் போறோமா இப்ப?”

- குரு கேட்கவும், பரணியிடம் மவுனம்.

“என்னடா பதிலைக் காணோம்?”

“இல்ல... ஆனானப்பட்ட கங்கை ஆற்றையே நாம சாக்கடை ஆக்கிட்டோம்.”

“அப்ப நேரா முருகனை மட்டும் கும்பிடுவோம்கறியா?”

“எதுக்கு? சாமியும்தானே இப்ப வியாபாரிகள் நடுவுல மாட்டிக்கிட்டிருக்கார்?”

“புரியற மாதிரி சொல்லுடா?”

“சாமிய வெச்சு ஆளுக்கு தகுந்த மாதிரி வசூல் பண்றது நாட்டுல நடக்குதா. இல்லையா?”

“அது பெரும்பாலும் எந்த கோவில்லதான் இல்ல? அங்க இருக்கிறவங்க பொழைக்க வேண்டாமா?”

“அப்ப அவங்கல்லாம் நம்மளாலதானே பொழைக்கறாங்க... சாமி எங்க அவங்களுக்கு படி அளக்கறார்?”

“என்னடா... பகுத்தறிவுவாதி மாதிரி பேச ஆரம் பிச்சிட்டே?”

“கேள்விக்கு பதில் சொல். சாமி இருக்கறது நிஜம்னா... அவர் பக்கத்திலேயே இருக்கிறவங்கதானே முதல்ல நல்லா இருக்கணும்? நாம எதாவது ஆசையா கொடுத்தாலும், ‘எனக்கு கடவுள் துணை இருக்கார். நீங்க எதுக்கு தர்றீங்க?’ன்னுதான் கேட்கணும்!”

“முடிவா என்னதான்டா சொல்ல வர்றே?”

“கோவில் - அப்புறம் அங்க இருக்கிற சாமிங்க விஷயத்துல எனக்குள்ள இந்த மாதிரி நிறைய கேள்விகள் தான் இருக்கு. மத்தவங்க மாதிரி எதையும் கவனிக்காம கோவிலுக்குப் போய் சாமியைப் பார்த்து, ‘அதைக் கொடு, இதைக் கொடு’ன்னு கேக்க பிடிக்கல. எனக்கு எப்பவுமே இந்த ஜனங்க மேல மரியாதை கிடையாது. பயங்கர சுயநலம் பிடிச்சவங்க. இதுல நான், என் அம்மா, அக்கான்னு எல்லாரையும் சேர்த்துதான் சொல்றேன்.

இவங்களுக்கு எதைக் கண்டாலும் பயம். தப்பு எங்க நடந்தாலும் தட்டிக் கேளுன்னு ஒரு அப்பா - அம்மாவாவது சொன்னது உண்டாடா? ‘உனக்கெதுக்கு ஊர் வம்பு?’ன்னு கேட்க மட்டும் அவங்களுக்கு தெரியும்.

பத்து வருஷத்துக்கு மேல ஆச்சு நாம வசிக்கிற தெருவுல தார் ரோடு போட்டு. எவ்வளவு பள்ளம்... எவ்வளவு மேடு? ஒவ்வொரு நாளும் ‘பைக்’ல போகும்போதும், வரும் போதும் வண்டி படுறபாடு உனக்கும் தெரியுமே? நாம ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுத்த கவுன்சிலரை பார்த்து இப்ப ரோடு போடப் போறியா.... இல்ல இந்த ஏரியாவை விட்டே போறியான்னு எத்தனை பேர் கேட்டிருப்போம்?”

“என்னடா பரணி... இப்படி தீவிரவாதி மாதிரி பேச ஆரம்பிச்சிட்டே?”

“அட பாவி... நானே உனக்கு தீவிரவாதி மாதிரி தெரியறேனா. கலிகாலம்னு சொல்றது இதைத்தானோ?”

“இப்ப எதுக்குடா இந்த பேச்செல்லாம்? நேரா ‘போவோம்’னு ஒரு வார்த்தையில் சொல்லிட்டு போ.”

“அப்படி சொன்னா நீ ஏன் - எதுக்குன்னு கேட்க மாட்டியா?”

“இப்பவும் கேட்பேன். நாம குளிக்கலை - சாமி கும்பிடலைன்னு ஐயா கண்டுபிடிச்சு கேட்டா என்ன செய்வே?”

“அது என் ‘பர்சனல்’ விஷயம் சாமி. உங்க வேலைக்கும், அதுக்கும் சம்பந்தம் இல்லைன்னு சொல்வேன்.”

“அப்ப நீ ஒரு முடிவோடதான் இருக்கே?”

“அதுல என்ன சந்தேகம்?”

“ஆசை இல்லாம ஆடுறவ - கற்பைப் பத்தி பிரமாதமா பேசினா எப்படி இருக்குமோ. அப்படி இருக்குடா உன் பேச்சு.

“நீ என்ன சொல்ல வர்றேன்னு எனக்கு புரியுது. ஐயா ஒரு ஆன்மீகவாதி. அவரோட சிஷ்யனா இருந்துகிட்டு

ஆன்மீகத்தை கேள்வி கேட்கறதை நீ முரண்பாடா நினைக்கிறே?”

“இல்லையா பின்னே?”

“இல்லை... எதையும் ஏன் - எதுக்கு - எப்படின்னு கேக்கறதுல தப்பே இல்லை. கேட்டதாலதான்... ஆதிவாசியா கூன் விழுந்த நிலையில இலையை சுத்திக்கிட்டு திரிஞ்ச மனுஷன் இன்னிக்கு செவ்வாய்க்கிரகத்தையே ஆராய முடிஞ்சிருக்கு. அப்படி கேக்க முடியாத விலங்குகள், காலம் காலமா அப்படியே இருக்கு”

“யப்பா. போதும்டா! புறப்படுவோமா.?”

- குரு கைகளை குவித்து அவனைப் பார்த்து கும்பிட்டபடியே கேட்டான். பரணியும் சிரித்தபடியே புறப்பட்டான்.

சோழவந்தான், கொடிமங்கலம் என்று வைகை ஆற்றோரமாக குருவித்துறை வரை போன குரு, பரணி இருவரின் மோட்டார் ‘பைக்’கும் சிவப்பிரகாசத்தின் வாழைத் தோட்டத்தை கண்டறிந்து அங்கே போய் நின்றபோது அவர் அங்கே இல்லை.

அதே நேரம் அங்கு ஒரு பெரிய வில்வ மரத்தடியில் சமாதி ஒன்று உருவானது. கந்தசாமி மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். குரு, பரணி வரவும் புன்னகையோடு ஏறிட்டார். பார்வையே... ‘எல்லாம் நல்லபடியாக முடிந்ததா?’ என்று கேட்டது. குரு, அவரிடம் பங்களாவின் பிரதான கதவு மற்றும் ‘மெயின் கேட்” சாவிக் கொத்தை தந்தான்.

“ஐயா எங்க?”

“அப்படியே போங்க. ஆத்தோரமா ஆத்த பார்த்த மாதிரி உக்காந்து தியானம் பண்ணிக்கிட்டு இருப்பாரு” - கந்தசாமி கைகாட்டினார். இருவரும் நடந்தனர். வாழைத் தோப்பில் காலைத் தென்றல். பல மரங்கள் குலை போட்டு சாய்ந்திருந்தன. சில குலைகள் பழுத்து - பழங்கள் மஞ்சளாக கண்ணைப் பறித்தன. குருவுக்கு நாக்கில் எச்சில்

ஊறியது. ஒரு பழத்தை பறித்து சாப்பிட்டான். அபார இனிப்பு. பரணியும் கவனித்தான்.

“பசிக்குதுடா.... விடிய விடிய கொத்தனார் வேலை பார்த்திருக்கோம். ஞாபகம் வெச்சுக்கோ.”

“நான் இப்ப ஒண்ணும் சொல்லலியேடா”

“இல்ல ஒரு மாதிரி பார்த்தியே... அதான் அப்படிச் சொன்னேன்.”

“பசிச்சா கேட்டு சாப்பிடணும். திருடக்கூடாது.

“டேய்... இது நம்ம ஐயாவோடதோட்டம்.”

“மூடிக்கிட்டு வா”

- இருவரும் சிவப்பிரகாசம் அமர்ந்திருந்த மரத்தடியை அடைந்து நின்றனர். நேர் எதிரில் வைகை ஆற்றின் அகண்ட பகுதி தெரிந்தது. தண்ணீர் இல்லை. நடுவில் சருகுகளாக தென்பட்டன. வைகையைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. சிவபெருமான் பூமியில் கை வைக்க, அதனால் பீறிட்டு உருவான ஆறு, சிவபெருமானே இப்போது நேரில் வந்து பார்த்தால் தன் கைராசியை நொந்து கொள்ளக்கூடும். இந்த மனிதர்கள் கடவுளுக்கே கெட்ட பெயர் வாங்கித் தந்துவிட்டார்கள்.

அவர்கள் வரவும் சிவப்பிரகாசமும் கண் விழித்தார் அவர் அருகில் அந்த மரப்பெட்டியும் இருந்தது. புன்னகைத்தார். எதிரில் உட்காரச் சொன்னார். குரு வேகமாக அமர்ந்தான். அவ்வளவு கால்வலி பரணி, ‘பரவால்லைய்யா" என்று நிற்பதைத் தொடர்ந்தான்.

“உட்காருப்பா... காலை மடக்கி உட்காரும்போது சுவாசம் மாறும். அதனால ‘ஆக்சிஜன்’ அளவு கொஞ்சம் கூடும். உட்கார்ற இடத்தோட மின்காந்தம், முதுகுத் தண்டுல ஏறி தலையை அடையும். அதனால உள் எண்ணத்துல குழப்பமோ இல்லை. அசூயையோ இருந்தா அது மெள்ள சீராகத் தொடங்கும்.”

இந்த விளக்கம் அவனை மதிப்பாக அவரைப் பார்க்க வைத்தது. எதுவும் பேசாமல் உட்கார்ந்தான். குரு, கால் முட்டியை மடக்கி இரு கைகளால் பிடித்தபடி அமர்திருந்தான்.

“நீ அப்படி உட்காராதே! சம்மணம் போட்டு உட்கார் முடிஞ்சா பத்மாசனம் போடு” என்றார்.

“அதெல்லாம் ஒரு ஆசனமும் தெரியாதுய்யா”

“இனி தெரிஞ்சிப்பீங்க. பத்மாசனம் ரொம்ப விசேஷமானது. போகட்டும். அங்க எல்லாம் நல்ல படியா முடிஞ்சுதா?”

“ஆமாங்கய்யா. பரணி வரையில நீங்க சொன்னது ரொம்ப சரி. ஒரு கைதேர்ந்த கொத்தனார்கூட அவ்வளவு சரியா ‘டைல்ஸ்’ பதிச்சிருக்க முடியாது.”

“சந்தோஷம். ஆமா... கோவிலுக்கு போகல போல இருக்கே?”- அவர் சரியாக கேள்வியைப் போட்டார்.

“போகப் பிடிக்கலய்யா” - துளியும் தடுமாற்றம் இல்லாமல் பரணி அதற்கு பதில் சொன்னான்.

“அப்ப... பிடிச்சாதான் எதையும் செய்வியா நீ?”

“ஆமா.... அதுதானே சரி. அப்படித்தானே எல்லாரும் நடந்துக்கிறாங்க”

“அப்படியா?”

“என்ன அப்படியான்னு கேக்கறீங்க. நீங்களே உங்களுக்கு எது பிடிச்சிருக்கோ அதைத்தானே செய்வீங்க?”

“அப்ப ஒரு குழந்தை, பள்ளிக்கூடத்துக்கு அழுதுக்கிட்டே போகுது. அது பிடிச்சா. பிடிக்காமலா?”

- சிவப்பிரகாசத்தின் கேள்வி. பரணியை கொஞ்சம் யோசிக்க வைத்தது!

***

# 24

நட்சத்திரங்களில் கேட்டைநட்சத்திரம்,நட்சத்திர வரிசையில் பதினெட்டாவது நட்சத்திரமாகும். அந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய், புதன் என்னும் இரு கிரகங்களும் பெரும்பாலும் நட்போடும், பலத்தோடும் அமைந்துவிடும். இந்த நட்சத்திரத்தின் தெய்வக்கூறு மகா விஷ்ணுவையும், ராசிக்கூறு முருகப் பெருமானையும் அதிபதிகளாக கொண்டுள்ளது. ராசிக் கட்டத்தில் எட்டாவது வீட்டை இது பிரதிபலிக்கும். பெரும்பாலும் சந்திரன் நீசனாகிவிடுவான். இதனால் மனதில் சலனம் இருக்கும். புதன் இவர்களுக்கு வலிமையாக அமைந்துவிட்டால், அந்த சலனம் நல்ல கற்பனையாக மாறி கலைஞர்களாக அவர்களை ஆக்கிவிடும். செவ்வாய் வலிமையாக அமைந்து விட்டால். ராணுவம், போலீஸ் என்று கடமையாற்றுவார்கள்.

இந்த நட்சத்திரக்காரர்களுக்கு தூய்மை உணர்வு அதிகம் இருக்கும். சுற்றுச்சூழலை ரசனையோடு வைத்துக் கொள்வார்கள். வாழும் நாளில் எல்லா சிறப்பும் பெற்றிட இவர்கள் பராய் எனும் மரத்தை நட்டு வளர்க்க வேண்டும். கருங்காலியும் நடலாம். அது இவர்கள் ராசிக்கு உரியது.

அடுத்த நட்சத்திரம் மூலம்! கல்விக்கு அதிபதியான கலைவாணி, ராமபக்தனான ஆஞ்சநேயன் போன்றோர்.இந்த நட்சத்திர கதியில் பிறந்தவர்கள். இதன் சிறப்பு.

- **வன வியாசம்**

சிவப்பிரகாசத்தின் சாதுரியமான பதில், பரணியை தீவிரமாகவே யோசிக்கச் செய்தது. ‘ஒரு பிள்ளை, பள்ளிக்கூடம் செல்ல அடம்பிடிப்பது இயற்கையான மருட்சி அதைப் போக்கி பள்ளிக்கு அனுப்பி படிக்க வைப்பது பெற்றோர்களின் கடமை. இது எப்படி தனக்கான ‘பாய்ன்ட்’ ஆகும்?”

“என்னப்பா... நான் ரொம்ப சாதுரியமா பேசறதா நினைக்கறே

போல தெரியுதே?” - சிவப்பிரகாசம் அவன் மவுனத்தைக் கலைத்தார்.

“ஆமாய்யா! சின்னப்பிள்ளை பள்ளிக்கூடம் போறதோடு என்னை ஒப்பிடுறது சரியில்லைய்யா.”

“தர்க்க வாதம் பண்ணும்போது இப்படி பல உதாரணங்களைச் சொன்னாத்தானே புரியும்?”

“கருத்தளவுல இதை ஏத்துக்கிறேன். கடவுள் விஷயத்துல எனக்கு நம்பிக்கை ஏற்படுறது சாத்தியமில்லை. நான் கடவுளை பத்தி நிறையவே யோசிச்சு முடிச்சவன். படங்கள்ல பாக்கற மாதிரியெல்லாம் கடவுள்ங்கறவர் இருக்க முடியாதுங்கறதுதான் என் முடிவு....”

“எதை வெச்சு அப்படி சொல்றே...?”

“உலகத்துல எவ்வளவோ உயிரினங்கள். யானை, அனகோண்டா, டைனோசரைவிட பெரியது கடல்ல வாழற திமிங்கலம். கடல் நீர்தான் உலகத்துல மூணு பங்கு. நாம் வசிக்கற நிலப்பரப்பு ஒரு பங்குதான். அப்படிப்பட்ட கடல்ல வாழற மீன் இனத்தைச் சேர்ந்த ஒரு திமிங்கலமா கடவுள் இருக்கலாமே? அவர் வெறும் எழுநூறு கோடி பேர் கொண்ட மனிதனாதான் இருக்கணுமா? மற்ற இனத்தைவிட பல ஆயிரம் மடங்கு அதிகம் கொண்ட மீன் இனத்துல ஏன் அவர் இருக்கக்கூடாது?”

“தாராளமாக இருக்கலாமே... ஒரு திமிங்கலத்துக்கு புத்தின்னு ஒண்ணு இருந்தா அது கடவுளை தன் வடிவத்துலதான் கற்பனை செய்து பார்க்கும்....”

“அப்ப கடவுள் ஒரு கற்பனைன்னு நீங்களே ஒத்துக்கி நீங்களா?”

“தம்பி... இல்லாத ஒண்ணை கற்பனை செய்து பார்க்க முடியுமா?”

“இருந்தா ஏன் அந்த சாமி காட்சி தர மாட்டேங்கிறார்?”

"அப்படின்னு யாருப்பா சொன்னது?”

“ஓ... அப்ப காட்சி கொடுக்கறாரா?”

“நீ எதிர்பாக்கற விதத்துல அவர் காட்சி தரலைன்னா, அவர் இல்லைன்னு பொருள் கிடையாதுப்பா...”

“சரி, அவர் எந்த விதத்துல காட்சி தர்றாருன்னு சொல்லுங்க பார்ப்போம்?”

“மழை, காத்து, உதிக்கிற சூரியன், நிலா... இதெல்லாம் என்ன?"

“இயற்கையை சாமியாக்கி நீங்களும் பூ சுத்தா தீங்கய்யா.”

“அது எப்படிப்பா இயற்கை எல்லா விதத்துலயும் ஒரு கட்டுப்பாட்டோடையும், மிகச் சரியாகவும் இயங்க முடியும்?”

“அப்ப அந்த இயக்க சக்திதான் கடவுளா?”

“இப்ப என்ன... அதுக்கு உன் விருப்பத்துக்கு ஒரு பேர் வெச்சு கூப்பிட்டு போ. யார் உன்னை தடுக்க முடியும்.?”

“எதுக்குங்க! அதான் இயற்கைன்னு பளிச்சின்னு ஒரு பேர் இருக்கே... நான் வேற புதுசா வைக்கணுமா?”

“சந்தோஷம். நல்லா கேட்டுக்கோ... இந்த இயற்கை தான் அந்தந்த மதத்தினருக்கு கடவுள்.”

“அய்யா...இங்க நான் கேக்கற கேள்விகள், நீங்க சொல்ற பதில்கள் - இந்த சமுதாயத்துல ஒண்ணும் புதுசு இல்லை கடவுளை விட்டுடுவோம். அவர் இருந்தா என்ன... இல்லாட்டி என்ன? நான் உங்க வரையிலயே நிறைய கேள்விகளோ இருக்கேன். அதுக்கு நீங்க பதில் சொன்னா போதும்"

“சரி?... கேளு...”

“உண்மையில நீங்க யார்? உங்களால எப்படி ஒரு ‘சாட்டிலைட்' மாதிரி தூரத்துல இருக்கறதை உணர்ந்து சொல்ல முடியுது?”

“என்னால மட்டுமில்ல பரணி. உன்னாலயம் சொல்ல முடியும். புலனடக்கம்கற ஒண்ணு அதுக்கு தேவை”

“அப்படின்னா?”

“உன் உடம்பும், மனசும் நீ சொன்னபடி கேட்கணும். கேட்குமா..?”

“அப்ப என் உடம்பு என் வசம் இல்லைன்னு சொல்றீங்களா?”

“பின்ன... இரவு பூரா நீ கண் விழிச்சிருக்கே... அப்படி போய் கொஞ்ச நேரம் காத்தாட உட்கார்ந்தா, உன்னை மீறி தூக்கம் வருமா - வராதா?”

“கட்டாயம் வரும். ஆனா, இது உடம்போட இயல்பு ஆச்சே?”

“தப்பா சொல்றே பரணி. நீ உன் உடம்பை கொஞ்சமும் புரிஞ்சிக்காதவன். உடல் உறுப்புகள்ல எதுக்கு பலம் அதிகம்...? பிறக்கும்போதே எது பலவீனமானதுன்னு தெரிஞ்சிக்காதவன் நீ இந்த உடம்போட விருப்பப்படிதான் எப்பவும் நடந்துருக்கே. உன் விருப்பப்படி இந்த உடம்பை ஆட்டி வெச்சதே இல்லை”

“உண்மைதான். எதுக்கு நான் ஆட்டி வைக்கணும்?”

“சித்த தத்துவப்படி உடம்புங்கறது உயிர் வாழற வீடுப்பா. கட்டிக்கற வீடுகளையே நாம பலவிதமா - பல பல வசதிகளோடு கட்டிக்கறோமே... உயிர் வாழுற வீட்டையும் உறுதியான வீடா வெச்சுக்க வேண்டாமா?

“அதாவது நோய் நொடி இல்லாம ஆரோக்கியமா - உடற்பயிற்சி செய்து வெச்சுக்கறதைச் சொல்றீங்களா?”

"அதை மட்டும் சொல்லல. அதற்கு அப்பாலும் இந்த உடம்புக்கு பின்னால நாம தெரிஞ்சுக்க பல சூட்சுமங்கள் இருக்கு...”

“நானும் கேள்விப்பட்டிருக்கேன். சித்தர்கள் பலர் பற்றி படித்தும் இருக்கேன். இந்த கூடுவிட்டு கூடு பாயறது, தண்ணி மேல நடக்கறது, மனசுல நினைக்கறதை அப்படியே

முகத்தைப் பார்த்து சொல்றதுன்னு நிறைய உட்டாலங்கடி விஷயங்களை கேட்டிருக்கேன்.”

“ஓ... அதெல்லாம் உன் வரையில உட்டாலங்கடியா?”

“பின்ன... அது என்ன எல்லாருக்கும் விளக்க முடிஞ்சு விஞ்ஞானமா?”

“தம்பி... சித்த ஞானம் முன்னால உன் விஞ்ஞானம் ஒரு கைக்குழந்தைப்பா. அது தெரியுமா உனக்கு?”

“அய்யா.... நீங்க இப்படிதான் உங்களை விட்டுக் கொடுக்காம பேசுவீங்க.”

“நான் பொய் பேசலை பரணி எண்பது வருஷமா கெட்டுப்போகாத ஒரு சித்த உடம்பை ஜீவசமாதிக்குள்ள பார்த்தவன். நீயா இன்னும் சித்த ஞானத்தை சந்தேகப்படுறே?”

“அது ஒண்ணும் பெரிய விஷயமில்லைய்யா... அதுக்கு பின்னால ஏதாவது மூலிகைச் சாறு காரணமா இருக்கணும். அது தெரிஞ்சா அந்த சாறைக் கொண்டு எல்லா உடம்பையும் அதேபோல பாதுகாக்கலாம்.”

“சரி... நீ இப்ப முடிவா என்ன கேட்க விரும்பறே?”

“சமாதிங்கறது உயிரில்லாத பிணமான மனித உடம்புங்கற குப்பைகளை புதைக்கற இடம். அது எப்படி சக்தி உள்ள இடமாகும்?”

“அப்புறம்....?”

“எப்படி நீங்க அந்த திருட்டுப் பசங்க ஒளிஞ்சிருந்த இடத்தை துல்லியமாச் சொன்னீங்க?”

“அப்புறம்?”

“ஏன் நீங்க ராணுவத்துல சேர்ந்து நம்ம நாட்டுக்கு எதிரானவங்களை கண்டுபிடிச்சு கொடுத்து சேவை செய்யக் கூடாது?”

“இன்னும் கேள்வி இருக்கா?”

“நிறையவே இருக்குய்யா. இப்ப நான் கேட்ட கேள்விகளுக்கு முதல்ல பதில் சொல்லுங்க. பிறகு அடுத்த கேள்விகளைக் கேட்கறேன்.

“தம்பி... சித்தர்கள் வரையில தீர்க்கமா ஒரு கருத்து உண்டு. உன்னைப் போல எல்லாமே ஏமாத்து வேலைங்கிற எண்ணத்தோடு அவங்ககிட்ட வர்றவங்களை அவங்க விரும்பதில்லை.”

“சித்தர்கள் மட்டுமாய்யா... ஒரு பிரபலம், அரசியல்வாதி - இப்படி யாரா இருந்தாலும் தங்களுக்கு எதிரான கருத்து உள்ளவங்களை யாரும் விரும்பறத்தில்லையே.”

“தம்பி... மாற்றுக் கருத்துக்கும், எதிரான கருத்துக்கும் நிறைய வித்தியாசம் உண்டு... புரிஞ்சுக்கோ. உன் வயசுக்கு நீ இப்படி பேசறதுல எனக்கு வருத்தமில்லை. உனக்கு இல்லாத அனுபவ அறிவும், மூன்றாம் பார்வையும் எனக்கு இருக்கிறதால சொல்றேன். எல்லா விஷயங்களையும் கேள்வி கேட்டு மட்டுமே புரிஞ்சுக்க முடியாது. சகல உணர்வுகளையும் வார்த்தைகளால சொல்லிடவும் முடியாது.”

"அப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க?”

“நான் சொல்றதை செய்... பேசாதே. உனக்குள்ள நீ எவ்வளவு வேணா பேசிக்கோ. நிச்சயமா எல்லா கேள்விகளுக்கும் உனக்கு பதில் கிடைக்கும்.”

“ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கிறேன். அதுக்காவது தெளிவா - நேரான பதிலை சொல்லுங்க”

“கேளு.”

“உங்க செயல்பாடு எதுவும் ஏமாத்து வேலை இல்லையே?”

“இல்லப்பா... ஏமாற்றத்தை ஈ, எறும்புகூட விரும்பறதில்லைங்கறதுதான் உண்மை. ஒரு எறும்பு முன்னால சக்கரையைத் தூவிட்டு, அதை எறும்பு சாப்பிட

முடியாத படி செய்து பாரு. அதுக்கும் கோபம் வரும். மனிதனை மிக அதிகம் பாதிக்கிற ஒரு விஷயம்தான் இந்த ஏமாற்றுவது.

ஏமாறும் போது ஒவ்வொருவரும் தன்னை ஒரு முட்டாளாகவும், பலம் இல்லாதவங்களாகவும் உணருவதுதான் காரணம். என் வரையில ஏமாறுவதும் தப்பு, ஏமாற்றுவதும் தப்பு"

“உங்க விளக்கத்துக்கு நன்றி. நாங்க இப்ப என்ன செய்யணும்?”

“வீட்டுக்கு புறப்படு. குளி. நல்லா சாப்பிடு. ஒய்வெடு உன் அம்மாவை என்னை வந்து பார்க்கச் சொல். மற்ற விஷயங்கள் தானாக நடக்கும்.”

“ஏதோ வனத்துக்கு போகணும் -"அது அபாய வனமா இருக்காது... பிருந்தாவனமா இருக்கும்’னு சொன்னீங்களே?”

“அந்த வனத்துக்கு உன் அம்மாவே உன்னை போக சொன்னா உனக்கும் ரொம்ப வசதியா இருக்கு இல்லையா?”

“ஓ... அப்படி போகுதா கதை.”

“அந்த வனத்துலதானே பரணி, இப்ப உன்னோட அப்பாவும் இருக்காரு”

- அவன் அப்பாவைப் பற்றி சிவப்பிரகாசம் கூறவும் விக்கித்துப் போய் பார்த்தான்.

“என்ன பாக்கறே... உன் அப்பா ஒரு தவறான மனிதர் கையில சிக்கி தவறா பல செயல்களை செய்துக்கிட்டிருக்கார். அதைத் தடுத்து அவரை நீ மீட்க வேண்டாமா?”

“என் அப்பாவை அப்ப உங்களுக்கு தெரியுமா சாமி?”

“உன் அம்மா வந்து பேசிட்டுப் போன பிறகு தியானத்துல இதை கண்டறிஞ்சேன்ப்பா.”

“எனக்கு அவரை கண்டுபிடிக்கறது நோக்கமே இல்லை சாமி. அவர் காசியில சுத்திக்கிட்டு திரியறதாதான் என் காதுக்கு தகவல் வந்தது.”

“காசிக்கு உன் அப்பா போன காரியமே வேற. அவர் இப்ப தாமோதர பட்டத்திரிங்கற மாந்திரீகனோட பிடியில இருக்கற நபர். அவருக்கு தான் யாருன்னே தெரியாது. அதான் உண்மை”

“அப்ப வனத்துலதான் இருக்காரா?”

“ஆமா. நீ உணர்ச்சிவசப்படாதே. இங்க நான் சொன்ன எதையும் உன் சகோதரிகள்கிட்ட பகிர்ந்துக்காதே. புறப்படு”

- பரணி அரைமனதாய் புறப்பட்டான். ஒரு சில விநாடிகளுக்குள் அவனிடம் தலைகீழ் மாற்றம். குரு அவனைத் தொடர்ந்தான்.

“பரணி... நீ கேட்ட பல கேள்விகள், நான் கேட்க நினைச்சவை. எனக்கு அவசியமே இல்லாம செய்துட்டே.”

“என்ன புண்ணியம்... எதுக்கும் பதில் தெரியலியே?”

“இதோ பாரு... நான் படிச்ச ஒரு பழமொழியை சொல்றேன். ‘ஒரு கடலோட ஆழம் தெரியணும்னா ஒண்ணு அதுல இறங்கினவங்க சொல்றதை நம்பணும். இல்லை... நாமளே இறங்கிப் பாத்துடனும்”

“நாமதான் இறங்கிப் பாக்கப் போறோமே?” - குரு சரியாகவே கேட்டான்!

***

# 25

மூல நட்சத்திரமானது அனுமன், சரஸ்வதி என்று இரண்டு தேவதா ரூபங்களை ஞாபகப்படுத்துகிறது. பெண்கள் வரையில் இந்த நட்சத்திரம் சற்று பின்னடைவாக பார்க்கப்படுவது மிகவே தவறாகும்.

ஓர் உயிர் இந்த பூமியின் பிரபஞ்ச விசைக்கு உட்பட்ட காற்றை தன் உடலுக்குள் தனது முயற்சியால் முதன் முதலாக இழுக்கும்போது... பிரபஞ்ச வெளி மீது எந்த நட்சத்திர பார்வையும், கதிர்வீச்சும் உள்ளதோ அவற்றின் அம்சங்கள் அந்த உயிரிடம் எதிரொலிக்கத் தொடங்கும்.

இது ஒரு விஞ்ஞானப்பூர்வ செயல்பாடே!

ஆனால் இந்த நட்சத்திரக் கதிர்களை கண்டறியும் கருவிகள் கண்டுபிடிக்கப்படாததால் இக்கருத்து நம்பிக்கை அடிப்படையிலேயே உள்ளது.

மூலநட்சத்திரத்தில் பிறப்பவர்களிடம் ஞானத்தின் மூலக் கூறுகள் கொஞ்சமாவது இருக்கும். இவர்களில் ஆன்மிகம் பேசுபவர்களும் சரி, நாத்திகம் பேசுபவர்களும் சரி.... மேலெழுந்தவாரியாக பேச மாட்டார்கள். அதன் அடி ஆழம் வரை செல்ல இவர்களால் முடியும்.

ஆச்சா மரம் மற்றும் அரச மரத்தை நட்டு வளர்ப்பது இவர்களுக்கு மிகுந்த பலத்தை தரும். பொதுவாக அரச மரம், மரங்களில் பல அற்புதத் தன்மைகள் கொண்டது. பகல் பொழுதில் இதன் காற்றை சுவாசிப்பது, உடல் நலத்துக்கு மிகுந்த சிறப்பான ஒன்று. அதிலும் பெண்கள் வரையில், இது கருப்பையை சுத்தமாக்கி கருவில் வளரும் பிள்ளைக்கே நல்ல மனவளத்தைத் தந்துவிடும்.

ஓரிடத்தில் அமர்ந்த நிலையில் சுவாசிக்கும் போது இது ரத்தத்தில் கலக்கும் அளவுக்கும், நடந்தபடி சுவாசிக்கும்போது ரத்தத்தில் கலக்கும் அளவுக்கும் மிக வேறுபாடு உண்டு. எனவேதான் இதை பெண்கள் வலம் வர வேண்டும் என்றனர்.

மூலத்தை தொடர்ந்து பூராடம், உத்திராட்ம் நட்சத்திரங்கள் வருகின்றன!

**- வன வியாசம்**

பரணியும், குருவும் ‘பைக்’கில் ‘அபார்ட்மெண்ட்’க்குள் நுழையும்போதே சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள் சரண்யா. அவள் பார்வையில் மெல்லிய அளவில் ஒரு கோபம். இருவரும் அவளைக் கடந்தபோது, பரணி மட்டும் அவளருகில் நின்றான். குரு, “நான் வரேண்டா’ என்று அவனது ‘பிளாட்’டை நோக்கித்தான் ஓடினான். அவனுக்குள் பெரியவரின் பேத்தியான கல்யாணி நிரம்பியிருந்தாள்.

சரண்யா, நேருக்கு நேர் பரணியை ஏறிட்டபடியே... "விடிய விடிய எங்க ஊரைச் சுத்திட்டு வர்றீங்க?” என்று தான் ஆரம்பித்தாள்.

“விபரமா அப்புறம் சொல்றேன் சரண்... யாராவது பார்த்தா தப்பா நினைக்கப் போறாங்க” என்று அந்த இடத்தைவிட்டு அகலக் காலெடுத்தான் பரணி.

“இப்படி சுத்திட்டு வந்தா தப்பா நினைக்கமாட்டாங்களா?”

- அவள் விடுவதாக இல்லை.

“சரண்யா. நான் என் வாழ்க்கையில இப்ப முக்கியமான கட்டத்துல இருக்கேன். நீ புரியாம பேசறே...”

“புரிஞ்சுதான் பேசறேன். உங்கள சந்திக்க நான் மாடியில எவ்வளவு நேரம் காத்திருந்தேன் தெரியுமா?”

“ஸாரி! இன்னிக்கு கட்டாயம் சந்திப்போம்”

- பதிலோடு ‘விறுவிறு’வென்று படிகளில் ஏறினான்.

அவளுக்குள் அவன் வேகம் ஆச்சரியம் அளித்தது. தன்னோடு பேசத் தவித்தவன், இப்போது தவிர்ப்பது புரியாத புதிராக தோன்றியது.

பரணி தன் ‘பிளாட்’டுக்குள் நுழைந்தபோது, அக்கா சாந்தாவின் இறுகிய முகம்தான் முதலில் கண்ணில்பட்டது. அவனைப் பார்த்த மாத்திரத்தில்.

“பரணி... வந்துட்டியா?” என்றாள்.

“என்னக்கா... ஏன் ஒரு மாதிரி இருக்கே?”

“உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்.”

“என்னக்கா விஷயம்?”

“அதை எப்படிடா சொல்லுவேன்...?”

“இப்படி சொன்னா எப்படிக்கா,”

- வெடித்தான்.

"அண்ணே நான் சொல்றேன்” என்று முன்வந்தாள் தங்கை பிரபா. கூடவே, அழுத முகத்தோடு அம்மா சகுந்தலா

"அண்ணே!அக்கா வீட்டுக்காரருக்கு ‘ஆக்சிடெண்ட் ஆகி ஆஸ்பத்திரியில இருக்காராம். உயிர் பிழைக்கிறதே கஷ்டமாம். போன்ல தகவல் வந்துச்சு.”

- பிரபா சொல்லி முடிக்க, எதிரில் கிடந்த நாற்காளியில் போய் அமர்ந்தான் பரணி, தீவிரமாக யோசிக்க தொடங்கினான்.

“என்னடா எதுவும் சொல்லாம அமைதியா உக்கார்ந்துட்டே?”

- சகுந்தலா கேட்டாள்.

“என்ன சொல்லணும்கறே?”

“அவர் யாரோ இல்லடா! இந்த வீட்டு மாப்பிள்ளை.”

“ஆமா... எனக்கு தெரியாது பாரு”

“கோவிச்சுக்காதடா... அவர் என்னதான் தப்பான வரா

இருந்தாலும், இப்ப அதைப் பாக்கக்கூடாது.”

“சரி... என்ன செய்யணும்னு சொல்லுங்க”

“என்ன செய்யணுமா? முதல்ல ஆஸ்பத்திரிக்கு போய் அவரைப் பார்க்கணும். அதுக்கும் முன்னால... மேல குடியிருக்காரே அந்த சித்த ஜோசியர், அவரைப் பார்க்கணும்.”

“அவரை எதுக்குப் பார்க்கணும்?”

“என்னடா அப்படி கேட்டுட்டே! அவர்தான் முகத்தை பார்த்தே ஜோசியம் சொல்றவராச்சே? உங்க அக்காவை பார்த்தா, அத்தானுக்கு என்ன நடக்கும்னு சொல்லிட மாட்டாரா என்ன?”

- சகுந்தலாவின் கேள்வி முன் தயங்கி நின்றான். வெகுவாக யோசிக்கலானான்.

“சரி... நீ குளிச்சிட்டு ஆஸ்பத்திரிக்கு புறப்பட தயாராகு. நான் போய் இவரைப் பார்த்துட்டு வந்துடுறேன்” என்றாள்.

“இவர் மேல இல்ல” - அவனிடம் வேகமாய் உண்மை வெளிப்பட்டது.

“மேல இல்லையா...! அவர் இல்லைன்னு உனக்கு எப்படி தெரியும்.”

“அது... அது... அவர் இல்லைன்னா விடும்மா. இப்ப என்ன... ஆஸ்பத்திரிக்குத்தானே போகணும்? எந்த ஆஸ்பத்திரி? முதல்ல புறப்படுங்க”

“அதுக்கு முந்தி இவரைப் பார்க்கணும்னு சொன்னேனே.”

“இவர் இல்ல. இப்ப சோழவந்தானுக்கு அந்தப் பக்கம் குருவித்துறை பக்கமா ஒரு வாழைத் தோப்புல இருக்காரு. போதுமா?”

“இல்லையே... இப்ப ‘லிப்ட்'ல ஏறிப் போனாரே, நாங்க பார்த்தோமே?”

“என்னது... மேல போனாரா?”

“ஆமாண்டா.”

“சரி... வா, போய் பார்ப்போம்.”

- அரை மனதாக சகுந்தலா, சாந்தாவுடன் புறப்பட்டான். பிரபாவும் வரப் பார்த்தாள்.

“எல்லாரும் வந்துட்டா வீட்டை யார் பார்த்துக்கிறது?” - அவன் அதட்டவும் அவள் தேங்கினாள்.

மூவரும் படிகளில் ஏறி சிவப்பிரகாசத்தின் ‘பிளாட்’ முன் நின்றனர். கதவு திறந்தே இருந்தது. ஹாலிலேயே சிவப்பிரகாசமும் அமர்ந்திருந்தார்.

தங்களை அனுப்பி வைத்துவிட்டு தங்களுக்கும் முன்பாக அவர் வந்துவிட்டிருந்தது அவனுக்குள் ஆச்சரியத்தை உருவாக்கியது. கல்யாணி, அவருக்கு சுக்குமல்லி காப்பி தயாரித்துக் கொண்டிருப்பது அதன் மனத்தில் தெரிந்தது.

அவரும் வந்தவர்களை ஏறிட்டார்.

“ஐயாவுக்கு நமஸ்காரம்” என்று சேலைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டாள் சகுந்தலா.

“வாங்கம்மா... வாங்க. உக்காருங்க” எனறார் அவரும்.

“இருக்கட்டுங்க. இவதான் பெரிய மகள், பேர் சாந்தா. பரணியை உங்களுக்குத் தெரியும்.”

“தெரியுமாவா... பரணிதான் இனி என்னோட வலது கையே. நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க.”

- அவர் கேட்க, சகுந்தலாவும் சொல்ல வாயெடுக்க...

பரணி, அம்மாவை கைகளை உயர்த்தித் தடுத்தான். பின்னர் அவனே,

“ஐயா... அக்காவுக்கு இப்ப ஒரு பிரச்சனை. உங்க ஞான திருஷ்டியாலயே அது என்னன்னு கண்டுபிடிச்சு

சொல்லுங்களேன்” என்றான். அவன் எதனால் அப்படி பேசுகிறான் என்று அவருக்கா தெரியாது?

“என்ன பரணி... பரிசோதனையா?”

“ஒரு பாதி அந்த எண்ணம்தான்யா. மறுபாதி உங்க சக்தியை நிதர்சனமா புரிஞ்சுக்க விரும்பற எண்ணம்.”

“உண்மையைப் பேசினதுல சந்தோஷம். கொஞ்சம் பொறு” - என்றவர், கைகளை பரபர வென்று சூடு பறக்கத் தேய்த்துக்கொண்டே சாந்தாவை உற்றுப் பார்த்தார். அவளது நெற்றிப் பொட்டில் அவரது கண்கள் இரண்டும் பதிந்தன. உடம்பும் நிமிர்ந்து நேரானது.

கல்யாணியும் கச்சிதமாய் மண் குவளையில் சுக்கு மல்லி காப்பியோடு வந்து நின்றாள்.

சகுந்தலா, பரணியை சற்று கோபத்தோடு முறைத் தாள். 'இப்படியா பரிசோதிப்பாய்?’ என்கிற கேள்வி, நெற்றியில் ஓடியது.

சாந்தாவிடம் எந்தவித உணர்ச்சியும் இல்லை. புருஷன் என்கிற பிரியமே கிடையாதுதான். அதே நேரம் பூவுக்கும், பொட்டுக்கும் ஒரு சோதனை அல்லவா? ‘ஒரு பெண்ணுக்கு இப்படியொரு நிலை மட்டும் வரவே கூடாது’ என்று தோன்றியது.

கல்யாணி கொண்டு வந்த குவளையோடு திரும்பிச் சென்றாள். ஜாடையில் பெரியவர் அமரச் சொல்ல, அவர்களும் அமர்ந்துகொண்டனர்.

அதே வேளை... எதிர் ‘பிளாட்’டில் குருவின் தாயிடம் குமுறல்.

“எனக்கு இருக்கிறது நீ மட்டும்தான்டா. இப்படி பொறுப்பில்லாம ஊரைச் சுத்திட்டு வந்தா என்ன அர்த்தம்?” - என்று அவனை வறுத்து எடுத்துக்கொண்டிருந்தாள்.

அவளைப் பிரிந்து எப்படி பரணியோடு சேர்ந்து காட்டுக்கு போகப் போகிறோமோ என்கிற கேள்விதான் அவனுக்குள்

முதலில் எழும்பியது. அதற்காக இப்போதே ஏதாவது பொய்யைச் சொல்லி வைக்கவும் தயாரானபோது ராஜேஸ்வரியிடம் அடுத்தக்கட்ட ஆராதனை.

“உன்னை இப்படியே விட்டா உருப்படமாட்டே நல்ல வேலை கிடைக்கிற வரை நீ சும்மா இருக்கிற மாதிரியும் தெரியல. எனக்கு தெரிஞ்ச ஒரு ‘சிவில் என்ஜினீயர்’ கிட்ட உன்னை சேர்த்துவிடுறேன். கட்டட வேலையை ‘சூப்ரவைஸ்’ பண்ணனும். சம்பளம் பத்தி எனக்கு கவலை இல்லை. நீ இனி ஊரைச் சுத்தக்கூடாது.”

“ஐயோ அம்மா. அதெல்லாம் வேண்டாம். எனக்கு நிச்சயம் நல்ல வேலை கிடைக்கும். அதுக்காக நானும் பரணியும் சேர்ந்து சபரிமலை... அப்படியே திருப்பதி காளஹஸ்தின்னு பல கோவிலுக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கோம்!”

“பாருடா... நீங்க ஷேத்திராடனம் போறீங்களா... இதை நான் நம்பவா?”

“நம்பும்மா... நான் சொல்றதுல நம்பிக்கை இல்லேன்னா பரணியைக் கேளு.”

“பரணியை என்ன கேக்கறது? அவனோட தெய்வ நம்பிக்கைதான் எனக்கு நல்லா தெரிஞ்ச ஒண்ணாச்சே."

“அது பழைய பரணி. இந்த புது பரணி நம்பிக்கை உள்ளவன்ம்மா.”

“அது எப்படிடா... திடீர்னு ஒருத்தனுக்கு பக்தி வர முடியும்?”

“வந்திருக்கே?”

“அவ்வளவும் பொய். ஒரு விஷயத்தை நல்லா தெரிஞ்சுக்கோ. பக்திங்கறது புத்தியால வருவது கிடையாது. பாசம் நட்பு மாதிரி அது ஒரு உணர்வு. இந்த பாசம், நேசம், நட்பெல்லாம் ரத்தத்தோட கலந்திருந்தாதான் வரும்.

இதுல பாசம் - நேசம், அப்பா - அம்மா, அண்ணன் - தம்பின்னு கண் எதிர்ல இருக்கறதால சுலபமா வந்துடும்.பக்தி அப்படி இல்ல. அது நம்பிக்கை சார்ந்த உணர்ச்சி. நம்பிக்கை

இல்லாம பக்தியைச் செலுத்தவே முடியாது. பரணி சுத்தமா நம்பிக்கை இல்லாதவன். “ஏன் இந்த சாமியெல்லாம் எலி, மயில் மேல உக்காந்துக்கிட்டிருக்கு. அவ்வளவுகூடவா இந்த சாமிக்கு தங்கள் காலால நிக்கறது கஷ்டம்?’ன்னு கேலியா என்கிட்ட கேட்டவன்.”

- ராஜேஸ்வரி ‘பாய்ன்டாக’த்தான் பேசினாள். பேசிய படியே வாசல் பக்கம் சென்றவள். எதிரில் பரணி, அவன் தாய், அக்கா என்று எல்லோரும் நிற்பதைப் பார்த்து ஆச்சரியமானாள்.

“டேய் குரு... என்னடா இவங்கல்லாம் இங்க இருக்காங்க?” என்று கேட்க, குருவும் அப்போதுதான் கவனித்தான்.

"இரும்மா... என்னன்னு பாத்துட்டு வர்றேன்” என்று அவனும் திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே நுழைந்தான் சிவப்பிரகாசமும் தன் தியானத்தில் இருந்து கண் விழித்தார். நேராக சாந்தாவைப் பார்த்தவர் -

“உன் புருஷனை எமனுக்கு ரொம்ப பக்கத்துல பார்த்தேம்மா என்ன. அடிபட்டு ஆஸ்பத்திரியில கிடக்கிறானா?” என்று கேட்டார்.

“ஆமாங்கய்யா. அவர் உயிருக்கு எதுவும் ஆபத்து வந்துடாதே?” என்று பதற்றமானாள் சகுந்தலா.

“அது இப்ப உன் தம்பி பரணி கையிலதான் இருக்கு” என்று அவர் கூறவும். அனைவரிடமும் திகைப்பு!

***

# 26

உத்திராடம் - பூராடம் நட்சத்திரங்களுக்கு வஞ்சிக் கொடி, பலா மரம் என "வன விருட்ச சாஸ்திர'த்தில் கூறப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து திருவோணம், அவிட்டம் நட்சத்திரங்கள் வருகின்றன. இவைகளுக்கு வெள்ளை எருக்கு, வன்னி மரம்.

இவ்விருட்சங்கள் இந்த நட்சத்திரங்களின் கதிர் வீச்சை கொண்டிருப்பவை. தாவரங்களும் சுவாசிக்கின்றன என்பதில் இருந்து அவைகளுக்கும் உணர்வு உண்டு என்பதை விஞ்ஞானப்பூர்வமாகவே நிரூபித்துள்ளதை அறிவோம். அந்த வகையில் இவைகளின் உணர்வுடன், இதை நடுபவர்களின் கதிர்வீச்சும் கலந்து வலிமை ஏற்படுகிறது. இந்த வலிமை நல்ல விஷயங்களுக்கு உறுதுணையாகவும், தீயவைகளுக்கு எதிராகவும் அமைந்து பயன் தருகின்றன.

நமது சாஸ்திரங்களில் 'காம்யார்த்தம்' என்று ஒரு சொல் வழக்கு உண்டு. இதன் பொருள். நன்மை - தீமை என்று இரு விதமாக செயல்படும் தன்மை மனிதனுக்கு மட்டுமே உண்டு. ஏனைய எந்த உயிரினத்துக்கும் இந்த இரண்டு தன்மை கிடையாது. அவற்றுக்கு ஒரே செயல்பாடுதான். அதற்கேற்ப அவற்றின் போக்கும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

மனிதன் மட்டுமே தன் செயல்பாடுகளில் நல்லது - கெட்டது என்று இரண்டையும் செய்பவனாக இருப்பதால், அவனுக்கான விளைவுகளிலும் அது எதிரொலிக்கிறது. இதனால் 'கர்மம்' எனும் வினைப்பாடு உருவாகி அதற்கேற்ப வாழ்வு அமைகிறது. இப்படி இரண்டாக உள்ளதன் வாழ்வைத் தான் 'காம்யார்த்த வாழ்வு' என்கிறோம்.

விருட்சங்களோடு ஒரு தொடர்பை உருவாக்கிக் கொள்ளும்போது, விருட்சத்தின் நன்மையை மட்டுமே கொண்ட வாழ்வு நம்மோடு தொடர்பு கொண்டு நமக்கான நன்மைக்குரிய வாழ்வு பலமாகிறது. எனவேதான் நின்ற

இடத்தைவிட்டு நகராமல் உயிர் வாழும் விருட்சங்கள், உயிரினங்களில் மிக மேலானதாக கருதப்படுகின்றன.

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் அப்படி சொன்னதற்காக பரணியே ஆச்சரியமும், அதிர்ச்சியுமாக அவரைப் பார்த்தான்.

"என்ன அப்படி பாக்கறே...? விபரமாவே சொல்றேன். உன் அக்கா புருஷனோட விபத்துக்கு, வேகமா கார் ஓட்டினதோ - இல்லை. வண்டி பிரேக் பிடிக்காத தோன்னு பல காரணங்கள் சொல்லப்படலாம். எச்சரிக்கையும், கவனமும் இருந்தா விபத்து நடக்காதுன்னும் பேசலாம். ஆனா, எவ்வளவு எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருந்தாலும் ஒரு விபத்து நடக்கணும்னு விதி இருந்தா நடந்தே தீரும்.

பிரதம மந்திரிக்கு இல்லாத பாதுகாப்பா? ஆனா, ரெண்டு பேரை நாம இழந்துருக்கோம். அதுவும் மிகக் கொடுமையா! இப்படி நான் சொல்றதால... எச்சரிக்கை, கவனத்துக்கெல்லாம் அர்த்தம் இல்லேன்னு தவறா அர்த்தம் பண்ணிக்க வேண்டாம்.

நல்ல விதி உள்ளவங்க மட்டுமே இந்த எச்சரிக்கை - கவனத்தால தப்பிப்பாங்க. மோசமான விதி இருந்தா... எச்சரிக்கை - கவனமெல்லாம் அந்த நேரத்துல சம்பந்தப்பட்டவங்க மனசுக்கு தோணாமலே போயிடும்."

"அய்யா. எதுக்கு இவ்வளவு பெரிய விளக்கம்? எனக்கு இது அவசியமே இல்ல. 'இங்கே சிறுநீர் கழிக்காதீர்கள்'ன்னு எழுதி இருந்தாலும், அங்க சிறுநீர் கழிக்கறதுதான் நம்ம மக்களோட செயல்பாடு, கடுமையான தண்டனை தந்தாலொழிய இந்த சமுதாயம் திருந்தவே திருந்தாது இது ரொம்ப சுயநலமான சமுதாயம்கறதுதான் என்னோட கருத்து. நீங்க... என் அக்கா புருஷன் விஷயத்துக்கு வாங்க அவருக்கு விபத்து நடந்துடிச்சு. அடுத்து என்னாகும்?"

"அவர் உயிருக்கு ஆபத்து இல்ல பரணி.ஆனா, பொழைச்சாலும் புண்ணியமில்லை, கால்களால நடமாடுறது ரொம்ப கஷ்டம்..."

“சரி, இதுல என் கையில என்ன இருக்கு?”

“சகல சஞ்சீவின்னு ஒரு மூலிகை இருக்கு. அதை சாப்பிட்டா எப்பேர்ப்பட்ட ஊனமும் சரியாயிடும்கறதுதான் அதோட சிறப்பு. புது ரத்தம் ஊற்றெடுக்கும், நரம்புகளின் தளர்ச்சி நீங்கும். இதனால மனசுல தன்னம்பிக்கையான எண்ணங்கள் தோன்றும். இந்த உலகத்தையே உற்சாகமாக பார்க்க வைக்கும். அதன் காரணமா செயல் வேகம் உருவாகுப் - பயிற்சிகள் செய்ய வைக்கும்.

துவண்ட உறுப்புகள், நசிந்த பாகங்கள். பயிற்சியா உயிர்த்து எழும். அதிகபட்சம் மூன்று மண்டலம். அதாவது கிட்டத்தட்ட நான்கு மாத காலத்துல பழைய உடம்பு திரும்பகிடைச்சுடும். ஆனா, அந்த உடம்பு தோற்றத்துலதான் பழைய உடம்பு - தெம்புல ரொம்ப ஆரோக்கியமா இருக்கும். உன் அக்கா புருஷன் குடிகாரனா இருந்தா குடியை விட்டுடுவார். பொய் பேசுறவரா இருந்தா அதையும் விட்டு டுவார். மொத்தத்துல தங்கமான மனுஷனா மாறிடுவார்.”

- சிவப்பிரகாசம் சொன்னதைக் கேட்ட சாந்தா விசுக்கென்று அழுதாள்.

“இப்ப நீ ஏம்மா அழறே?”

“இதெல்லாம் நடக்குமாங்க...?”

“சகல சஞ்சீவி கிடைச்சா நிச்சயம் நடக்கும்.”

“அது எங்க இருக்கு?”

“பொதிகை மலையில.”

“டேய் பரணி... முதல்ல போய் அதை கொண்டு வாடா...”

“அப்படியெல்லாம் அது சுலபமா கிடைக்கற விஷயம் கிடையாது.”

“கஷ்டப்பட்டா கிடைச்சுடுமா?”

“கஷ்டப்பட்டா மட்டுமில்ல. விதியும் இருக்கணும்.”

“அய்யா, இந்த விதியைப் பத்தி பேசாம இருக்கவே முடியாதா..? இப்படி பேசியே எவ்வளவு விஷயத்துல நீங்க தப்பிச்சிருக்கீங்க தெரியுமா?”

“அப்படின்னு நீ சொல்றே... ஆனா, எப்படி சொன்னாலும் அதுதான் உண்மை.”

“என்ன உண்மையோ? சகல சஞ்சீவி ஒரு தாவரம்! அதுக்கு அபார மருத்துவக்குணம் இருக்குன்னா, அதை நிறைய பயிர் செய்து, பாதிக்கப்பட்டவங்களுக்கு பயன்படுத்தாம அதை ஏதோ ஒரு கோஹினூர் வைரம் மாதிரி சொல்றது நல்லாவா இருக்கு...?”

“பரணி... நீ அறிவுள்ள மனுஷ னாவே எப்பவும் இருக்கிறே... பேசறே. ஒரு உண்மையைப் புரிஞ்சுக்கணும். அறிவுக்கு எப்பவும் எல்லைகள் உண்டு. அதுக்கு தூண்டுதல் - பிறர் உதவி தேவை. யாருமே இல்லாத காட்டுல வளர்ந்திருந்தா. அந்த காட்டு மிருகம் மாதிரி இரை தேடித் தின்ன மட்டும்தான் உனக்கு தெரிய வந்திருக்கும். இப்படி பேசக்கூடியவனாகக்கூட இருந்திருக்க மாட்டே! மதுரையில இந்த தாய்-தகப்பனுக்கு மகனா பிறக்கப்போய்தான் இவர்களைப் பார்த்து, இவர்கள் பேசறதைக் கேட்டு உனக்குள்ள பேச்சு, பார்வை, அறிவு எல்லாமே வளர்ந்தது.”

“அய்யா... நான் உங்ககிட்ட இப்ப போதனை கேட்க வரலை. இது, அதுக்கான நேரமில்லை. நீங்க சகல சஞ்சீவிகிட்ட வாங்க. அது பொதிகை மலையில இருக்குன்னு சொன்னீங்க. பார்க்க எப்படி இருக்கும்? அந்த மலையில எங்க இருந்தாலும் கொண்டு வர்றேன். என் அக்கா புருஷனுக்காக மட்டுமில்லை. அவர் மாதிரி அடிபட்டு சாவுவோமா - பொழைப்போமான்னு தவிக்கிற எல்லாருக்காகவும்....”

“நல்ல எண்ணம். இந்த நாட்டுல வாழ்ந்த எல்லா சித்தர் பெருமக்களுக்கும்கூட உன்னைப்போலத்தான் எண்ணம் இருந்தது. ஆனா, அப்படியெல்லாம் எல்லாரையும்

காப்பாத்திட முடியாது”

“ஏன்?”

“பதினெட்டு சித்தர் பெருமக்களாலேயே முடியாதது அவர்களைத் தொடர்ந்து வந்த ஆயிரக்கணக்கான சித்தர்களால் முடியாதது. உன்னால முடிஞ்சுடுமா என்ன?”

“அதான் கேட்கறேன். ஏன் முடியாது. எதனால முடியாது? நெல், கோதுமை, நவதானியங்கள், காய்கறி, பழம் விளையும். சகல சஞ்சீவி மட்டும் விளையாதா?”

“பூமி ஒரு பிரச்சினை கிடையாது பரணி. சுபநலமுள்ள மனிதர்கள்தான் பிரச்சினை.”

“புரியும்படி சொல்லுங்கய்யா.”

“மாசக்கணக்குல வெச்சுக்க முடியாத வெங்காயம், பூமித்தாய் கொடுக்கிற வெங்காயம் இன்னிக்கு என்ன விலை? குளிர்பதன வசதி வந்துட்ட காரணத்தால. போன வருஷம் பறிச்ச ஆப்பிள், மெழுகு பூசி பாதுகாக்கப்பட்டு மார்க் கெட்ல இப்ப விக்குது.”

“புரியுது... சகஜமா கிடைக்கிறதுலயே கொள்ளை அடிக்கிறவங்க, சஞ்சீவி கிடைச்சா அதை வெச்சு உலகத்தையே தன் வசப்படுத்த பாப்பாங்கன்னு சொல்லவர்றீங்க. அப்படித்தானே?”

“அது மட்டுமில்ல. தண்ணீர், நெருப்பு, காத்து, பூமி, ஆகாயம்கற பஞ்சபூதம் மாதிரிதான் சஞ்சீவியும். ஆளுக்கு தகுந்த மாதிரி தன்னை மாற்றிக்கொள்ளாது. அதை யார் உண்டாலும், அமுதம் சாப்பிட்டதுக்கு சமம். அவனோட . ஏழு தலைமுறைக்கு, எந்த நோயும் வராது. அவன் தர்ம சிந்தை உள்ளவனா இருந்துட்டா... ஏழு தலைமுறைக்கும் தர்மபுத்திரர்களே பிறப்பாங்க. அவனோ அசுரனா இருந்துட்டா, அப்பவும் அவன்கிட்ட இந்த பூமி படாதபாடுபடும். சிவபெருமானே பத்மாசுரனுக்கு வரம் கொடுத்துட்டு, அப்புறம் தன் தலையில கை வைக்க வந்தப்ப தப்பி ஓடின கதைதான் இந்த உலகத்துக்கே தெரியுமே?”

“இந்த புராணம் எல்லாம் கற்பனையால வந்தது. நான் அதைக் கேட்க தயாரா இல்லை. சஞ்சீவி மாதிரி மூலிகை, சுயநலவாதிகள் கையில கிடைச்சா ஆபத்துங்கறதை ஒத்துக்கறேன்.”

பரணி ஒரு சின்ன சமரசத்துக்கு வந்தான்.

“உன் வாயை கொஞ்சம் மூடுடா, நீ ஊமையா பிறந்திருந்தா நல்லா இருந்திருக்கும். சாமி... இவன்தான் பேசிக்கிட்டே போறான். நீங்களும் பதில் சொல்லிக்கிட்டே இருக்கீங்களே! இதையெல்லாம் பேசுற நேரமா இது?”

- அம்மா சகுந்தலா பொறுமை இழந்தாள்.

“புரியுதும்மா... ஒரு நிமிஷம்” - என்றவர், உள்ளே சென்றார். திரும்பி வந்தவரிடம் விபூதி, ஒரு பாணலிங்கம் (உருண்டை வடிவ கறுப்புநிற கல்) இருந்தது. இரண்டையும் தந்தார்.

“இந்த விபூதி எப்பவும் நெத்தியில இருக்கட்டும். அவர் இருக்கிற அறையில - பார்க்கிற மாதிரி அலமாரியில பாணலிங்கத்தை வெச்சு அதுக்கு பூப் போட்டுடுங்க. அவருக்கு எந்த பின்னடைவும் ஏற்படாது. அருள் அலைகளை பாணலிங்கம் கவர்ந்து இழுக்கும். அருள் அலை உள்ள இடத்துல இருள் தொடர்பான விஷயங்கள் நடக்காது. அதே நேரம் பரணியும் அந்த சகல சஞ்சீவியோடு வந்துட்டா எல்லாம் சரியாயிடும். நீங்க புறப்படுங்க.”

- பரணியின் அம்மா, அக்காவை அனுப்பி வைத்தார். பரணியும் புறப்பட முயல. தடுத்தார்.

அங்கே பரணி, குரு மட்டும் இருந்தனர்.

“என்ன பரணி. நீ காட்டுக்குப் போய் திரும்பறதுல இனி எந்தத் தடையும் உன் குடும்பத்தால வராதுதானே?” என்று கேட்க - அவரை கூரிய பார்வையோடு ஏறிட்ட பரணி “அய்யா. இதுக்காகவேகூட என் அத்தானுக்கு விபத்தை நீங்களே உருவாக்கினீங்களோ?” என்று கேட்க, சிவப்பிரகாசம் முகம் சிவக்கத் தொடங்கியது.

“நல்ல நேரத்தைவிட கெட்ட நேரத்தோட ஆதிக்கத்துலதான்

எப்பவும் நீ இருக்கே.”

“தப்பா எடுத்துக்காதீங்க. என்னால சந்தேகப்படாம இருக்க முடியல”

“முட்டாள். உட்கார்ந்த இடத்துல இருந்துக்கிட்டு சமூகத்துல எங்கேயோ இருக்கிற ஒருவருக்கு விபத்தை உருவாக்கற அளவுக்கு சக்தியெல்லாம் என்கிட்ட கிடையாது

“அப்ப இது தற்செயல்னு சொல்ல வர்றீங்களா?”

“நிச்சயமா! சொல்லப் போனா எனக்கு ரொம்ப சாதகமா நடந்திருக்கு. ‘பொதிகை மலைக்கு நீ போய், அற்புதமான அனுபவங்கள் ஏற்படனும்’ங்கிற விதிப்பாடும் உனக்கு இருக்கு.”

“அந்த அனுபவங்களுக்காகத்தான் நானும் காத்திருக்கேன். சரி, நாங்க மலைக்குப் போக இப்ப குடும்ப அளவுல தடைகள் இல்லை. அடுத்து நாங்க என்ன செய்யணும்?”

“அப்படி கேளு... நாளைக்கு அதிகாலையில மூணு மணிக்கு நீயும், குருவும் ஒரு கார்ல புறப்படுறீங்க. சோழ வந்தான் குருவித்துறை ஜீவசமாதிக்குப் போய் வணங்கறீங்க. அந்த சமாதி மண்ணை கொஞ்சம் எடுத்து வச்சுக்குங்க. சமாதியில இருந்து எடுத்த சித்தர் சாமியோட ருத்திராட்ச மாலை, ரசமணியை அப்ப நான் உங்ககிட்ட தருவேன். அப்படியே ஒரு மந்திரத்தை உங்க காதுல உபதேசம் செய்வேன். அதன்பின் உங்கக்கூட நானும் வருவேன்.

வனத்துல ஒரு எல்லை வரைதான் என்னால வர முடியும். அந்த எல்லைக்கு அப்பால் வரக்கூடாது. அதுக்குப் பிறகுதான் அந்த வனத்துல உங்களுக்கு அடுத்தடுத்த கடமைகள் இருக்கு. அதை அந்த எல்லையில நின்னு சொல்றேன்.”

“அது சரி, அவ்வளவு தூரம் வர முடிஞ்ச நீங்க ஏன் எல்லைன்னு ஒன்ன சொல்லி அதைத் தாண்டி வரக் கூடாதுன்னும் சொல்றீங்க? அது என்ன இந்தியா - பாகிஸ்தான் 'பார்டரா'... தாண்டுறது தேசக் குற்றமா?”

- பரணியால் தனது பாணியிலான கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை!

இந்த முறை சிவப்பிரகாசம் கோபப்படாமல். வாய் விட்டு சிரித்துவிட்டார்.

***

# 27

நட்சத்திர வரிசையில் இருபத்தி நான்காவது நட்சத்திரமாக வருவது சதயம் நட்சத்திரமாகும். இதற்கு கடம்ப மரத்தை 'விருட்ச சாஸ்திரம்' பரிந்துரை செய்கிறது. அடுத்து பூரட்டாதி... இதற்கு மாமரமாகும். உத்திரட்டாதிக்கு வேம்பும், ரேவதி நட்சத்திரத்துக்கு இலுப்பையும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இது போக இந்த நான்கு நட்சத்திரத்தவர்களும் வன்னி மற்றும் ஆலமரத்தையும் நடலாம்.

இதில் வன்னி மரம், மிக விசேஷமானதாக சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வன்னி, வெற்றியின் சின்னமாகும். அந்த நாளில் போருக்கு செல்லும் அரசர்கள் வன்னிமரத்தை வணங்கி விட்டு சென்றிருக்கின்றனர். வன்னி... வணக்கத்திற்குரியது என்பதாலும், வணங்க வேண்டியது என்பதாலும்தான் அதன் கீழ் விநாயகப் பெருமான் உருவை வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் உருவானது.

வன்னிமரத்து இலையை சிலர் தங்கள் வசம் வைத்துக்கொள்வார்கள். அது மகாலட்சுமியே உடன் இருப்பதைப் போன்றது. இதனால்தான் வன்னி மரத்தை - மற்ற மரங்களை எல்லா இடங்களிலும் நடுவது போல நடுவதில்லை. நட்டாலும் இது வளராது. இதற்கு தெய்வீகமான சூழ்நிலை முக்கியம்.

அடுத்து ஆலம். இது, பரந்து வளரக் கூடியது. எனவேதான் இதை வீடுகளில் வளர்க்க முடிவதில்லை. ஊருக்கு பொதுவான இடங்களில் - ஊர் எல்லைகளில் - பெரிய மைதானங்களில் இதை வளர்ப்பது மிக நல்லது. ஒரு ஊர் வெற்றிகரமான ஊராக திகழ்ந்திட அதன் நாலாபுறத்திலும் ஆலமரங்கள் இருந்து - அவை பரவி வளர்ந்தால் ஊருக்குள் பறவைகள் நடமாட்டம் அதிகம் இருக்கும். இதனால் மழை அதிகம் பெய்யும். அடுத்து ஊருக்குள் வீசும் காற்றில் உயிர் அம்சம் மிக இருக்கும். நான்கு திசையிலும் ஆலமரம் உள்ள ஊர், மிக செல்வச் செழிப்பான ஊராக திகழும்.

**- வன வியாசம்**

சிவப்பிரகாசம் சிரிக்கவும், கூடவே குருவும் லேசாக சிரித்தான்.

“பரணி... சாக்ரடீஸ்ங்கற ஒரு ஞானி, ‘கேள்வி கேட்கத் தெரிஞ்சவன்தான் புத்திசாலி’ன்னார். ஆனா நீ ரொம்பவே புத்திசாலியா இருக்கே! கேள்வி மேல கேள்வி கேட்கறே. உனக்கு சுருக்கமா பதில் சொல்றேன்.நான் நேரடியா இறங்கற எந்த விஷயமும் எனக்கு பெரிய வெற்றியைத் தராது. என் ஜாதகப்படி அப்படியொரு தசாபுத்தி’ இப்ப நடந்துகிட்டு இருக்கு. ஆனா, உன்னைப் போல திறமைசாலிகளை பயன்படுத்திச் செய்யற விஷயம் நிச்சயம் பலனைத் தரும். ஜாதகம் - தசாபுத்தின்னு உனக்கு நம்பிக்கை இல்லாத விஷயத்தை பேசி சமாளிக்கறதா நினைக்காதே. அதுதான் உண்மை.

ஒருவரோட பிறந்த நேரமும், பிறந்த இடமும், பிறந்த தேதியும் துல்லியமா தெரிஞ்சா போதும். அவங்க வாழ்க்கையில எண்பது சதவிகித நிகழ்வுகளை துல்லியமாக சொல்ல முடியும். மீதி இருபது சதவிகிதத்தை, இந்த கலியுகத்துல யாராலயும் சொல்ல முடியாது. அந்த எண்பது சதவிகிதத்தையே. மண்ணில் ஒரு சில ஜோசியர்களாலதான் சொல்ல முடியும்.

எனக்கு தெரிஞ்சு இந்த மதுரையில நாற்பது சத விகிதம்கூட சொல்ல முடியாத ஒருத்தர்தான் ‘நம்பர் ஒன்’ ஜோசியர். நீ தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம், இந்த நபருக்கு பிடிபட்ட நாற்பது சதவிகிதத்துக்குள்ள இருந்தா உண்டு. இல்லேன்னா இவர் உன் வரையில டப்பா ஜோசியர் ஆகிடுவார். அவரைப் போன்ற நபர்களை வெச்சு - ஜோசியத்தையே சப்பைன்னு முடிவு பண்ணிடுறே. நீ மட்டும் இல்ல... பலரும் அப்படித்தான்.”

“சுருக்கமா பதில் சொல்றேன்னுட்டு விரிவாவே சொல்லிட்டீங்க. ஏன், நேரா இறங்கினா தோல்வி... மறைமுகமா இறங்கினா வெற்றின்னு ஒரு கேள்வி இப்ப எனக்குள்ள முளைச்சிருக்கு. ஆனா, நான் இதை அப்புறம் கேக்கறேன். அந்த வனத்துல உங்க சார்பா நான் என்ன செய்யணும்? அங்க எங்களுக்கு என்ன வேலை?”

- பரணி ‘பாய்ன்ட்’டைப் பிடித்தான்.

“எல்லாத்தையும் வனத்துல எல்லைச் சாமியை கும்பிடும்போது சொல்றேன்... இப்ப புறப்படு. அவ நினைப்பு உன் மேல இளமஞ்சள் நிறமா உருவாகிகிட்டு இருக்கு என் கண்களால அதை பார்க்க முடியுது” - என்று சிவப்பிரகாசம் அவனுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார்.

“ஐயா... என் அப்பாவைப் பற்றி அம்மா எதிர்ல நீங்க பேசவே இல்லை. அவர் அந்த காட்டுல இருக்கறதாவும், ஒரு மாந்திரீகனோட பிடியில சிக்கியதாகவும் சொன்னீங்க.”

“ஆமா... உன் அப்பாவை காட்டுல பார்ப்பே. எல்லா விஷயங்களையும் நான் உனக்கு வன எல்லையில சொல்றேன். காட்டுக்குள்ள நீங்க போயிட்டாலும் வெளியே இருந்தே உங்களை என்னால கண்காணிக்க முடியும். நான் சொல்லச் சொல்ல கேட்டு நடந்தா போதும். இப்ப புறப்படு...”

- சிவப்பிரகாசம் விடை தந்தார். குருவும், பரணியும் வெளியே வந்தனர்.

பரணியின் அம்மா சகுந்தலா, குருவின் தாயான ராஜேஸ்வரியோடு பேசிக்கொண்டிருந்தாள். ராஜேஸ்வரியும் பரணியைப் பார்த்து “வாப்பா” என்றாள்.

“என்னம்மா... இன்னிக்கு ஆபீஸ் போகலையா?”

“லீவு போட்டுட்டேன்ப்பா! ஆமா... நீ என்ன பெரிய 'ஜேம்ஸ்பாண்ட்’ வேலையெல்லாம் பார்த்துருக்கே போல இருக்கே?”

“நான் பார்க்கலாம்மா... காலம் பார்க்க வெச்கடிச்சு.”

“காலம் பாக்க வெச்சுடிச்சா? இப்படி நீயா பேசறே?”

“நானேதான்ம்மா! நாளைக்கு குருவும், நானும் பொதிகை மலைக்கு வேற போகப்போறோம். குரு சொல்றதுக்கு முந்தி நானே சொல்லிடுறேன்.”

“எல்லாம் அம்மா விபரமா சொன்னாங்க. ஏதோ சஞ்சீவி

மூலிகை இருக்காமே... அந்த காலத்துல ஒரு சினிமா. அதுல பெரிய ராஜாவுக்கு கண்ணு போயிடும். ‘திரும்ப கண்ணு வரணும்னா குலோப்னு ஒரு பூவைக் கொண்டு வந்து கண்ணுல பிழிஞ்சா போதும்’ன்னு சொல்வாங்க. அதைத் தேடி ‘ஹீரோ’ புறப்படுவார். இந்த விஷயத்தை கேள்விப்படும்போது அந்த சினிமா ஞாபகம் வருது...”

“நல்லவேளை... அம்புலி மாமா கதையை நீங்க உதாரணம் காட்டாத வரை ரொம்ப சந்தோஷம்.”

“அந்த படக் கதையே அம்புலி மாமா கதை மாதிரிதானேப்பா.”

“விடுங்க... குருவை அனுப்புவீங்கதானே?”

“நீ இப்ப ‘ஹீரோ’! ‘ஹீரோ’வுக்கு உதவி செய்யாம இருக்க முடியுமா?”

“ஐயோ அம்மா... இந்த ‘ஹீரோ’ - வில்லன் எல்லாம் ரெண்டு மணிநேர சினிமாவுல மட்டும்தான் வர முடியும். நிஜ வாழ்க்கையில அதுக்கு வாய்ப்பே இல்லை. என் பின்னால இருக்கற பிரச்சினைகளை சொன்னா மயக்கம் வந்துடும்.”

“எல்லாத்தையும் சமாளிக்கிறவன்தாம்ப்பா ‘ஹீரோ’ நீயும் சமாளிப்பே. நல்லபடியா அந்த மூலிகையோடு வா. எனக்கும் கொஞ்சம் கொடு... ஆபீஸ்ல உக்காந்து பாக்கற வேலையால முதுகுவலி வந்தா ஒரு பாடுபடுத்திட்டுத்தான்விடும். தோள்பட்டை வலி வேற!”

“முதல்ல அது கையில கிடைக்குதான்னு பார்க்கறேன்.”

“எல்லாம் கிடைக்கும். ஒரு அனுமார் படத்தை ‘பாக்கெட்'ல வெச்சுக்கோ. அவர்தான் சஞ்சீவி மலையையே ஒரு கையால தூக்கிகிட்டு பறந்தவர். அப்ப மலையில இருந்து விழுந்த செடிகள்தான் இப்ப அங்க இருக்கணும்.”

“அம்மா... மலையைத் தூக்கறதே நினைச்சு பார்க்க முடியாத விஷயம். இதுல பறந்தாருன்னு சொல்றது கற்பனையைவிட பயங்கரம்!”

“அப்ப நீ இன்னும் பழைய பரணியாதான் இருக்கியா?”

“பரணி எப்பவும் ஒரே பரணிதான். இப்படி பேசினா பேசிக்கிட்டே இருப்போம். நான் வரேன்” - புறப்பட்டான். சகுந்தலாவும், அக்கா சாந்தாவும் அவனோடு சேர்ந்து கிளம்பினர்.

ஆஸ்பத்திரி!

உடம்பு முழுக்க கட்டோடு - தன் நினைப்பே இல்லாதபடி கிடந்தான் பரணியின் அத்தான் சண்முகம் சாந்தாவும், சகுந்தலாவும் முன்னால் செல்ல. இறுகிய முகத்தோடு பின்னால் வந்து நின்று படுக்கையில் கிடந்தவனைப் பார்த்தான்.

இவர்களைப் பார்க்கவும் வேகமாக முன் வந்தாள் சண்முகத்தின் தாயான பூரணி.

“சாந்தா வந்துட்டியாம்மா... வந்துட்டியா?”

“அத்தே...”

“அழுவாதே. எல்லாம் தலையெழுத்து. குடி குடின்னு அலைஞ்சதுக்கு காலம் நல்லா காலையும், கையையும் ஒடிச்சு கொண்டு வந்து போட்ருச்சு.இனியும் திருந்தலேன்னா நானே இவனுக்கு என் கையால விஷத்தைக் கொடுத்துட்டு - நானும் குடிச்சிட்டு செத்துடுவேன்.”

- அந்தத் தாயின் பேச்சில் தெரிந்த கோபமும், அவர்கள் வருந்துவதும் பரணிக்கு கொஞ்சம் இதமாக இருந்தது.

“எங்க இவன் மேல உள்ள வெறுப்புல, நீ வராமலே போயிடுவியோன்னு பயந்துட்டேன்.” என்றும் பூரணி வருந்த - கச்சிதமாக டாக்டர் வந்து. கட்டிலில் தொங்கிய படி இருந்த “கேஸ் வீட்டை எடுத்து ஒரு பார்வை பார்த்தார்.

“’மெடிக்கல் இன்ஷ்யூரன்ஸ்’ பண்ணி இருக்கு தானே?” - என்றும் கேட்டார்.

“ஆமாங்க பண்ணி இருக்குங்க.” என்றாள் பூரணி.

அதைக் கேட்ட உடனேயே அவர் முகத்தில் ஒரு மலர்ச்சி. பரணியும் கவனித்தான்.

‘இன்ஷ்யூரன்ஸ்’ பணம் என்றாலே தீட்டித் தள்ளலாம் என்கிற ஒரு நடைமுறை உருவாகத் தொடங்கி விட்டது. இன்றைக்குத்தான் ஒரு ‘எம்.பி.பி.எஸ். சீட்’ - பங்களாகணக்கா 50 லட்சம், ஒரு கோடிக்கெல்லாம் விலை போகிறதே? அவ்வளவு செலவு செய்து படித்துவிட்டு, சேவை மனப்பான்மை காட்ட மகான்கள் இருந்தால்... அவர்களுக்குக் கூட மனம் வருமா என்பது கேள்விக்குறிதான்!

பரணிக்குள் மேற்படி கருத்து பெருமூச்சோடு ஓடியது. டாக்டர் மேலும் கீழும் பார்த்துவிட்டு, “பேஷண்ட்கிட்ட நின்னு பேசக்கூடாது. போய் ‘ரிசப்ஷன்’ல நின்னு பேசுங்க” என்றார். சகுந்தலா, சாந்தா, பூரணி என்று மூவரும் ‘ரிசப்ஷன்’ நோக்கி நடந்திட. பரணி, டாக்டரை பின் தொடர்ந்து சென்று, “ஒரு நிமிஷம் டாக்டர்” என்றான்.

“யெஸ்...”

“நான் பேஷண்டோட மச்சினன். எனக்கு அவரோட உண்மையான நிலை தெரியணும்.”

“உண்மையான நிலைன்னா. வாட் யூ மீன்?”

“ஐ மீன்... இவருக்கு எந்த அளவு பூரண குணம் ஏற்படும்?”

“உயிருக்கு ஆபத்தில்லை. ஆனா, உடனே எழுந்து நடக்க முடியாது. தொடை எலும்பு அப்பளம் மாதிரி நொறுங்கிப் போச்சு. ‘பிளேட்’ வைக்கணும். கையிலேயும் விரிசல் இருக்கு. அப்புறம் விரல்களும் நசிஞ்சு போயிருக்கு. ‘பிளாஸ்டிக் சர்ஜரி’யில கை விரல்களை சேர்த்துடலாம். ஆனா, அந்த இடத்துல ரத்தம் பாஞ்சு அதை மடக்கி இயக்க முடியுமான்னு சொல்ல முடியாது.”

“அப்ப இவர் உயிர் பிழைச்சாலும் பிரயோஜனம் இல்லை... அப்படித்தானே?”

- பரணி அப்படி நேராகக் கேட்டது அவரை என்னவோ செய்தது.

“அதை என்னால இப்ப சொல்ல முடியாது...” என்றார்.

“சொல்லிட்டா... ‘அப்புறம் எதுக்கு வெட்டி செலவு செய்துகிட்டு?’ன்னு நாங்க சொல்லிடுவோம்கற பயமா டாக்டர்...?”

“ரொம்ப கடுமையான கேள்வி... அதான் ‘இன்ஷ்யூரன்ஸ்’ இருக்கே. ஏன் கவலைப்படறீங்க?”

“அதுவும் பணம்தானே டாக்டர்.?”

“நீங்க என்ன எதாவது கம்யூனிச இயக்கத் தொடர்பு உடையவரா?”

“அப்ப அவங்கதான் இப்படியெல்லாம் கேப்பாங்களா?”

“வேண்டாம். இதுக்கு மேல நாம பேச வேண்டாம். நாங்க எங்களால முடிஞ்சதை செய்யறோம். அதுக்கப்புறம் கடவுள் விட்ட வழி.”

“அப்ப உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கா?”

“நிறைய இருக்கு.”

“ஒரு மனித உடம்பு எப்படி - எதனால இயங்குதுங்கறதை தெரிஞ்ச உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கறது என் வரையில ஒரு ஆச்சரியம்தான்...”

“பேனா முனையால ஒரு புள்ளி வைக்கற அளவுக்கான உயிரணுவுல இருந்துதான் உங்க உடம்பு - என் உடம்பெல்லாம் இவ்வளவு பெருசா வளர்ந்து நிக்குது. இதுக்குள்ள இருக்கற அவ்வளவு உறுப்புகளுக்கும் எங்க மருத்துவ அறிவியல் ஒரு பேர் வெச்சிருக்கு அது இயங்க எது காரணம், கெட்டுப் போனா எதெது காரணம்னுல்லாம் எளிதா சொல்லிடலாம்.

ஆனா, அந்த பேனாமுனை புள்ளி அளவு உயிரணு

இருக்கே... அதனை உருவாக்கற சக்தி மட்டும் யாருக்குமே இல்லை. அதை யார் உருவாக்கினதுங்கற கேள்விகிட்ட தான் நாங்கல்லாம் மடங்கி நிக்கறோம்.

பல நேரங்கள்ல மனித உடம்புகிட்ட தோத்துருக்கோம்! பூரண குணமாகி 'டிஸ்சார்ஜ்' ஆகும்போது ஒருவர் இறந்திருக்கார். இவரை குணப்படுத்த வழியில்லை... எடுத்துட்டு போயிருங்க'ன்னு சொல்லப்பட்ட நபர் பிழைச்சிருக்கார். இதையெல்லாம் நாங்க ஒரு வார்த்தையில 'கேயாஸ்'னு சொல்வோம். அதாவது எங்க வரையில - அதுக்கு விடை இல்ல. அப்படி இல்லைன்னா. எங்களுக்கு தெரியலைன்னு வெச்சுக்குங்களேன்...”

“இங்க கடவுள் எங்க வர்றார்?”

“எங்க திறமைக்கு மேல ஒரு சக்தி... இதைத்தான் கடவுள்ன்னு சொல்றோம்... நீங்க வேணும்ன்னா உங்க இஷ்டத்துக்கு அதுக்கு ஒரு பேர் வெச்சுக்கோங்க. நான் 'கேயாஸ்'னு சொன்ன மாதிரி...”

“சாரி... நான் விவாதம் பண்ண வரலை. எங்க அத்தானுக்கு இந்த ஆங்கில மருத்துவத்தைத் தாண்டி ஏதாவது மூலிகை மருந்து கொடுத்தா அவர் நடமாட வாய்ப்பு உண்டா?” - பரணி, கச்சிதமாக தன் சந்தேகத்திடம் வந்து நின்றான்.

“ஒரு டாக்டரா சொல்லணும்ன்னா. அதெல்லாம் சும்மா! அப்படியொரு மூலிகை இருக்கறதா எனக்கு தெரியலை தெரிஞ்சா இந்நேரம் புற்றுநோய், எய்ட்ஸ்னு எல்லாத்துக்கும் மருந்து கிடைச்சிருக்குமே? ஆனா, ஒரு மனுஷனா சொல்றேன். இவர் உடம்போட நசிந்த திசுக்களுக்கு உயிர்ப்பைத் தர முடிஞ்ச மூலிகை கிடைச்சா தாராளமா கொடுத்து பாக்கலாம். ஒரு பரிசோதனை தானே? காசா... பணமா?”

- அவர் நம்பிக்கை தந்தார். பரணியும், 'அது போதும்' என்பதுபோல அவரது கையை குலுக்கினான். அம்மா, சாந்தா இருவரையும் விட்டுவிட்டு புறப்பட்டான். அவனது அடுத்த குறி சரண்யா.

மொட்டை மாடி! புத்தகம் படிக்க வந்தவள் போல பரணிக்காக காத்துக்கொண்டிருந்தாள். பரணியும் வந்து நின்றான். அவனை விழுங்குவதைப் போல பார்க்க தொடங்கினாள். இளம் நீலத்தில் சுடிதார் - வெள்ளை நிறத்தில் துப்பட்டா. முன்னிரண்டு மேடு நடுவே தங்கள் சங்கிலியின் ‘டாலர்’.

அவன் அதைப் பார்க்கவும். அவளிடம் ஏக வெட்கம்

***

# 28

விருட்சங்களுக்கு பின்னால் உள்ள உயிர்மை குறித்து ஒரு பெரும் சிந்தனை உண்டு. இந்த உலகில் உள்ள உயிர்கள் ஒன்றைத் தின்றே ஒன்று உயிர் வாழ்கின்றன. புலி, மானைத் தின்று உயிர் வாழ்கிறது. பாம்பு, தவளையை... தவளையோ சிறு பூச்சிகளை... பூச்சிகளும் சில உயிரினங்களை அழித்தே ஜீவிக்கின்றன.

இதில் நடமாட முடிந்த உயிரினமாய் இல்லாமல் ஒரே இடத்தில் நின்று வளர்ந்திடும் உயிரினமாய் இருப்பது தாவரங்கள் - மரங்கள் மட்டுமே. இதைச் சார்ந்தவர்களை மட்டுமே உண்டு வாழ்பவர்கள் சைவ உணவு உண்பவர்கள் என்று கூறப்படுகின்றனர்.

உண்மையில் சைவ உணவாகிய தாவரங்களும்கூட உயிர் உள்ளவைகள்தான். இவைகளை உண்பதும் கூட பாவத்தோடு சேர்ந்ததே! ஆனால், இந்த பாவத்தை தியானத்தின் மூலம் போக்கிக் கொள்ள முடியும். அடுத்து இப்படிப்பட்ட பாவம் புரியாமல் வாழவே முடியாது என்பதால்தான் இலையில் உண்பதற்கு முன் - இறைவனை மனதில் தியானித்து நன்றி கூறி உண்ணும் ஒரு செயல்பாட்டை பரிகாரமாக உருவாக்கி வைத்தனர். அடுத்து, பெரும் பரிகாரமாக மரங்களை நட்டு வளர்ப்பது சொல்லப்பட்டது. தாவரங்களில், குறிப்பாக விருட்சங்களில் வாழை தனிச் சிறப்பினை உடைய தாகும். அது.

**- வன வியாசம்**

சரண்யாவின் வெட்கம், பரணிக்குள் பல கவிதை வரிகளை ஞாபகப்படுத்திற்று. உண்மையில் உலகில் பெண்ணை விட ஒரு அதிசயமோ - சந்தோஷமோ இருக்க முடியாது என்றும் தோன்றிற்று. பரணி அவளை ஊடுருவும் முன் சுற்று முற்றும் ஒரு பார்வை பார்த்தான். மொட்டைமாடி என்பது எவ்வளவுக்கு எவ்வளவு ஏகாந்தமான இடமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆபத்தானதும்கூட...!

அதிலும் இது ‘செல்போன்’களின் காலம். காதலர்கள்

சந்திப்பது... படம் பிடிப்பதெல்லாம் சர்வ சாதாரணம் பரணியிடம் எச்சரிக்கை உணர்வு. ஆனால், அவளோ மயக்கம் நிரம்பிய வார்த்தைகளை அவனிடம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்ன சரண்யா... பார்த்துக்கிட்டே இருக்கே?”

“பாக்கணும்போல இருக்கு... பாக்கறேன்.”

“ரொம்ப நேரமா காத்துக்கிட்டிருக்கியா?”

“ஆமாம். படிக்கறதா சொல்லிட்டு இங்கேயேதான் இருக்கேன்.”

“எனக்கு எல்லாமே கனவு மாதிரி இருக்கு...”

“எனக்கும்தான்.”

“உண்மையில அந்த கடத்தல்காரனுக்கு நான் ரொம்பவே நன்றி சொல்லணும்.”

“ஆமா... உங்களுக்குள்ள ஒரு பெரிய சி.ஐ.டி இருக்கறதை அவங்களாலதானே தெரிஞ்சுக்க முடிஞ்சது...”

“சரண்யா... நான் சி.ஐ.டி.யெல்லாம் இல்ல. வழக்கமான இளைஞன். அதுகூட தப்பு. உங்க ‘ஸ்டேட்டஸ் முன்னால நான் ஒண்ணுமேயில்ல தினமும் ‘செல்ஃப் ஷேவ்’ பண்ணிக்கறேன். வீட்டுக்குள்ள கைலி கட்டிக்கறேன். அக்கா - தங்கைகள்னு பெரிய சுமைகளை கொண்ட ‘லோயர் மிடில் கிளாஸை’ சேர்ந்த வெள்ளையாகவும் - கறுப்பாகவும் இல்லாத ரெண்டும் கெட்டான்.”

“எதுக்கு இவ்வளவு நீளமான வியாக்கியானம்? சி.ஐ.டியா இல்லாமத்தான் என்னைக் கண்டுபிடிச்சதோட அந்த தடிப் பசங்களையும் பிடிச்சு கொடுத்தீங்களாக்கும்? அப்பாவுக்கு ‘டிபார்ட்மென்ட்’ல அப்படியொரு பாராட்டு. என் அண்ணனையும் போட்டு காச்சி எடுத்துட்டாரு.”

“சரண்யா, திரும்பவும் சொல்றேன். நான் எதையும் செய்யலை. இப்ப பெரிய ஆராய்ச்சியில இருக்கேன், அதான்

உண்மை.”

“சரி, உங்க படிப்புத் தகுதி என்னன்னு கொஞ்சம் என்கிட்ட மறைக்காம சொல்றீங்களா?”

“எதுகக்கு?”

“அப்பா தன் "டிபார்ட்மென்ட்’ல உங்களை நுழைக்க விரும்பறார்.

“சினிமாவுலதான் ஹீரோ – ‘எம்ப்ளாய்மென்ட்’ல பதியாம, ‘இண்டர்வியூ’ போகாம, பரீட்சை எழுதாம. ‘ஸ்ரைட்’டா போலீஸ் அதிகாரி ஆவான். ‘ஐயம் ப்ரவுட் ஆப் யூ மை பாய்’ன்னு சீனியர் ஆபீசரும் சொல்வார். ‘இன்பாக்ட்'... இந்த இங்கிலீஷ் வார்த்தை எல்லாம் எனக்கு பரிச்சயமானதே சினிமாவாலதான். அது தெரியுமா உனக்கு?”

சரண்யா அவன் பேசும்போது தன்னை மறந்து அவனை ரசித்தாள்.

“இந்த துறைக்கே உங்களால பெருமை சேர்த்துட்டீங்கன்னு ஒரு வசனம்... அப்புறம், ‘யு ஆர் அண்டர் அரெஸ்ட்’ன்னு கைது பண்ணும்போது சொல்றது, ‘முட்டிக்கு முட்டி தட்டிடுவோம்’ன்னு 'கான்ஸ்டபிள்’ பேசுறது... இதெல்லாம் நம்ப போலீஸ் ஸ்டேஷனோட சிரஞ்சீவித்துவமான ‘டயலாக்'குகள். எந்த மாதிரியானவங்க வந்து இங்க படம் எடுத்தாலும், இந்த ‘டயலாக்' இல்லாம போலீஸ் ஸ்டேஷனை ‘ஷூட்' பண்ண முடியாது தெரியுமா?”

- பரணி பேசிக்கொண்டே போனான். சரண்யா மனதில் விழவில்லை. அவன் தலைமுடி, கிருதா, மீசை என்று பாகம் பாகமாக ரசித்துக் கொண்டிருந்தாள்.

“ஹலோ... என்ன நான் பேசிக்கிட்டே இருக்கேன். அப்படி பாத்துக்கிட்டு நிக்கறே?”

“அதான் சொன்னேனே... பாக்கணும்போல இருக்கு... பாக்கறேன்.”

“சரி, நான் இப்ப ஒரு ஆராய்ச்சியில இருக்கேன்னு

சொன்னேனே... கேக்கமாட்டியா அது என்னன்னு?”

"என்ன?”

“அதுக்காக இப்படியா ஒரு வார்த்தையில கேட்பே?”

“என்ன... என்ன... என்னென்ன! போதுமா...?”

“இது ரொம்ப ‘ஓவர்’.”

“பரணி... அப்பாக்கு உங்கள பிடிச்சு போச்சு. அண்ணனோட காதலுக்கும் அப்பா ‘ஓ.கே.’ சொல்லிட்டதால நம்ம காதலை பத்தி கவலையே இல்லை. ஒரு விஷயம்தான் எனக்கு சிக்கல்.”

“நான் ஒரு விஷயம் பேசினா நீ வேற ‘டாபிக்’லயே இருக்கியே?”

“பரணி... நீங்க எந்த ஆராய்ச்சி வேணா பண்ணிட்டு போங்க. நான் ஒருத்தி உங்க நினைப்பா இருக்கறதை மட்டும் மறந்துடவேண்டாம். ஒரு பொண்ணுக்கு அழகான புருஷனைவிட, தைரியமான புருஷனை ரொம்பவே பிடிக்கும். என் வரையில ரெண்டும் இருக்கு உங்ககிட்ட.

அப்புறம் இந்த சினிமா மாதிரி ‘அப்பாய்ன்ட்மென்ட் எல்லாம் கிடையாது. ‘இன்டர்வியூ’ - "டிரெயினிங்’ எல்லாம் உண்டு. என்ன. எல்லாரும் வரிசையில வரும்போது, நீங்க மட்டும் நேரா வந்து இதுல கலந்துக்குவீங்க. அப்பா எப்ப வேணா உங்க ‘ரெஸ்யூமை’ கேட்கலாம். தயாரா எடுத்து வெச்சிருங்க. இந்த மருந்து கம்பெனி வேலைக்கும் 'டாட்டா’ சொல்லிடுங்க”

- சரண்யா அவன் எதிரில் கனவு கண்டாள். அதை முழுவதுமாக கனவு என்று கூறிவிட முடியாது. அந்த கனவை கலைக்க பரணிக்கும் மனம் வரவில்லை.

“சரண்யா, நாளைக்கு காலையில குருவோடு ஒரு குட்டி சுற்றுலா போறேன்...”

“சுற்றுலாவா... எந்தெந்த ஊர்...?”

“ம்... இது பக்தி யாத்திரை மாதிரி. குற்றாலம், அகத்தியர் மலை, பொதிகை மலை, பாண தீர்த்தம் இப்படி....”

“என்ன திடீர்னு...?”

“எல்லாத்தையும் வந்து சொல்றேன்.”

“வர எவ்வளவு நாளாகும்?”

“ஒரு வாரம், பத்து நாள்...”

“எதுக்கும் அப்பாகிட்ட சொல்லிட்டு போங்க...”

“இது முழுக்க முழுக்க ‘பர்சனல்’ சரண்யா....”

“ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போங்க...”

“போன்ல பேசிடுறேனே...”

“அவர்கூட மட்டும்தானா?”

“உன் கூடவும் பேசறேன். ஆமா, உன் அண்ணன் - அம்மா...”

“செல் என் கையிலதான் இருக்கும். அவங்களுக்கு தெரியாம எப்படி பேசணும்னு எனக்கு தெரியும்.

- சரண்யா சொல்லிக்கொண்டு இருக்கும்போதே பரணியின் தங்கை, ஈரத் துணிகளுடன் மேலேறி வந்து கொண்டிருந்தாள்.

“பிரபா வர்றா... நான் கழண்டுக்கறேன்.”

“சரி, நீங்க புறப்படுங்க. உங்க தங்கை கிட்ட நான் கொஞ்சம் ஒட்டிக்க பாக்கறேன்.”

- சிரித்தபடியே சொல்ல... பரணி உற்சாகமாக இறங்கினான். கீழே குருவின் ‘பிளாட்’டை கடக்கும்போது கல்யாணி அவனை பரிதாபமாக ஒரு பார்வை பார்த்தாள். அதில் ஆயிரம் அர்த்தங்கள்.

“என்ன கல்யாணி. எதாவது சொல்லணுமா?”

“கவனமா போயிட்டு வாங்க. எனக்கு ரொம்ப பயமா இருக்கு”

“கவலைப்படாதே. நான் பாத்துக்கறேன்.”

- கல்யாணியைப் பார்த்து சொல்லிக்கொண்டே இறங்கினவனுக்கு பெரியவரின் செயலில் பெரிதாக ஒரு மர்மம் இருப்பது மட்டும் புரிந்தது!

போலீஸ் நிலையத்தில் வழக்கமான பரபரப்பு.

இன்ஸ்பெக்டர் இருக்கையில் அமர்ந்திருந்த ராஜதுரை ‘பாஸ்போர்ட்’க்கு விண்ணப்பித்தவர்களின் விபரங்களை உதவியாளர் துணையுடன் சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

வயதான ஒருவர், “பாஸ்போர்ட் விசாரணைன்னு இப்படி எல்லாரையும் ஸ்டேஷனுக்கு வரச் சொல்றது கொஞ்சமும் நல்லா இல்ல சார். இங்க வந்து காத்திருக்கறது வருத்தத்தைத் தருது...” என்றார்.

“வாஸ்தவம்தான்! ஆனா, விஞ்ஞானம் வளர வளர மனுஷனோட ‘கிரிமினல்’ புத்தியும் பெருசா வளர்நதிடுச்சி. குறிப்பா ‘பாஸ்போர்ட்'டுங்கறது பல கிரிமினல்கள் தப்பிக்க உதவற ஒரு விஷயமா இருக்கறதால இதுல அதிக கவனம் எடுத்து செயல்பட வேண்டியது இருக்கு போலீஸ் ஸ்டேஷனை ஒரு ‘இன்ஸ்டிடியூஷனா’ பார்க்க கத்துக்குங்க. சரியாகிடும்” - என்றார் ராஜதுரை. அப்போது அவரது செல்போனில் சிணுங்கல். பரணிதான் அழைத்திருந்தான்.

“குட் ஈவினிங் சார்...”

“சொல்லு பரணி...”

“ஒரு தகவல் சொல்லலாம்னு.”

“பிளீஸ்...”

“நானும், நண்பன் குருவும் நாளைக்கு குற்றாலம் போகப் போறோம்...”

“இப்ப ‘சீசன்’ இருக்குதா என்ன?”

“நாங்க அதுக்காக மட்டும் போகல சார்...”

“பிறகு?”

“வந்து விபரமா சொல்றேன். ஒரு 'திகில்’ நிறைந்த மலையேற்றம்ன்னுகூட சொல்லலாம்.”

“மலையேற்றத்துக்கு இப்ப என்ன அவசியம்?”

“எல்லாத்தையும் வந்து சொல்றேன். நான் அங்க ஒரு தனி நபரா மட்டும் போகல”

“புரியல எனக்கு”

“ஒரு போலீசாவும் போறேன்....”

“அப்ப அங்க ஏதாவது விபரீதமா இருக்கணுமே?”

“அது இப்ப தெரியாது சார்....”

“நேரில் பேச வேண்டிய விஷயத்தை போன்ல பேசுறியே பரணி...”

“ஸாரி சார்... சூழ்நிலை அப்படி.”

“ஜாக்கிரதை....”

“நான் பார்த்துக்கறேன் சார்.”

- பேசி முடித்தான். ஒரு பெருமூச்சும் விட்டான்!

குற்றாலம்!

‘சீசன்’ கடந்து கொட்டிக்கொண்டிருந்தது அருவி. அவ்வளவாக கூட்டமில்லை.

கூட்டத்தில் நான்கு பேர்.

ஒருவருக்கு கையில்லை. அடுத்தவருக்கு கண்களில்லை. மற்றொருவருக்கு ஒரு கால் மட்டும் இருந்தது.

இன்னொருவர்கூட முழு மனிதனாக இல்லை. விந்தி நடப்பவராக தெரிந்தார்.

***

# 29

‘விருட்சங்களில் வாழை. வெட்ட வெட்ட தழைக்கும் ஒன்றாகும். கறிவேப்பிலைகூட ஒடிக்க ஒடிக்கத்தான் அதிகம் துளிர்க்கும். ஆனால், கறிவேப்பிலையின் வேர் பட்டுப் போனால் மரமே வளராது. வாழையைப் பொறுத்தமட்டில் ஒரு வாழை மரம் - நூறு மரங்களைக்கூட தரும், அதன் உயிர்மை அப்படிப்பட்டது.

தாவரங்களில் கீரை ஓர் அற்புத உணவு, ஆனால் இதை உண்ணும் சில சித்த புருஷர்கள் - வாழை கிடைக்கும்பட்சத்தில், கீரை உணவைக்கூட கைவிட்டு விடுவார்கள். காரணம் ஒன்றுதான் ஒரு கீரைச் செடியை பறித்துதான் நாம் சமைத்து உண்கிறோம். அது வளரும்போதே பறிக்கப்படுவது கொலைக்கு சமமானது. இது புல் முதல் நெல்லுக்கும் பொருந்தும், மிக அதிகபட்ச ஜீவ அகிம்சையை கடைபிடிக்க விரும்புபவர்கள் கீரை, புல், நெல் முதல் சகலத்தையும் கைவிட்டு வாழையிடம் வந்து நின்றுவிடுவார்கள்.

ஏனென்றால், எவ்வளவு வெட்டினாலும் வாழை துளிர்த்துவிடும். அத்துடன், வாழை காயை நறுக்கி காய வைத்து அதை பொடியாக்கி அதை நீரில் கரைத்து கஞ்சிபோல குடிக்கலாம். இது ஒரு துறவிக்கு தேவையான சக்தியை அளித்துவிடும் மிக எளிய உணவாகும். அடுத்து, வெட்டப்பட்ட வாழையின் மட்டை முதல் இலை, தண்டு வரை பயன்படுத்தப்பட்டு பிறகே அது மண்ணைச் சென்று சேர்கிறது.

இதை வைத்தே 'வாழையடி வாழை' எனும் பதம் உருவானது. ஓர் உயிரினம் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி தொடர்வது ஒரு விதம்... தானே அழிவின்றி தொடர்வது இன்னொரு விதம். தவத்தில் ஈடுபாடு உடையவர்கள் - ஒன்றுக்குள் ஒன்று அடங்கித் தொடரும் உயிரினத்தைவிட, அழிவின்றி தொடர்வதையே நாடுவர். வாழை அந்த வகையைச் சார்ந்தது. இதனாலேயே மனித வாழ்வில் - மங்கல நிகழ்வுகளில் வாழை முதலிடம் பெற்றது!

**- வன வியாசம்**

குற்றால அருவியில் நீராடியபடி இருந்த அந்த நான்கு பேரும் குளித்து முடித்த நிலையில் ஒரு வரை ஒருவர் பிடித்துக்கொண்டு மெல்ல விலகத் தொடங்கினர். அவர்களை பரணி ஆச்சரியத்தோடு பார்த்தான். குரு அதை கவனித்து கேட்டான்.

“என்னடா... இவங்க இங்க குளிச்சிட்டு போறது உனக்கு ஆச்சரியமா இருக்கா?”

“நிச்சயமா...! ‘நம்மாலல்லாம் குளிக்க முடியாது’ன்னு முடங்கிக் கிடக்காம இவங்க துணிஞ்சு வந்து குளிச்சிட்டு போறது சந்தோஷமா இருக்கு...” என்று சொன்னபடியே அருவியை நோக்கி நடந்தான்.

பின் இருவருமே அதற்குரிய உடைகளோடு போய் அருவியில் நின்றார்கள். இவர்கள் தோள் மேலும் நீர்ப் புரவிகள் வெகு வேகமாக தங்கள் கால்களால் மிதித்துக் கொண்டு ஒடுவது போல் இருந்தது. அப்படியொரு அழுத்தமான மிதியை வாழ்நாளிலேயே முதன் முதலாக அனுபவிக்கிறார்கள். அது ஒரு இன்பமான துன்பமாக இருந்தது. தலையில் பட்டுத் தெறிக்கும் நீர், தலைமுடியை எல்லாம் பறித்துச் சென்றுவிடுமோ என்றுகூட தோன்றியது.

இயற்கை இதுபோல எத்தனை சுகங்களை தன்வசம் வைத்திருக்கிறதோ...? இப்படி அருவியில் குளித்து வழக்கப்பில்லாதபடி ‘பிளாஸ்டிக் பக்கெட்’டில் தண்ணீரை மொண்டு ஊற்றிக் குளிக்கும் குளியல் அப்போது பரணிக்கு ஞாபகத்துக்கு வந்தது. ‘நகரத்து சாபம் அது’ என்றும் தோன்றியது. அப்படியே நெடுநேரம் அந்த நீர்த் தாரைக்குள் இருந்துவிட்டு விலக மனமின்றி விலகி வெளியில் வந்தனர்.

நல்ல குளியலைத் தொடர்ந்து நல்ல பசி. அதற்கு தோதாக அய்யர் கடை நெய் தோசையின் மணம், மூக்கை நிமிண்டியது. ‘ஆர்டர்’ செய்து சுடச் சுட சாப்பிட்டபோது - மனிதனாக பிறந்ததற்காக மனது பெரிதும் சந்தோஷப்பட்டது. அதிலும் சாம்பாரும், சட்டினியும்

தோசைக்கு மிக இணையாக அமைந்து - நான்கு தோசைகளை சாப்பிட வைத்தன. அய்யர் எதனால் அத்தனை சுவையை அளிக்கிறார் என்பது புரிந்துபோனது. திருப்தியாக அவருக்க பணத்தைக் கொடுத்தபோது கேட்டார்.

“எவ்வளவு நாள் தங்கப் போறீங்க?”

“தங்கலீங்க சாமி. போய் கிட்டே இருக்கப் போறோம்.”

“எங்க போகப் போறீங்க?”

“அப்படியே மலை மேல. அகத்தியருக்கு கோவில் இருக்குதாமே... அதுவரை.”

“பாத்துப் போங்க. மேல போகும்போது தனியா போக வேண்டாம்”

“ஏன் சாமி...?”

“ஏன் சாமியா? இப்பல்லாம் மலையில நிறைய வழிப் பறி, கொலை எல்லாம் நடக்குது. அதோடு நிறைய ஏமாத்து வேலைகள் வேறு.”

“ஏமாத்து வேலைன்னா எந்த மாதிரி?”

“மலைத் தேன்னு வெல்லப் பாகு கலந்ததை விப்பாங்க. புலிப் பல்லுன்னு 'பிளாஸ்டிக்’ல செய்ததை கொடுப்பாங்க. சோத்துக்கு விதி இல்லாத பிச்சைக்காரன் தன்னை அகத்தியர் சீடன்னு சொல்லிப்பான். அப்புறம் தீராத வியாதியை தீர்க்கற சஞ்சீவி மூலிகை இருக்கு. ஆனா, அதோட விலை பல ஆயிரம்னு சொல்வாங்க.”

"அப்ப இங்க உண்மையா ஒரு விஷயம்கூட இல்லையா?”

“எனக்கு தெரிஞ்சு இல்லைன்னுதான் சொல்வேன்.”

- அய்யர் எச்சரித்து சிரித்தார்.

“உங்களுக்கு தெரிஞ்சு. மலை மேல நிஜமான சித்தர்கள் யாராவது இருக்காங்களா,”

“எதுக்கு கேக்கறீங்க?”

“சும்மா... தெரிஞ்சுக்கத்தான்.”

“இப்படிதான் ரொம்ப பேர் கேக்கறாங்க. ஆனா, நிஜத்துல யாரும் இருக்கற மாதிரி தெரியல....”

“சந்தோஷம். நாங்க வர்றோம்...”

இருவரும் புறப்பட்டனர். குற்றால அருவி விழும் சத்தம் நன்றாக கேட்டது. கேட்டபடியே நடந்தனர். பேச்சும் தொடங்கியது.

“பரணி...”

“சொல்லுடா.”

“மலையில நமக்கு அப்படி என்ன வேலை இருக்குன்னு நீ நினைக்கறே?”

“யாருக்கு தெரியும்?”

“நான் சில கதைகள்ல படிச்சிருக்கேன். இந்த மாதிரி மலை வனங்கள்ல அபூர்வ மூலிகைகள் இருக்கும். சித்தர் சாமிங்க இருப்பாங்க. அந்த சாமிங்களாலதான் நம்ம பெரியவருக்கு ஏதோ ஆகணும்னு நினைக்கறேன்.”

“ஏதோன்னா?”

“கல்யாணி சொன்னதை அப்படியே சொல்லவா?”

“ஓ... அப்ப கல்யாணிகூட பேசினேன்னு சொல்லு.”

“ஏன்டா. நீ சரண்யாகூட பேசலாம். நான் கல்யாணி கூட பேசக்கூடாதா?”

“கல்யாணி என்ன சொன்னா, அதை முதல்ல சொல்லு"

“அவருக்கு யவ்வன காந்திங்கற மூலிகை தேவைபடுதாம்.”

“யவ்வன காந்தியா?

“ஆமா, அதை சாப்பிட்டா இளமை திரும்பிடுமாமே!”

“அப்புறம்?”

“நான் கதை சொல்லலைடா. அதுக்காக அவர் ரொம்ப ஆசைப்படுறாருன்னு சொன்னா”

“இன்னும் என்ன சொன்னா?”

“சர்வ சித்திக்காக ஏழு மூலிகைகள் இருக்காம். அது ஏழு இடத்துல இருக்குதாம். அதையும் அடையணுங்கறது அவர் நோக்கம்....”

“அப்ப நாம இப்ப அவரைப் பார்க்கும்போது யவ்வன காந்திக்காகவும், சர்வ சித்திக்காகவும்தான் நம்மை காட்டுக்குள்ள அனுப்பப் போறார்னு சொல்லு.”

“ஆமாம். நமக்கு காட்டுல எதுவும் ஆகிடக் கூடாதுன்னுதான் அந்த ஜீவசமாதியில இருந்து எடுத்த ரசமணியையும், பாணலிங்கத்தையும் நமக்கு தந்திருக்கார்.”

“அப்ப கையில இருக்கற இந்த ரெண்டும்தான் நமக்கு பாதுகாப்பா?”

“பரணி.... இப்படி தெரியாத மாதிரி கேட்டா எப்படிடா? இதை நம்பகிட்ட அன்னிக்கு அவர் கொடுத்ததே பாதுகாப்புக்குத்தானே?”

- குரு சொன்ன நொடி தன் ‘பாக்கெட்’டுக்குள் கையை விட்ட பரணி, அந்த இரண்டையும் வெளியில் எடுத்து வெறித்துப் பார்த்தான். பார்த்த வேகத்தில் சட்டென்று தூக்கியும் எறிந்தான்! குருவுக்கு பகீரென்றது.

“பரணி, என்னடா இது பைத்தியக்காரத்தனம்?”

“போடா போ. எனக்கு அந்த கூழாங்கல்லோட துணை தேவையில்லை. இதுக்கு ரசமணி, லிங்கம்னு பேர் வேற!”

“பரணி.... நீ தைரியசாலின்னு தெரியும். அதுக்காக இவ்வளவு அவசரப்படனுமா?”

“குரு... நம்மை நாம நம்பணும். அதை புரிஞ்சுக்கோ. இதெல்லாமே ஏமாத்து வேலை.”

- பரணியின் அழுத்தமான பேச்சுக்கு மறுபேச்சு பேச குருவுக்கு தோன்றவில்லை.

“சரிடா... கொஞ்சம் இரு 'யூரின் பாஸ்’ பண்ணிட்டு வந்துடுறேன்....” என்றபடி விலகினான்.

சிலுசிலுவென்று காற்று வீசிக்கொண்டிருந்தது.

தலைமுடிகளை நீவியபடி வீசிய அந்த காற்று பரணிக்கு மிக பிடித்திருந்தது. எதிரில் - ‘என்னைவிட இந்த உலகில் யார் பெரியவன்?’ என்று கேட்பதுபோல பொதிகை மலை.

குருவும் வந்து சேர்ந்தான்.

சிவப்பிரகாசம் அந்த மலைத் தலத்தில் ஓர் இடத்தை சொல்லி - அங்கே இருவரையும் வருமாறு கூறி இருந்தார். அந்த இடம் நோக்கி நடந்தனர். மலை மேல் செண்பக அருவிக்கும், மேலான தளத்தில் சிவப்பிரகாசம் சொன்ன இடம் இருந்தது. அங்கே பருத்த மருத மரங்கள் வளர்ந்திருக்க... கீழே கருமையான - கும்மென்று நிழல் கவிந்தஇருள்!

பரணியும், குருவும் அந்த இடத்தை நெருங்கும்போது நன்றாக இருட்டத் தொடங்கிவிட்டது. அங்கே துணியாலான ‘டெண்ட்!’ வெளியில் பெட்ரோமாக்ஸ் விளக்கை ஒருவர் ஏற்றிக் கொண்டிருந்தார்.

கட்டில் ஒன்று போடப்பட்டிருக்க, அதன் மேல் சிவப்பிரகாசம் உட்கார்ந்திருந்தார். பரணியும், குருவும் வந்து நின்றனர்.இருவரிடமும் லேசான வியர்வை.

“வாங்க சிங்கங்களா” - என்று வாஞ்சையாக வர வேற்றார். அமரச் சொன்னார். இருவரும் அமர்ந்தார்கள் முதுகுச் சுமையும் இறங்கியது.

“அப்புறம். குற்றாலத்தில் நல்லா குளிச்சீங்களா?”

“ஆச்சுங்கய்யா!”

“சந்தோஷம். இப்ப இங்க உங்களுக்கு நான் மலைலிருந்து போடப் போறேன். நல்லா சாப்பிடுங்க. சாப்பிட்டுட்டு தூங்கிடுங்க. ராத்திரியில ரெண்டு மணிக்கு எழுப்புவேன்... அதோ அங்க ஒடை இருக்கு... தண்ணீர் ஒடுற சத்தம் கேட்டுதா?”

“கேட்டுதுங்க சாமி.”

“அதுல போய் குளிரைப் பார்க்காம குளிச்சிட்டு வரணும் நீங்க. விடிஞ்சா வியாழக்கிழமை! குரு வாரம்னு சொல்வோம். விசாக நட்சத்திர நாள்... அதுவும் குருவோட நட்சத்திரம்தான். உங்க காதுல குரு மந்திரத்தையும் சொல்வேன். அதை ஜெபிச்சுக்கிட்டே காட்டுக்குள்ள நீங்க எண்கோணப் பாறை நோக்கிப் போகணும். இங்க இருந்து சரியா பதினாறு மைல். மலை மேல ஒரு மணி நேரத்துக்கு மூணு கிலோ மீட்டர் தூரம் நடக்கலாம். அந்த கணக்குப் படி சரியா ஏழுல இருந்து எட்டு மணிக்குள்ள அந்த பாறைகிட்ட போயிடுவீங்க. வழியில கரடிங்க, யானை வந்தாலோ மந்திரம் சொல்றதை நிறுத்தக்கூடாது. அப்ப அப்படியே நின்னுடும். அதுங்கள எதிர்க்கவும் கூடாது. அதுங்களும் திரும்பிடும்.”

- சிவப்பிரகாசம் சொல்லச் சொல்ல மவுனமாக கேட்டுக் கொண்டான் பரணி.

“அந்த எண்கோணப் பாறைக்கு எதுக்கு போகணும்? அங்க எங்களுக்கு என்ன வேலை?” என்று கேட்டான் குரு.

“அந்த எண்கோணப் பாறைக்கு போறது சுலபமில்லை. நான் சொல்ற மந்திரத்தை உச்சரிக்காம அங்க யாரும் போக முடியாது. அங்க போனவங்களை விரல் விட்டு எண்ணிடலாம். அந்த பாறை பார்க்க - எட்டு கோணங்களோட கல்லால செதுக்கப்பட்ட ஒரு கோலம் போல இருக்கும். அதன் நடுவுல வட்டம் பொறிக்கப்பட்டிருக்கும். அதன் மேல எட்டு மணிக்கு மேல கிழக்கு சூரியனோட கதிர்கள் விழ ஆரம்பிக்கும். அந்த கதிர், மனிதர்கள் மேல விழுவது விசேஷம். அதற்காக ஒரு சித்தர்

விசாக நட்சத்திர வியாழக்கிழமைகளில் அந்த இடத்துக்கு வந்து அமர்ந்து தவம் செய்வார். அப்ப அவர் முன்னால யார் போய் நின்னாலும் அவங்க கேட்கற வரத்தை தருவார். அவர் கிட்ட நீங்க ‘யவ்வன மூலிகை விதை’ வேணும்னு கேட்கணும்.”

- பெரியவர் சொல்லி முடித்தார்.

பரணி, குரு இருவரிடமும் முதல் தடவையாக சிந்தனை கடந்த வியப்பு!

***

# 30

வாழையைத் தொடர்ந்து உயிரினங்களுக்கே மிக ஏற்ற தாவரங்கள் வேம்பும், அரச மரமுமாகும். வேம்பு ஒரு உன்னதமான கிருமி நாசினி. அதி காலையில் மூன்று குவளை நீர் அருந்தி - கலகலப்பாய் ஒரு மூச்சில் மலம் கழித்து வாய் கொப்பளித்து - பின் வேப்பங்கொழுந்தை தினமும் ஒருவர் ஒரு நெல்லிக்காயளவு உண்டு வர. அவருக்கு யாதொரு கிருமியாலும் பாதிப்பு நேராது. வேப்பங்கொழுந்தை நன்றாக மென்று, எச்சிலோடு சேர்த்து விழுங்க வேண்டும். மென்று தின்ன வேண்டிய சகலத்துக்கும் எச்சில் ஒரு மருந்து.

இப்படி வேப்பங்கொழுந்தை வெறும் வயிற்றில் தின்றுவிட்டு, அப்படியே அரச மரத்தின் நிழலுக்கு சென்று இருபது நிமிட அளவுக்கு மூச்சுப் பயிற்சியாகிய 'பிராணாயாமம்' செய்வது உடம்பின் சர்வ நாடிகளுக்கும், குறிப்பாக மனதுக்கு மிக நல்லது. அரச மரத்தை தழுவி வரும் காற்றில் உயிராம்சம் *(‘ஆக்சிஜன்’)* அதிகம்.

ஒரு மனிதனின் ஆயுளையும், எண்ண ஓட்டத்தையும் அவனுக்கான சுவாச சுதிதான் தீர்மானிக்கிறது. சுவாச சுதியின் நீளம் குறையக் குறைய ஆயுள் விருத்தி... சுவாசம் அதிகரிப்பது, ஆயுளைக் குறைப்பதோடு எண்ணத்திலும் ஒரு மந்தத் தன்மை நிலவ இடம் கொடுக்கும். மலைகளில் உயரமான இடங்களில் வசிக்கும்போது காற்றில் உயிராம்சம் மிகுதி இதனால் சுவாசம் தொடர்பான கோளாறுகள், மலையில் வசிப்பவர்களுக்கு அவ்வளவாக இருக்காது.

- **வன வியாசம்**

பரணியும், குருவும் முகத்தில் வியப்பை எதிரொலித்தனர்.

“என்ன பரணி... யவ்வன மூலிகை விதைன்னா உடனே அதை பத்தி தெரிஞ்சுக்க மனது துடிக்குதா?”

“ஆமாங்கய்யா.... ‘யவ்வனம்’னா ‘இளமை’ன்னு தெரியும்.

‘யவ்வன மூலிகை’ன்னா இளமையை தரப்போற மூலிகைன்னு பொருளா?”

“ஆமா”

"அப்படி ஒண்ணு இருக்க முடியுமாய்யா.?”

“எதனால உனக்கு இந்த சந்தேகம்?”

“செவ்வாய்க்கிரகத்துல தண்ணி இருக்கறதை கண்டு பிடிச்ச மனுஷன், இப்படி ஒண்ணு இருந்தா விட்டு வைப்பானா?”

“அது எப்படிப்பா விட்டு வைப்பான்....? அதனால நான் நான் விடாம அதை அடைய முயற்சி செய்யறேன்....”

"அப்ப உங்களைத் தவிர இத்தனை வருஷத்துல யாருக்கும் அதைப் பற்றி தெரியாதா?”

“ஏன் தெரியாது? இதே மலையில தாமோதர பட்டத்திரின்னு ஒருத்தன் என்னைப் போலவே முயற்சியில இருக்கான். எனக்கு நீ உதவி செய்யற மாதிரி அவனுக்கு உதவி செய்துகிட்டு இருக்கிறது யார் தெரியுமா?”

“யார்?”

“உன் அப்பா...”

“என் அப்பாவா?”

“ஆமா.... அனேகமா நாளைக்கு அவரும் உனக்கு போட்டியா வரக்கூடும். நான் சொல்லப்போற ‘குரு மந்திரம்’ உன்னை வழி நடத்தினா.... அவரை அந்த பட்டத்திரியோட மாந்திரீக முறை வழிநடத்தும்.”

“இது எப்படி உங்களுக்கு தெரியும்?”

“பரணி... விசாக நட்சத்திரமும், வியாழக்கிழமையும் ஒண்ணா வருவதே எப்பவோதான். அப்படி ஒண்ணா வரும் அந்த ரெண்டும் உத்தராயணம் இல்லாத தட்சிணாயன காலத்துலேயும் ஐப்பசி மாசத்துல வருவது ரொம்ப விசேஷம். இங்கே நான் விசேஷம்னு சொல்றதை நீ சரியா

புரிஞ்சுக்கணும். உன் வீட்டுக்கு ‘கவுன்சிலர்’ வரப்போறாருன்னு வை.... தெருவே ஆச்சரியப்படும். அவர்கூட மேயரும் வரப்போறாருன்னா இன்னும் ஆச்சரியப்படும். மேயரோடு மந்திரி வந்தா இன்னும் பிரமிப்பு... அப்படிதான் இந்த விஷயம்!

நான் சொல்றது ஒரு பூகோள நிகழ்வு. இது திரும்பவும் வரும். ஆனா, அதுக்காக கணக்கு போட்டு காத்திருக்கணும். இந்த பூகோள நிகழ்வுக்கு பின்னால பூவியோட சுழற்சி, புவி ஈர்ப்பு விசை, காற்றோட ஈரப்பதம்னு பல விஷயங்கள் இருக்கு. இதுக்கு நடுவுல விசாக நட்சத்திர கதிரும், சூரிய கதிரும் சேரும்போது ஒரு வினைப்பாடு உருவாகுது. அதை எண்கோணப் பாறையின் மையத்துவ உக்காந்து உள்வாங்கும்போது சில சக்தி உருவாகும். இதெல்லாமே சித்த ரகசியங்கள். இந்த ரகசியங்கள் தெரிஞ்சவங்க முழுமையா எல்லா ரகசியங்களையும் தெரிஞ்சுக்க விரும்பறது இயற்கைதானே? அந்த மாந்திரீக பட்டத்திரியும் அதுல ஒரு நபர்....”

“சரி... அவர்கிட்டதான் அந்த விதை இருக்கா? எப்படி?”

“ஆமா... அவர்கிட்டதான் அந்த யவ்வன காந்தி மூலிகையோட விதை இருக்கு. அவருக்கே இப்ப வயது நூத்தி நாப்பது. ஆனா, அவரைப் பார்க்கும்போது உன்னால அதை உணர முடியாது. நீ ஐம்பது வயது மதிப்பிட்டா அதுவே அதிகம்....”

“அதை நான் பாத்துட்டு முடிவுக்கு வரேன்ய்யா. ஒருவேளை அவர் அந்த விதையை தர மறுத்தா?”

“தர மறுத்தா சப்த சஞ்சீவியையாவது கொடுக்கச் சொல்லு.”

“சப்த சஞ்சீவியா?”

“ஆமாம்.... வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், பேதனம், மாரணம்னு ஏழு ஜாதியில மூலிகைகள் உண்டு. அதுல வசியத்துல ‘பொற்றிலைக்கியா’ன்னு ஒரு மூலிகை. இது கையில இருந்தா தெய்வமே நமக்கு கட்டுப்பட்டு நடக்கும். மோக

ஜாதியில 'மதி மயங்கி'யோட வேர் இருந்தா... நாம பாக்கற ஜனங்கள் வசியமாவாங்க, தம்பனத்துல 'நீர்முள்ளி' இருந்தா... நீரால நமக்கு ஆபத்து வராது. அதை நாம கட்டுப்படுத்த முடியும். உச்சாடனத்துல 'மான் செவிக்கள்ளி' இருந்தா... எதிரிகள் நம்மகிட்ட வாலாட்ட மாட்டார்கள். வித்வேஷணத்துல 'ஆடு தின்னாப் பாளை' இருந்தா எல்லாத்தையும் நாம நம்ம கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வர முடியும். பேதனத்துல 'வட்ட துத்தி மூலிகை' இருந்தா நெருப்பு நம்மை எதுவும் செய்யாது. மாரணத்துல 'சித்திர மூலை மூலி' இருந்தா பிணியால மரணிக்கறவங்களை காப்பாத்தலாம். கொல்லவும் செய்யலாம்.... அதை பயன்படுத்தற முறையில அது இருக்கு...."

- சிவப்பிரகாசத்தின் நீண்ட விளக்கம், பரணி - குரு இருவருக்குமே மிக புதிது. பள்ளி, கல்லூரியில் படித்திருக்கின்றனர். இப்படி மூலிகைகள் இருப்பதோ... அவைகளுக்கு பின்னால் சக்தி இருப்பதோ கற்பனைகூட செய்து பார்த்திராத விஷயம். ஆனால், இங்கே சிவப்பிரகாசம் சொல்வதை கேட்கும்போது, அதை மூடத்தனமாக மறுக்க முடியவில்லை. அதே நேரம் இப்படிப்பட்ட தாவரங்களால் எப்படி மனித மனது கட்டுப்படுகிறது என்பதை புரிந்துகொள்ளவும் முடியவில்லை.

"என்ன பரணி... நான் இப்ப சொல்றதை எல்லாம் கேட்டா- இதை எந்த அளவு நம்பறதுங்கற மாதிரி தோணுதா?"

"நிச்சயமா!"

"எங்கையோ இருந்த அந்த திருட்டுப் பசங்கள, உன் விஷயத்துல எப்படி கண்டுபிடிச்சேன்னு நினைக்கறே?"

- சிவப்பிரகாசம் கேட்கவும் பரணி கூர்மையாக பார்த்தான்.

"அதுல எந்த மாய மந்திரமும் கிடையாது. மனதை ஒருமுகப்படுத்தணும். அப்படிப் பண்ணி எதிரியோட கண்களை ஊடுருவணும். ஒருமுகப்படுத்த கைவசம் உள்ள மூலிகை வேர்கள் துணை செய்யும். நடமாட முடிஞ்ச - ரத்தம் பாயற உயிரினங்களுக்கு உயிரணுங்கற திரவ

மூலம்தான் காரணம். நின்ன இடத்துல வளர்ற - ரத்தம் பாயாத உயிரினமான தாவரங்களுக்கு வேருங்கற திட மூலம் காரணம்

இந்த திட மூலம், திரவ மூலமான உயிரோடு இணையும்போது புது சக்தி உருவாகும். அந்த சக்தி, வெட்ட வெளியில அலைக் கதிரா பரவி - நாம யாரை தீர்க்கமா நினைக்கிறோமோ அவங்களைத் தேடி பிடிக்கும். கிட்ட தட்ட செல்போன் மாதிரிதான்... யார் கூட பேசணுமோ அவங்க எண்ணை தட்டும்போது மின் அலை தூண்டப்பட்டு உரிய அந்த எண்களை எட்டிப் பிடிக்கிற மாதிரிடே தான் இதுவும்.”

“அப்ப உங்க செயல்பாடு விஞ்ஞானபூர்வமானதா?”

“ஒரு நாள் விஞ்ஞானபூர்வமாகப் போகுங்கறது என் அபிப்ராயம்.”

“இப்ப ஆக முடியாதா?”

“முடியாது....! ஆதி மனிதன் எடுத்த எடுப்புல நிமிந்து நடக்கலை, ஆயுதங்களையும் கண்டுபிடிக்கலை... படிப்படியாகத்தான் ஒவ்வொண்ணும் வந்து சேர்ந்தது. அந்த வரிசையில இதுவரை வந்ததைவிட இனி வரப்போறது அதிகம். அதுல ஒண்ணா மனிதன் வானத்துல பறவையை விட வேகமா பறக்கற விஷயம் சாத்தியமாகலாம். பல ‘ஹாலிவுட்’ சினிமாவுல இப்ப இந்த பறக்கற விஷயம் வந்தாச்சு. ‘ஸ்பைடர் மேன்’னு ஒரு சினிமாவுல பார்த்தேன். அடேயப்பா என்ன வேகம்... என்ன வேகம்?”

“அப்ப இந்த மூலிகைகள் எல்லாமும் விஞ்ஞான பூர்வமானதுதானா?”

“ஆமா...! ஆனா, விஞ்ஞானப்படுத்தற காலமும், நிர்பந்தமும் வரும்போது கவலைப்படுவோம். இப்ப நீ கேள்வி கேட்காம... சொன்னதை மட்டும் செய். ‘யவ்வன காந்தி விதை' கிடைச்சா அந்த மூலிகைக்கு பல கோடிகள் தர சினிமா நடிகர்கள் சிலர் தயாரா இருக்காங்க. சப்த சஞ்சீவியால கிட்டத்தட்ட ஜனாதிபதி, பிரதமருக்கும் மேல சக்தியோடு

இருக்கலாம்.

நான் பார்த்து ஒருவரை கண் அசைவுல எதையும் சொல்ல முடியும். செத்துட்டதா சொல்லப்பட்டவரை காப்பாற்றவும் இயலும். நீரும், நெருப்பும் எதுவும் செய்ய முடியாது. எதிரின்னு ஒருவன் உருவாக முடியாது. இதை நான் சாதிச்சா எனக்கு பிறகு நீயும் சாதிப்பே. ஏதோ ஒரு வேலைக்கு போய் - அரசாங்கம் அச்சடிக்கற நோட்டுக்காக பாடுபட்டு சம்பாதிச்சு - அதுல பத்தியும் பத்தாம ஒரு நிராசையான வாழ்வு வாழாம - என்கூட சிஷ்யனா, ஒரு சக்கரவர்த்தியா வாழற வழியை உனக்கு தரப்போறேன். அதுக்கு நான் சொன்ன விஷயங்கள் அவசியம்”

“சரி... அதையெல்லாம் கேட்டு அவர் தரமாட்டேன்னு சொன்னா?”

“நல்ல கேள்வி... ஆனா, உன் வரையில அவர் அப்படி சொல்லமாட்டார். ‘உனக்கு அதை கொடுத்துடுவேன். உன்னால இந்த காட்டைவிட்டு போக முடியாது’ன்னு சொல்வார்.”

“அது உண்மையா?”

“உண்மைதான்! ஆனாலும், நான் இருக்கறதால உனக்கு ஆபத்து இல்லை. நீ அங்க இருந்து பாதி தூரத்தை எப்படியாவது கடந்து வந்துட்டா போதும். மறு பாதியில உனக்கு உதவிக்கு ஆட்கள் தயாரா இருப்பாங்க. அவர் தரப்போற விதையை சாணிக்குள்ள வெச்சு எடுத்து - அந்த சாணியை தொடையில வெச்சு துணியால கட்டுபோட்டுக்கோ. யானைச் சாணத்துல இதை செய்யும்போது அதன் வாடைக்கு மிருகங்கள் வராது.

அதே போல அவர் மூலிகையும், வேரும் தரும்போது ஈரத்துணியில சுத்தி நான் தரப்போற மான் பையில போட்டுக்கோ. வரும்போது மான் தோலை - தண்ணி கண்ட இடத்துல எல்லாம் நனைக்க தவறிடாதே! உன்னை நாளை உச்சிப் பொழுதுக்குள்ள சந்திச்சிட்டா நானும் சாதிசிட்டேன். நீயும் சாதிச்சிட்டே.”

“எல்லாம் சரி... என்னைப் போலவே என் அப்பாவுப் வருவாருன்னு சொன்னீங்களே?”

“ஆமா... அவரை நீ இப்பவேகூட போய் இங்க கூட்டிட்டு வந்துடலாம். அப்படி வரலைன்னா உன் அப்பா வனத்துல போகும்போது, அவருக்கு எப்படி வேணா ஆபத்து ஏற்படலாம்...”

“அவர் இப்ப எங்க இருக்கார்?

“அந்த தாமோதர பட்டத்திரியோட இடத்துலதான் இருக்கணும். என்னைப் போலவே பட்டத்திரியும் ஒரு குறிப்பிட்ட இடத்துல இதே மாதிரி உன் அப்பாவோடு விடியற்காலை பொழுதுக்காக காத்துக்கிட்டிருக்கான்.”

“அந்த இடம்.?”

- பரணி கேட்க....“கந்தசாமி” என்றார் சிவப்பிரகாசம். கந்தசாமியும் வந்து நின்றார்.

“பரணியை கூட்டிக்கிட்டு, போய் தூர இருந்து காட்டு...” என்றார்.

“வாங்க தம்பி” - என்று கந்தசாமி, தீப்பந்தத்துடன் நடக்கத் தொடங்கினார்.

“பாத்துட்டு வந்துடு... உன் அப்பாவை அவன் கிட்ட இருந்து பிரிக்க நான் வழி சொல்றேன்” என்றார் சிவப்பிரகாசம்.

பரணி கைகடிகாரத்தைப் பார்த்தான்.

மணி எட்டை எட்டி இருந்தது. வெளியே கும்மிருட்டு. 'சில்’ வண்டுகளின் சப்தம் வேறு.

காற்றிலும் குளிரின் தாக்கம். கந்தசாமி உச்சந் தலையை மூடிய கறுப்புப் போர்வையோடு நடப்பது - அடர் இருட்டில் பார்க்கவே திகிலூட்டுவதாக இருந்தது.

பரணியும், குருவும் பின் தொடர்ந்தனர். கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் கடந்த நிலையில் ஒர் இடத்தில் கொழுந்து

விட்டு எரியும் தீயின் ஜ"வாலை!

***

# 31

வனத்துக்குள்ளே நிறைய விசித்திரங்கள் உண்டு. குறிப்பாக வனத்துக்குள் தேங்கி இருக்கும் நீர், ஓடும் நீர், விழும் நீர் என்று மூன்று வித நீர்ப் போக்குகள் உண்டு. இதில் விழும்நீர்தான் ‘அருவி’ என்றாகிறது. இதில் ஒருவன் ஒரு மண்டலம் கால சந்தி எனப்படும் 'உதய காலம், உச்சிக் காலம், அஸ்தமன காலம்' ஆகிய மூன்று காலங்களில் நீராடுவதன் மூலம் கணைச்சூடு என்ற ஒன்று அவன் உடம்பில் இருந்தால் அது நீங்கிவிடும். இந்த கனச்சூடு, உடம்பில் சதை போட விடாது. தேவையான சக்தியை உணவில் இருந்து உடம்பானது போதுமான அளவு எடுத்துக்கொள்ளவும் விடாது. அத்துடன் கணைச்சூடு உள்ளவர்களின் கண்கள் அடிக்கடி பொங்கும். இதெல்லாம் அருவிநீராடலில் சீராகும்.

அடுத்து.... ஓடும் நீர்.

இந்த நீரில் நீராடும் முன் இதை அள்ளிப் பருக வேண்டியது முக்கியம். அப்படி பருகும்போது, கெட்ட வாடை வந்தால் அந்த நீர் ஓடி வரும் வழித்தடத்தில் ஏதோ ஒரு மிருகம் நீரருந்த வந்துநீரில் மூழ்கி இறந்து - நீரின் வழித்தடத்தில் எங்காவது பாறை இடுக்கில் சிக்கியிருக்க கூடும். எனவே, இப்படிப்பட்ட நீரில் நீராடுவது கூடாது. இதை குடிப்பதும் நலம் தராது.

இதற்கடுத்து வருவது தேங்கியுள்ள நீர்!

இந்த நீரிடம்தான் மிக கவனமாக இருக்க வேண்டும் இதில் மிருக எச்சில் கலந்த நீர், இடியும் - மின்னலும் பாய்ந்த நீர், உச்சி சூரியனால் உஷ்ணமான நீர், அதிகாலைப் பணியால் குளிர்ந்து போன நீர் என்று நான்கு வகை உண்டு.

**- வன வியாசம்**

தொலைவில் தெரிந்த அந்த தீயின் ஜூவாலையை கந்தசாமி தூர இருந்தபடியே காட்டினார்.

அது பெரும் ஜ''வாலை...

அதன் ஒளியில் - அருகில் சிலர் நிற்பது தெரிந்தது.

ஆனால், அவர்களை அடையாளம் காண முடியவில்லை.

“கந்தசாமிண்ணே... அங்க எங்கப்பா - இருக்கறதே தெரியலியே?”

“கிட்டே போய் பார்த்தாத்தான் தம்பி தெரியும். தாமோதர பட்டத்திரி, உங்க அப்பாவைக்கூட தன்னோட வசிய சக்தியால நினைவே இல்லாம பண்ணி வெச்சிருக்கான். ஆகையால நீ கிட்டத்துல போய் பார்த்தாக்கூட அவர் உன்னைப் பார்த்து அடையாளம் தெரிஞ்சிக்க மாட்டார்...”

“அதை நான் எங்க அப்பாவைப் பார்த்த பிறகுல்ல சொல்லணும்?”

“நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். அதே நேரம், அய்யா சொன்ன மாதிரி உன் அப்பாவை நீ இப்பவே கூட்டிக்கிட்டு வந்துட்டா - நாம பாதி ஜெயிச்ச மாதிரி...”

“அப்ப கிட்டே போய் பார்ப்போம்....இங்கேயே நின்னா எப்படி?”

“தம்பி.... உனக்கு பட்டத்திரியைப் பத்தி தெரியாது. அவன் பார்த்துட்டா உன்னையும் தன் வசப்படுத்தப் பார்ப்பான். ஒருவேளை நீ அவன் வசமானா - இங்க அய்யாவுக்கு அது எவ்வளவு பெரிய ஏமாற்றமா இருக்கும்னு யோசிச்சுப் பார்...”

“அப்படியெல்லாம் நடக்காது... என்னை தன் விருப்பப்படி மாற்ற ஒருத்தர் இனி பிறந்துதான் வரணும்.”

“இப்ப இங்க பேசலாம். ஆனா, அவன் முன்னால உன்னால ஒண்ணும் பண்ண முடியாது. அய்யா எப்படி இப்படியொரு நாளுக்காக நெடுங்காலமா காத்திருந்தாரோ. அதேபோல அவனும் காத்திருக்கிறவன். அவன் ஏவல் சக்திகளை நம்பி செயல்படுறவன். அய்யா அப்படி இல்ல. மனோபலம் மிக்கவர்... அதே நேரம் கால பலத்தை நம்பி செயல்பட விரும்பறார்...”

"அண்ணே... இது நின்னு விவாதம் பண்ற விஷயமில்ல.

அதுக்கு தோதான நேரமும் இல்ல. அதே வேளை, எனக்கு பொறுப்பில்லாத அப்பாவை கொஞ்சமும் பிடிக்காது. ஆனா, இங்க நோக்கமே இல்லாம யாரோ ஒருத்தன்கிட்ட அவர் அடிமை போல நடந்துக்கறதை என்னால ஜீரணிக்க முடியல. அடுத்து, ஆபத்தான காட்டு வழியில அவர் போறதும் சரியில்ல. ஆகையால அவரைக் காப்பாத்தியே தீரணும்.”

“சரி, என்ன பண்ணலாம்னு அய்யாகிட்டையே போய் கேட்போம்.... வா.”

“அதுக்கு முந்தி எவ்வளவு கிட்டே போக முடியுமோ அவ்வளவுகிட்டே போய் நான் அவரை தெளிவா பார்த்துட்டு வந்துடுறேன்.”

- என்ற பரணி, குருவைக்கூட அழைக்காமல் அந்த தீ ஜுவாலை எரியும் இடம் நோக்கி முன்னேறத் தொடங்கினான்.

“பரணி இரு... அவசரப்படாதே. நானும் வரேன்...” என்று குருவும் பின்தொடர்ந்தான். கந்தசாமி அங்கேயே காத்திருக்கத் தொடங்கினார்.

பரணியும், குருவும் அந்த இருண்ட சூழலில் புதர்களை மெல்ல விலக்கிக் கொண்டேதான் செல்ல வேண்டி இருந்தது குருவுக்கு அப்போது ஒரு விபரீத கற்பனை காலடியில் ஒரு மலைப் பாம்பு கிடந்து, அதை அவர்கள் மிதிக்கப் போய் - அது அவர்கள் இருவரையும் அப்படியே சுற்றி வளைப்பது போல நினைத்துப் பார்த்தவன், “பரணி... பார்த்து காலை வை. பாம்பு கீம்பு இருந்து மிதிச்சு தொலைக்கப் போறோம்.” என்றான் கிசுகிசு குரலில்.

“பேசாம வாடா...” என்று அதட்டிய பரணியும் அவர்களை மிகவே நெருங்கிவிட்டான். அவனுக்கும், தாமோதர பட்டத்திரி உள்ள இடத்துக்கும் இடையில் முப்பதடி தூரம்தான் இருக்கும். பட்டத்திரி கண்களை மூடி ஏதோ ஜெபித்தான்.பரணியின் அப்பா ராமசாமி அந்த ஜுவாலையை தொடர்ந்து தூண்ட சுள்ளிகளை போட்டபடி இருந்தார். முகத்தில் பல வருடதாடி. தலையிலும் பாகவதர்

போல முடி 'தொளதொள' வென்று சட்டை, இடுப்பில் கறுப்பு நிறத்தில் வேட்டி அவ்வரை அந்த கோலத்தில் பார்க்கவும் பரணிக்கு நெஞ்சைக் கரித்தது.

குருகூட கேட்டான்....

"பரணி... 'பிதாமகன்' படத்துல வர்ற விக்ரம் மாதிரி இருக்காரே... அவரா உங்கப்பா?"

"ஆமாண்டா"

"என்னடா இது தலையெழுத்து... எதனால இப்படி?"

"தலையெழுத்தாவது, கால் எழுத்தாவது? சோம்பேறித்தனமும், பொறுப்பில்லாத்தனமும்தான் இப்படி ஆக்கிடிச்சு"

"இவரை எப்படி இங்க இருந்து கூட்டிட்டு போறது?"

"கூட்டிட்டு போறதைவிட முக்கியமான விஷயம், இந்த பட்டத்திரியை ஒரு பிடி பிடிக்கறதுதான்."

"ஐயோ... என்ன பண்ணப் போறே?"

"எனக்கு இப்ப ஒரு உதவி செய்."

"என்னடா?"

"அப்பாவை உன் கிட்ட ஒப்படைக்கிறேன். அவரை கூட்டிட்டு நீ மலையைவிட்டு இறங்கிடு. காலையில நான் அந்த எண்கோனப் பாறைக்கு போய், என்ன நடக்குதுங்கறதைப் பார்த்துட்டு வந்து சேர்றேன்... இப்ப இந்தப் பட்டத்திரியையும் நான் சமாளிக்கறேன்...."

"என்னடா உளர்றே?"

"உளறலை. இப்ப கவனி."

"இருடா. எதுவா இருந்தாலும் அய்யாகிட்ட கேட்போம். அவர் எதாவது வழி சொல்வார்."

“அவர் என்ன சொல்றது? இப்ப நான் செய்யப் போறதைக் கவனி.”

“வேண்டாம் பரணி. உன் அப்பா இருக்கறது உறுதி ஆகிடிச்சு. திரும்பிப் போய் அய்யாகிட்டையே வழியை கேட்போம்.”

- குரு, பரணியை முன்னேறவிடாமல் தடுத்தவனாக இழுத்துச் சென்றான். கந்தசாமியையும் நெருங்கி,

“அண்ணே போகலாம்.... வாங்க” என்றான்.

பெபரும் மூச்சிறைப்போடு வந்து நின்ற மூன்று பேரையும் ஏற இறங்கப் பார்த்தார் சிவப்பிரகாசம்.

“என்ன பரணி. உன் அப்பாவைப் பார்த்த உடனேயே ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுட்டியா?”

“ஆமாம்ய்யா. பிச்சைக்கார பரதேசி மாதிரி இருகாருய்யா. எங்க அம்மா பார்த்தா கதறிடுவாங்க.”

“அய்யா. பரணியை ரொம்ப கட்டுப்படுத்தி இழுத்துக்கிட்டு வந்திருக்கேன் நான் விட்டுருந்தா அந்த பட்டத்திரி முன்னால போய் நெஞ்சு நிமிர்த்தி இருப்பான்.”

“குரு... நீ எதுவும் சொல்லத் தேவையில்லை. பரணியை எனக்கு நல்லாத் தெரியும். அவன் ஜாதகமேகூட அத்துப்படி”- சிவப்பிரகாசம் இரு பொருளில் சொன்னதைக் கேட்ட பரணிக்கு அந்த நிலையிலும் சிரிப்புதான் வந்தது. அப்போது அவர்களுக்கான அந்த சூழலில் யாரோ வருவது போல சிறு சலசலப்பு.

சிவப்பிரகாசம் விடைத்துப் போய் சுற்று முற்றும் பார்த்தார். சற்று தள்ளி உள்ள பருத்த மரத்தின் பக்கத்தில் இருந்துதான் அந்த சலசலப்பு கேட்டது.

“கந்தசாமி... யாருன்னு பாரு” என்று பதற்றமடையத் தொடங்கினார். அப்படியே இடுப்பு மடிப்பில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றையும் வெளியில் எடுத்திருந்தார்.

அவரை துப்பாக்கியோடு பார்க்கவும் பரணி அதிர்ந்தான்.

கந்தசாமி ஒரு தீப்பந்தத்துடன் சத்தம் வந்த பக்கமாக போனபோது, வெளிச்சத்தில் கறுப்பாக ஓர் உருவம் தெரிந்தது.

கந்தசாமி ஊன்றிப் பார்க்கவும், அது கரடி என்பது தெரிந்தது. அடுத்த நொடியே அது அவர் மீது பாய முற்பட - தீப்பந்தத்தை தூக்கி அதன் மேல் போட்டவராக திரும்பி ஓடி வந்தவர், “ஐயா... கரடிய்யா” என்று அலறினார்.

சிவப்பிரகாசத்திடமும் பலத்த அதிர்ச்சி. எவ்வளவு தான் வசிய சக்தி இருந்தாலும், அது கரடியிடம் மட்டும் துளியும் செல்லுபடியாகாது. அதுவும் குதித்துக்கொண்டு அவர்கள் கூடாரம் முன் வந்தது.

சிவப்பிரகாசம் துளிகூட யோசிக்கவில்லை. கைவசம் உள்ள துப்பாக்கியால் சுட்டார். அவசரத்தில் கட்டதில் குறி தவறியது. அதுவும் துப்பாக்கி சத்தம் கேட்டு ஆவேசமடைந்து ஒரே தாவில் சிவப்பிரகாசத்தின் மேல்தான் விழுந்தது.

துப்பாக்கியும் அதில் எங்கோ போய் விழுந்துவிட, அப்படியே தரையில் உருண்டு புரள ஆரம்பித்தது. பரணியும், குருவும் அந்த நொடிகளில் நிலைகுலைந்து போயிருந்தனர்.

கந்தசாமி சட்டென்று, “தம்பிகளா... ஒடுங்க. இனி இவரைக் காப்பாத்த முடியாது” என்றவர், அவரும் இருளில் புகுந்து திக்கு தெரியாதபடி ஒடத் தொடங்கினார். ஆனால், பரணி ஒட விரும்பவில்லை. ஒரு தீப்பந்தத்தை எடுத்தான்.

தரையில் சிவப்பிரகாசத்தின் கழுத்தில் வாயை வைத்து ரத்தத்தை உறிஞ்சிப் பார்த்திருந்த கரடியின் பின் முதுகில் தீயை வைத்தான். அது அந்த நொடியில் சிவப்பிரகாசத்தை விட்டுவிட்டு அதே வேகத்தோடு பரணி பக்கமாக திரும்பியது. குரு, இன்னொரு தீப்பந்தத்தை தூக்கிக் கொண்டு அவனும் தாக்கத் தொடங்கினான். இருபுறமும் திகுதிகுவென தீப்பந்தத்துடன் தாக்க வரவும், கரடியும் திரும்பி ஓடத் தொடங்கியது.

அது விலகவும் இருவரும் சிவப்பிரகாசத்தை நெருங்கினர்.

அவரோ ரத்த வெள்ளத்தில் கழுத்துப் பக்கம் முற்றாக குதறப்பட்ட நிலையில் அப்படியே வெறித்துப் பார்த்தார்.

பார்த்தவர், ஏதோ சொல்ல முன்வந்தார்.ஆனால் பேச்சு வரவில்லை. அப்படியே கண் இரண்டும் செருக ஆரம்பித்தது

“அய்யா.... அய்யா” - பதறினான் பரணி. ஆனால் சிவப்பிரகாசத்தின் உயிர் பிரிந்துவிட்டது. அந்த இரவு பொழுதில் பத்து நிமிட நேரத்துக்குள் எல்லாமே தலைகீழாகிவிட்டதை நினைக்கவும் அவனுக்கு பெரும் ஆபாசமாக இருந்தது. குருவும் கலங்கியவனாக,

“என்னடா பரணி. இப்படி ஆகிடிச்சு. நம்மள வ நடத்தின அய்யாவே இப்ப உ. உ. உயிரோட இல்லை இ இதை எப்படிடா எடுத்துக்கறது? என்னால நம்ப முடியல பயமாவும் இருக்கு.”

- குருவின் குரல் தந்தியடித்தது.

அப்போது வீட்டுக்குள் -"அம்மா....” என்கிற ஒரு பெரும் குரலும் கேட்டது. கிட்டதட்ட கந்தசாமியின் குரல் போலவே ஒலித்தது.

“பரணி... இது கந்தசாமி அண்ணன் குரல் மாதிரி இல்ல?"

"ஆமாம்! அவருக்கும் ஏதோ ஆகிடிச்சு போல இருக்கு” - குரு சொல்லும்போதே காட்டு யானை ஒன்று பிளிறும் சத்தம்.

“ஐயோ... அண்ணன், யானைகிட்ட மாட்டிக்கிட்டார் போல” என்றான் குரு.

“அப்படித்தான் நினைக்கிறேன்” என்ற பரணி - வேகமாக அங்கிருந்த சிவப்பிரகாசத்தின் பொருட்களை எல்லாம் திரட்ட ஆரம்பித்தான்.

“என்ன செய்யப்போறே?”

“கீழே போய் இதையெல்லாம் எங்கேயாவது பத்திரமா வை. அப்படியே போலீசுக்கு தகவல் சொல்லி, இங்க கூட்டிட்டு வா.”

“நீ...?”

“நான் இங்க உடம்புகிட்டயே இருக்கேன். இப்படியே விட்டுட்டுப் போனா வேற எதாவது மிருகங்கள் வந்து சாப்பிட்டுடலாம்.”

“அதுவும் சரிதான்! ஆனா எனக்கு தனியா போக பயமா இருக்கு பரணி. நானும் உன்கூடவே இருக்கேன்.”

“இதோ பாரு... நாளைக்கு காலையில அய்யா சொன்ன நேரத்துல நான் அந்த எண்கோணப் பாறை கிட்டப் போய்- அங்க வரப்போற சித்தரைப் பாத்தே தீரனும் எனக்கு அவர்கிட்ட நிறைய கேள்விகள் இருக்கு. அதே நேரம் இங்க அய்யா உடம்புக்கு எந்த பாதிப்பும் வராமலும் பாத்துக்கறது முக்கியம்.”

“எப்படிடா? கூட வந்த கந்தசாமி அண்ணன் வேற உயிரோட இருக்காரோ. இல்லை உயிருக்கு போராடிக் கிட்டு இருக்காரோ?”

“இரு. ‘போன்’ வேலை செய்யுதா பாக்கறேன்.”

- பரணி தன் ‘செல்’லை எடுத்து திரையைப் பார்த்தான். ‘சிக்னல்’ கொஞ்சம்கூட இல்லை.

“பரணி.... இங்க இவருக்கு ஆன மாதிரி மேல உங்க அப்பா, அப்புறம் பட்டத்திரிக்கும் ஆனா?”

“ம்... சரிதான். இது காடு - மிருகங்களுக்கு பசிதான் கணக்கு. கருணையோ, பாசமோ கிடையாது. வா... நாம முதல்ல பட்டத்திரி இருக்கற இடத்துக்குப் போய் அப்பாவுக்கு எதுவும் ஆகிடாதபடி காப்பாத்த முயற்சி செய்வோம்.”

“அப்ப இந்த உடம்பு?”

“இதைவிட நமக்கு உயிரோடு இருக்கற அவங்க ரொம்ப முக்கியம்.”

- இருவரும் பேச்சோடு பேச்சாக சிவப்பிரகாசம் கொண்டு வந்திருந்த தோல் பையை தூக்கிக்கொண்டு - அவர்

உடம்பையும் ஒரு பக்கமாய் இழுத்து, அதன் மேல் “டென்ட் கொட்டகை துணியை அப்படியே இழுத்துப் போட்டு மூடிவிட்டு - அணையும் நிலைக்குச் சென்றுவிட்ட ‘பெட்ரோமாக்ஸ் லைட்’டை திரும்ப எரிய வைத்தவர்களாய் அங்கிருந்து புறப்பட்டனர்.

அந்த நொடியில் எதிரில் பரணியின் அப்பாவே “காப்பாத்துங்க… காப்பாத்துங்க” என்றபடி ஓடி வந்தவராக அவர்கள் மேல் விழுந்ததில். ‘பெட்ரோமாக்ஸ் லைட்’டும் கீழே விழுந்தது!

***

# 32

‘அந்த நான்கு வகை நீர்களில் இடியும், மின்னலும் இறங்கிய நீர்தான் மிக ஆபத்தானது. சித்த வைத்தியத்தில் ரசவாதம் புரிவதற்கும், சில பஸ்பங்கள் செய்வதற்கும் தேவைப்படுவது!

இதை காட்டுவாசிகள் ‘இடிக்குழி நீர்’ என்பர். ஆனால், சித்த வைத்தியம் தெரிந்தவர்களோ... 'உதக நீர்' என்பார்கள். சித்தர்களோ இதை 'வருணதாரை' என்பர். இது மிக ஆபத்தான நீர் மலையில் மழை பெய்யும்போது குழி விழுந்த பள்ளமான பாறைகளில் அந்த மழை நீர் தேங்கிவிடும். அப்படி தேங்கிய நீரின் மேல் எதிர்பாராமல் இடியானது விழுந்தால்... இடியின் விசையும், அதோடு இணைந்து வந்த மின்னலின் விசைப்பாடும் அந்த நீரில் புகுந்து நீரின் உட்கூறுகளையே மாற்றி அதில் ஒரு பெரும் வினைப்பாடு உருவாகியிருக்கும்.

இதனால் அந்த நீர் சற்று திடமாகி, எண்ணெயின் அடர்வுக்கு மாறிவிடும். அதன் நிறம்கூட மாறும் தன்மை உடையது. இவ்வகை நீரை ஆடோமாடோ குடித்தால் அதன் வயிற்றுப் பாகம் உறுதியான கல்லைப்போல ஆகி - அந்த ஆடும், மாடும் வலி தாளாமல் துடித்து உயிரை விட்டுவிடும். இந்த நீரைக்கொண்டு மணலைப் பிசைந்தால், அந்த மணலும் காய்ந்த நிலையில் உறுதியான மணற்கல் போல ஆகிவிடும். இந்த நீரின் குணப்பாட்டை ரசவாதம் செய்ய பயன்படுத்துவர். இதை எந்த அளவு எடுத்து சேர்க்க வேண்டும். எந்த உலோகத்தால் எடுக்க வேண்டும் என்பதற்கெல்லாம் ஒரு வரையறை உள்ளது.’

**- வன வியாசம்**

கீழே விழுந்த ‘பெட்ரோமாக்ஸ் லைட்’டால் அந்த இடத்தில் கிடந்த சருகுகள் பலமாய் தீப்பற்றிக் கொண்டன. விறுவிறுவென்று தீ நாக்கு நாலாபுறமும் பரவ ஆரம்பித்தது. பரணியின் அப்பா அந்த தீ நாக்குகள் நடுவே சிக்கிக் கொண்டவராக... “காப்பாத்துங்க... காப்பாத்துங்க” என்று கத்த ஆரம்பித்தார்.

பரணியும், குருவும் அவரை - தீ நாக்குகளிடம் இருந்து காப்பாற்ற ஒன்றாகப் பாய்ந்தனர். பாய்ந்த வேகத்தில் அவரை இழுத்துக்கொண்டு, குறைவான தீ நாக்குகள் உள்ள பக்கத்தின் வழியாக ஓடினர்.

அந்த நொடி... காட்டு யானை ஒன்று பிளிறும் சத்தமும் கேட்டது. அதுவே... தன் அப்பா எதனால் ஓடி வந்தார் என்பதை பரணிக்கு புரிய வைத்துவிட்டது. கண்ணைச் சரித்த இருளில், கால் போன போக்கில் ஓட வேண்டியிருந்தது.

ஒரு கட்டத்துக்கு மேல் ஓட முடியாதபடி மூவருமே ஒரு பெரிய மரத்தின் அடிப் பாகத்தின் மேல் மோதி, அப்படியே கீழே தெறித்து விழுந்தார்கள். தொலைவில் ‘பெட்ரோமாக்சால்’ உருவான நெருப்பு பெரிய அளவில் காட்டுத் தீயாக மாறிவிட்டதை அவர்கள் கீழே விழுந்த இடத்தில் இருந்தே பார்க்க முடிந்தது.

மேல் மூச்சும், கீழ் மூச்சும் நெட்டித் தள்ளியது.

பரணியின் அப்பா ராமசாமி கீழே விழுந்த வேகத்தில் மயக்கமாகிவிட்டார். பரணி அவரை தொட்டுப் பார்த்து அதைத் தெரிந்துகொண்டான். துளியும் தாமதிக்காமல் எழுந்தவன், “குரு” என்று குரல் கொடுத்தான்.

“நான் இங்கதான் இருக்கேன். நீ எழுந்து நிக்கறது தெரியலை.”

“இங்கேயே இரு. அப்பா மயங்கிட்டார். நான் போய் தீப்பந்தம் செய்து எடுத்துக்கிட்டு வரேன்” - என்று எதிரில் பரவி வரும் காட்டுத் தீயை நோக்கிச் சென்றான். போன வேகத்தில் அங்கே கூடாரம் இருந்த இடம் மொத்தமும் கருகிவிட்டதோடு, சிவப்பிரகாசத்தின் உடம்பும் பற்றி எரிவது தெரிந்தது. யானை பிளிறிக்கொண்டு திரும்பிச் சென்று கொண்டிருந்தது. பரணி வரையில் அந்தக் காட்சி நெஞ்சைக் கசியச் செய்தது.

பெரியவர் சிவப்பிரகாசத்துக்கு இப்படியொரு முடிவு நேரிடும் என்பதை அவன் கற்பனை செய்துகூட

பார்த்திருக்கவில்லை. தீ நாக்குகள் வேகமாக பரவியபடி இருந்தன. ஒரு பருத்த மரக்கிளை நன்றாக பற்றி எரிந்தபடி இருக்க, அதோடு திரும்பி வந்தான். கழுத்தெல்லாம் ரத்தக் கசிவோடு - வெட்டிப் போடப்பட்ட வாழை மரம் போல கிடந்தார் பரணியின் அப்பா.

இடுப்பில் வேட்டி இல்லை. ‘அரை டிராயர்’ மட்டும் இருந்தது. அவரைப் பார்த்த நொடி ஒரு பதைப்பு. குருவின் கையில் எரியும் கொள்ளிக் கட்டையை கொடுத்த பரணி, அவரை குனிந்து தூக்கி தன் தோள் மேல் போட்டுக் கொண்டான். அங்கிருந்து நடக்க ஆரம்பித்தான்.

“பரணி… நாம இங்க கீழதானே போகப் போறோம்?”

“பின்ன… இவருக்கு முதல்ல சிகிச்சை கொடுத்தாகணும்.”

“என்னடா இது… என்னென்னமோ நடந்துடிச்சேடா?"

“அதுக்கு பேர்தான் இயற்கை. எப்பவும் அதுதான் பெருசு, எதை எதையோ தெரிஞ்சிக்கவும், அடையவும் ஆசைப்பட்ட பெரியவருக்கு-தனக்கு இப்படி முடிவு நேரும்னு தெரியாம போயிடுச்சு பாரு.”

“உண்மைதான்… வீட்டை விட்டு புறப்படும்போது கல்யாணி, ‘கவனம் – கவனம்’னு வார்த்தைக்கு வார்த்தை சொன்னதுக்கு அர்த்தம் இப்பதான் புரியுது.”

“குரு… அவர் உடம்புகூட காட்டுத் தீயில எரிஞ்சிடுச்சு. அந்தக் கொடுமையை என் கண்ணால வேற பார்த்தேன். அநேகமா கந்தசாமி உடம்பும் எரிஞ்சிருக்கத்தான் வாய்ப்பு அதிகம்”- என்று பரணி சொல்லி வாய் மூடவில்லை.

“தம்பிங்களா….” என்று ஒரு குரல் பக்கவாட்டில் இருந்து கேட்டது. கொள்ளிக்கட்டையும் அணைவது போல் எரிந்ததால், வெளிச்சம் பெரிதாக இல்லை. சத்தத்தை ஒரு அடையாளமாக கொண்டு, அது வந்த திசையில் பார்த்தபோது… ஒருவர் நிற்பது தெரிந்தது.

அருகே நெருங்கவும்… அது கந்தசாமியேதான் என்பது புலனானது.

"அண்ணே! நீங்களா?”

“நானேதான். நான் செத்திருப்பேன்னு நெனைச்சீங்களா?”- முக்கல் முனங்கலோடு கேட்டார் கந்தசாமி.

“நீங்க அலர்ற சத்தம் கேட்கவும், அப்படித்தான் நினைச்சுட்டோம்.”

“நல்லது.... பக்கமா கள்ளிகளை குவிச்சு தீ வையுங்க. அந்தக் காட்டுத் தீ, இந்தப் பக்கம் வராது. காத்து நமக்கு எதிர்திசையில வீசறதால தீ, மேல் நோக்கிதான் போகும்.”

“அண்ணே... இங்க எதுக்கு தீயை வெச்சிகிட்டு? இனி இங்க இருக்கறது சரியில்ல. ஒரே மூச்சா கீழ இறங்கிடுவோம்.”

“அதுக்கு முந்தி உங்களுக்கு நான் சில விஷயங்களைச் சொல்லணும். அதைக் கேட்டுட்டு கீழ இறங்கறதப் பத்தி முடிவெடுப்போம். முதல்ல சுள்ளிகளை குவிச்சு தீவை. அப்பதான் எந்த மிருகமும் கிட்ட வராது.”

- கந்தசாமி கட்டளையிடும் குரலில் கூறவும், குரு வேகமானான். பரணியும், ராமசாமி உடலை கீழே கிடத்தினான். சுள்ளிகள் வேகமாக எரிய ஆரம்பிக்கவும், வெளிச்சமும் மண்ட ஆரம்பித்தது.

கந்தசாமியின் தோள்பட்டை, வயிற்றுப் பகுதியில் எல்லாம் காயங்கள். வாயைத் திறந்துகொண்டு சுவாசித்தபடியே கீழே கிடந்த ராமசாமியை பார்த்தார்.

“எப்படியோ உன் அப்பா தப்பிச்சு வந்துட்டார்.நீங்களும் தப்பிட்டீங்க. ஆனா பெரியவர் தான்.” - கந்தசாமியால் பேச முடியவில்லை. அழுகை வந்தது.

"அண்ணே... இந்தக் காடு எங்களுக்கு புதுசு. இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பு இருக்கும்னு நீங்க முன்னாலே சொல்லியிருந்தா இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையா இருந் திருப்போமே?”

- பரணி கசிந்த குரலில் கேட்டான்.

“அப்படியெல்லாம் இல்ல தம்பி… இப்படி ஏடா கூடமா ஏதாவது நடக்கும்னு ஒரு பயம் எனக்கு இருந்துச்சு. ஆனா, இந்தத் தடவை எப்படியாவது நாராயண சித்தரைப் பாத்தே தீரணும்ங்கற வைராக்கியம் - பயத்தை கட்டுப் படுத்திடிச்சு.”

“நாராயண சித்தரா… அது யாரு?”

“விடிஞ்சா என்கோணப் பாறைக்கு வரப்போறாரே… அவர்தான்.”

“இந்தப் பேரை சிவப்பிரகாசமய்யா சொல்லவே இல்லையே?”

“இதை மட்டுமா… பல விஷயங்கள அவர் சொல்லல. அது எனக்கு மட்டும்தானே தெரியும்.”

“அப்படி என்னத்த அவர் மறைச்சார்?”

“கொஞ்சம் இரு. என் காயத்துக்கும், உங்க அப்பா காயத்துக்கும் மருந்து போட்டபிறகு… உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்றேன்.”

“இந்தக் காட்டுல, இந்த நேரத்துல மருந்துக்கு எங்க போக?”

“இந்த காடே ஒரு மருந்துங்கறது உனக்குத் தெரியாது தம்பி. இதுல ‘சதை ஒட்டி’ன்னு ஒரு செடி உண்டு. இதோட இலையை அப்படியே மென்னு சாப்பிட்டா. எவ்வளவு பெரிய காயமும் வேகமாக ஆறும். கூடவே, ‘வெட்டுக்காய பூண்டுச் செடி’யை கசக்கி - காயம்பட்ட இடத்துல விட்டா. கிருமிங்க செத்துப்போய் காயம் ரணமாகாம, சீழ் பிடிக்காம வேகமா ஆறிடும். இந்தப் பகுதியில அது அதிகம். இப்ப கொஞ்சம் சிரமப்பட்டா, பின்னால பெரிய அளவுல சிரமப்பட வேண்டாம்” - என்று சொல்லியபடியே எரியும் சருகுகளில் இருந்து ஒரு கொள்ளியை எடுத்துக்கொண்டு அப்படியே புதர்களை பார்த்துக்கொண்டே நடந்தார் கந்தசாமி. பரணிக்கும், குருவுக்கும் அவரது அந்த முயற்சி ஆச்சரியம் அளித்தது.

அதிகம் தேட அவசியமின்றி ‘சதை ஒட்டி’யும், ‘வெட்டுக்காயப் பூண்டு’ம் கிடைத்தன. அடுத்த பத்து

நிமிடத்தில் பரணியின் அப்பாவுக்கு கட்டுப்போட்டுவிட்டு. தன் காயத்திலும் பூண்டுச் சாறை பூசிக்கொண்டார். முகத்திலும் எரிச்சலின் எதிரொலி.

பரணி வெறித்தபடியே இருந்தான். கைக்கடிகாரத்தைப் பார்க்கவும், மணி பன்னிரண்டைக் கடந்திருந்தது. மறுபுறம் காட்டுத் தீ தானாகவே மேற்கொண்டு பரவ இடமில்லாத நிலையில் மெள்ள அணைந்திருந்தது.

கந்தசாமியும், தீ எரிந்த அந்த திக்கை பார்த்து கைகளை கூப்பி சாமியை கும்பிடுவது போல கும்பிட்டார்.

“என்னண்ணே... எதுக்கு இப்ப இந்த கும்பிடு?”

“ஏதோ இந்த மட்டோட விட்டுச்சே அதுக்காகத் தான்.”

"அண்ணே... பெரியவர் நிறைய விஷயங்களை மறைச்சார்னு சொன்னீங்களே! அது என்னன்னு சொல்ல முடியுமா?”

“சொல்றேன். அவர்தான் இப்ப உயிரோட இல்லையே! நான் அவருக்கு செய்திருந்த சத்தியத்துக்கும் இனி உயிர் இல்லை. எல்லாத்தையும் தாராளமா சொல்லலாம்.”

“சத்தியமா?”

“ஆமா தம்பி. என்கிட்ட சத்தியம் வாங்கி, கட்டிப் போட்டிருந்தார்.”

“அந்த அளவுக்கு அது வெளியில தெரியக்கூடாத விஷயமா?”

“ஆமா. இதெல்லாமே 'பிரம்ம ரகசியம்’னுகூட சொல்லலாம். இந்த ரகசியத்துக்கு எப்பவுமே சக்தி உண்டு. இது எந்தக் காலத்துலயும் ஒரு கட்டத்துக்கு தெரிய வரவே வராது.”

“அது என்ன ரகசியம்... முதல்ல அதைச் சொல்லுங்க?”

“தாவர ரகசியம்தாம்ப்பா! இந்த மண்ணுல எவ்வளவோ

தாவரங்கள் இருக்கு. ஆனா, அதுல சில தாவரங்களின் தன்மையே வேற. அந்த தாவரங்களோட சக்தியை பயன்படுத்தறதும், எதோடு எதை சேர்த்தா அது என்னாகுங்கறதும்தான் ஆராய்ச்சி. அந்த ஆராய்ச்சியில மனித வாழ்க்கைக்குன்னு நிறைய விஷயங்களை சித்தர் சாமிங்க கண்டறிஞ்சாங்க. அதை எழுதியும் வெச்சாங்க.

ஒரு வேடிக்கை என்னன்னா... அவங்க எப்படி எழுதினதை தப்புன்னு சொல்லி சில சித்தர்கள், அதையெல்லாம் தீயிட்டும் எரிச்சிருக்காங்க. இவங்களுக்கு நடுவுல அந்த சிவபெருமானே சிரமப்பட்ட கதைகள் எல்லாம் உண்டு.”

“அண்ணே... வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு பேசுங்க. இந்த நீட்டி முழக்கிற விளக்கங்கள் எனக்கு தேவையில்லை. ‘தாவர ரகசியம்’னு நீங்க சொன்னது எதை?”

“நிறைய இருக்கும்போது ஒண்ணே ஒண்ணை எப்படிச் சொல்ல முடியும்? இருந்தாலும் ‘சப்த ரகசியம்’கற ஏழு ரகசியங்களை சொல்றேன். இந்த ஏழுக்குப் பின்னால் ‘சப்த சஞ்சீவி’ன்னு ஏழு மூலிகைகள் இருக்கு.

ஒண்ணு இளமை, அடுத்தது கண் பார்வை, மூணாவது கல் போன்ற தேகம், நான்காவது பசியின்மை, ஐந்தாவது ‘தேஜஸ்’.... அதாவது அழகா இருக்கறது. ஆறாவது வசியம், ஏழாவது ஆகாயப் பிரவேசம். ஏழு மூலிகைகள் இருந்தா இந்த ஏழும் சாத்தியம். இதுதான் பெரியவரோட வாழ்நாள் லட்சியமாகவும் இருந்தது. அதை அடைய விதி அமைப்பு இருக்கணும். அவருக்கு இல்லை. ஆனா, தன் விதியை மதியால வெல்லுவேன்னு சபதம் போட்டார்.”

“அவர் இப்படி முயற்சி செய்யப்போய்தானே நாங்க இங்க இருக்கோம். இதை எதுக்கு சொல்லிக்கிட்டு? அவர் எங்ககிட்ட மறைச்சது எதை?”

- பரணி ‘பாய்ன்ட்’டாக கேட்டான்.

“சொல்றேன். பரணி உனக்கு உன் குடும்பம், முன்னோர்கள் பத்தி தெரியுமா?”

“இப்ப எதுக்கு அந்தக் கேள்வி?”

“உன் கிட்ட மறைக்கப்பட்ட பெரிய விஷயமே உன் முன்னோர் பற்றின விஷயம்தான்! விடிஞ்சா குரு வாரம் அதுலேயும் ஐப்பசி விசாக குருவாரம். நூறு வருஷத்துவ இப்படியொரு நாள், நாலஞ்சு தடவை வந்தா ரொம்ப அதிசயம். அந்த நாலஞ்சு தடவையில் குறிப்பா… போன நூற்றாண்டுல 1917-ம் வருஷத்துல உன் தாத்தாக்கள்ல ஒருத்தரும், இப்ப நீ இங்க இருக்கியே - அதே மாதிரி இங்க வந்து - ‘எப்படா விடியும்?’ன்னு காத்துக்கிட்டு இருந்தாருன்னா உனக்கு அது ஆச்சரியமா இருக்கும்தானே?”

- கந்தசாமி, பரணியின் கொள்ளுத் தாத்தாக்களில் ஒருவரைத் தொடவும், அவனிடம் பெரிய அளவில் ஆச்சரியம்.

“அண்ணே… என்ன சொல்றீங்க?”

“நான் இன்னும் முழுசா சொல்லவே இல்லை பரணி. அப்படி அன்னிக்கு வந்த உன் தாத்தாவைதான் நீ, விடிஞ்சா என்கோணப் பாறையில பார்க்கப் போறே.”

"அண்ணே….!”

“ஆச்சரியமா மட்டுமில்ல.இது நம்ப முடியாத உண்மை. நான் குறிப்பிட்ட நாராயண சித்தர் யாரோ இல்ல. உன் கொள்ளுத்தாத்தாதான்”

“இதுக்கு ஆதாரம்?”

“மதுரை வீட்ல இருக்கு. பெரியவர் உன்னையும், பட்டத்திரி உன் அப்பாவையும் தேர்வு செய்யக் காரணமே இந்த உறவு முறைதான். அது மட்டுமில்ல… உன் தாத்தா அந்த நாள்ல உங்க சொந்த கிராமத்துல எல்லா சித்தர்களையும் வரவழைச்சு, அவங்களுக்கு வயிறார சாப்பாடு போட்டு ‘பாத பூஜை'யும் பண்ணினாரு. அப்ப அவங்கல்லாம் ஒரே நோக்கமா உங்க குடும்பத்தை வாழ்த்தினாங்க. என்னன்னு சொல்லி வாழ்த்தினாங்க தெரியுமா?”

“அண்ணே-என்னென்னமோ சொல்றீங்களேண்ணே?”

“உள்ளதைச் சொல்றேன். உங்க பரம்பரைக்கே நாங்க கடமைப்பட்டிருக்கோம். நீங்க எந்த சித்தன்கிட்ட எதைக் கேட்டாலும், அவங்க இல்லேன்னு சொல்லாம அதைத் தருவாங்க. இது சத்தியம்னு அன்னிக்கு ஒரு வரம் போல உங்க குடும்பத்தை ஆசிர்வதிச்சாங்க.”

- கந்தசாமி எங்கே வருகிறார் என்பது பரணிக்கு மெள்ள புரிய ஆரம்பித்தது.

***

# 33

வனங்களில் திரிகையில் கவனத்தோடு இருக்க வேண்டியது அவசியம். குறிப்பாக எங்கே தங்கலாம் என்பதில் கவனம் மிக முக்கியம், அடர்வாய் நிழல் உள்ள எல்லா இடங்களிலும் போய் தங்கி இளைப்பாறக்கூடாது. சில வகை மரநிழல்கள் மிக ஆபத்தானவை.

'தில்லை விருட்சம்' என்று ஒரு மரம் உள்ளது. இது நடராஜப் பெருமான் நாட்டியமாடும்போது தென்படுவதைப் போல இருக்கும். இதன் கிளைகள் அபிநயம் பிடிக்கும் கைகளை ஞாபகப்படுத்தும். இந்த மரம் இலை உதிர்காலத்தில் பட்டுப் போனது போல காட்சி தரும். அதே நேரம் இதன் வசந்த காலம் பிரமிப்பூட்டும்.

இந்த விருட்சத்தில் அதிகம் பூக்கள் பூக்கும். இதன் காரணமாக இதை நெருங்கும்போதே பூவின் வாசத்தை நாம் உணர முடியும். அந்த வாசம் இதன் மகரந்த தூள்களினாலும் உருவான ஒன்று. இந்த மகரந்தங்களிடம்தான் மனித மனதை இல்லாமல் ஆக்கும் சக்தி ஒளிந்துள்ளது. இதன் அடியில் படுத்து உறங்கும் ஒருவருக்கு கண் விழிப்பிற்கு பிறகு அவர் யார் என்பதே மறந்து போயிருக்கும். சுத்தமாக மனம் காலியாகி இருக்கும். இது ஒரு வித யோக நிலை! அதே வேளை இது... 'சமாதி' யோகத்துக்கு சமமானது.

சித்த புருஷர்கள் தங்கள் தவத்தின்போது காற்றை கவனித்து - சுவாச பந்தனம் செய்து - மெள்ள மெள்ள மனதின் எண்ணப் போக்கை கட்டுப்படுத்தி எதாவது ஒரு இறை நாமத்தில் மட்டும் மனம் லயித்திருக்கும்படி வைத்திருப்பார்கள். அந்த நாமத்தின் மூலமே அவர்கள் திரும்பவும் எல்லா எண்ணங்களையும் அடைந்துவிட முடியும். ஆனால், இது அப்படி இல்லை. எனவே, இந்த மரத்தில் பறவைகள்கூட வந்து தங்காது.

**- வன வியாசம்**

கந்தசாமி சொன்ன செய்தி பரணிக்கு புரிய வைக்க

வேண்டியதை புரிய வைத்துவிட்டது!

"அண்ணே! அப்ப நானோ... இல்லை என் அப்பாவோ நாளைக்கு காலையில என் கொள்ளுத் தாத்தாவான அந்த நாராயண சித்தரைப் பார்த்தா அவர் நம்ம பெரியவர் கேட்ட ‘சப்த சஞ்சீவி’யையும் கட்டாயம் தந்துடுவாரா?”

“தந்துதானே ஆகணும். இல்லைன்னா வாக்கு தவறினவங்களா ஆகிடுவாங்களே?”

“நூறு வருஷத்துக்கு முந்தி கொடுத்த வாக்குறுதிக்கு இப்பவும் எப்படி சக்தி இருக்க முடியும்?”

“இப்ப மட்டுமல்ல.... எப்பவும் சக்தி இருந்தாத்தான் அது வாக்குறுதி. அதுலேயும் வாழ்வை துச்சமா கருதி சன்னியாசத்தை மேற்கொண்டுட்டவங்க... தாங்கள் கொடுத்த வாக்குறுதியை உசுரா நினைப்பாங்க.”

“அது எப்படி... அப்ப கொடுத்த வாக்குறுதி இப்பவும் ஞாபகத்துல இருக்க முடியும்? அதுல முக்கியமா... இப்ப இருக்கறவர் என கொள்ளுத் தாத்தான்னும்போது - அந்த வாக்குறுதிக்கும், இவருக்கும் சம்மந்தம் இல்லையே?”

“தம்பி... இவர் உறவு முறையிலதான் உன் கொள்ளுத் தாத்தா. ஆனா, இப்ப அவர் அதையெல்லாம் துறந்த ஒரு சித்தர். எப்ப சித்த புருஷரா ஆகிட்டாரோ அப்ப அவரும், அன்னிக்கு அத்தனை சித்தர் சாமிங்களும் கொடுத்த வாக்குறுதிக்கு கட்டுப்பட்டவர்தான்.”

- பரணி எப்படிக் கேட்டபோதிலும் கந்தசாமியிடம் துளியும் தடுமாற்றம் இல்லை. ஆனாலும், பரணியின் மனம் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அது குருவுக்கு புரிந்தது.

"அண்ணே...”- என்று கந்தசாமியை தன் பக்கம் திருப்பினான்.

“நீ என்னப்பா கேட்கப்போறே?”

“இல்ல... நீங்கல்லாம் புத்தி இருந்து அதைக் கொண்டு தான் பேசறீங்களா.... எதாச்சும் போதையில மறைகிறை லூசாகிப்

பேசறீங்களாண்ணே?" - என்ற குருவின் கேள்வியில் ஆழமான கிண்டல்.

“ஏம்ப்பா இப்படி கேக்கறே! போதையில இருந்தா ‘சதை ஒட்டி'யையும், ‘வெட்டுக்காய பூண்டு’ச் செடியையும் கொண்டு வந்து மருந்து போட்டுருப்பேனா?”

“அதுக்கில்லண்ணே-பட்டப்பகல்லபத்து பேர் முன்னால பேசின பேச்சையே மாத்தி பேசிடுறாங்க. கேட்டா, ‘நான் அப்படியெல்லாம் பேசவே இல்லை’ன்னு சொல்றாங்க. நாம அப்படியொரு காலகட்டத்துல இருக்கோம். இப்படி புராண காலத்துல வர்ற மாதிரியெல்லாம் இப்பவும் பேசினா எப்படிண்ணே,”

“தம்பி.... காலம் எப்பவும் மாறுவது கிடையாதுப்பா அது அப்படியேதான் இருக்கு. உதிக்கிற சூரியன் ஒரு நாள் கூட இஷ்டத்துக்கு தாமதமா உதிப்போம்னு உதிக்கலை அதே மாதிரிதான் தேய்ஞ்சு வளர்ற நிலாவும்! ஆடி மாசம் காத்து வீச தவறுறதில்ல. சித்திரை - வைகாசியில வெயிலும் மாறலை. காலம் நூல் பிடிச்ச மாதிரி அப்படியேதான் இருக்கு.

ஆனா.... அந்த காலத்தையொட்டி வாழற மனுஷன் மனசுதான் மாறிக்கிட்டே இருக்கு. ஆனா, இங்க நாம பாக்கப்போற சித்தர் சாமிங்க காலத்தையொட்டி வாழற மனுஷங்க இல்ல. அந்தக் காலத்தை எதிர்த்து ஜெயிச்சவங்க. மனுஷங்களோடு மனுஷங்களா இருந்துக்கிட்டு, அதையெல்லாம் சாதிக்கிறது கஷ்டம்னுதான் மனுஷ சஞ்சாரமே இல்லாத காட்டுப் பக்கம் வந்துட்டாங்க அவங்க. நமக்கு இருக்கற எந்த ஆசையும், பாசமும் அவங்களுக்கு கிடையாது. நாம பெருசா நினைக்கிற எதுவும் அவங்களுக்கு பெருசு இல்லை.”

கந்தசாமியின் பதிலில் ஒரளவுக்கு கருத்து இருக்கத்தான் செய்தது. அப்போது மயக்கமாக இருந்த பரணியின் அப்பா ராமசாமியிடம் அசைவு. மயக்கம் கலைந்து அவர் அசைவதை பார்க்கவும் கந்தசாமியும், “உன் அப்பா இவர். எழுந்திரிச்சிடுவார். நான் சொன்னது எவ்வளவு சரி...

தப்புன்னு அவரே சொல்வார் பாரு” - என்றார். அப்படியே அணைவதுபோல் இருந்த தீயை சிமிண்டிவிட்டு, அதில் சில சுள்ளிகளை தூக்கிப் போடவும் அது கொழுந்துவிடத் தொடங்கியது.

ராமசாமியும் கண்களைத் தேய்த்தபடியே எழுந்தார். இருளுக்கு நடுவிலான தீயின் வெளிச்சத்தில் புதர் போன்ற அவரது முகத்தில் இனம் புரியாத பதற்றம். பெற்ற மகனை - நெடுநாட்களுக்கு பிறகு பார்க்கப் போகிறார். பரணிக்கும் அவரைப் பார்க்க சற்று பதற்றமாகத்தான் இருந்தது.

“நான்.... நான்.... இப்ப எங்க இருக்கேன்?” - என்று அவரிடம் முனகலான ஆரம்பம்.

“பரணி... பேசுடா... பேசறார் இல்ல....” என்று குரு தூண்டிவிட்டான்.

“பரணியா... பரணி... பரணி...இது என் மகன் பேராச்சே....”

“பரவால்லியே! அதெல்லாம் கூட உங்களுக்கு ஞாபகம் இருக்கே?” - பரணிதான் பதில் சொன்னான்.

“பரணி... நீயா?”

“நானேதான்...”

“நீ... நீ எப்படிப்பா இப்படியொரு காட்டுக்குள்ள?”

“முதல்ல நீங்க எப்படி வந்தீங்கன்னு சொல்லுங்க....!”

“நான்.... நான்.... எங்க அந்த பட்டத்திரி.?”

“யாருக்கு தெரியும்? உயிரோடு இருக்கானோ.... இல்லை அவனையும் யானை மிதிச்சு கொன்னுடுச்சோ என்னவோ?”

"ஆமால்ல-யானை துரத்தித்தானே நானே ஓடி வந்தேன்...”

“ஓ.... அதுவே மறந்து போச்சா?”

“வேற எப்படி நான் சொல்ல முடியும் பரணி? இது அபாயமான வனம். நீ எப்படி வந்தே? ஆமா... இவங்கல்லாம்

யாரு?”

“உங்களுக்கு இவங்களை தெரியாது. ஆனா இவங்களுக்கு உங்களை நல்லா தெரியும்.”

“புரியலையே!”

“பல விஷயங்கள் புரியாமத்தான் இப்ப நானும் இங்க இருக்கேன். ஆமா நீங்க எப்படி பட்டத்திரிகூட சேர்ந்தீங்க?”

"அது….. அது…."

“என்ன ஞாபகத்துக்கு வரமாட்டேங்குதா?”

“ஆமாம்ப்பா…. எனக்கு இப்பத்தான் என்னையே தெரியுது. இதுக்கு முந்தி நான் எங்கே இருந்தேன்?” - அவர் தனக்குத்தானே கேட்டுக்கொண்டார்.

“உங்களை காசியில பார்த்ததா கொஞ்ச நாள் முந்தி தகவல் வந்தது. அங்க இருந்த நீங்க எப்படி இங்க வந்தீங்க?"

“நான் காசியில இருந்தேனா… எனக்கு ஞாபகம் இல்லையே?”

“அப்ப எதுதான் ஞாபகத்துல இருக்கு?”

“இருப்பா-என்னை கொஞ்சம் யோசிக்க விடு.குளிருது…. அந்த நெருப்புகிட்ட கொஞ்சம் போய் நின்னுக்கறேன்-“ என்றவர் தடுமாறிக் கொண்டு எழுந்தார். பரணியும், குருவும் கைகொடுத்து உதவி செய்தனர். அவரை எரியும் தீ நாக்குக்கு பக்கமாக கொண்டு சென்றனர்.

அவர் கைகளை நீட்டி நீட்டி சூட்டில் குளிர் காய்ந்தார்.

சில நிமிடங்கள் அது தொடர்ந்தது. பின் அப்படியே நின்றபடியே பேச ஆரம்பித்தார்.

“பரணி….”

“சொல்லுங்கப்பா…”

“வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?“சாந்தா... பிரபா...”

“எல்லாரும் நல்லா இருக்காங்க.”

“இப்பத்தான் எனக்கு ஒவ்வொண்ணா ஞாபகம் வருது.”

“சொல்லுங்க நீங்க எங்களதவிக்கவிட்டுட்டு போனதுல இருந்து சொல்லுங்க.”

“ஒருநாள் நான் பாத்துக்கிட்டிருந்த வேலையில ஏதோ தப்பு பண்ண போய் - முதலாளி திட்டி அனுப்பிட்டாரு மனசு வெறுத்துப் போய் வீட்டுக்கு வந்த என்னையும் மனசு வருத்தப்படும்படி உன் அம்மா பேசிட்டா.... என்னால பொறுத்துக்க முடியல. நானும் கோவமா வீட்டைவிட்டு வெளிய புறப்பட்டேன். அப்ப என்னைத் தேடிக்கிட்டு கேரளாவுல இருந்து ஒருத்தர் வந்தார்.

தெருவுல நடந்துக்கிட்டிருந்த என்னை அப்படியே பிடிச்சுட்டார். நான் வருத்தத்தோடு பேசினதை வெச்சு என்னை தன்கூட வரும்படி கூட்டிட்டு போனார். அவர் கூட நான் போனது வரை ஞாபகம் இருக்கு.”

“ஓ.... அவர்தான் தாமோதர பட்டத்திரியா....?”

“ஆமா-ஆமா-தாமோதர பட்டத்திரிதான் அவர் பேர்...”

“பேர் ஞாபகம் இருக்கு. ஆனா, அவர் எங்க கூட்டிட்டு போனாருங்கறது மட்டும் ஞாபகத்துல இல்லையா?”

“திடமான ஞாபகமா இல்லை. நான் அவர் காலை பிடிச்சுவிட்டேன். அவர் எனக்கு அப்பப்ப குடிக்க பழரசம் தருவார். அதை குடிச்சா ஆகாயத்துல மிதக்கிற மாதிரி இருக்கும்.”

“அப்பா, அது பழரசமில்லை.... போதைப் பானம்.”

“ஆமா.... அப்படித்தான் இருக்கணும்.இப்ப அது புரியுது. ஆனா அப்ப புரியல....”

“சரி…. அவரோடு இங்க எதுக்கு வந்தீங்க?”

“ஞாபகத்துக்கு வந்தா சொல்றேன். நீ எப்படி வந்தே… அதைச் சொல்.”

“என்னை ஒருத்தர் கூட்டிட்டு வந்தார். இங்க நாராயண சித்தர்னு என் கொள்ளுத் தாத்தா இருக்காராமே?”

“கொள்ளுத் தாத்தாவா?”-ராமசாமி தலையை சொறியவும், கந்தசாமி இடைமறிக்கத் தொடங்கினார்.

“அய்யா… உங்க குடும்பத்துக்கு சித்தர் சாமிங்க ஆசீர்வாதம் உண்டுங்கறது உண்மைதானே?” - அவர் அப்படி கேட்கவும், கந்தசாமியைப் பார்த்தவருக்குள் ‘பளிச்’சென்று ஒரு எண்ணம் புலனானது.

“ஆமா… அது எப்படி உங்களுக்கு தெரியும்?”

“இன்னும் பல விஷயங்கள் தெரியும். இருந்தாலும் இப்ப நான் சொல்லப் போறதை பரணி நல்லா கேட்டுக்கோ. உனக்கு அந்த ‘சஞ்சீவி மூலிகை’கள் கிடைக்கப் போறது நிச்சயம். நீ இனி சாதாரண பரணி இல்ல…”- என்றார் கந்தசாமி.

அவன் முகத்தில் ஏக வியப்பு!

***

# 34

"வனங்களில் மதிக் குருட்டு வனம் என்று ஒரு பகுதி உண்டு. இது, மலை மேல் உள்ள வனங்களில் மட்டுமே அமைந்திடும் பரப்பாகும். இந்தப் பகுதிக்கு யார் சென்றாலும் அவர்களுக்கு தன் நினைவு அற்றுப்போவதுடன், பெரும் தூக்கமும் ஏற்படும். இது ஒரு கட்டத்தில் மூளைத் தூக்கமாகி.... உடம்பின் நாடிகளெல்லாமும் மெள்ள அடங்கி, இந்த தூக்கத்தில் ஆழ்ந்தவர் உயிர் பிரிந்துவிடும். அப்படி உயிர் பிரிந்த உடல்களை சந்திக்கும்போது, சதையெல்லாம் வற்றி எலும்புடன் ஒட்டிய தோலாக இவர்கள் காட்சியளிப்பர். இதற்கு மதிக்குருட்டு வனப்பரப்பில் வளர்ந்திடும் தில்லை மரங்களும், இப்பகுதியில் நிலவும் காற்றழுத்தமும்தான் காரணம்!

இந்த இடத்துக்கு *12* அங்குல சுவாசம் உடையவர்கள் போனால்தான் இப்படி ஆகும். சில முனிவர்கள் தவத்தில் ஆழ்ந்து, ஒரு அங்குல அளவு சுவாசத்தோடு அமர்ந்திருப்பார்கள். அந்த சுவாச கதிக்கு குறைவான உயிர்க்கற்று *('ஆக்சிஜன்')* அவர்களுக்கு போதுமானது. எனவே, இவர்களுக்கு நினைவாற்றல் அற்றுப்போகாது தானுமாலய வனத்திலும் மதிக்குருட்டு வனப்பகுதி உண்டு. அந்தப் பகுதிக்குள் ஒரு பறவைகூட பறந்து திரியாது. மிருகங்களும் நுழையாது. இதை வைத்தே அந்தப்பகுதியை அடையாளம் காண முடியும்.'

**- வன வியாசம்**

'சஞ்சீவி மூலிகை கிடைக்கப்போவது உறுதி' என்ற கந்தசாமியை பரணி சற்று கோபத்துடன் பார்த்தான். அவரும் புரிந்துகொண்டார்.

"தம்பி... நான் ஒண்ணும் தப்பா சொல்லலை. எவ்வளவோ பேர் முயற்சி செய்து பார்த்துட்டாங்க. ஆனா, விதி உனக்குத்தான் சாதகமா இருக்கு. அதான் சந்தோஷத்துல அப்படி சொன்னேன்."

“எப்படி வேணும்னா சொல்லி இருக்கலாம். ஆனா, நீங்க சொல்ற எதையும் நான் இந்த நிமிஷம் வரை நம்பலை. ‘சப்த சஞ்சீவி’ - அதுக்கு ஏழுவிதமான சக்திங்கறதெல்லாம் என்வரையில அம்புலி மாமா கதை மாதிரிதான் இருக்கு.”

“ஆமாம் தம்பி. நானும் முதல்ல நம்பலை. ஆனா, பெரியவர்கிட்ட இருந்த சில சக்திகள், எனக்கு நம்பிக் கையை வரவெச்சது. உனக்கும் அவர்கிட்ட அனுபவம் உண்டு. அவர் உக்காந்த இடத்துல இருந்துகிட்டே தொலைவுல உள்ளதை பார்க்க முடிஞ்சவரா இருந்தது சாதாரணமில்ல. அதுக்காக சாப்பிட்ட மூலிகைகள் பேரைச் சொன்னா அதையும் நம்ப முடியலைன்னு நீ சொல்வே” - கந்தசாமி சொல்வதை எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை. பரணியின் அப்பாவோ அவனையே வெறித்துப் பார்த்தபடி இருந்தார்.

அவர் வீட்டைவிட்டு சென்று ஆறு ஆண்டுகளில் முகச்சவரமே செய்யவில்லை என்பதை அவரது தாடியும், சிக்குப் பிடித்த தலையும் சொல்லாமல் சொன்னபடி இருக்க.... பரணியும் பரிதாபமாக அவரைப் பார்த்தான்.

‘பொறுப்பில்லாதவர்’ என்கிற கோபம் அவர் மேல் இருந்தது. ஆனால், இப்போது பார்க்கும் பார்வையில் அதில் பெரிதும் மாற்றம்.

அந்த இரவு அவன் வரையில் ஆச்சரியமும், அதிசயமுமானது. சாகும் வரை மறக்க முடியாது. சில நிமிட நேரங்களில் நினைத்துக்கூட பார்க்க முடியாத திருப்பங்கள்.

மனித வாழ்வு நிலையற்றது - எப்படியும் மாறக் கூடியது என்பதெல்லாம் போகிறபோக்கில் சொன்ன விஷயங்களே இல்லை. மிகுந்த அனுபவசாலிகள்தான் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

தந்தை ராமசாமியை பரணி தன் கேள்விகளால் தொடர்ந்து கலைக்க தயாரானான்.

“அப்பா....”

“சொல்லுப்பா.”

“இந்த ஆறு வருஷம் எங்க எப்படி இருந்தீங்கன்னு எதுவும் ஞாபகமில்லையா?”

“கொஞ்சம் கொஞ்சம் ஞாபகம் இருக்குப்பா. ஆனா, கோர்வையா நினைக்க முடியலை.”

“எப்படிப்பா அந்த பட்டத்திரிகிட்ட போய் சேர்ந்தீங்க?”

“தெரியலப்பா. ஆனா, அவருக்கு நான்தான் எல்லாம். விடிஞ்சா வரப்போற வியாழக்கிழமைதான் அவரோட ஒரே லட்சியம். என்னைவெச்சு எல்லாமே அடையணுங்கறது திட்டம். அது மட்டும் இப்ப எனக்கு தெளிவா தெரியுது.”

“இந்தக் காட்டுல இருக்கிற நாராயண சித்தர், உங்க பாட்டன்மார்ல ஒருத்தருங்கறதை நம்புறீங்களா?”

“நான் நம்பறது கணக்கே இல்ல. ஆனா, நம்ம குடும்பத்துக்கும், சித்தர்களுக்கும் ஒரு சம்பந்தம் எப்போதும் இருந்துகிட்டே வந்திருக்கு. அது எனக்கு நல்லா தெரியும்.”

“எப்பவோ எல்லா சித்தர்களுக்கும் சோறு போட்ட அவங்களும் ஆசிர்வாதம் பண்ணி இருக்கலாம். ஆனா, அது இன்னைக்கும் கைகொடுக்கும்னு நினைக்கிறது முட்டாள்தனமா தெரியலையா?”

- பரணியின் கேள்வியை கந்தசாமி அலட்சியப் படுத்தியபடியே பேசினார்.

“பரணி.... நீ நம்மைப்போல மனுஷங்களை மனசுல வெச்சுகிட்டு இதை சொல்றே. சித்தர் சாமிங்க.... நம்மளை மாதிரி எந்த விஷயத்துலேயும் கிடையாது. அதை முதல்ல புரிஞ்சுக்கோ...”

“என்னண்ணே! அவங்க என்ன ஆகாசத்துல இருந்து குதிச்சவங்களா...? நம்மைப் போலவே ஒரு தாய் - தகப்பனுக்கு மகனா பிறந்து... உப்பு, புளி காரம்னு தின்னு வளர்ந்த வங்கதானே?”

“பிறப்பு நம்மைப்போல இருக்கலாம். ஆனா, நம்ம ஜாதகமே வேற; அவங்க ஜாதகம் வேற.”

“போச்சுடா… நீங்க ஜாதகம் பக்கம் போயிட்டீங்களா? அப்புறம் கைரேகை, நாடி ஜோதிடம்னு போயிடுவீங்க.”

“இல்லப்பா-இந்தப் பேச்சையெடல்லாம் விடு.இத்தனை வருஷம் காத்திருந்த பொன்னான நாள் இதோ இன்னும் சில மணி நேரத்துல விடியப் போகுது. நீ… எண் கோணப் பாறை கிட்ட எப்படியாவது போய் அந்த குறிப்பிட்ட நேரத்துல நாராயண சித்தரைப் பாரு. சீனாவைச் சேர்ந்த ஒருத்தர்தான் இதுவரை இருநூறு வருஷம் கடந்து வாழ்ந்தவர்.

இங்கே இவர்தான் 19, 20, 21-ன்னு இந்த மூன்று நூற்றாண்டுலேயும் உயிரோடு இருக்கறவர்; இனியும் இருக்கப் போறவர். இவ்வளவு நாள் சாகாம இருக்கறது மட்டும் அதிசயமில்ல. ஏன் சாகாம இருக்கார்… யாருக்காக இருக்காருங்கறதும் அதிசயம்தான். அவர் உனக்கு பல உண்மைளைப் புரிய வைப்பார்”-கந்தசாமி சொல்வதிலும் நியாயம் இருந்து… பரணி யோசித்திட - குரு, குறுக்கில் புகுந்தான்.

“பரணி…. யாருக்காக இல்லாட்டியும் உன் அக்கா புருஷனுக்காக நீ காலையில போய்தாண்டா தீரணும்” என்றான்.

அதுவரை அக்கா ஞாபகமே வரவில்லை. குரு ஞாபகப்படுத்தவும் ஆஸ்பத்திரியில் கிட்டத்தட்ட ‘கோமா’ நிலையில் கிடக்கும் மாப்பிள்ளை சண்முகம் ஞாபகமும் சேர்ந்தே வந்தது.

இருந்தும்…. ‘இதெல்லாம் எவ்வளவு தூரம் உண்மை?’ என்னும் கேள்வி எழாமல் இல்லை.

“தம்பி, என்ன யோசனை? காசா… பனமா; ஒரு அனுபவம்தானே! அதுக்காகத்தானே வந்துருக்கே?” என்ற கந்தசாமியிடம்… “சரிண்ணே! ரெண்டுல ஒண்ணு பாத்துடுறேன். நீங்க இப்பவே என் அப்பாவோடு புறப்படுங்க. நாங்க இப்படியே போய்க்கிறோம்…” என்றான்.

“இல்லப்பா… விடிஞ்சு, சூரியன் வராம எங்களால கீழே இறங்க முடியாது. உன்னாலேயும் மேல ஏற முடியாது. அஞ்சரை மணிக்கெல்லாம் மலைப் பட்சிங்க கத்தத் தொடங்கிடும். அதுக்கு பிறகு நாங்களும் குறிப்பிட்ட தூரம் வரை கூடவே வருவோம். அந்த பட்டத்திரி உயிரோடு இருக்கானா…. இல்லையாங்கறது வேற இருக்கு. அவன் உயிரோடு இருந்தா உன் அப்பாவையும் சரி; உன்னையும் சரி…. விடவே மாட்டான்.”

“என்ன பண்ணுவான்?”

“பரணி…. ஆறு வருஷ காலம் உன் அப்பாவை ஆட்டி வெச்சிருக்கான். நினைவுகளையும் மழுங்கடிச்சி இருக்கான். இது அவனுக்கும் ‘கிளைமாக்ஸ்’ கட்டம். ஆகையால அவன் எப்படிப்பட்ட வித்தையையும் காட்டுவான். சாதாரணமா எடை போட்டுடாதே…..”

“ஆமாண்டா பரணி! இப்ப உணர்ச்சி வசப்படக் கூடாதுடா… புத்திசாலித்தனம்தாண்டா முக்கியம்”- குருவும் எடுத்துத் தந்திட - பரணி அதற்கு பிறகு எதையும் பேசவில்லை.

பொழுது புலரத் தொடங்கிவிட்டது. மலைப்பட்சிகளின் அகவல் சப்தம் பரணிக்கும், குருவுக்கும் புதிதாக இருந்தது. அந்த சப்தம் கேட்கவும்தான் அதுவரை நிலவிய அமைதியின் தன்மையே தெரிந்தது. ஒருவரும் தூங்கவில்லை. ராமசாமி இல்லாமல் 6 ஆண்டுகளாக குடும்பம் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டது என்பதை சொல்லி முடித்திருந்தான் பரணி. அவரும் அவன் கையைப் பிடித்துக் கொண்டு அழுதார்.

“பரணி… விதி என் வாழ்க்கையில எப்படி எப்படியோ விளையாடிடிச்சு எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை” என்றார்.

“அப்பா… போனது போகட்டும். இனி நடக்கறதாவது நல்லதா இருக்கட்டும்” என்றான்.

வானில் சாம்பல் தட்டி - எதிரில் பனிப்பொழிவைப் பார்க்க முடிந்தது. ராமசாமியால் நடக்க முடியவில்லை.

“பரணி.... நான் இங்கேயே இருக்கேன். நீ போயிட்டு நல்லபடியா வா. அதுவரை காத்திருக்கேன். என்னால நடக்க முடியல” என்றார்.

பரணியும், குருவும் அந்த இடத்தை அடையாளப்படுத்திக் கொண்டனர். கந்தசாமி, முன்னால் நடந்தார். கையில் ஒரு மரக்கிளையை ஒடித்து உருவாக்கிக் கொண்ட குச்சி. இடை மறித்த தாவரங்களை அதால் விலக்கிவிட்டபடியே நடந்தார்.

மலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் செங்குத்தாக காட்சி தந்தது.

“இந்த இடத்தை கடக்கறதுலதான் நம்ம சாமர்த்தியம் இருக்கு. கவனமா பாறையில கால் பதிச்சு ஏறி வாங்க. அட்டைப்பூச்சி மேல ஏறிடாதீங்க. அட்டை ஏறிட்டாரத்தம் வெளியே போய் - சோர்ந்து உட்கார வேண்டியது வந்துடும்” - என்றும் பயமுறுத்தினார்.

பரணியும், குருவும் கவனமாக அவரைப் பின் தொடர்ந்தனர். மெல்ல மெல்லத் தாவி ஏறியபோது ஒரு குறிப்பிட்ட இடத்தில் குகைப் பரப்பு தெரிந்தது. உள்ளே கரடி ஒன்று அதன் குட்டிகளோடு படுத்துக் கிடந்தது. கந்தசாமி அதைப் பார்த்துவிட்டு வேகமாக பரணி - குரு பக்கம் திரும்பி, உதட்டில் ஆட்காட்டி விரலை வைத்து சப்தம் போடாமல் மெல்ல வரும்படி சைகை காட்டினார்.

இவர்கள் குறிப்பிட்ட இடத்தை கடக்கும்போது, குகைக்குள் வேகமாக பார்வையை விட்டனர். கரடி படுத்திருக்க அதன் மடியில் குட்டிகள் முட்டி முட்டி பால் குடித்தபடி இருந்தன. அபூர்வக்காட்சி. பரணிக்கு கையில் “கேமரா’ இல்லையே என்று தோன்றிற்று. அதற்குள் கந்தசாமி மேலே உச்சிப் பாகத்துக்கு சென்றுவிட்டார்.

சூரியனும் சுள்ளென்று கிழக்கில் இருந்து கதிர்களை பாய்ச்சினான். அந்த மலையில் சுத்தமான காற்றுக்கு அந் நேரம் மிக சுறுசுறுப்பானதாக இருந்தது. இரவு கண் முழித்த களைப்பே தெரியவில்லை.

பின்னர் இருவரும் அந்த உச்சிப் பரப்புக்கு சென்று நின்றனர்.

அங்கிருந்து வட்டமாய் ஒரு சுற்று பார்க்க முடிந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மலைச்சாரல்தான். ஓர் இடத்தில் அருவி ஒன்று பால் போல கொட்டியபடி இருந்தது. பக்கத்தில் பருத்த பாறை… மனிதன் தலைப்பாகம் போலவே காட்சி தந்தது.

“தம்பி... இங்க இருந்து என் கோணப்பாறைக்கு மூணு மைல் தூரம். விறுவிறுன்னு நடந்தா ஒரு மணி நேரத்துல போய் சேர்ந்துடலாம். எட்டு மணிக்குத்தான் பாறை மேல சூரியக்கதிர் படும். அப்பதான் நாராயண சித்தரும் வருவார். நான் இதோடு நின்னுக்கிறேன். பெரியவர் உபதேசம் பண்ண மந்திரத்தை சொல்லிக்கிட்டே நடங்க.

வழியில ஒத்தையில புலியோ - யானையோ… இல்லை குதிரையோ கண்ணுலப்பட்டா பயப்படாதீங்க. மந்திரம் சொல்றதையும் நிறுத்திடாதீங்க. நீங்க பார்க்கற அதுங்க கூடு பாஞ்ச சித்தர் சாமிகளாகவும் இருக்கலாம்” என்ற கந்தசாமியை அதிர்வுடன் பார்த்தான் பரணி.

அப்போது, அருகில் யாரோ அடிபட்டு வலியால் முனங்குவது போல அவர்கள் காதுகளில் ஒரு குரல்!

***

# 35

‘வனங்களில் மூலிகைச் செடிகளைப் பறிப்பதற்கு விதிகள் உண்டு. அவற்றை அறிந்து பறித்து வந்தால்தான் அந்த மூலிகை தன் சக்தியை இழக்காமல் உயிரோடஇருந்து, நமக்கும் உபயோகப்படும். எப்போதும் மூலிகையை இனம் காண காலை நேரம் மிகவும் ஏற்றது. அப்போது கிழக்கு திசைப் பக்கம் முதுகைக் காட்டியபடி நின்றுகொண்டு, மேற்கு நோக்கிய பார்வையோடு மூலிகையைப் பறிக்க வேண்டும். பறிக்கும் முன் கைகூப்பி வணங்க வேண்டும். அந்த மூலிகையை சிவமாகவும், தன்வந்திரியாகிய விஷ்ணுவாகவும், சித்தநாதனாகிய முருகனாகவும் அவரவர் விருப்பப்படி வணங்கிட வேண்டும். இப்படி அமாவாசை நாளில் பறிக்கப்படுவது இன்னும் சிறப்பு. அமாவாசை அன்று பறிக்கப்படும் மூலிகையில் அதன் உயிர்ச்சத்து நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கும்.

பறிக்கப்படும் மூலிகையை வெள்ளாட்டுத் தோல் பைக்குள் நீர் தெளித்து அதனுள் போட்டு வைக்கலாம். அந்த மூலிகை அப்படியே இருக்கும். அதேபோல கன்னி கழியாத, கற்பு கெடாத - தூரம் நின்ற பெண்ணால் மண்ணைக் கொண்டு செய்த பானையிலும் மூலிகையைப் போட்டு வைக்கலாம்.

**- வன வியாசம்**

முனங்கும் குரல் வந்த திக்கை யூகித்து, அந்தப் பக்கமாக சென்றபோது.... அடர்வாக ஒரு புதர். அதற்குள் இருந்துதான் சத்தம் வந்தபடி இருந்தது. புதரை விலக்கிப் பார்த்தபோது பகீரென்றது.

புதருக்குள்ளே.... தலையில் அமைந்திருக்கும் முன் குடும்யோடு கூடிய பட்டத்திரி, ரத்த விளாராகத் தெரிந்தான். அந்த நொடியே அவன்தான் தாமோதர பட்டத்திரி என்பது பரணிக்கும், குருவுக்கும் தெரிந்துவிட்டது. கந்தசாமியும் பார்த்துவிட்டு... “பட்டத்திரி” என்றார், சற்று உரத்த குரலில்! பட்டத்திரியும் அரைக் கண்களைத் திறந்துகொண்டு பார்த்தான். ஏதோ பேச முயன்றான். முடியவில்லை.

பரணி அதற்கு மேல் வேடிக்கை பார்க்க விரும்பவில்லை.

பட்டத்திரியை புதரில் இருந்து தூக்கி வெளியே கொண்டு வந்தான். அங்கங்கே சதை பிய்ந்து ரத்தம் கசிந்தபடியே இருந்தது. கரடியின் கோரத் தாக்குதல்.

“மிருகங்கள் தாக்கி இருக்கு. அதான் இப்படி காயம்” என்றார் கந்தசாமி. பட்டத்திரியிடம் ஈன சுரத்தில் “வெள்ளம்… வெள்ளம்” என்கிற முனகல் ஆரம்பமானது.

“குடிக்க தண்ணி கேக்கறார். அதே சமயம் குடிக்க தண்ணி கொடுத்தா பொழச்சு எழுந்திருச்சு உன்னையே வசியத்துல கட்டிப் போட்டு, தன் நெடுநாள் விருப்பத்தை இந்த தாமோதர பட்டத்திரி நிறைவேத்திக்குவான். வா… நாம கிளம்புவோம்” - என்றார் கந்தசாமி. ஆனால், பரணி அதை ஏற்கவில்லை.

"அண்ணே… உயிருக்குப் போராடுற ஒருத்தரை காப்பாத்தறது எப்படின்னு யோசிக்காம….இப்படியா பேசுவீங்க?”

“பரணி… இது காப்பாத்தற நேரமில்ல. இன்னும் ஒரு மணிக்குள் மூணு, நாலு மைல் தூரம் நாம நடந்தாகணும். அங்க சரியா எட்டு மணிக்கு சூரியக் கதிர், எண்கோணப் பாறை மேல விழறதும் - அதுல அந்த நாராயண சித்தர் உட்கார்ந்து தியானம் செய்யப் போறதும் அபூர்வமான விஷயங்கள். இந்த நாளையும், நேரத்தையும் விட்டுட்டா அப்புறம் நாற்பது வருஷத்துக்கு மேல காத்திருக்கணும்.”

“ஸாரி கந்தாமியண்ணே… எனக்கு அது பெருசே கிடையாது.இவரை காப்பாத்தியாகணும். என்ன செய்யலாம்? அதுக்கு வழி சொல்லுங்க.”

“சொன்னா கேக்க மாட்டேங்கிறியே பரணி. சரி, ஒண்ணு பண்ணு. நீயும், குருவும் போய் அந்த நாராயண சித்தரை முதல்ல பாருங்க. நீ யாருங்கறத மறக்காம அவர் கிட்ட சொல்லு. அப்புறம் உனக்காக இல்லாட்டியும், உன் அக்கா புருஷனுக்காகவாவது ‘சஞ்சீவி மூலிகை’யைக் கேளு. நிச்சயம் தருவார். இவரை நான் பாத்துக்கறேன். இப்போதைக்கு சதை ஒட்டியும், வெட்டுக்காய பூண்டும்

தான் இவருக்கு மருந்து. அதை தேடிப்பிடிச்சு காப்பாத்தறேன். நீ தாமதம் பண்ணாம புறப்படு.”

“இல்லண்ணே.... இவருக்கு முதல்ல சிகிச்சை தாங்க. நான் போய் தண்ணி கொண்டு வர்றேன். இவர் முதல்ல நிமிர்ந்து உட்காரணும். அப்புறம்தான் அந்த நாராயண சித்தர் விஷயமெல்லாம்” - பரணி கந்தசாமியை நம்பாமல் தன் முடிவில் உறுதியாக நின்றான்.

அவர் தொடர்ந்து அவனை கவனித்து வருவதால் அதற்கு மேல் தூண்டவில்லை. “சரி... நீ போய் தண்ணீர் கொண்டு வா. நான் அந்த செடிகளோட இலையைப் பறிச்சிட்டு வர்றேன். குரு... இந்த உடம்புக்கு காவலா இரு” என்றார்.

குருவும் பட்டத்திரி அருகில் மெள்ள மண்டியிட்டு அமர்ந்தான். பரணி பேசியதை கேட்டிருந்த நிலையில், குருவைப் பார்த்தான் பட்டத்திரி. முகம் சுணங்கிப் போயிருந்தது. உதடுகள் உலர்ந்து - பேசுவதற்கு துடித்தன.

“எனிக்கு இது வேணும். நான் கள்ளன்... விஷமி” என்று முணுமுணுத்தார். குருவால் அதை புரிந்துகொள்ள முடிந்தது.

“நீ....நீ.... குருதானே?” என்று சரியாக கேட்டான்.

“ஆமா. நீங்க சிரமப்பட வேண்டாம். உங்களுக்கு சரியாயிடும்” என்றான் குரு.

“வளரநன்னி.... பட்சே நான் ஒரு விசுவாசமில்லா மனுஷன். இந்த அபாயவனம் எனிக்கு பாடம் எடுத்து - நீயும், நிண்ட சிநேகிதனும் போய் ஆசித்த புருஷரை நோக்கணும். சஞ்சீவி கிட்டிட்டெங்கில் சகலமும் கிட்டும். எய்ட்சும், சிக்கன் குனியாவும், டெங்குவும் ஒழிஞ்சு ஒரு சுகமான சமுதாயம் புஷ்பிக்கும். காலங்கடத்தாது போய்க்கோளா.”

- தட்டுத் தடுமாறியபடி மலையாளமும், தமிழும் கலந்து பட்டத்திரி பேசியது குருவுக்கு புரிந்தது.

“அவ்வளவு பெரிய சஞ்சீவியை நாம கேட்டாத்தான் சித்தர்கள் தரணுமா? அவங்களா வந்து தரலாமே?” - என்று

கேட்டான் குரு. ஆனால், அதற்குப் பதில் கூற பட்டத்திரியால் முடியவில்லை. அதற்குள் ஒரு பெரிய இலையை தொன்னை போல் செய்து, அது நிறைய தண்ணீரோடு பரணி வந்து சேர்ந்தான்.

அதை நம்பூதிரியும் ஒரு மடக்கில் குடித்தான். கண்களில் மெள்ள உயிர் வர ஆரம்பித்தது. கந்தசாமியும் கைநிறைய வெட்டுப் பூண்டு செடியையும், சதை ஒட்டியையும் கொண்டு வந்திருந்தார். அவற்றை அருகில் - பாறை மேல் போட்டு - கிடைத்த கற்களைக் கொண்டு சிதைத்து-மாவு போலாக்கி பின் வழித்தெடுத்து - சதை பிய்ந்து தொங்கிய இடங்களில் வைத்து - தன் வேட்டியை அவிழ்த்து, அதை கிழித்து கட்டுப் போட்டார்.

அப்போது பட்டத்திரி அலறிய அலறல் அந்த வனப்பரப்பையே நடுங்க வைத்தது. சத்தம் கேட்டு மிருகங்கள் வந்துவிடுமோ என்று நாலாபுறமும் பார்த்த கந்தசாமிக்கு பயமாகிவிட்டது.

“பரணி.... இப்பக்கூட கெட்டுப் போயிடலை. இவர் இனி பெழைச்சுக்குவார். நாம இப்பப் போனாலும் பாத்துடலாம்” என்றார். பட்டத்திரியும் இடைமறித்தான்.

“பரணி.... நீ புறப்படு. அதுதான் முக்கியம். அது ஒரு அற்புதம். ஞானொரு பாவி. எனிக்கு அனுக்ரகமில்ல. பட்சே... உனக்கு நிறைய இருக்கு. பக்தியையும், பயத்தையும் விட கருணையும், சத்தியமும் பெரியது. அது நின்னிண்ட நிறைய இருக்கு. நீ போய்க்கோ... காலம் தாழ்த்தாதே. போய்க்கோ”- என்று கைகளைக் கூப்பினான் பட்டத்திரி.

பரணியும் அரைமனதாகப் புறப்பட்டான்.

கந்தசாமி, பட்டத்திரியை தூக்கிக் கொண்டார்.

வழியில் பாதுகாப்பான ஒர் இடத்தில் அவரை விட்டு விட்டு, அப்படியே ஓட வேண்டும். அதற்கு ஏற்ப இடமும் வந்தது. அங்கே ஒரு குடிசை தூர்ந்து போயிருந்தது.

‘அநேகமாக மூலிகை பறிக்க வரும் வைத்தியர்கள் தான் அவரசத்துக்கு இந்த குடிசையை கட்டி இருக்கணும். இப்போதைக்கு பட்டத்திரி இதுக்குள்ள இருக்கட்டும். நாம வரும்போது பாத்துப்போம்’ என்று உள்ளே பட்டத்திரியை இறக்கவும், பரணியை அருகில் அழைத்தான் பட்டத்திரி.

பரணியும் வந்தான். அப்போது தன் கழுத்தில் இருந்த உத்திராட்ச மாலையை கழற்றி அவனுக்கு அணிவித்தான் பட்டத்திரி.

“இது… உனக்கு ரட்சயையாய் துணை செய்யும். கரடி என்ன கடிச்சப்பவும் இதுதான் காப்பாத்திச்சு. உனக்கு இனி பாதுகாப்பு முக்கியம். கார்க்கோடக சர்ப்பங்கள் முகத்தில் விஷத்தை உமிழ்ந்த பின்னேதான் கடிக்கவே வரும். ஆ….. கார்க்கோடக சர்ப்பங்கள் இந்த பாகத்தில் நிறைய உண்டு. கவனமாயிட்டு போய் வா”- என்றான்.

கடிகாரத்தில் மணி ஏழாகி இருந்தது. வானம் நன்றாகவே வெளுத்து, வெளிச்சம் நன்றாக பரவ ஆரம்பித்துவிட்டது.

“பரணி…. நடந்தெல்லாம் போய் சேர முடியாது. ஓடுவோம்”- என்றார் கந்தசாமி. அவர்களும் ஓடத் தொடங்கினர். வனத்தின் நிலப்பரப்பு மாறிக்கொண்டே வந்தது. இடையில் ஒரு சரிவான குன்று. அதன் மேலேறிய நிலையில், மொத்த வனப்பரப்பையும் வட்டம் கட்டி பார்க்க முடிந்தது. மரம் ஒன்றின் மேல் புலி படுத்திருந்தது. நாக்கை தொங்கப் போட்டபடி இளைப்பெடுத்த வாயுடன் அது பார்த்த விதமே பயங்கரமாய் இருந்தது.

கந்தாமி பலமாக மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார். புலி அங்கிருந்தேகூட பாயலாம்தான். ஆனால், ‘பிழைத்துச் செல்லுங்கள்’ என்பது போல பார்த்தது.

“பரணி…. சிவப்பிரகாசமய்யா சொன்ன மந்திரத்தை சொல்லிக்கிட்டே நிக்காதே! புலி பார்த்துடுச்சி. துரத்தினா பேராபத்து. அதே நேரம் அது கூடு பாய்ஞ்ச சித்தர் சாமியாவும் இருக்கலாம். அது பாயாம பார்க்கறதைப் பார்த்தா சித்தர் சாமியாதான் எனக்குப்படுது” - என்று பேசிக் கொண்டே வேகமாக ஓடினார்.

“பேசாம வாங்கண்ணே” - என்று பதிலுக்கு அவன் அழுத்தமாய் சொன்ன விதமே அவர் அந்த புலியை சித்தர் என்று சொன்தை நம்பவில்லை என்பதை உணர்த்திவிட்டது.

“கார்க்கோடக பாம்பு இருந்து, முகத்துல விஷத்தை உமிழும்கறதைக்கூட நம்புவேன். இந்த புலி கப்சா எல்லாம் வேண்டாம்” என்றான், கூடவே ஓடியபடி

அதிசயமாக அப்போது அவன் செல்போனில் சிணுங்கல்.

நின்று எடுத்துப் பார்த்தான். மறுபக்கத்தில் சரண்யா. அந்த இடத்தில் இணைப்பு கிடைத்ததுதான் ஆச்சரியம்! ஆனால், அவளோடு அப்போது பேச விரும்பாதவனாக - உடனடியாக அவளுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பினான். ‘பிறகு பேசுகிறேன்’ என்று...

அந்த நொடி - கீழே ஒரு ‘பிஸ்கெட் பாக்கெட்' மற்றும் சில ‘பேட்டரி செல்’களையும் பார்த்தான். குனிந்து கையில் எடுத்தான். சற்று தள்ளி ஒரு தண்ணீர் பாட்டிலும் கிடந்தது.

“என்ன பரணி?”

“இதையெல்லாம் பாருங்க. நமக்கு முன்னால யாரோ இந்தப் பக்கம் போயிருக்காங்க.”

“ஆமா.... நாராயண சித்தர் வரப்போற விஷயம் ஒரு பெரிய ரகசியம். ஆனா, வேற யாருக்கோகூட அது தெரிஞ்சு அவங்க வந்திருக்கலாம். இதுல இருந்தே நாம் போற விஷயம் சாதாரணமானது இல்லைன்னு உனக்கு புரிஞ்சா சரி” - என்றார்.

பரணி அதற்கு எந்த பதிலையும் கூறவில்லை. ஆனால், ‘அந்த நாராயண சித்தரை இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டும்’ என்கிற ஆவேசம் மட்டும் மனதுக்குள் இருந்தது. இந்த ஒருவருக்காக சிவப்பிரகாசம் ஒருபுறம் பட்டத்திரி மறுபுறம் பெரிய கனவே கண்டுவிட்டனர். அந்த கனவுகளாலேயே அவர் உயிரும் போய்விட்டது.

‘இதற்கு காரணம்... நீங்கள் தானே!’ என்று கேட்க வேண்டும்.

ஆறு ஆண்டுகளாய் அப்பா என்கிற உறவே இல்லாமல் போய்விட்டது. இதற்கு காரணமும் நீங்கள் தானே என்று கேட்க வேண்டும். பரணியின் மனதுக்குள் இப்படி நிறைய கேள்விகள். நடந்து செல்லும் பாதையோ ஒழுங்கின்றி இருந்தது.

காலில் அணிந்திருந்த 'கேன்வாஸ் ஷூ'வை தைத்துக் கொண்டு ஒரு முள், குருவின் நடுப் பாதத்தில் ஏறிவிட்டது. அது விஷ முள்! அதைப் பார்த்த நொடி கந்தசாமி கையை உதறினார்.

"தம்பி... முதல்ல 'ஷூ'வை கழட்டு. கால் இப்ப புசு புசுன்னு காத்தடிச்ச பந்து மாதிரி வீங்கும் பாரு" என்றார். இறுதியில் அப்படித்தான் ஆயிற்று. காலைப் பார்க்கவே குருவுக்கு பயமாகிவிட்டது.

"பயப்படாதே....! வெள்ளெருக்குப் பாலை, முள் தைச்சு இடத்துல தடவணும். அப்படியே விஷ முறிவுக்கான தழை ஒண்ணு இருக்கு. அதுக்கு 'பிரம்ம தண்டு'ன்னு பேரு. தழையே முள்ளோடுதான் இருக்கும். அதை இடிச்சு சாறாக்கி, பால்ல கலந்து குடிக்கணும். குடிச்சா விஷம் முறிஞ்சு, கால் பழையபடி ஆகிடும். அதே வேளை, நீ இப்ப நடக்கக்கூடாது... நடக்கவும் முடியாது. இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல நானும், பரணியும் நாராயண சித்தரைப் பார்த்தே தீரணும்.

ஆகையால நாங்க புறப்படுறோம். நீ இங்கேயே இரு. நான் திரும்பி வரும்போது, உனக்கு அதிர்ஷ்டம் இருந்தா 'சப்த சஞ்சீவி'யோடுகூட வரலாம். அப்படி இல்லேன்னாலும் பாதகமில்லை. வெள்ளெருக்கையும், பிரம்மத் தண்டையும் தேடி எடுத்துக்கிட்டு கட்டாயம் வருவோம்" என்றபடியே கந்தசாமி விலகினார்.

பரணிக்கு குருவை அங்கேய தனியே விட்டுட்டுப் போக மனமில்லை. போகாமல் இருக்கவும் முடியவில்லை. தயங்கி நின்றான்.

"வா...பரணி-..நேரமாச்சுபாரு" - கந்தசாமி படபடத்தார். பரணியும் அரைமனதாக அவரோடு நடக்க கால் எடுத்த

போதுதான், எதார்த்தமாய் அந்த காட்டு மரத்தில் அது கண்ணில்பட்டது!

***

# 36

வனத்தினுள் மூலிகைகளால் மட்டும் பயன் என்று கருதிவிடக்கூடாது. வனத்தில் மரத்தின் அடியில்- அதன் நிழலில் கிடக்கும் பறவை எச்சம்கூட பல வியாதிக்கு மருந்தாகப் பயன்படுகிறது. குறிப்பாக புறாக்களின் எச்சமும், குருவிகளின் எச்சமும் மருத்துவ குணம் கொண்டதாகும். இந்த இரண்டையும் விடிகாலைப் பொழுதில் திரட்டி எடுத்துவர வேண்டும். யானைக்கான சோற்று உருண்டை அளவுக்கு திரட்டி எடுத்த நிலையில் நிழலில் காய வைக்க வேண்டும்.

'நீச்சத் தண்ணி' எனப்படும் பழைய சோற்றின் தண்ணீரை அதில் சேர்த்து உருண்டை போல் பிடித்து, வெள்ளைத் துணியில் போட்டு கட்டி - மண் பானையை விறகு அடுப்பில் வைத்து சூடேறச் செய்து - உள்ளே இந்த மூட்டையைப் போட்டு எடுக்க... இளம் குட்டோடு இதமாக இருக்கும். இதை வைத்து தீராத முதுகு - தோள்பட்டை வலிக்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும். கொடுக்கும் முன் நல்லெண்ணெயை, ஒத்தடம் கொடுக்கும் இடத்தில் பூசி இருக்க வேண்டும்.

இந்த எண்ணெயும், சூடான எச்சமும் கலந்து மயிர்க்கால்களில் ஊசிமுனை அளவுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் மருந்தாகி இறங்கும். இதனால் ஒரு வாரத்தில் வலி விலகும். இது வனத்தில் வாழ்பவர்களின் நடைமுறை. சித்த வைத்தியர்கள் - இந்த வலிக்கு வேறுவித மருந்துகளைக் கண்டறிந்து விட்டதால், எச்சப் பயன்பாடு இல்லாது போய்விட்டது. எச்சம் மருந்தாக இருக்க காரணமே புறாவும், குருவியும் உண்ணும் புழு - பூச்சிகள் மற்றும் தாவர விதைகள்தான்!

**- வன வியாசம்**

அது 'ஆட்டோமேடிக் கேமரா.'

ஒரு மரத்தில் வெகு அழகாக கயிறு மூலம் கட்டப்பட்டிருந்தது. நின்று வெறித்த பரணி, அதை நோக்கிச் சென்றான். கந்தசாமியும் அவனோடு தொடர்ந்தார்.

“என்ன பரணி… எங்க இந்தப் பக்கம் போறே?”

“அங்கே பாருங்க….”

அவன் கைகாட்ட - அவரும் பார்த்தார். முகத்தில் அதிர்வு.

"அண்ணே… நம்மை யாரோ கண்காணிக்கிறாங்க.”

“அப்படித்தான் நானும் நினைக்கிறேன். இந்த வனத்துல எப்படி இதெல்லாம் சாத்தியம்?”

“இப்ப நாம பேசறதையும் ‘கேமரா’வுல பாத்துக்கிட்டு இருக்கலாம்.”

“தம்பி…. அப்படியே நடக்கற வழியைப் பாரு. நாம ரகசியம்னு நினைச்சுக்கிட்டிருக்கிற நாராயண சித்தர் விஷயம் பெரிய அளவுல பல பேருக்கு தெரிஞ்சிப் போச்சு போல.”

“தெரிஞ்சவங்க எதுக்கு ‘கேமரா’வைப் பொருத்தணும்? ஒருவேளை வனஇலாகாக்கூட இதைப் பொருத்தி இருக்கலாம்.”

“அவங்களுக்கு எதுக்கு இந்த வேலை?”

“வேண்டாத வேலை இல்ல. மிருகங்களோட நடமாட்டத்தை இப்படி ‘கேமரா’ வெச்சுக் கண்காணிக்கிறது தான் இன்னிக்கு வழக்கம். சில பேனா முனையிலகட’கேமரா’ உண்டு. அதைப் பாம்புப் புற்று, கரையான் புற்றுக்குள்ள எல்லாம் விடலாம். உள்ள என்ன நடக்குதுன்னு வெளியில பல மைல் தூரத்துல இருந்துகிட்டுகூட நம்ம ‘கண்ட்ரோல்’ல இருக்கற டி.வி. திரையில பார்க்கலாம்.”

- பேசிக்கொண்டே வேகமாக நடந்தனர்.

“சரியான வழியிலதான் போய்க்கிட்டு இருக்கோமா?”

பரணி சுற்றிலும் பார்த்தபடியே கேட்டான். தொலைவில் இன்னொரு மரத்திலும் ‘கேமரா’ தெரிந்தது.

“அதோ அங்க ஒண்ணு” - அவன் கை காட்டும்போது பக்கவாட்டில் சரசரவென்று சத்தம். வேகமாகத் திரும்பவும், யாரோ அவர்களைப் பார்த்துவிட்டு ஓடி ஒளிவது போல் இருந்தது.

“அண்ணே.... இங்க ‘கேமரா’ மட்டுமில்ல.... மனித நடமாட்டமும் இருக்கு” என்ற பரணியிடம் பெரிதும் வியப்பு.

“சந்தேகமே இல்ல. நம்மளையும், தாமோதர பட்டத்திரியையும் போலவே இன்னொரு ‘குரூப்’பும் வந்திருக்கு. இன்னிக்கு எண்கோணப் பாறையில எக்குத்தப்பா ஏதோ நடக்கப் போகுது.”

- கந்தசாமி படபடத்தார்.

“சரி... அந்தப் பாறைக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?”

“நான் இப்பதான் வர்றேன். ஆனா, சிவப்பிரகாசம் உங்களுக்கு வழிகாட்டுறதுக்காக படமா வரைஞ்சு காட்டி சொன்னது நல்லா ஞாபகம் இருக்கு. பாறைக்கு முன்னால ஒரு ஓடை குறுக்கிடும். அதைக் கடந்தா... கல் ஆலமரம் ஒண்ணு இருக்கும். பொதுவா மலையில ஆல் தழைக்கிறது அபூர்வம். அது விழுதுவிட்டு பரவ, தட்டையான நிலப்பரப்புதான் தேவை. இது அபூர்வமான மரம். இதுலதான் மலைக் கழுகுகள் தங்கும். அறுபது வருஷமா உயிரோட இருக்கற கழுகுகளும் உண்டு.

- கந்தசாமி சொல்லிக்கொண்டே நடந்ததில்.... ஓடை வந்துவிட்டது. ஐந்துமீட்டர் அகலம் இருந்தது. அதில் சீரான வேகத்தில் முழங்கால் அளவுக்கு நீரோட்டம்.”

"அண்ணே... இந்த ஓடையா?”

“ஆமா.அதோ கல் ஆலமரம்.”

“ம்... அப்ப கிட்டத்துல நெருங்கிட்டோமா?”

“ஆமா.... ‘மரத்தைக் கடந்தா சின்னதா சமவெளி அதுக்கு நடுவுல எண்கோணத்துல நட்சத்திரக் கோலம் போட்ட

மாதிரி இருக்கும், அந்தப் பாறை’ன்னு சொன்னார். ஆமை முதுகு மாதிரியும் இருக்குமாம்.”

ஓடை நீரில் இறங்கி நடந்தனர். பரணி திரும்பித் திரும்பி பார்த்தான்.

“என்ன… யாராவது பின்தொடர்ந்து வர்றாங்களோன்னு நினைக்கிறியா?”

“ம்…. நிச்சயம் நம்மைப் பின் தொடர்ந்து வந்தே தீரணும்.”

- பேச்சோடு ஓடையைக் கடந்து மேலேறி - ஆலமரத்தையும் அடைந்து, அங்கிருந்து வானத்தைப் பார்த்தனர்

வானில் மேகமூட்டம் இருந்தும் ஆங்காங்கே சூரியனின் வெளிச்ச ஊடுருவல்!

“மணி எவ்வளவுன்னு பாரு”

“கிட்ட நெருங்கப் போகுது.”

“அப்ப வேகமா நடையைப் போடு. சீக்கிரம்… சீக்கிரம்”

- பரணி நடையோடு…. கந்தசாமி சொன்ன வயதான கழுகு, ஆலமரத்தில் தெரிகிறதா என்று பார்த்தான். ஒரு கழுகு கழுத்தில் முடியெல்லாம் உதிர்ந்த நிலையில் ‘பளிச்’சென்று முதுமையை எதிரொலித்தபடி அமர்ந்திருந்தது. ஒரு பாறை ஓரமாய் மலைப்பாம்பு கயிறு கொண்டு பாறையை கட்டிப் போட்டது போல ஒட்டிக்கொண்டு படுத்திருந்தது. ஒவ்வொன்றுமே ரசமான காட்சிதான்!

ஆலமரத்தைக் கடந்து, பாறை ஒன்றின் மேல் ஏறிய போது ‘பளிச்’ சென்று தெரிந்தது… அந்தப்புறமாய் சிறு சமவெளி. ஒரு கால்பந்து மைதானம் போலத் தெரிந்த அதன் மையத்தில், ஆமை முதுகு கிடப்பது போல் ஒரு பாறை. அதன் எட்டு திசைப் பாகமும், கூர்மையாக பிரமிடு போல் குவிந்து காட்சி தந்தது. வானிலும் மேகம் விலகி - வெளிச்சம் மிகச் சரியாக அதன் மேல் படத் தயாராகிவிடும் கால நிலை.

“எப்படியோ வந்து சேர்ந்துட்டோம் பரணி. நம்ம முயற்சி வீண் போகலை” என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கந்தசாமி.

“நாம அந்த பாறைகிட்ட போவாமா?” என்று கேட்ட பரணி, சுற்றிலும் திரும்பி ஒரு பார்வை பார்த்தான். எங்காவது ‘கேமரா’ இருக்கிறதா எனும் அவன் தேடலில், ஒரு இடத்தில் இருந்து போலீஸ் அதிகாரி போல் ஒருவர் எதிரில் வரத் தொடங்கினார்.

“பரணி.... பாரு. யாரோ வர்றாங்க.”

“வரட்டும்ன்ணே. நாம மட்டும்தான் இங்க வரணும்னு ஒண்ணும் சட்டம் இல்லையே!”

அவரும் நெருங்கிவிட்டார். காக்கி ‘பேண்ட்'டும், வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார்.

“நீங்கதானே பரணி?” - என்று கேட்டபடியே அருகில் வந்தார்.

“ஆமா! நீங்க யாரு?”

“நான் இந்த மலையோட வனப் பாதுகாப்பு அதிகாரி, என் பேரு குருநாதன்” - சொன்னதோடு கையை நீட்டினார். பரணியும் ஆச்சரியத்தோடு கை குலுக்கினான்.

“நீங்க எப்படி இங்க?”

“மிஸ்டர் ராஜதுரை, மதுரையில இருந்து நேத்தே போன் பண்ணி பேசிட்டார். உங்களுக்கு இங்க எல்லா உதவியும் செய்யத்தான் வந்திருக்கேன்.”

“யாரு... போலீஸ் அதிகாரியா?”

“அவரேதான்!”

“வழியில ‘கேமரா’ பொருத்தினதெல்லாம்?”

“எல்லாமே நாங்கதான். உங்க பயணம் ஒரு ‘மிஸ்ட்ரி டிரிப்’ன்னு (மர்மப் பயணம்) சொன்னார். இந்த வனத்துல சித்தர்கள் நடமாடுறதை நானும் பார்த்திருக்கேன். பல

அதிசயங்களையும் சந்திச்சிருக்கேன். இன்னிக்கு இங்க வரப் போறதா சொல்லப்பட்டநாராயண சித்தர் பத்தியும் கேள்விப்பட்டு இருக்கேன். ஆனா பார்த்ததில்லை. இன்னிக்கு உங்களோடு சேர்ந்து நானும் அவரை தரிசனம் பண்ணப்போறேன்.”

“ஆமா.... சாருக்கு நாங்க இங்க வரப்போறது எப்படித் தெரியும்?”

“அதை சார் கிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்குங்க. இந்தாங்க” - அந்த குருநாதன் தன் வசமுள்ள ‘செல்போனில் எண்ணை அழுத்தியவாறே நீட்டினார்.

ராஜதுரையும் இணைப்பில் வந்தார்.

“பரணி.... எப்படி இருக்கே? எல்லாம் நல்லா போய்கிட்டிருக்குதானே?”

“எனக்கு ஒண்ணும் இல்ல சார். ஆனா, நான் யார்கூட வந்தேனோ அவர் உயிரோட இல்லை.”

“யாரு.... அந்தப் பெரியவர் சிவப்பிரகாசமா?”

“ஆமா சார் காட்டு நெருப்புல கருகி சாம்பலாயிட்டார். இன்னும் சிலருக்கு படுகாயம். ஆனா, உயிருக்கு ஆபத்து இல்லை.”

“அடடா... கடைசியில கல்யாணிங்கிற பொண்ணு பயந்த மாதிரியே நடந்துடிச்சே?”

“அப்ப உங்களுக்கு எங்க 'அட்வெஞ்சர் டிரிப்’ பத்தி சொன்னது கல்யாணியா?”

“ஆமாம்ப்பா... நீங்க கிளம்பின கொஞ்ச நேரத்திலேயே அந்தப் பொண்ணு என்னைப் பார்க்க வந்தது. பெரியவர் பத்தி விபரமா சொன்னது. முதல்ல என்னால நம்ப முடியலை. அப்புறமா அவங்க ‘பிளாட்’டுக்கு கூட்டிட்டு போய் அவர் சேமிச்சு வெச்சிருந்த ஓலைச் சுவடிக் கட்டுகள்ல இருந்து மூலிகை வேர்கள் வரை சகலத்தையும் காட்டிச்சு. நானும் எதுக்கும் உனக்கு உதவியா இருக்கட்டுமேன்னு

குருநாதனுக்கு தகவல் தந்தேன்.

பாவம் கல்யாணி தாத்தா இறந்துட்டாருன்னா ரொம்ப வருத்தப்படுவா. அவளுக்கு அவங்க தாத்தா பத்திகூட பெருசா கவலை இல்ல. உங்களுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதுன்னு தான் ரொம்ப வருத்தப்பட்டா. ஆமா.... உன் நண்பன் குருவுக்கு எந்த ஆபத்தும் இல்லையே?”

“குருவுக்கும் கால்ல விஷ முள் ஏறிடிச்சு சார். இங்க இருந்து நான் உங்கக்கூட பேசுவேன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை”

“ரொம்ப கவனம். எல்லாம் நல்லபடியா முடியட்டும். யாரோ நாராயண சித்தராமே! அவரைப் பார்த்துட்டியா?”

“மணி இப்ப 7.55, எட்டு மணிக்கு அவர் வரக்கூடும். அவரைப் பார்ப்பேன்னுதான் நினைக்கிறேன்.”

“பாரு... எக்குத்தப்பா ஏதாவது இருந்தா உடனே தகவல் தா. சிவப்பிரகாசம் நம்பின மாதிரி... நல்லதா இருந்தா விட்டுடாதே.”

“எல்லாப் புதிருக்கும் கொஞ்ச நேரத்தல விடை கிடைச்சிடும் சார்.”

“வாழ்த்துகள்! நான் ஒன்பது மணிக்கு திரும்பவும் உன்கூட பேசறேன்.”

- ராஜதுரை போனை ‘கட்’ செய்திட, அதிகாரி குருநாதன், “இந்த நாராயண சித்தர் சந்திப்பை எல்லா ‘கேமரா’வும் ‘ஷூட்' பண்ணப் போகுது. இன்னிக்கு டி.வி. நிகழ்ச்சிகள்ல இந்த மாதிரி 'திரில்’லான உண்மை அனுபவங்களுக்குத்தான் ரொம்பவே வரவேற்பு. அதான் ஒண்ணுக்கு பல ‘கேமரா’வைப் பொறுத்தினேன்” என்றார்.

பரணிக்கு கொஞ்சம் ‘பகீர்’ என்றானது!

***

# 37

**‘ஓர் அரசு - ஆலும் வேம்பும்**

**ஒரு பத்து புளியும், மூன்று**

**சீருடன் விளவும், வில்வம்**

**மூன்றுடன் சிறந்த நெல்லி**

**பேர் பெறும் ஐந்து தென்னை**

**பெருகு மாஐந்தும் ஒன்றும்**

**யார் பயிர் செய்தாரேனும்**

**அவர்க்கில்லை நரகம்தானே?**

- இப்பாடல் 'கார்த்திகைப் புராணம்' எனும் நூலில் காணப்படுகிறது. இந்தப் பாடலின் பொருள் என்ன தெரியுமா? மனிதப் பிறப்பெடுத்துவிட்ட ஒவ்வொருவரும் கார்த்திகை மாதத்தில் சுக்கிலபட்சத்தில் ஒரு அரசு, ஒரு ஆல், ஒரு வேம்பு, மூன்று விளாமரம், மூன்று வில்வமரம், மூன்று நெல்லி மரம், பத்து புளிய மரம், ஐந்து மாமரம், ஐந்துதென்னை என்று ஒன்பது புண்ணிய மரங்களையும் நட்டு வந்தால் அவருக்கு நரகம் இல்லை. அது மட்டுமல்ல… அவரது வாரிசுகளம் வளமான வாழ்க்கை வாழ்வார்கள்.

இப்படி மரங்களை ஒட்டுமொத்தமாய் நட்டிட இடம் வேண்டும். நட்டால் மட்டும் போதாது. இந்த மரங்கள் பட்டுப்போய்விடாதபடி வளர்ந்து எழ வேண்டும். இதற்கு ஏற்ற இடம், அதிக மழைப் பொழிவுள்ள காடுகள்தான். எனவே, ஒரு வண்டியில் ஒன்பது மரக்கன்றுகளையும், வைத்து எடுத்துக் கொண்டு காட்டுக்குள் நுழைந்து - மரங்களை நட்டுவிட்டு, அந்த மரங்களுக்கு காவலாக ஒரு நடுகல்லில் தங்கள் குலதெய்வத்தை ‘ஆவாகனம்’ (மந்திரத்தால் இறைவனை எழுந்தருளச் செய்தல்) செய்து, அதன் பாதுகாப்பில் விட்டுச் செல்லும் ஒரு வழக்கம் அரசர்கள் காலத்தில் இருந்தது. இதைத் தான் ‘வன

மகோத்வசம்' என்பார்கள்!

**- வன வியாசம்**

பரணியின் முகம் போன போக்கை குருநாதனும் கவனித்தார்.

“என்ன மிஸ்டர் பரணி... நான் சொன்னதைக் கேட்டு ‘ஷாக்’ ஆகிட்ட மாதிரி தெரியுதே?”

“ஆமா சார் நெஞ்சம் ‘ஷாக்’ காகத்தான் இருக்கு. இந்த ‘டி.வி. சேனல்’கள் வந்தாலும் வந்தது - அதுல பல கொடுமைகள். என்னோட இந்த பயணத்தையும் நீங்க சேர்த்து அதுக்காக கேமராவை ‘ஃபிக்ஸ்’ பண்ணினது பெரிய கொடுமை சார்...”

“ஓ..... இதை கொடுமைன்னு சொல்லாதீங்க. நாராயண சித்தர் வந்து நீங்களும் பார்க்கிற அந்த சந்திப்பு என் வரையில் ஒரு அசாத்திய அனுபவம். மதம் அப்புறம் நம்ம கலாச்சாரம் பத்தியெல்லாம் தப்பா பேசறவங்களுக்கு நாம குடுக்கப் போற சவுக்கடி இது....”

“”ம்ப தப்பு சார்... ஏற்கெனவே சபரிமலையும், அங்க ஓடுற பம்பா ஆறும் பெரிய பக்தர்கள் கூட்டத்தால பரிதவிக்குது. நம்மளால ஒரு பெரிய காட்டை உருவாக்கத் தான் முடியாது. இருக்கற காட்டை காப்பாத்திக்க கூடவா முடியாது?”

“நீங்க அப்படி வர்றீங்களா....! இங்கேயும் சித்தர் தரிசனம்னு ஒரு கூட்டம் வந்து, இந்த பொதிகை மலைக் காடும் பாழாப் போயிடும்னு பயப்படுறீங்களா?”

“இல்லையா பின்னே? அடுத்து, இந்த சித்தர் எந்த அளவு உண்மையானவருன்னு இன்னும் யாருக்குமே தெரியாதே! ஒரு மைல் கல்லுக்கு துண்டைக் கட்டி - அதை நாலு பேர், ‘எல்லைச்சாமி’ன்னு விழுந்து கும்பிட்டாலே போதுமே...? காலப்போக்குல அந்த மைல் கல் சாமிக்கு கோவிலைக் கட்டி, அங்க ஒரு உண்டியலை வெச்சு குறிச் சொல்லி பிழைக்க பலரும் தயாரா இருக்கும்போது....”

- பரணியும், குருநாதனும் அங்கே அடுத்து மோதலில்

முட்டிக்கொண்டது கந்தசாமிக்கு எரிச்சலைத்தான் தந்தது.

“ரெண்டு பேரும் கொஞ்சம் வாய மூடுங்க. மணி எட்டாயிடுச்சு... சாமி வரப் போற நேரம். நாம இப்படி பேசிக்கிட்டு இருக்கறதை அவர் பார்க்க நேர்ந்தா - ஒருவேளை இந்தப் பக்கம் வராமலேகூட போனாலும் போயிடுவார்....”

கந்தசாமி பயந்தார். பரணி, கடிகாரத்தைப் பார்த்தான் மணி எட்டு ஒன்று. ஆனால், சித்தரைத்தான் பார்க்க முடியவில்லை!

அதிகாரி குருநாதனும், அந்த எண்கோணப் பாறையை கூர்ந்து பார்க்கத் தொடங்கினார். அவர் பார்த்தபோது மேகம் விலகி - சூரியக் கதிர், அதன் மேல் பட்டு பாறை பளிச்சென்று மின்னியது.

“சூரிய வெளிச்சம் பட்டுடுச்சு. ஆனா, சாமியைக் காணலியே?”-கந்தசாமியின் குரலில் ஏமாற்றம் தொனித்தது. நேரம் உருண்டபடியே இருந்தது.

மணி எட்டு ஐந்து.

அப்போது கல் ஆலமரத்தின் கழுத்தில் - முடி இல்லாத. வளைந்த கழுத்தை உடைய கழுகு இருந்து - எழும்பிப் பறந்து - அந்த பாறை மேல் போய் அமர்ந்தது.

“ம்.... சித்தர் சாமி வருவார்னு பார்த்தா, இந்த கழுகு வந்து உட்காருதே......?” என்று முணுமுணுத்தார் குருநாதன்.

“அவசரப்படாதீங்க.... அந்த கழுகேகூட சாமியா இருக்கலாம்” என்றார் கந்தசாமி. பரணிக்கு அதைக் கேட்டு கோபம் தான் வந்தது. பாறையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது சில குருவிகளும், அந்த பாறை மேல் வந்து அமர்ந்தன. அதிசயமாக ஒரு காக்கைகூட அமர்ந்திருந்தது.

“அட.... காக்கா.....” என்றார் கந்தசாமி.

“குருவி வரலாம். காக்கா வரக்கூடாதா?’ என்று திருப்பிக்

கேட்டான் பரணி.

“ஒரு காட்டுல எல்லாவித பறவைகளும் இருக்கும். ஆனா, காக்கா மட்டும் இருக்காது தம்பி. காக்கைக்கு மனுஷத் தொடர்பு வேணும். அது ஊர்ப் பறவை.”

“அப்ப ஊர்ப் பறவை இங்க மட்டும் எப்படி வந்தது?”

“இது காக்கா இல்ல. அநேகமா காகபுஜண்டருங்கற சித்தர் சாமியா இருக்கலாம். ஏன்னா... அவருக்குத்தான் எந்த யுகத்துலயும் அழிவு கிடையாது.”

“போதும் நிறுத்துங்க... அங்க பாருங்க!வெயில் நல்லா அடிக்குது. பாறையிலேயும் ஒரு திடத் தன்மை இருக்கு அது பறவைகளுக்கு பிடிச்சிருக்கு. அதான் வந்து உக்காந்திருக்கு. இதுக்கு மேல இதுல யோசிக்க இடமேயில்லை....”

- பரணி அப்படி சொன்னபோது, ஒரு நல்ல பாம்பு அங்கே வந்து பாறை நடுவில் - கோலம் போட்டது போல் பொறிக்கப்பட்டிருந்த இடத்தின் மேல் படம் விரித்தபடி எழும்பி நின்றது.

“நிச்சயமா அது நாகசித்தர்தான்.... இல்ல பாம்பாட்டி சித்தரா இருக்கணும்” என்று கந்தசாமி கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

“உங்க மூடநம்பிக்கைக்கு ஒரு அளவே இல்லையாண்ணே?” என்று கோபமாக வெறித்தான் பரணி. அதற்கு பிறகு அவன் எதுவுமே பேசவில்லை.

சில நிமிடங்களில் வெளிச்சம் விலகியது. வானில் மேகம், திரும்பவும் மூடிக்கொண்டது. மழைகூட வரும் போல் தோன்றியது. நாராயண சித்தர் மட்டும் வரவே இல்லை. பறவைகளும் பறந்து போயின. பாம்புகூட தன் வழியைப் பார்த்துப்போனது.

கந்தசாமி முகத்தில் ஏமாற்றம் கும்மியடித்தது.

மணி எட்டரையைக் கடந்துவிட்டது.

“என்னண்ணே.... உங்க பல வருஷத்து கனவு பலிக்காம போயிடுச்சா?”

“ஆமா தம்பி... இப்படி நடக்கும்னு நான் எதிர்பார்க்கலை. இதை ஒரு லட்சியமா கொண்டு வாழ்ந்த பெரியவரையும் இழந்துட்டோம். அடுத்து இப்படியொரு பொருத்தமான நாள், நாப்பது வருஷம் கழிச்சுதான் வரும். ஆனா, நிச்சயமா அப்ப உயிரோட இருக்கமாட்டேன். ஆனா, நீ இருக்க வாய்ப்பு இருக்கு. இருந்தும் என்ன புண்ணியம்? உனக்கு இதுல கொஞ்சம்கூட நம்பிக்கை இல்லையே....”

“நாப்பது வருஷம் கழிச்சு நடக்கப்போறதைப் பத்தி அப்புறம் பேசுவோம். இப்ப என்ன நடந்தது... அதைச் சொல்லுங்க முதல்ல....”

“ஒருவேளை நாம இங்க காத்திருக்கிறது தெரிஞ்சு, சாமி வராம போயிட்டாரோ என்னவோ?’

“நம்மைப் பார்த்து அவருக்கு பயமா?”

“பயம்கற வார்த்தையெல்லாம் தப்பு தம்பி, நாம அவரைப் பார்த்தாதான் எல்லாத்தையும் கேட்போமே? அதுலயும் நீ கேட்டா - கொடுத்துதானே தீரணும்....? அதான் சாமர்த்தியமா வரமாலே போயிட்டார் போல.”

“நீங்க இப்ப என்ன வேணா பேசுவீங்க... எதை வேணாலும் பேசுவீங்க. எது உண்மையோ - அதை மட்டும் உங்களால பேச முடியாது.

ஆனா, நான் இப்ப சந்தோஷமா இருக்கேன். உங்க சித்தர் விஷயம் எல்லாமே வெறும் கட்டுக்கதை. அப்புறம் இந்த வியாழக்கிழமை, பூச நட்சத்திரம், கார்த்திகை மாதம். இப்படி எல்லாமே ஒண்ணுமில்லாத விஷயங்கள். ஒண்ணை மட்டும் நல்லா தெரிஞ்சிக்குங்க. பூமி சுத்திகிட்டே இருக்கு. சூரியனும் சந்திரனும்கூட சுத்துது. இதனாலதான் இரவு பகல்!

இந்த இரவும் பகலும் கோடானு கோடி வருஷமா வந்துகிட்டிருக்கு. இதுக்கு மனுஷன்தான் அடையாளத்தை

உருவாக்கினான். அப்பதான் அவனால செயல்பட முடியும்கறதால அவன் அப்படி நடந்துகிட்டான். அதுக்கு பேர் தான் 'காலண்டர்'! நம்ம வசதிக்காக நாம உருவாக்கினது. இதை முதல்ல ரோமானியர்கள்தான் உருவாக்கினாங்க.

எப்பவும் மேல் நாட்டுல இருக்கிறவங்க - சகலத்தையும் கண்டுபிடிப்பாங்க. நாம அதை வக்கணையா பயன்படுத்திக்குவோம். அதுதான் நம்ம பழக்கம். சினிமாவுல எம்.ஆர். ராதா சொன்ன மாதிரி - நாம கண்டுபிடிச்சதெல்லாம் இட்லி, தோசை, கொழுக்கட்டை, இடியாப்பம்தான். இதை இனியாவது புரிஞ்சுகிட்டு, வாழற வழியைப் பார்ப்போம். இந்த மலை ஓர் அரிய செல்வம். இதுல விளையற மூலிகை அதைவிட பெரிய செல்வம். இதுகளைப் பாதுகாக்க என்ன செய்யனுமோ அதைச் செய்வோம். பாவம் மிருகங்க, பறவைங்க எல்லாம்.

அதுங்களோட நாடான இதுக்குள்ள புகுந்து அவைகளை வேட்டையாடி கொடுர புத்தியைக் காட்ட வேண்டாம். ஆறாவது அறிவு மனுஷனுக்கு கொடுக்கப்பட காரணமே, அவன் அன்பு - கருணைன்னு நடந்துக்கத்தான்.”

“அந்த அன்பும், கருணையுமா நம்ப வேலையை நாம நகரத்துல பார்ப்போம்.”

“ரேஞ்சர் சார்....”

“உங்க ‘கேமரா’ பதிவையெல்லாம் அழிச்சிடுங்க. டி.வி.யில இதைப் பார்த்துட்டு ஒரு கூட்டம் ஜாலின்னு கிளம்பி வந்துடப் போறாங்க.... அப்புறம் இந்தக் காடும் நாறிடப் போகுது!”

“பை த பை.... போற வழியில குருவுக்கு நீங்க சொன்ன மருந்தை தேடி எடுத்துக்குவோம். அப்படியே பட்டத்திரிக்கும்.”

- பரணி படபடவென்று பேசி முடித்தவனாக அங்கே இருந்து கிளம்ப ஆயத்தமானான். அவன் பேச்சுக்கு ஒரு பதில் பேச்சை அவர்களால் பேச முடியவில்லை.

ஆனால், குருநாதன் மட்டும், “பட்டத்திரி - குரு - அப்பா ராமசாமி ஆகிய மூன்று பேரையும் தங்கள் ஆள் அடி வாரத்துக்கு கொண்டு சென்றுவிட்டனர். அங்கே இப்போது அவர்களுக்கு சிகிச்சை தொடங்கி இருக்கும்” என்றார்.

ஒருபடி மேலேபோய் காட்டுத் தீ பரவிய இடத்தில் கருகிய நிலையில் கிடந்த சிவப்பிரகாசம் உடம்பையும் கைப் பற்றி தென்காசி மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டதாகவும் கூறினார்.

பரணி, பதிலுக்கு அவரை நன்றியோடு பார்த்தான்.

கந்தசாமி முகம் மட்டும் இருள் அடைந்து போயிருந்தது

மதுரை மயானம்.

சிவப்பிரகாசத்தின் உடலுக்கு தீ மூட்டினான் குரு. அருகிலேயே இருந்தாள் கல்யாணி. அவளிடம் பெரிதாய் கண்ணீர் இல்லை. இறுகிப் போயிருந்தாள்.

அடுக்குமாடியில் குடியிருப்பவர்கள் மட்டும் ஓரளவுக்கு வந்திருந்தனர்.

மயானத்துக்கு எதிரில் வைகை ஆற்றையொட்டிய இடத்தில் தொட்டி கட்டி, அதில் தண்ணீர் நிரப்பப் பட்டிருந்தது.

அங்கே போய் குளித்து முடித்தனர். வேன் காத்திருந்தது. ஏறிக் கொண்டனர். வேனும் கிளம்பியது.

‘அபார்ட்மென்ட்டை அடையவும் - ராஜதுரையும், பரணியின் குடும்பத்தவர்களும் எதிர்கொண்டனர். குறிப்பாக ராமசாமி தன் குடும்பத்தாரோடு போய் கட்டிக்கொண்டார். ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

குருவின் தாய் கல்யாணியை ஆதரவாக அணைத்து அழைத்துச் சென்றாள். குரு-பரணி இருவரையும் ராஜதுரை தனியே அழைத்துச் சென்று, ஒரு ஓரமாக போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர வைத்தார். அவர்கள் பேசிவிட்டு வரட்டும் என்பதுபோல குருவின் தாயான சகுந்தலா - அக்கா

சாந்தா, தங்கை பிரபா மூவரும் ராமசாமியை அழைத்துக் கொண்டு தங்கள் குடியிருப்புக்கு சென்றனர்.

“என்ன பரணி…. ஒரு துக்கத்துலயும் நல்ல விஷயம்கற மாதிரி உங்க அப்பாவை எப்படியோ கண்டுபிடிச்சு கூட்டிட்டு வந்துட்டே போல இருக்கே?” - என்று ஆரம்பித்தார் ராஜ துரை.

இடையில் அவர்களுக்குக் காப்பி வந்தது. சரண்யா தான் கொண்டு வந்தாள். ஒரப் பார்வையால் பரணியை யும் ஒரு மாதிரி பார்த்தாள். ஆனால் பரணி, அதைப் பார்க்காதவன் போல் ராஜதுரையின் கேள்விக்கு பதில் சொல்லத் தொடங்கினான்.

“சார்…. ‘மெடிக்கல் ரெப்’ வேலை பறிபோனபோது, என்கிட்ட ஒரு பெரிய விரக்தி இருந்தது. வாழ்க்கையில எப்படி முன்னுக்கு வரப் போறோமோங்கற கவலையும், பயமும்கூட இருந்தது. கூடவே, நிச்சயம் நல்லவிதமா வந்துடு வேன்கற நம்பிக்கையும்.

அந்த நம்பிக்கையிலதான் இப்பவும் உங்க முன்னால் உக்காந்து பேசிக்கிட்டிருக்கேன். இப்ப எனக்கு பெரிய கமிட்மென்ட்ஸ்’ எதுவும் இல்ல. உங்க துறையில எந்த வேலை கிடைச்சாலும் செய்ய தயாரா இருக்கேன்” என்றான்.

“சந்தோஷம் பரணி…. எங்க துறையோட விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தி உன்னை ஐ.பி.எஸ். பரீட்சை எழுத வைக்க ஏற்பாடு செய்யப்போறேன். அதுக்கான பயிற்சி வகுப்புக்கு ஒழுங்கா போ. நிச்சயம் பாசாயிடுவே… அதன் பிறகு ‘டிரெயினிங் – போஸ்டிங்’னு அடுத்தடுத்த கட்டங்கள் இருக்கு. அதுவரை போலீஸ் ‘மெஸெஞ்சரா’ உன்னைப் பயன்படுத்திக்க முடிவு செய்திருக்கேன்….”

“ரொம்ப சந்தோஷம் சார்… ஐ.பி.எஸ். எழுதப் போறேன்னு சொன்ன உடனேயே ஒரு மாணவனா என்னை ‘ஃபீல்' பண்றேன். நான் அந்தக் காலத்தை இழந்துட்டதா நினைச்சுக்கிட்டு இருந்தேன். திரும்ப எனக்கு அந்த காலம் கிடைக்கப் போகுது….” - என்று பூரித்தான் பரணி. குருவிடம்

அமைதி.

“குரு. இதெல்லாம் உனக்கும்தான். நீயும் எழுதலாம்….” என்றார் ராஜதுரை.

“தேங்க் யூ சார்….. நான் இப்ப கல்யாணியைப் பார்த்து கொஞ்சம் ஆறுதலா பேச விரும்பறேன்.”

“எஸ். அதுவும் முக்கியம். அந்த வீட்ல இருந்த ஓலைச் சுவடி, மூலிகை வேர், தைலம் - இதையெல்லாம் தான் என்ன செய்யறதுன்னு தெரியல. யாராவது நாட்டு வைத்தியர்கள் வந்து கேட்டா தூக்கி கொடுத்துட சொல்லிட்டேன்….”

“வேண்டாம் சார்…. தீயை வெச்சு கொளுத்திடுவோம். அப்புறம் அந்த வைத்தியரும், சிவப்பிரகாசம் மாதிரி நடந்துக்க முயற்சி செய்யலாம்….”

“ஓ…. அப்படியொரு கோணம் இருக்குல்ல! அதுவும் சரிதான். ஆனா, இந்தப் பொதிகை அபாய வனப் பயணத்துல எந்த மர்மத்துக்கும் இடமில்லைன்னும் நல்லா தெரிஞ்சு போச்சு. அப்படித்தானே….?”

ராஜதுரை கொஞ்சும் ஏமாற்ற உணர்வோடு கேட்டார்..

“அதுல என்ன சார் சந்தேகம்? சஞ்ஜீவி மூலிகை… சப்த சஞ்சீவின்னுட எல்லாமே அழகான கற்பைன. நாராயண சித்தரேகூட ஒரு கற்பனைதான்….”

- பரணி அழுத்தமாக சொன்னபோது, பக்கத்து வேப்பமரத்து கிளை மேல். அவன் வனத்தில் கல் ஆலமரத்துக் கிளையில் பார்த்த - கழுத்தில் முடி இல்லாத கழுகு வந்து அமர்ந்தது. அதை எதார்த்தமாக பார்த்த நொடி- பரணிக்குள் ஒரு பகீர் உணர்வு!

***

# 38

‘வானத்தில் உள்ள எல்லாமே வனத்திலும் உள்ளது. வானத்தின் காலை நீக்கிவிட்டால் அது 'வனம்' என்றாகிவிடும். இதை சற்று மாற்றி - வானம், கால் மடக்கி அமர்ந்தால் 'வனம்'.

வானில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் - வனத்தில் கோடிக்கணக்கான தாவரங்கள் உள்ளன. வானுக்கும், வனத்துக்கும் நெருங்கிய தொடர்பு எப்போதும் இருந்துகெண்டே இருக்கிறது. அது தான் மழையாய், காற்றாய், சூரிய ஒளியாய் வனத்துக்குள் செயலாற்றுகிறது. மலை வனங்களுக்கு மகத்தான சக்தி உண்டு. அதற்கு காரணம் அதன் இருபுறமும் சரிந்தத் தன்மை. இதனால் அதன் மையம், மேல் எழும்பி கூர்மையாக நிற்கும்.

கூரிய முனைகளுக்கு மிகவும் சக்தி உண்டு. ஊசி கூரிய முனையால்தான் பயன்பாடுடையதாக உள்ளது. கத்தியின் கூரிய முனையால்தான் கத்தி பயன்பாடுடையதாக அமைகிறது. கோவில் கோபுரம், தவம் செய்யும் முனிவர்களின் சிகை, அறிஞர்களின் தாடி - இப்படி கூரிய முனையோடு உடைய அவ்வளவும் சக்தி மிகுந்துள்ளவை.

இதனாலேயே முனிவர்களும், ரிஷிகளும்.... ஏன்? தலையில் கூரிய கிரீடம் தரித்த அரசர் பெரு மக்களும்கூட வனத்தைப் பெரிதும் நேசித்தனர். அங்கே வாழவும் முற்பட்டனர். எந்த தேசத்தில் வனம் பெரிதாக, நாடு சிறிதாக உள்ளதோ... அந்த தேசத்தில் எல்லா வளமும் எப்போதும் இருக்கும். அந்த நாட்டு மக்கள் சகல நலன்களோடும் வாழ்வார்கள்.

வனத்தை மதிக்காதவர்கள், வானத்தை மதிக்காதவர்கள் ஆவார்கள். வானில்தான் தேவர்களும், மேலான சக்திகளும்நிரம்பி உள்ளதால்... அவற்றை மதிக்காதவர்கள் ஆவார்கள். இதனால், அதற்கான பாவத்துக்கு ஆளாகி - மண்ணில் அவர்கள் பல்வேறு பிறப்பெடுத்து உழன்று கொண்டே இருப்பார்கள்.

வனத்தை மதித்து வனமகோத்சவம் புரிபவர்கள், எல்லா நலன்களையும் அடைவார்கள்.'

**- வன வியாசம்**

பரணி அந்தக் கழுகை ஆச்சரியப்பட்டு வெறித்தான். கூடவே குருவும் பார்த்தான். ஆனால், குருவுக்கு அது பெரிய ஆச்சரியத்தைத் தரவில்லை. அங்கே கந்தசாமி இல்லை. இருந்திருந்தால் நிச்சயம் ஆச்சரியத்தில் மூழ்கி இருப்பார்.

ராஜதுரையும் பார்த்தார். அவர் சற்று ஆச்சரியப்பட்டார். "என்ன பரணி.... அந்தக் கழுகையே அவ்வளவு ஆச்சரியமா பாக்கறே?" என்று கேட்கவும் செய்தார்.

"இந்தக் கழுகை மேல மலையில பார்த்தேன் சார்"

"நிஜமாவா?"

"ஆமா சார். குறிப்பா, எண்கோணப் பாறைகிட்ட - கல் ஆலமரக் கிளையில பார்த்தேன். அப்புறமா அந்த பாறையில போய் உட்கார்ந்ததையும் கவனிச்சேன்."

"அட... அப்ப இது உங்கள 'பாலோ' பண்ணிக்கிட்டு இங்கே வந்துடுச்சா?"

"அதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு"- பரணி அதை பார்த்தபடியே பேசின அந்த நொடி, அது திரும்பவும் வானில் எம்பிப் பறக்கத் தொடங்கியது.

"என்ன... சொல்லி வாய் மூடுறதுக்குள்ள பறந்துடுச்சி."

"அதுவும் ஆச்சரியமா இருக்கு."

"பரணி... இது வேற கழுகாதான்டா இருக்கணும். இந்த உலகத்துல ஒரேயொரு கழுகுதான் இருக்குன்னா... நீ சொன்னபடி ஆச்சரியமா இருக்கலாம். ஆயிரக்கணக்குல கழுகுகள் இருக்கும்போது, இதை அந்த மலைக்கழுகோடு இணைக்கிறியேடா."

- குரு இந்த முறை பரணியைப் போல பேசி கேள்வி

கேட்டான்.

“ஆமாம்ல” - பரணியிடமும் ஒப்புதல். ஆனால், ராஜ துரை முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

“என்ன சார்?”

“ஒண்ணுமில்லே பரணி. அந்த மலை. அப்புறம் சித்தர்கள், அந்த எண்கோணப் பாறை - இதெல்லாமே கொஞ்சமாவது உண்மையா இருக்கும்னு நம்பிக்கிட்டிருந்தேன் கடைசியில் பொய்யின்னு ஆகவும் ஏமாற்றம். இப்ப இந்தக் கழுகை நீ அந்த மலைக் கழுகோடு ஒப்பிடவும், திரும்பவும் எனக்குள்ள ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. கழுகு பறந்து போகவும்... அதுவும் பறந்து போயிடுச்சு.”

“என்ன சார் நீங்க. ஒரு பெரிய போலீஸ் ஆபீசர் இந்த மாதிரி சமாச்சாரத்தை நம்புறீங்களே?”

“நான்னு இல்ல. உலகத்துல எல்லாருக்குமே பிடிக்கும். இதுல ஒரு பெரிய சுகம் இருக்கு. சின்ன வ்யசுல ராஜா - ராணி கதை படிக்காத குழந்தை இருக்க முடியுமா? வயசாகவும், அறிவு வளர்ச்சி ஏற்படவும் நாம மாறிடுவோம். இதையெல்லாம் நம்பறதை முட்டாள்தனம்னு சொல்லி வெச்சிருக்கிறதுதான் அதுக்கு காரணம்.”

“அப்ப நிஜமாஅது முட்டாள்தனம் இல்லையா?”

“இப்படிக் கேட்டா என்னத்த சொல்றது? ஒண்ணு மட்டும் நிச்சயம். முட்டாள்தனமாவே இருந்தாலும், அப்படி இருக்கறது பிடிச்சிருக்கு. ஒரு பறக்கும் கம்பளம் இருக்குன்னு கேள்விப்படுறோம். நம்ம மனசு உடனே அதுல ஏறி உட்கார்ந்துகிட்டு பறக்கிற மாதிரி கற்பனை பண்ணிப் பார்க்குமா.... பார்க்காதா?

“புரியுது சார் உணர்ச்சிகளுக்கும், அறிவுக்கும் எப்பவும் ஏழாம் பொருத்தம்தான். ஆனாலும், பல உணர்ச்சிகளை எவ்வளவு முட்டாள்தனமானதுன்னு அறிவு சொன்னாலும் மனசு அனுபவிக்கத்தான் ஆசைப்படும். மனிதனோட இயற்கையான தன்மைன்னுதான் இதைச் சொல்லணும்.”

- அவர்களிடம் அந்த கழுகு பல மாதிரி பேச்சை உருவாக்கிய தருணம், “ஐயா” என்று ஒரு குரல். மூவரும் திரும்பிப் பார்த்தனர்.

ஒற்றை நாடியில் வெடவெடவென்று காவிவேட்டியும், ஜிப்பாவுமாய் ஒருவர்! தலையில் வெண்மையாய் - அடர்த்தி யாய் முடி பின்புறம் குடுமி போல் கட்டிப் போட்டிருந்தார். முன்னால் நெடிய தாடி

கண்கள் கருந்திராட்சை போல பளிச்சிட, முகம் முழுக்க துளியும் சுருக்கமின்றி பளபளப்புடன் இருக்க - அழகாக மூவர் முன்னாலும் கைகூப்பினார்.

“யார் நீங்க?”- ராஜதுரை கேட்க, புன்னகையுடன் வாய் திறந்தார்.

“என் பேர் நாணா. சித்த வைத்தியன்”

“அப்படியா... உங்களுக்கு இப்ப என்ன வேணும்?”

“இங்க பெரியவர் சிவப்பிரகாசம் வெச்சிருந்த நாடிக் கட்டுகளையும், மூலிகைச் சமாச்சாரங்களையும் வாங்கிக் கத்தான் வந்திருக்கேன்.”

“ஓ...-உங்களுக்குஇங்கஅது இருக்கிறதையார் சொன்னா?”

“அவர் இப்ப இல்லைன்னு தெரிய வந்தது. நானாகத் தான் வந்திருக்கேன்”

“அப்படியா விஷயம்? ஆமா... அதையெல்லாம் நீங்க என்ன செய்வீங்க?"

“என்னங்க கேள்வி? நான் ஒரு சித்தவைத்தியன். அதை வைத்தியத்துக்குப் பயன்படுத்த விரும்பறேன்.”

“என்ன பெரிய வைத்தியம்? அந்த சிவப்பிரகாசம் எப்படி இறந்தாருன்னு தெரியுமா?”

“கேள்விப்பட்டேன். அதுக்கும், அவர் வெச்சிருந்ததை நான் வாங்கிக்கறதுக்கும் என்னங்க சம்மந்தம்?”

“இல்ல… அவர் சில மூட விஷயங்களை நம்பித்தான் பேராசையால கடைசியில எரிஞ்சே போனார். நீங்களும் அவர் வழியில போக விரும்பறீங்களேன்னுதான் அப்படி கேட்டேன்.”

“என் வழி எப்பவுமே வேறங்க. பேராசை கொண்ட அவரோடு என்னை ஒப்பிடாதீங்க.”

“இப்ப பேராசைன்னு சொல்ற நீங்க- அவர்கிட்ட அதை சொல்லி இருக்கீங்களா?” - ராஜதுரை கேட்ட கேள்வியை பரணி மறுப்பது போல இடைமறித்தான்.

“ஐயா…. அவர்கிட்ட பேராசை இருந்தது முதல்ல உங்களுக்குத் தெரியுமா?”

“அதாவது, அபூர்வ மூலிகைகளை அடைஞ்சு எப்பவும் இளமையா வாழ அவர் ஆசைப்பட்டதைத்தானே பேராசைன்னு சொல்றீங்க?”

“நிச்சயமா….”

“அப்ப அதெல்லாம் நிஜமா இருக்கா… இருந்தாத்தானே அவர் ஆசைப்பட்டதை பேராசைன்னு சொல்ல முடியும்.”

“அது எப்படி தம்பி இருக்க முடியும்? இருந்தா இந்த மனித சமுதாயம் அதை சும்மா விடுமா?”

"அப்ப அது ஒரு அழகான கற்பனை-அப்படித்தானே?”

“ஆமா… ஆமா…”

“சந்தோஷம். அதான் எனக்கு வேணும்.”

“அப்ப எப்படி இப்படியொரு விஷயம் உருவானது?”

“எதைச் சொல்றீங்க?”

“இந்த கார்த்திகை மாதம் பூச நட்சத்திரம், வியாழக்கிழமை - எண் கோணப் பாறை… நாராயண சித்தர்ங்கற விஷயமெல்லாம்தான்…”

அவ்வளவும் பொய்-அண்டப்புளுகு - ஆகாசப்புளுகு....”

“நீங்க எப்படி அதை புளுகுன்னு தெரிஞ்சிக்கிட்டீங்க?”

“மூலிகையைத் தேடி நானும் காட்டுக்கு போறவன் தானே. அங்க நடக்கறது என்னன்னு எனக்குத் தெரியாதா?”

“அது என்னன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்.”

“ஆட்டைக் கடிச்சு - மாட்டைக் கடிச்சு - மனுஷனைக் கடிச்ச கதையா, ஆறு - குளம்னு இயற்கை வளங்களை சுரண்டின மனுஷன்... இப்ப காட்டையும் சுரண்ட ஆரம்பிச்சிட்டான். தேக்கு, செம்மரம், மஞ்சக் கடம்பைன்னு இருக்கற மரங்கள் எல்லாம் சாதாரணமில்ல. எல்லாத்தையும் வெட்டி வித்து, தான் மட்டும் வாழ்ந்தா போதும்னு நினைக்கறவங்க இப்ப நிறைய பேர்.

இவங்கதான் இந்த அண்டப்புளுகு விஷயங்களை அவிழ்த்து விடுறவங்க. இந்தப் புளுகால மலைக் காடுகள் எல்லாம் ரொம்ப மதிப்பா மாறிடுது. இவங்களும், உள்ள இருக்கற வித்தியாசமான செடி-கொடிகளை எல்லாம் பிடுங்கி கிட்டு போய். இதுதான் சஞ்சீவி - இதுதான் ரசவாதின்னு ஏமாத்தி வித்துடுறாங்க. அப்புறம் மண்ணுளிப் பாம்பை பிடிச்சு - ஆண்மையை விருத்தி செய்யுற சக்தி அதுல இருக்குன்னு கிளப்பிவிட வேண்டியது. சிகப்பு கூழாங் கல்லை நாகமாணிக்கம்னு ஏமாத்த வேண்டியது. வெறும் இயற்கையான காடுன்னு மனிதர்கள் நினைச்சா இதையெல்லாம் நம்ப முடியுமா? மேல் நாடுகள்ல இப்படியா இருக்கு? அமேசான்னு ஒரு காடு. அங்க மட்டும் ஏன் ஒரு சித்தர் கூட இல்ல? - அவ்வளவு ஏன்... ஆப்பிரிக்காவுல இல்லாதா காடா? அங்க ஏன் யாரும் இல்ல?”

“சபாஷ். உங்களோட இந்த கோணம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு இப்படித்தான் முற்போக்கா யோசிக்கணும்.”

“தம்பி... நான் மூலிகைகள் பற்றி முழுசா தெரிஞ்ச வைத்தியன். அவ்வளவுதான். ஆனா, ஒரு உண்மையை இங்க சொல்லியாகணும்.”

“என்ன?”

“அமெரிக்கா, ஆப்பிரிக்காவுல காடும், செடி கொடிகளும் இருக்கலாம். ஆனா, சில மூலிகைகள் நம்ம நாட்டுல மட்டும்தான் இருக்குது. இருக்கவும் முடியும்.”

“அதுக்கு பூகோள ரீதியான காரணங்கள் எதாவது இருக்கா?”

“ஆமா... சரிசமமான இரவு - பகல்ங்கிற விகிதாச் சாரம்தான் காரணம். அப்புறம் திட்டமிட்ட மாதிரி வர்ற பருவ காலங்கள்.”

“சரி... இதை நாம நினைச்சு சந்தோஷப்பட்டுக்கலாம். ஆனா, ரொம்ப மிகைப்படுத்தி சித்தர்களை காட்டுக்குள்ள நடமாடவிட்டு ஏராளமான கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டதுதான் நம்மவங்க பண்ணின தப்பு.... இல்லையா?”

“சரியா சொன்னீங்க. அப்புறம் தம்பி - சண்முகம்னு ஆஸ்பத்திரியில கிட்டதட்ட ‘கோமா’வுக்குள்ள புதைஞ்சு கிடக்கற ஒருத்தரைப் பார்த்தேன். அவர் உங்க உறவா?”

“என்ன அப்படி கேட்டுட்டீங்க... எங்க அக்கா புருஷன்.”

“அப்படியா சமாச்சாரம்?”

“ஆமாங்க... நீங்க எதுக்கு ஆஸ்பத்திரிக்க போனீங்க?"

“நான் அப்பப்ப போவேங்க.போய் என்னால எதாவது பண்ண முடியுமான்னு பார்ப்பேன். பல காலமாக சித்த வைத்தியனா இருந்துட்டு, சாதாரண தலைவலி - காய்ச்சலுக்கு மருந்து கொடுத்துட்டிருந்தா எப்படி? நம்ம அனுபவத் துக்கு பெருசா ஏதாவது சாதிக்கணும்ல?”

“சரி... எங்க அத்தானை பார்த்தீங்களா... அவர் பிழைச்சுடுவாரா?”

“அப்படித்தாங்க நினைக்கிறேன்... கொஞ்சம் போல தைலத்தை உடம்புல சில முக்கிய இடத்துல சூடு பறக்க தேச்சுவிட்டேன். மயிர் கால் வழியா உள்ள இறங்கற அந்த தைலத்துல இருக்கற மூலிகை சமாச்சாரம் - ரத்தத்துல

கலந்து - கொஞ்சம் கொஞ்சமா அவர் மூளை வரை பாய்ஞ்சு எதாவது செய்யும். உச்சந்தலையிலேயும் அஞ்சாறு சொட்டு விட்டிருக்கேன்.”

“எண்ணெய் எப்படிங்கரத்தத்துல கலக்கும்?”

“நேரடியா கலக்காது. ரோமக் கால் வழியா உள்ளே இறங்கி… தோலோட ‘செல்'கள்ள பரவி தன் சக்தியை காட்டும்.”

ஒரு ‘கோமா பேஷண்டை’ தைலத்தால எழுப்ப முடியுமா? இதை டாக்டர்கள் நம்புவாங்களா?”

“அவங்களை விடுங்க தம்பி, வாயில நுழையாத ஆங்கில பேர் வைக்கவும் – ‘எக்ஸ்ரே’ ‘ஸ்கேன்’ எடுக்கறேன்னு எந்திரங்களை நம்பியும் செயல்படுறவங்க. நான் அவங்கள குறை சொல்லல. மகராஜங்களா நல்லா இருக்கட்டும்.

இந்த சித்த வைத்தியன் ஒரு ‘டெஸ்ட்’ பண்ணிட்டு வந்துருக்கேன்னு வையுங்களேன். தைலத்தால கண்ணு முழிச்சிட்டா எனக்கும் ஒரு பெருமைதானே?”

“டாக்டர்கள் எப்படி அதுக்கு அனுமதிச்சாங்க?”

“கேட்டா விடமாட்டங்கன்னு தெரியாதா எனக்கு? ‘பேஷண்ட்’கிட்ட உக்காந்து சிவபுராணம் படிக்கறேன்னு சொல்லிப் போனேன். உறவுக்காரங்களைத்தான் கிட்டவிடுவோம்னு சொன்னப்ப, நான் அவருக்கு தாத்தா முறைன்னு சும்மா சொன்னேன். நம்பிட்டாங்க…”

- சொல்லிவிட்டு அழகாக சிரித்தார். அவர் பேச்சை எங்கேயும் மறுத்துப் பேசவோ, சந்தேகப்படவோ, தவறாக கருதவோ முடியவே இல்லை. பரணி மலங்க மலங்க பார்த்தான்.

“அப்புறம் தம்பி… ஒரு பக்கம் புளுகுகறாங்க. இருந்தாலும் நம்மகிட்ட இருக்கற இந்த சின்ன முக்கா கிலோ எடை கொண்ட மூளையால புரிஞ்சுக்க முடியாத விஷயங்க நிறையவே இருக்கு. கடலோட ஆழம் தெரியணும்னா அதுல இறங்கிடணும். கரையில நின்னுகிட்டு கண்டதை

பேசக்கூடாது.

பல ஆயிரம் வருஷத்துக்கு முந்தியே சந்திர கிரகணம், சூரிய கிரகணத்தையெல்லாம் இந்த பூமியில நின்னுகிட்டே கணக்கு போட்டு சொன்னவங்க நம்ம முன்னோர்கள். வெள்ளைக்காரன் சொன்னதெல்லாம் சும்மா. நம்ம பஞ்சாங்கம் - என் வரையில் அமெரிக்காவுல இருக்கற, 'நாசா'வுல இருக்கற விண்வெளி ஆராய்ச்சி கூடத்தைவிட பெருசு. சீனாக்காரன் கிட்ட இருக்கற பல நல்ல விஷயம் எல்லாமும் இங்க இருந்து களவு போனதுதான். ஆகையால நம்மளை ரொம்ப தாழ்வாகவும் நினைச்சிட வேண்டாம்."

- அவரின் இந்தப் பேச்சு. பரணியை மவுனத்தில் புதைத்துவிட்டது. ராஜதுரையும், "சரிங்க.... நீங்க போய் எல்லாம் எடுத்துக்குங்க...." என்று கைகை காட்டினார். அவரும் கைகூப்பிவிட்டு மாடி நோக்கி நடந்தார்.

"பரணி... இவரைப் புரிஞ்சுக்கவே முடியலியே! இப்படியும் பேசறார். அப்படியும் பேசறார். கவனிச்சியா?"

- குரு கேட்டான்.

"எப்படிப் பேசினா என்ன? என்னால அதுக்கு பதில் பேச முடியலியே?"

"போகட்டும். இந்த தைலம் பூசினது வேலை செய்யும்னு நம்புறியா?"

"அவரே ஒரு 'டெஸ்ட்டு'ன்னுதானே சொன்னாரு?"

- மிகச் சரியாக அந்தப் பதில் சொன்ன நொடியில், பரணியின் செல்போனுக்கு அழைப்பு. ஆஸ்பத்திரியில் இருந்துதான்...

"நான் டாக்டர் நிவாஸ் பேசறேன். அந்த 'கோமா பேஷண்டு' கிட்ட ஒரு 'இம்ப்ரூவ்மென்ட்' தெரியுது. விரல்கள் அசையுது. இமையும் துடிக்குது. நாடித் துடிப்பும் அதிகரிச்சிருக்கு. ஆயிரத்துல ஒரு 'கேஸ்' இப்படி 'இம்ப்ரூவ்' ஆகறது உண்டு. இப்போதைக்கு இதை ஒரு தகவலா சொல்றேன். நேர்ல வாங்க விபரமா பேசலாம்."

- டாக்டர் பேசி முடித்தார். பரணியிடம் ஸ்தம்பிப்பு.

“குரு... அந்த சித்த வைத்தியர் ஜெயிச்சிட்டார்”

“நிஜமாவா?”

“இப்பத்தான் டாக்டர் பேசினார். வா... இதை அவர் கிட்டயே சொல்வோம்”- இருவரும் ஓடினர். கல்யாணியும் எதிர்கொண்டாள்.

“எங்க அவர்?”

“யார்?”

“ஒரு சித்த வைத்தியர் வந்தாரே?”

“இங்க யாரும் வரலையே?”

“அட.... என்னம்மா நீ? பத்து நிமிடம் முந்திதான் உன்னைப் பார்த்து - ஏட்டுக்கட்டு, மூலிகை மருந்தை எல்லாம் வாங்கிக்க வந்தார்.”

“ஆனா, இதுவரை யாரும் வரலை!”

“என்ன ஆச்சரியம். ஒரு வேளை நடுவுல என் வீட்ல தப்பா நுலைஞ்சிருப்பாரோ?”

- பரணியும், குருவும் ஓடினர். தேடினர். எங்கேயும் அவர் இல்லை. "மொட்டை மாடியில இருப்பாரோ?’ - கேள்வியோடு அங்கேயும் சென்றனர்.

தண்ணீர் தொட்டி மேல் அந்த கழுகுதான் இருந்தது. அதைப் பார்க்கவும் இருவரிடமும் திகைப்பு. அதுவோ அவர்கள் எதிரில் வானில் எழும்பி, தென் திசை நோக்கி பறக்க ஆரம்பித்தது. பின்னர் ஒரு புள்ளியாய் மறைந்து போனது.

குரு, தன்னை மறந்து நின்றிருந்தான்.

பரணியிடம் பேச்சே இல்லை.

நடந்ததெல்லாம் என்ன? எல்லாமே கண்கட்டா... இல்லை,

அன்றாட சம்பவம்தானா - அவர் யார்? அவர் பேசியதும் வித்தகமா? இல்லை எதார்த்தமா. எது நிஜம்? - இருவரும் கேள்வியில் ஊசலாடத் தொடங்கினர்!

**முற்றும்**